# வெளி

வெள்ளி விழா சிறப்பு மலர்




மாணவரவை
கலை பண்பாட்டுப் பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம் – இலங்கை

# ஐந்தாவது மலர்

(வெள்ளிவிழா சிறப்புமலர்)

# 2006 - 2007

1981 - 2006

SILVER JUBILEE YEAR

**இதழாசிரியர்**

திரு. த. மேகராசா

**வெளியீடு**


மாணவரவை, கலை பண்பாட்டுப் பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

மட்டக்களப்பு,

இலங்கை

# வெளி

## ஐந்தாவது மலர்

(வெள்ளிவிழா சிறப்புமலர்)

## 2006 - 2007

**இதழாசிரியர்**

திரு. த. மேகராசா

**பின் அட்டைப்படம்**

மண்முனை வாவியினூடான பொதுமக்களின் படகுப் போக்குவரத்து

**அச்சகம்**

கத்தோலிக்க அச்சகம்,
மட்டக்களப்பு.

**வெளியீடு**

மாணவரவை, கலை பண்பாட்டுப் பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
மட்டக்களப்பு,
இலங்கை

கிழக்குப்பல்கலைக்கழக
கலைப் பண்பாட்டுப்பீட மாணவர் ஒன்றியம்
(2005 / 2006)

**தலைவர்**

திரு. பே. ஜெயகாந்த

**உப தலைவர்**

திரு. ம. கருணதாசன்

**செயலாளர்**

திரு. எஸ். உதயராஜா.

**பெரும் பொருளாளர்**

கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்

**கனிஸ்ட பொருளாளர்.**

திரு. எஸ். மகேந்திரநாதன்

**பத்திராதிபர்**

திரு. த. மேகராசா

**நிருவாக உறுப்பினர்கள்**

திரு. பி. பிறேமானந்தன்
திரு. அ. இரத்தினகுமார்
செல்வி. ஏ. டயானா
திரு. பீ. பிரதீபன்
திரு. எம். எச். ஜாஹிரியா
செல்வி. எஸ். நர்மதா
திரு. த. காண்டீபன்.

# உள்ளடக்கம்

**கட்டுரைகள்**


| | | |
|---|---|---|
| 01 | உலகமயமாதலும் இலங்கைப் பொருளாதாரமும். | 01 |
| 02. | 2004ம் ஆண்டு சுனாமி தாக்கத்தினால்...... | 05 |
| 03. | இராமாயணம் ஒன்றா? பலவா? | 08 |
| 04. | பத்திரிகைகளில் தமிழ் மொழி.... | 15 |
| 05. | வீரமாமுனிவரின் தமிழ்ப்பணிகள்..... | 18 |
| 06. | தமிழில் பின்நவீனத்துவ......... | 20 |
| 07. | சர்ரியலிஸ நோக்கில் சோலைக்கிளியின்........ | 30 |
| 08. | இலங்கைத் தொலைக்காட்சி நிறுவனங்களின்... | 34 |
| 09. | தற்கொலை – ஒரு சமூகவியல் அணுகுமுறையும்... | 39 |
| 10. | மெய்யியல் ஆய்வில் பொதுமைகள். | 48 |
| 11. | பழமொழிகளும் சமூகத்தில் பெண்கள் பற்றிய..... | 51 |
| 12. | தாய்மார் பள்ளி பரிட்சாத்தமும்......... | 53 |
| 13. | இலங்கை புகலிட நாவல்கள். | 59 |
| 14. | சூழல் வளங்களில் கைகளில்............ | 74 |
| 15. | சமூக உற்பத்தியான....... | 75 |
| 16. | செயல்வாத அரங்காக... | 78 |
| 17. | தமிழ் நாவல் ஆய்வுகள்...... | 80 |
| 18. | வெகுஜனத் தொடர்பாடலும்...... | 86 |
| 19. | நவ கவிதைக்குவித்திட்ட பாரதி. | 89 |
| 20. | பழுகாமம் திரௌபதையம்மன் கோயில்... | 94 |
| 21. | எங்கள் சினிமாவின்..... | 103 |


**சிறுகதைகள்**


| | | |
|---|---|---|
| 1. | கெட்டகுடி | 12 |
| 2. | தூண்டிற் புழுவினைப் போல | 45 |
| 3. | ஈடு வச்சிப்போட்டாள் | 68 |


**கவிதைகள்**


| | | |
|---|---|---|
| 1. | பிரிவே வாராயோ | 07 |
| 2. | மூச்சறுந்த சுவாசங்களாய் | 38 |
| 3. | முதுசொம் அல்லது புலமை மரபு | 43 |
| 4. | இறுதி வருடக்காதல் | 44 |
| 5. | எமபெருமானும் நானும் | 72 |
| 6. | வாழ்க்கை தந்த பாடம் | 102 |
| 7. | தாலி பற்றிய கேள்விகள் | 104 |


**ஏனையவை**


1. 2006ம் ஆண்டின் 1ம், 2ம்,3ம், 4ம், வருட கற்கைநெறி மாணவர்களினதும், இவ்வருடத்திற்கான (2006) மாணவர் ஒன்றியத்தினரினதும் புகைப்படங்கள்

2. விடைபெறும் சிறப்புக் கற்கை, பொதுக்கற்கை நெறி மாணவர்களின் முகவரிகள்

# உபவேந்தரின் வாழ்த்துச்செய்தி

கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார பீட மாணவர்களின் ஆண்டுச் சஞ்சிகையின் மற்றுமோர் இதழ் **"வெளி"** வெளிவரவுள்ளமை பாராட்டத்தக்கது.

பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சிகளாக பல புதுமையான ஆக்கங்கள் வெளிக் கொணரப்பட **"வெளி"** தகுந்ததொரு களம் அமைத்துக்கொடுக்கும் என்பது எமது நம்பிக்கை. மாணவர்களின் கூட்டுச்செயற்பாட்டுக்குக் கிடைக்கும் வெற்றியாக இச் சஞ்சிகையின் பிரசவம் அமைகிறது.

அச்சியந்திரங்களின் தேவை ஒழிக்கப்பட்டு கணனிகளுடன் இணைந்து நமது இலக்கிய ங்கள் நடைபோட்டுக்கொண்ணுடிருக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின் றோம். ஆனாலும் நவீன கருவிகள் நமது தமிழ் இலக்கியங்களின் தரத்தை சிதைத்து விடாதிருக்க கவனம் கொள்வோம். காலங்களின் மாறுதல்களினதும் அவற்றின் நவீன கண்டுபிடிப்புக்களினதும் துணைகொண்டு நவீன இலக்கியங்கள் படைப்பதும் தமிழ் தரம் குன்றாது காப்பதும் நமது கடமை.

இச்சஞ்சிகையின் மற்றுமொரு இதழை வெளிக்கொண்டுவருவதில் முயற்சியெடுத்துக் கொண்ட மாணவர்கள், அவர்களுக்குத் துணையாக நின்ற விரிவுரை யாளர்கள் மற்றும் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள். வாழ்த்துக்கள்.

**கலாநிதி என். பத்மநாதன்**
பதில் உபவேந்தர்
கிழக்குப் பல்கலைக் கழகம்.
22.05.2007

# கலைப்பீடாதிபதியின் வாழ்த்துரை

மாணவர்களின் ஆக்கங்களை வெளிக்கொணரும் ஒரு தளமாக "வெளி" எனும் சஞ்சிகையின் ஐந்தாவது இதழ் வெளிவருவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். பல்வேறு அழுத்தங்களுக்கும் சுமைகளுக்கும் மத்தியில் மாணவர்கள் "வெளி" எனும் சஞ்சிகை ஊடாக ஆண்டுதோறும் தமது ஆளுமையையும் ஆக்கத் திறன்களையும் விருத்தி செய்து சாதனை படைத்து வருகின்றனர்.

அந்த வகையில் தமது ஆக்கங்களை உவந்தளித்த மாணவர்களுக்கும் பல சிரமங்களுக்கு இடையேயும் "வெளி" யினை வெளிக்கொணருவதற்கு அயராது உழைத்த நிர்வாகக் குழுவினருக்கும் எனது பாராட்டுக்களும் நன்றியும் உரித்தாகட்டும்.

இனிவரும் காலங்களிலும் வெளி காலதாமதமின்றி வெளி வர மாணவர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

**செல்வி. எஸ் பொன்னையா**
பீடாதிபதி
கலைகலாசாரபீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச்செய்தி

கிழக்குப்பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவரின் வெளியீடாகிய " வெளி" சஞ்சிகை இந்த ஆண்டு 2006/2007 வெள்ளிவிழா நிறைவையொட்டி வெளிவருகிறது.

எமது பல்கலைக்கழகம் அடிக்கடி எதிர்கொள்ளும் பலதரப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் இயங்க நினைக்கின்ற மாணவரின் ஊக்கமே இந்த வெளியீட்டுக்கு முதலீடு. இந்த வெளியீட்டில் அதிகமான நிழற் படங்களைச் சேர்க்கவேண்டியிருப்பதால் அதிக செலவை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே தொடர்ந்தும் சற்றும் மனந் தளராது வருடந்தோறும் வெளி வெளிவர மாணவர் தமது ஆக்கங்களை உதவுவது மட்டுமல்லாது அதைப் பணங் கொடுத்து வாங்கியும் உதவவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் பல்கலைக்கழகத்தின் உதவித் தொகையுடன் இந்த வெளியீட்டைத் தொடர்ந்து வருடந் தோறும் மேற்கொள்ள முடியும்.

மாணவரின் முயற்சிக்கு எனது பாராட்டுகள்.

கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்
சிரேஸ்ட விரிவுரையாளர்
மொழித்துறை

பெரும் பொருளாளர்
கலை பண்பாட்டுப் பீட மாணவரவை.

# "வெளி" வெளியே வருகின்றது.

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார மாணவரவையின் வெளியீடான "வெளி" பல்வேறு இடர்பாடுகளுக்கும் முகம் கொடுக்காமல் சிறப்பாக வெளிவருவதையிட்டு இதழாசிரியர் என்றவகையில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

பல்வேறு படைப்பாளிகளினதும் ஆற்றல்களாய் உள்ளே கிடந்த ஆற்றல்களை ஒருங்கு சேர்த்த வடிவமாய் இந்த "வெளி" வெளி வருவதாகவே நான் கருதுகின்றேன். ஒரு இதழை வெளியிடுகின்றபோது கிடைக்கின்ற அனுபவங்களை பெற்றுக் கொள்ளுகின்ற வாய்ப்பு இவ் வெளியினூடாகக் கிடைத்ததை பெரும் மதிப்பாக நினைக்கின்றேன் கலைப்பீட மாணவரவை இதழ் வெளியீட்டில் முக்கியப்படுத்தப்பட்டுப் பேசப்படுகின்ற அளவுக்கு இந்த வெளியை இனியுள்ள மாணவர்களும் தொடர்ந்து வெளியிடவேண்டும். அதுவே இவ் விதழின் பால் ஈடுபாடு கொண்ட அனைவரினதும் அவா.

ஆக்கபூர்வமான இதழாக இவ் ஐந்தாவது "வெளி"மலர் வெளிவருவதற்கு உதவிய அனைவருக்கும் நன்றி கூறவேண்டிய கடப்பாடு இதழாசிரியர் என்ற வகையில் எனக்கு இருக்கின்றது. "வெளி" க்கான ஆக்கங்களையும் ஆலோசனைகளையும் தந்துதவிய மாணவர்கள் விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் அனைவருக்கும் எனது அன்பு உவக்கும் நன்றிகள். பெரும் பொருளாளராக இருந்து பல ஆலோசனைகளை வழங்கிய கலாநிதி அம்மன் கிளி முருகதாஸ் அவர்களுக்கும் இவ் வெளியின் பிரசுரிப்பில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட கலாநிதி செ. யோகராசா, பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு. திரு. ஜெயசங்கர் ஆகியோருக்கும் எனது நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். கிழக்குப் பல்கலைக்கழக இவ் "வெளி" இன்று ஒரு ஆக்கபூர்வமான இதழாக வளர்வதற்கு உதவியவர் களுள் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் எஸ். ரவீந்திரநாத் மிகவும் முக்கியமானவர். அவர்கட்கும் எனது நன்றிகள் உள. மேலும் சிறப்பாக இவ் வெளியை வடிவமைத்த சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகத்தாருக்கும் "வெளி" இதழ் வெளியிடு வதற்கான நிதி உதவியினை வழங்கிய கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கும் ( உபவேந்தர், நிதியாளர் உட்பட அனைவருக்கும்) பலவகையினும் உதவிய ஏனைய நண்பர்களுக்கும் உளம் உவக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

"வாழ்க வெளி"

**த. மேகராசா**
பத்திராதிபர் – மாணவரவை (2005/2006)
கலை பண்பாட்டு பீடம்.
கிழக்குப்பல்கலைக்கழகம்.



கலைப்பீட மாணவர் ஒன்றியம் (2005/2006)

# உலகமயமாதலும் இலங்கைப் பொருளாதாரமும்

இன்று உலகம் முழுவதும் அபிவிருத்தி அடைந்த அபிவிருத்தி அடைந்துவரும் என்ற நாடுகளின் மட்டில் வேறுபாடின்றி பேசப்படும் ஓர் எண்ணக்கருவாக இவ் உலகமயமாக்கல் என்றபதம் காணபபடுகிறது. அண்மைய கால பொருளாதார வரலாறு தொடர்பாக நோக்கு கின்ற போதும் இவ் உலகமயமாக்கலுடன் இணைந்ததாகவே காணப்படுகிறது. கால மாற்றத்திற்கு ஏற்ப பொருளாதார நடைமுறை விடயங்களும் மாற்ற மடைந்து செல்வதனால் இப்பொருளாதார நிலைமைகளுக்கு உலக மயமாக்கல் செயற் பாடு என்றும் பக்கபலமாக உள்ளது. உலக மய மாதல் என்ற பதத்தின் கருத்தினை நோக்குகின்றபோது பொதுவாக பொருளா தார, சமூக, அரசியல் அடிப் படையில் உலகம் முழுவதிலும் நடை பெற்றுக கொண்டிருக்கும் அமைப்பு மாற்றங்கள் என்று கருதலாம். இவ் உலக மயமாதல் பூகோள மயமாதல் என்றும் குறிப்பிடப்படுகின்றது. அதாவது நாடுகளுக்கிடையே கட்டுப்பாடு களை நிராகரித்து விடு வதன்மூலம் எல்லா நாடுகளும் உலகரீதியாக சிந்திப்பதையும் ஒவ்வொரு நாடும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கக் கூடிய அளவிற்கு உலகம் முழுவதையும் தன் பொருளாதார செயலாற்றல்களுககான சந்தை யாக பயன்படுத்த முடியும் என்ற கருத்தில் அமைகிறது. அதாவது உலக நாடுகள் அனைத்தும் எல்லா நாடுகளுக்கும் பொது வான சந்தையாக எல்லா நாடுகளையும் கருத வேண்டும் என்பதாக அமைகிறது.

இவ் உலகமயமாக்கலானது உலகில் பல் வேறு நிலைகளில் ஏற்படுகின்றது. பொருளாதார உலக மயமாக்கல், சமூக கலாசார உலக மயமாக்கல், அரசியல் சார்ந்த உலக மயமாக்கல என்ற வகையில் காணப்படு கிறது. பொருளாதார உலக மயமாக்கல் என்பது அனைத்து நாடுகளினதும் பொருளாதாரங் களை ஒன்றிணைக்கும் ஓர் பொருளாதார நடவடிக் கையாக காணப்படும் அதே நேரம் வர்த்தகக் கட்டுப்பாடுகளை நீக்கு தல், மூலதன மற்றும் ஊழியக்கட்டுப் பாடுகளை நீக்குதல் போன்ற விடயங்களை தாராளமயப் படுத்தி உலக நாடுகளை ஒரே சந்தையின் கீழ் கொண்டு வந்து, இதன் மூலம் தொழில் நுட்பம் சார்ந்த கருத்துக்களை உலக நாடுகள் யாவற்று க்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் எல்லா நாடுகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாடாக அமைகின்றது. கலாசார உலக மயமாக்கல் எனும்போது தனித்துவ மான கலாசார அமைப்புக் கள் சிதைந்து உலகம் பூராகவும் ஒரே கலாசாரம மற்றும் சமூக அமைப்பை ஏற்படுத்துவதாக அமைகிறது. இதன் அடிப்படையில் கலாசார நிலையில் உலகமயமாதல் மேலைத்தேய மயமாக்கல் எனப்படுகிறது. அரசியல் சார்ந்த உலகமயமாதலானது அரசியல்ரீதியில் உலகநாடுகளை தனிப்பெரும் அரசியல் சிந்தனையின் கீழ் ஒன்றிணைத்தல் என்ற வகையில் அமைந்து விடுகிறது. இவ்வாறு இவ் அரசியல் ரீதியான சிந்தனையின் ஒன்றி ணைவு பொருளாதார சமூக உலகமயமாக் கலுக்கு அடிப்படையாக அமைந்துவிடுகின்றது. இவ்வாறு உலகமயமாதல் பற்றி பல்வேறு வகைகளில் காணப்பட்டாலும், நாம் எவ்வாறு இலங்கைப் பொருளாதாரம் உலக மயமாக் கலுடன் தொடர்பு கொண டுள்ளது என்பதனை நோக்குவோம்.

எமது நாடானது உலகமயமாக்கலுடன் தன்

ஆதிக்கத்தினை வலுப்படுத்திக் கொள்வதற்கு எம் நாடானது அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடாக இனங்காணப்பட்டாலும், மற்றைய அபிவிருத்தி அடைந்த நாடுகளின் வெற்றி மற்றும் எமது நாட்டு கலப்புப் பொருளாதார பின்னடைவுகள் என்பன எம் நாட்டை விரும் பியோ, விரும்பாமலோ சந்தைப் பொருளாதார செயல்நெறிக்கு கட்டுப்படச் செய்து, உலக மயமாக்கல் என்ற நீரோட்டத்தில் இணைத்து விடுகின்றது. ஆரம்பகாலத்தில் விவசாயப் பொருளாதாரமாகக் காணப்பட்ட நாடு உணவில் மட்டுமே தன்னிறைவு அடைந்த நிலை காணப்பட்டது. இவற்றோடு மானிய முறைப் பொருளாதாரமாகவும், மூடப்பட்ட ஓர் பொருளா தார முறையாகவும் காணப்பட்டது. பின்னர் காலணித்துவ ஆரம்பமும் வளர்ச்சியும் கீழைத்தேச நாடுகளில் காணப்பட்ட பௌதீக புவிசார் புவியியல் சூழ்நிலைகளும், மேலைத்தேச நாடுகளின் தேவை வளர்ச்சியும், இத்தகைய பெருந்தோட்ட முறைக்கு வித்திட்டது. இந்தவகையில் கிராமிய, பெருந்தோட்ட விவசாயங்களில் காணப்பட்ட குறைபாடுகளைக் கொண்டிருந்து, 1977ம் ஆண்டு எமது பொருளாதாரம் திறந்துவிடப்பட்டிருந்தது. இதனால் பொருளாதாரம் பல்வேறு வழிகளில் சர்வதேச சந்தையாக விரிவாக்கி வளர்ந்துகொண்டு வந்தது. இத்தாராளமயமாக்கலினூடாக அமைப்பு சீராக்கல் திட்டங்களும், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு தனியார் மயமாக்கல் என்பன ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதனால் மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையில் காணப்பட்ட எமது பொருளாதார நடவடிக்கைகள் இதன்நிமிர்த்தம் மாற்றத்திற்குள்ளாகி பல்வேறு வழிகளில் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் பக்கபலமாய் இருந்து வந்துள்ளது. பொருளாதாரம் என்பது வளர்ந்து கொண்டே இருக்கும் தன்மையை தெரிவுபடுத்துகின்றது. இதனால் இதன்பிற்பாட எமது பொருளாதாரம் உலகமயமாதல் என்ற பாதைக்குள் விடப்பட்டு பொருளாதாரத்தின் உயர் வளர்ச்சியினை எடுத்துக்காட்டுகின்றது.

உலகமயமாக்கலானது இலங்கைப் பொருளாதாரத்தினை பல்வேறு பொருளாதார செயற்பாடுகள் மூலம் முன்னெடுத்துச் செல்கின்றது. என்பதை மறுக்கமுடியாது. பொருளாதாரத்துடன் மாத்திரம் நின்றுவிடாது உலக பொருளாதார நிலைகளையும் அறிந்து அதற்கேற்ற வகையில் பொருளாதார நிலைகளை மாற்றிக் கொள்ளமுடிகின்றது. இந்த வகையில் விலைக் கட்டுப் பாடுகளை நீக்குதல் என்பதனூடாக அதாவது இதுவரை இருந்து வந்த அரசாங்க நிகழ்வாக தீர்மானங்களுக்கமைய இலாபம் தீர்மானிக்கப் பட்ட முறையும் அகற்றப்பட்டு, அதற்குப்பதிலாக சந்தைச்சக்திகளே விலைகளை தீர்மானிக்கும் முறைகொண்டு வரப்பட்டதோடு, ஒருவரின் திற மைக்கு ஏற்ப இலாபம் உழைக்கும் முறைக்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. உலக சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டு எமது நாட்டுப் பொருளாதார உற்பத்திப் பொருட்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இவற்றோடு வரிகள், தீர்வைகள் என்பவற்றினை குறைத்துக் கொள்வதாகவும் அமைகிறது. ஆரம்பத்தில் எம் நாட்டில் காணப்பட்ட வரிகள், தீர்வைகள் என்பன உலகமயமாதலில் இணைக்கப்பட்டதனூாக, குறைக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுக்கும் நிகழ்வாக விளங்குகிறது. இவற்றோடு தனியார் துறையின் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்கின்றது. மற்றும் பொருளாதார முயற்சிகளில் அரச தலையீட்டை நீக்குவதன் ஊடாக அரசாங்க செலவைக் குறைத்துக் கொள்ளவும், தொழில்நுட்ப பரிமாற்ற கட்டுப்பாடு களை நீக்கி தொழில்நுட்ப வருகையை எதிர் பார்த்து வெளிநாட்டு வர்த்தகம் மீதான கட்டுப் பாடுகளை நீக்குவதாகவும் அமைகின்றது.

இலங்கையின் பொருளாதர்ரத்தில் இன்று உலக மயமாதல் அன்னியோன்னிய தொடர்பு

கொண்டே வளர்ந்து வருகின்றது. இன்று சில பொருட்களுக்கு உலகசந்தையில் கேள்வி அதிகமாகக் காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக தேயிலை, இயற்கை றப்பர், மற்றும் தைக்கப்பட்ட ஆடைவகைகள் போன்றன அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு உலக கவனத்தினை ஈர்க்கின்றது. உலக மயமாதல் என்று கூறுகின்றபோது உலகம் சுருங்கி விட்டது என்றும், இதனால் இது கிராமமாக மாறிவிட்டது என்றும் கூறமுடிகிறது. இதன் தாக்கத்தினால் சகலதுறை வளர்ச்சிகளும் இவ் உலகமயமாதலுடன் இணைந்து விட்டதனை அறியமுடிகிறது. இதன்மூலம் இன்று தகவல் தொழில்நுட்ப ரீதியிலும் வளர்ச்சியடைந்திருக் கும் உலகமயமாக்கல் முறையானது உட னுக்குடன் எப்பொருட்களை அறிந்துகொள் ளவும், கொள்வனவு செய்யவும் வேண்டிய நிலையை நாட்டின் பொருளாதாரத்திற்கூடாக ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

மற்றும், ஆரம்ப காலங்களில் இப்பொருளா தாரத்தில் காணப்பட்ட காலம், தூரம் என்பன வற்றின் தாமதங்கள் கடந்த காலங்களில் பொருளாதாரத்தில் அதிக நட்டங்களை தோற் று வித்துள்ளது. இவற்றினை நீக்கவும், உலக நாடுகளின் நிலைகளுக்கு ஏற்றவகையில், பொருளாதாரத் தின் வேகத்தினை அதிகரித் துக் கொள்ளக்கூடிய சக்தியினை தகவல் தொழில்நுட்ப விரிவாக்க நிகழ்விற்கு இது உறு துணையாக அமைந்து விடுகிறது. இவற்றோடு பொருளாதாரத்தில் அதிக தாக்கம் செலுத்திக் கொண்டு எம் பொருளாதாரத்தையே சின்னா பின்னமாக்கிக் கொண்டிருக்கும் போர், அழிவு கள் என்பன குறைக்கப்பட்டு நாட்டினை முன் னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்லும் வகை யிலும், வளப்பரிமாறல்களை மேற் கொண்டு உற்பத்தி தேவைக்கேற்ற வகையில் பெற்றுக் கொள்ளவும் காரணமாய் அமைகிறது. உலக நாடுகளின் பொருளாதார முறைகளில் காணப் படும் நவீன தொழில்நுட்பங்களை குறைந்த விலையில் பெற்று தம் வளப் பாட்டை அதிகரிக்கக்கூடிய தன்மை இவ் உலக மயமாதல் மூலமே ஏற்படுகின்றது. உலக மய மாதலினூடாக புதிய மாதிரிக்கைத் தொழில்கள், சேவைக்கைத் தொழில்கள் என்பற்றின் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு, காணப்படுவத னால் நாட்டினை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற முடிகின்றது.

இவற்றோடு பொருளாதாரத்தில் அபிவிருத்திக் குத் தேவையான நிதி உதவிகளை குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்தனூடாக நாட்டின் அபிவிருத்தியை விரைவு படுத்துகின்றது. உலக நாடுகளின் தொழில்நுட்பம், முயற்சியாண்மை என்பன எம் நாட்டிற்கு கொண்டு செல்லப்படு வதனால் நாட்டின் பொருளாதார துறைகள் நவீனமயமாதலுக்கு உட்பட்டு, மூன்றாம் மண் டல நாடுகளுடன் போட்டியிடும் அளவிற்கு அதன் ஆற்றலை உயர்த்துவதற்கு பொருளா தாரத்தை செயற்படுத்த முனைகின்றது. இத னால் வினைத்திறன் அதிகரித்து, தொழில் வாய்ப்புக்கள் பெருகி மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைய வழியமைக்கிறது. மற்றும் நாட்டின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை உயர்ந்தளவில் பேணுவதற்கு, சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாத வகையில் பாதுகாத்து வளங்களை வீண்விரயம் செய்யாது தேவை க்கு ஏற்றவகையில் பயன்படுத்தி, நாட்டின் கடன் நிலையை ஓரளவிற்கு குறைத்துக் கொள்வதற்கு உலகமயமாதலூடாக சர்வதேச ஒத்துழைப்பு, கூட்டுறவு, முக்கிய பங்கினை வகிக்கின்றது. நாட்டினை உலகமயமாக்க லுக்கு உட்படுத்துவதன் மூலம் சந்தைச் சக்திக ளின் தடைகளற்ற இலக்கிற்கும், தாமா கவே நிலையான போட்டி முறையை ஏற்படுத் தவும், வழிகாட்டுகிறது. உலக பொருளாதாரத் துடன் எம் நாட்டுப் பொருளாதாரத்தையும் இணைப் பதன்மூலம் போட்டித்தன்மையை ஏற் படுத்தி அதன்மூலம் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல உலகமயமாதல் இன்றியமையாத தாக அமைகிறது. இவ்வாறு பல்வேறு தன்மை களை கொண்டு பொருளாதாரத்தினை உயர்த்தி

அபிவிருத்தி அடைய வைப்பதற்கு இவ்வாறான சாதகமான தன்மைகளை உலக மயமாக்கல் வழங்கி வருகின்றது.

இவ் உலகமயமாக்கலானது இலங்கைப் பொருளாதாரத்திற்கு சாதகத் தன்மைகளை உண்டு பண்ணியிருப்பினும், பொருளாதாரத் திற்கு பாதகத தன்மைகளையும் ஏற்படுத்தி யிருப்பதை காணமுடிகின்றது. இந்த வகையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகை யில் அபி விருத்தி அடைந்துவரும் நாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தபோதும், இலங்கைப் பொருளாதாரமும் அதன் தாக்கத் திற்கு உட்படுவது தவிர்க்க முடியாததா கின்றது. முதலில் கிடைப்பதற்கரிய அழி வடைந்து போகும் மூல வளங்களை இழக்க நேரிடுகின்றது. உலகமயமாதல் மூலம் புதி தாக உருவாகிய வேலைவாய்ப் புக்களைவிட அவை இல்லாமற் செய்த வேலை வாய்ப்புக் களே அதிகரித்துக் காணப்படுகிறது. மற்றும் நாட்டு மக்கள் தங்கள் அபிலாசைகள், முடி வுகள் மேற்கொள்வதில் இருந்த அதிகாரம் போன்ற எல்லாவற்றையும் உலகமயமாக்கல் சிதைத்து விடுகின்றது. தேசியவளங்கள் மீது நாட்டுமக்கள் கடப்பாடு கொள்ளமாட்டார்கள். சர்வதேச நிறுவனங்களே இத்தகைய முடிவு களை எடுத்து விவசாய உற்பத்திகள் மீது பாதுகாப்பினை குறைத்த தன் காரணமாக நாட்டு விவசாயிகள் பாதிப்படைந்ததுடன், உணவில் சுயநிறைவினையும் இழந்து காணப் படுகிறது. உலகமயமாக்கல் பணவீக்கத்தினை இழந்து காணப்படுகிறது. உலகமயமாக்கல் பணவீக்கத்தினை அதிகரிக்கச் செய்ததுடன், பொருளாதாரத்தின் உறுதியற்ற நிலைக்கு கொண்டு சென்று தங்கியிருத்தல் நிலையை அதிகரிக்கச் செய்துள்ளது. எமது நாட்டினை எடுத்து நோக்கினால், உலகமயமாக்கலுக்கு ஈடுகொடுத்து பல்வேறு மோசமான இழப்புக்க ளையும் எதிர்கொண்டு வருகிறது. இதனால் எதிர்வரும் காலங்களில் உலகமயமாதலின் விளைவுகள் அதிகளவு தாக்கம் செலுத்துகின்ற போது உலகமயமாத லுக்கு முன்பிருந்த நிலையைவிடவும், மோச மானதாக பாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டு விடக்கூடும். இவ்வாறு பல்வேறு பொருளாதார விளைவுகளை இவ் உலகமயமாக்கல் ஏற் படுத்துகின்றது.

எனவே நாட்டின் பொருளாதாரத்தில் செல்வாக் குச் செலுத்தும் உலகமயமாக்கல், உலகநாடு களின் செல்வாக்கினால் வளர்ந்து வருகின்ற அதேநேரம் அபிவிருத்தி அடைந்த நாடுக ளுக்கு இவை மிக இன்றியடையாத ஒன்றாக அமைந்து விடுகின்றது என்றும், இலங்கை போன்ற எம் பொருளாதாரங்களுக்கு இவை நெருங்கிய தொடர்பு கொண்டு பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தியிருப்பினும், அதிகம் அபவிருத்தி அடைந்து வருகின்ற எமது நாடான இலங்கைப் பொருளாதாரத்திற்கு என்று சவாலாக அமைந்துவிடுகின்றது. எனவே இவ் உலகமயமாக்கலானது ஒரு புறத்தில் எம் பொருளாதாரத்திற்கு முக்கியமானதாகவும், அதேவேளை பாதகத்தன்மையை எற்படுத்து கின்ற வகையில் சாத்தியமற்றதாகவும் காணப் படுகின்றது. இதனால் இலங்கைப் பொருளா தாரத்திற்கு இவ் உலகமயமாக்கல் என்ற செயற்பாடானது தவிர்க்கப்படமுடியாததாக அமைந்து விடுகின்றது எனலாம்.

ஆக்கம்:-
அ. சில்வெஸ்ரர் ஜெகதாஸ்
கலைகலாசாரபீடம்,
இறுதிவருடம் (2006)
கிழக்குப்பல்கலைக்கழகம்

கிழக்குப் பல்கலைக்கழக வெள்ளிவிழாச் சிறப்பு மலராக "வெளி " வெளிவருவதையிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இக்கட்டுரை முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

# 2004ம் ஆண்டு சுனாமித் தாக்கத்தினால் புவியில் ஏற்பட்ட அக புற மாறுதல்கள்

சமுத்திர அடித்தளத்திலேற்படுகின்ற புவி நடுக்கம், குவிமையத்தினைச் சுற்றியுள்ள சமுத்திர நீரை வேகமாக உந்தித் தள்ளு வதால் மிக வேகமான பொங்கு அலைகள் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ''சுனாமி" அலை களைத் (Tsunami Waves) தோற்றுவிக் கின்றன. இவற்றினைப் பெருக்கு அலைகள் (Tidal Waves) எனவும் அழைப்பர். இது புவி நடுக்க அலைகள் (Seismic sea Waves) எனவும் அழைக்கப்படுகிறது. இந்த அலைகள் கடற்கரையோரத் துறைகளைத் தாக்குவதால் ''துறைமுக அலைகள்" (Harnour waves) என அர்த்தப்படும். ''சுனாமி" என்ற வார்த்தை இதனைக் குறிக்க முதன்முதல் யப்பானியரால் பயன்படுத்தப்பட்டது.

2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி அதிகாலை 6.29 மணிக்கு இந்தோனேசியத் தீவுகளில் ஒன்றாகிய சுமாத்திராத் தீவின் வடமேற்குக் கரையோரத்தை அண்டிய இந்து மஹா சமுத்திரத்தில் பெரியதொரு அனர்த்தத்திற் கான ஆரம்பம் தூபமிடப்பட்டது. அவ்விடத்தின் மேல் மட்டத்திலிருந்து புவியோட்டில் 10,000 மீற்றர் கள் ஆழத்தில் 9.0 றிச்டர் அளவிலான புவி நடுக்க மொன்று அசுரபலத்தோடு உற்பத்தியாகி சுனாமி என்கிற நாசகார, அலைப் பெருக்கினைத் தோற்றுவித்தது. ஆழ் கடலில் ஏறக்குறைய 1m உயரத்தில் ஆனால் மணிக்கு 800 Km வேகத்தில் அது தன் பயணத்தை ஆரம்பித்தது. சுனாமியின் வேகம், கடலின் ஆழத்தினைப் பொறுத்தது. கடற்கரை யோரங்களையடுத்து ஆழங் குறைந்த கடலில் அதன் வேகம் மணிக்கு 100 Km ஆகக் குறைந்த போதிலும் அதன் உயரம் 10m தொட்டு 8m வரையினதாக அலைச் சுவராக அமைந்தி ருந்தது. சுனாமி கரையோரங்களைத் தாக்கும் போது ஒரு சதுர மீற்றருக்கு 50 ஆயிரம் தொன் எடையுள்ள கடல் நீரைப் பாய்ச்சியது.

இந்த சுனாமிப் பேரலையானது புவியில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக பல ஆய்வுகள் கூறி நிற்கின்றன. பூமியின் மையத்தை 3 மைக்ரோ செக்கன்களால் சுற்றி யுள்ளதுடன் அதன் அச்சின் உறுதியும் நிலை குலைந்துள்ளது என அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவின் ஆய்வகத் தைச் சேர்ந்த பூகோள பௌதீகவியலாளர் றிச்சர்குறோல் தெரிவித்துள்ளார். இதனால் ஒரு நாளின் நேர அளவு செக்கனில் சில பகுதிகளால் குறைவடைந்துள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் பூமி யின் அச்சு ஏறத்தாழ 2.5 m ஆல் சாய்ந்துள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனையே அவுஸ்திரேலியாவின் தேசிய பல்கலைக்கழக மான அணு தலைநகர் கன்பெராவில் புவியீர்ப்பு மானி கூடமொன்றை அமைத்து ஆய்வினை மேற்கொண்ட விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள் ளனர். மேலும் சந்திரன், சூரியன் போன்ற வற்றின் இயக்கத்தால் பூமியில் ஏற்படுகின்ற மாற்றத்தைப் போல் இந்த அனர்த்தம் இடம்பெற்ற பின்னர் பூமியின் அசைவில் 20-30 Cm அளவிலான வீச்சில் மாற்றம் ஏற்பட் டுள்ளது என அவுஸ்ரேலிய தேசிய பல்கலைக் கழக பூகோள விஞ்ஞான ஆராய்ச்சியாளர் ஹேபிப்மக்கியின் தெரிவித்துள்ளார்.

அடுத்ததாக அமெரிக்காவில் உள்ள ஆழமான கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது என அமெரிக்க நீர்வளத்துறை நிபுணர்கள் தெரிவித் துள்ளனர். அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் 4 அங்குலம் அளவுக்கு உயர்ந்துள்ளதாக நீர் நிர்வாக அதிகாரிகள் ஆதார பூர்வமாக நிரூபித்துள்ள னர். ஜான்முலிலிசன் இதுபற்றி தெரிவிக்கை

யில் புளோரிடாப் பகுதியில் நீர்மட்டம் சில வேளைகளில் உயரும். எனினும் தற்போது உயர்ந்து நிற்பது வழமைக்கு மாறானது என்கிறார்.

அதுமட்டுமன்றி நிக்கொபார் நில அமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது படிரில்கெட் என்ற தீவு இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. பல இடங்களில் தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது. அழகிய கடற்கரைகள், கேம்பெல்பே போன்ற பல தீவுகள் மாயமாக மறைந்து விட்டன. என்னும் இத்தகவலை ஒருங்கிணைந்த நிவாரணப் படையணியின் செய்தி தொடர்பாளர் லெப்டினட் ஜெனரல் பி. எஸ். தாகூர், போர்ட் பிளேயர் நகரில் வைத்து தெரிவித்திருந்தார். அதாவது கார் நிக்கோபார் பகுதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு அதில் சில பகுதிகள் தண்ணீரில் மூழ்கி விட்டமையையும் போர்ட் பிளேயர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளமையை யும் குறிப்பிடலாம். மேலும் போர்ட் பிளேயர் துறைமுகம் தென்கிழக்கு திசையில் 1m முன்றே முக்கால் அடி தூரம் நகர்ந்திருக்கிறது. கடல் மட்டத்தின் அளவும் 1-1/2 உயர்ந்தும் உள்ளது.

மேலும் சுமாத்திரா தீவின் தென்மேற்குக் கரையில் இருந்த பல சிறு தீவுகள் தென்மேற்கே 20m தூரம் நகர்ந்திருப்பதாகவும் தகவல் வெளிவந்துள்ளன. இதன்போது சுமாத்திரா தீவு கடல் மட்டத்திலிருந்து உயர்ந் திருப்பதையும் · பர்மாபீடபூமி, இந்தியபீடபூமி கடல் மட்டத்திலிருந்து கீழே இறங்கி இருப்பதா கவும் தகவல் வெளிவந்துள்ளது.

மேலும் இந்த பூமியதிர்வின்போது தீவுகள் பக்கவாட்டில் இல்லாமல் செங்குத்தாகவும் அசைக்கப்பட்டுள்ளன. மாலைதீவில் பல தீவுகள் நீருள் · அமிழ்ந்து போயுள்ளது. வங் காள விரிகுடாவின் கடலருகில் வெப்பநிலை 1.5$^{0}$C வரை அதிகரித்தும் கண்டங்களுக்கு இடையே சுற்றுச்சூழல் மாற்றங்கள் ஏற்பட்டும உள்ளது.

அந்தமான் யூனியன் பிதேசத்துக்கு நிக்கொபாரில் திரிங்காட் தீவுள்ளது. இத்தீவில் தொடர்ச்சியாக ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கடல்நீர் உட்புகுந்து இரண்டாகிவிட்டது. 2004 டிசம்பர் 24இல் எடுத்த செயற்கைக்கோள் படத்தில் தீவு முழுமையாக இருந்தது. நில நடுக்கத்தின் பின் அதே இடத்தில் இஸ்ரோவின் தொலையுணர்வு செயற்கைக்கோள் படம் எடுத்தது. அதில் அந்த தீவு நொறுங்கிப் போனது போல் காட்சியளித்தது.

இந்தோனேசியா - சுமாத்திராதீவு கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பத்தால் அப்பகுதியில் பாரிய பிளவுகள் தோன்றியுள்ளதாக ''நட்ஷிஷிமா" என்ற ஜப்பானியக் கப்பலில் ஆய்வுகளை மேற்கொண்ட யப்பான் அராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் தென்னிந்திய மீனவர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் விவேகானந்தர் கூறுவதாவது, சுனாமியின் பின் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடலின் குணமும் நிலையும் அடியோடு மாறிவிட்டதாக கூறுகிறார்கள். கடலின் ஆழமும் குறைந்து விட்டதாகவும் தாங்கள் மீன் பிடிக்கும் பகுதியில் காணப்படும் மீன்கள் எங்கோ இடம்பெயர்ந்து சென்றுவிட்ட தாகவும் தற்போது இதுவரை பாராத அபூர்வ மீன் வகைகள் காணப்படுவதாகவும் கூறுகிறார்கள். பல இடங்களில் 65 அடிவரை கடல் தரைப்பகுதிக்குள் வந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மலாக்கா நீரிணையில் பல இடங்களில் ஆழம் குறைந்தள்ளது. பல இடங்களில் சுனாமிக்கு முன் 4000 அடியாக இருந்த ஆழம் 100 அடியாகக் குறைந்துள்ளது. அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையம் மேற்கொண்ட ஆய்வில் இதனைக் கண்டு பிடித்துள்ளது. இது போல் மற்றுமொரு பகுதியில் 3655 அடியாக இருந்த ஆழம் 92 அடியாக குறைந்தள்ளது. இவை சீராகப் பல ஆண்டு எடுக்கும். மேலும் இலங்கையின் அருகில் பாரிய பிளவு ஒன்று ஏற்பட் டுள்ளதாக அறியப்படுகின்ற போதிலும் அது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

அது மட்டுமன்றி இலங்கையின் அமைவில் எந்த வொரு மாற்றமும் இதுவரை அவதானிக் கப்படவில்லை. இலங்கையின் தற்போதைய செயற்கைக்கோள் படம் மூலம் இது உறுதி செய்யப்படுகிறது.

2004ம் ஆண்டு சுனாமித் தாக்கத்தினைத் தொடர்ந்து உலகில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் யாவும் இவ் அனர்த்தத்தின் பிரதிபலிப்பாகவே காணப்படுகிறது. பசுபிக் நெருப்பு வலையத்திலே தான் இவை அதிக மாக ஏற்படுகின்றது. அண்மையில் கூட இந் தோனேசியாவில் யோக்கி யகார்த்தாவில் ஏற்பட்ட புவிநடுக்கம் அதனை தொடர்ந்து மராண்டி எரிமலை வெடிப்பு என்பன கூட இப்பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய பிளவு களின் காரணமாகவே அமைகின்றன. இவ்வா றாக இப்பகுதியில் இயற்கை அனர்த்தங்கள் தொட ர்ச்சியாக ஏற்பட்ட வண்ணமேயுள்ளன. இவை யனைத்துமே சுமாத்திரா சுனாமியின் விளைவே என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்**


01.குணராசா. க. (2005). சுனாமி கடற்கோள், கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், பக்கம் (48-192).

02.வீரகேசரி 27.12.2004 - 26.01.2005

03. தினக்குரல் 27.12.2004 - 27.02.2005.


ஆக்கம்:-


**து. நாகரஜனி**
புவியியல் சிறப்புக் கற்கை
3ம் வருடம். (2006)


# பிரிவே வாராயோ....

*பிரிவே*
*எவ்வளவு கொடுமையானது*
*உனது வருகை.*

*வருடம் வருடமாய்*
*பிரித்து வைக்கிறாய்*
*வருடத்திற்கொருமுறை*
*வந்து கண்ணீரை*
*உருவாக்குகிறாய்.*

*உன் வருகையால்*
*பூமி முழுதும்*
*ஒப்பாரி*
*இசைத்துக் கொள்கிறது.*

*சொர்க்க வாசல்கள்*
*மூடிக் கொள்கின்றன*
*நரக வாசல்கள்*
*திறந்து கொள்கின்றன.*

*உன்வருகையை வரவேற்க*
*பகல்கள் பசியால்*
*பிராகாசிக்கின்றன.*
*இரவுகள் அனைத்தும்*
*கண்ணீரால் அலங்கரிக்கிறது.*

*பிரிவெனும் யமனே - நீ*
*தந்த பரிசானது - நண்பர்களின்*
*இன்பங்களை அழிக்கின்ற*
*அழிறப்பர்.*

*இருப்பவனையும் இல்லாதவனையும்*
*ஒன்றாக்கிய நட்பை*
*பிரிவே நீ - மீண்டும்*
*வேறாக்குகிறாயே!*

*உனது வருகையை*
*நண்பர்கள் நாம் ஒன்றுகூடி*
*வெட்டி சாய்க்கிறோம்*
*முடியவில்லை - முடிந்தால்*
*நீங்களாவது ஒழித்துவிடுங்கள்.*


து. அரவிந்தன்
விடுகைவருடம் (2006)
கலைக்கலாசாரபீடம்

# இராமாயணம் ஒன்றா? பலவா?

பேராசிரியை: சித்திரலேகா மௌனகுரு

இராமாயணம் உலகின் பேரிலக்கியங்களுள் ஒன்றாகும். இது நீண்ட வரலாற்றைக் கொண்டது. பல்வேறு மொழிகளிலும் பல்வேறு நாடுகளிலும் வழங்கி வருவது. குறிப்பாகத் தென்னாசிய, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பண்பாட்டுடன் இராமாயணம் இரண்டறக் கலந்துள்ளது.

தமிழிலும் சமஸ்கிருதத்திலும் மாத்திரமல்லாமல் இந்நாடுகளில் வழங்குகின்ற பல்வேறு பிராந்திய மொழிகளிலும் இக்கதை காணப்படுகிறது. கன்னடம், மலையாளம், தெலுங்கு, சிங்களம், குஜராத்தி, வங்காளம், மராத்தி, ஒரியா, பிராகிருதம், காஷ்மீரி போன்ற தென்னாசிய மொழிகளில் இராமாயணம் வழங்குகிறது, அத்துடன் சீனமொழி, தீபெத்தியமொழி, கம்போடியமொழி, லாவோசியமொழி, மலேசியமொழி போன்றவையும் இராமாயணம் வழங்குகின்ற மொழிகளாகும்.

இராமாயணக் கதையானது இலக்கியமாக மாத்திரமல்லாமல் வேறு கலை வடிவங்களாகவும் வழங்கி வருகிறது. குறிப்பாக நீண்டகாலமாக அளிக்கைக் கலைகளாக (Perfoing Arts) – நாடகமாகக், கூத்தாக, கதாப்பிரசங்கமாக, இசைப்பாடல்களாக இராமாயணம் நிகழ்த்தப்படுகிறது. இந்த அளிக்கைக் கலைகளே இராமாயணத்தைப் பொதுமக்கள் மத்தியில் பரவலாக்கியுள்ளன. மேலும் ஓவியம், சிற்பம் ஆகியவற்றுக்கும் இராமாயணக் கதை கருவாக அமைந்து வந்துள்ளது. இராம கதையுடன் தொடர்புடைய பல்வேறு கிளைக் கதைகளும் மக்கள் மத்தியில் நெடும்பாடல்களாகவும், கதைகளாகவும் காணப்படுகின்றன. சாதாரண மொழி வழக்கில், பல பழமொழிகள், உவமைகள் ஆகியவை இராமாயணச் சம்பவங்களையும் பாத்திரங்களையும் கொண்டு அமைந்துள்ளன.

<u>இராமாயணம் பற்றிய இவ்விடயங்களை இங்கு நான் கூறுவது இவ்விலக்கியத்தின் பெருமையை நிறுவுவதற்கு அல்ல, மாறாக, நீண்ட பாரம்பரியமுள்ள ஒரு இலக்கியம் எவ்வாறு பல்வேறு விகற்பங்கள் உடையதாக மாறியும் வளர்ந்தும் வந்துள்ளது என்பதை யும் அத்தகைய விகற்பங்களே அதற்குச் செழுமையையும் நிலைத்து வழங்கும் இயல்பையும் அளிக்கின்றன என்பதையும் எடுத்துக் காட்டுவதற்காகவே</u> ஏனெனில் தமிழில் இராமாய ணம், இலக்கியக் கல்வி மூலமும், இராமாயண விழாக்கள், பட்டிமன்றங்கள் போன்றவை மூலமாகவுமே இன்றைய தலைமுறையின ரைச் சென்றடைகிறது.

இவ்வாறு சென்றடைகின்ற இராமாயணம் குறிப்பாகக் கம்பராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டது. இராமாயணத்தின் மூலம் எடுத்துக் காட்டப்படும் தர்மம், கற்பு போன்ற விழுமியங்களும் கம்பராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டே கட்டமைக்கப்படுகின்றன. தமிழில் நாட்டார் மத்தியில் வழங்கும் இராமாயணக் கதைகள் புறந்தள்ளப்பட்டு ஒரு குறிப்பிட்ட வகையான இராமாயண மரபே அங்கீகாரம் பெற்றதாகக் கட்டமைக்கப்படுகிறது.

இராமாயணத்தின் வெவ்வேறுபட்ட மரபுகள், வழக்காறுகள், விகற்பங்கள் இராமாயணத்தின் தனித்துவம் வாய்ந்த பன்மைத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. நீண்ட வரலாறும் பல்வேறு மரபுகளின் செழுமையும் இராமாயணத்தின் நீடித்த வாழ்வுக்குப் பங்களித்துள்ளன என்பதைப் பலரும் மறந்துவிடுகின்றனர், மாறாக இராமாயணம் ஒன்றுதான், அதனுடைய பிறழ்வுகளே அல்லது திரிபுபட்ட வடிவங்களே ஏனையவை. அல்லது இவை இடைச் செருகல்களாக அமைந்தவை என்று பலரும் கூறுவர்.

ஆனால் பல்வேறு மொழிகளிலும் பல்வேறு பிரதேசங்களிலும் பல்வேறு கலைவடிவங்களிலும் வழங்கும் இராம கதையானது, இராமாயணம் ஒன்றல்ல, அது பலவாகும் என்றும் இப் பல்வேறு இராமாயணங்களும் அந்தஸ்தில் சமமானவை என்றும் புலப்படுத்துகிறது.

இக்கருத்தைப் புரிந்து கொள்வது இராமாயணத்தை இலக்கியமாகக் கற்கவும் கற்பிக்கவும் அவசியமானதாகும். நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகின்ற இலக்கியப் பாரம்பரியங் களின் பன்மைத்துவமே அவற்றின் உயிர் நாடியாக அமைவது என்ற விளக்கம் கிடைக் கும்போதே அந்த இலக்கியப் பாரம்பரியங் களைச் சரியானபடி அணுக முடியும்.

நாட்டார் மட்டத்தில் இராமாயணம் பற்றி வழங்குகின்ற கதைகள் சில அதன் பன்மைப்பாடு பற்றி எடுத்துக்கூறுவனவாகும். அவற்றில் ஒன்று இந்திமொழியில் அமைந்த ஒரு கதையாகும். கதையின் சுருக்கம் பின்வருமாறு

'ஒரு நாள் இராமனுடைய மோதிரம் கழன்று கீழே விழுந்தது. விழுந்த மோதிரம் ஒரு நிலத்தில் ஒரு துளையை உண்டாக்கி அதனூடு மறைந்துவிட்டது. அந்த மோதிரத்தைத் தேடும்படி இராமன் அனுமனைக் கேட்டான். அனுமனும் மிகச் சிறியதோர் உருவம் எடுத்து மோதிரம் வீழ்ந்த துளைக்குள்ளால் நுழைந்து பாதாள உலகை அடைந்தான். பாதாள உலகில் பூததேவனின் உணவுச்சாலையில் அனுமனைக் கண்ட பணிப்பெண்கள் பூதக் கடவுளுக்குப் பிரியமாக இருக்கும் என்று எண்ணி மிகச்சிறிய உருவிலிருந்த அனுமனைப் பிடித்து அவரது உணவுத்தட்டில் வைத்துவிட்டனர், தனது உணவுத்தட்டில் அனுமனைப் பார்த்த பூதக்கடவுள் விபரம் கேட்டார். இராமனுடைய மோதிரத்தைத் தேடிவந்ததை அனுமன் கூறினான். பூதக்கடவுள் உடனே ஒரு தட்டை அனுமனிடம் காட்டினார். ஆயிரக்கணக்கான மோதிரங்கள் அத்தட்டில் இருந்தன. அவற்றுள் இராமனுடைய மோதிரத்தைத் தேடி எடுக்கு மாறு கூறினார். எல்லா மோதிரங்களும் ஒரே மாதிரியாக இருக்கவே அனுமன் தடுமாறினான். பூதக்கடவுள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்.

'இந்தத் தட்டில் எத்தனை மோதிரங்கள் உள்ளனவோ அத்தனை இராமர்களும் பிறந்து இறந்திருக்கின்றனர். இராமனுடைய பிறப்பு முடிவடையும்வேளை அவரது மோதிரம் கழன்று வீழ்ந்துவிடும். அவ்வாறு வீழ்ந்த மோதிரங்களே இத்தனையும். நீ பூவுலகிற்கு போகும்போது அங்கு இராமனைக் காணமாட்டாய் என்றார். அனுமனும் திரும்பிச் சென்றான்.''

''இன்னோர் நாட்டார் கதை மேலும் சுவாரசியமானது அது பின்வருமாறு.

ஒரு இராமாயணம் நிகழ்ந்து கொண்டிருந்தது. வனவாசம் போகவேண்டிய நேரம் வந்தபோது காட்டுக்குத் தன்னுடன் வரவேண்டாம் என இராமன் சீதையைத் தடுக்கிறான். காட்டு வாழ்க்கையின் சிரமங்களை எடுத்துக்கூறுகிறான். சீதை மறுக்கிறாள். இருவருக்கும் வாக்குவாதம் முற்றுகிறது. இறுதியாக சீதை இராமனிடம் பின்வருமாறு கேட்கிறாள்.

'இத்தனை இராமாயணங்கள் இதுவரை நிகழ்ந்துள்ளன. எந்த இராமாயணத்தில் சீதை இராமனுடன் காட்டுக்குச் செல்லவில்லை?' சீதையின் வினாவுக்கு விடை அளிக்கமுடியாத இராமன் அவளை காட்டுக்குத் தன்னுடன் கூட்டிச் சென்றான்.'

இவ்விரண்டு நாட்டார் கதைகளும் பல இராமாயணங்களில் நிகழ்ந்துள்ளன. பல இராமாயணங்கள் உள்ளன என்ற கருத்தைக் கூறுகின்றன.

ஆனால் இன்று கல்வி நிறுவனங்களிலும் கலை, இலக்கிய நிறுவனங்களிலும் நிலைநிறுத்தப்பட்டுள்ள கருத்து இராமாயணம் ஒன்று என்பதாகும். குறிப்பாக வான்மீகியின் ஏனைய இராமாயணமே ஆதியானது, அதுவே மூல நூல், ஏனைய இராமாயணங்கள் யாவும் வான்மீகி இராமாயணத்தின் தழுவல்களாவும், அதன் வழிவந்தவையாகவும் அமைந்தவை என்ற கருத்தே அழுத்தம் பெற்றுள்ளது. கம்பர் துளசிதாசர், பவபூதி ஆகியோர் ஆக்கிய இராமாயணங்கள் பற்றித்தான் பலர் கவனம் செலுத்துகின்றனர். இவையும் வான்மீகி இராமாயணத்தின் வழித்தோன்றல்களாகவே கருதப்படுகின்றன.

இவ்வகையில் இந்துப் பாரம்பரியத்தின் ஊடாக இராமாயணத்தை நோக்கும், விளக்கும் முயற்சிகளே அழுத்தம் பெற்று வந்துள்ளன.

தென்னாசிய சமூகத்தில் நடைபெற்ற மேல் நிலையாக்கம் (Sanskritization) பலவகை யினவாக இருந்த இராமாயண மரபுகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்கு அங்கீகாரம் அளித்து நிலைநிறுத்தியது. இவ்வகையில் இன்று எமக்கு இலகுவில் கிடைக்கக்கூடியதாயிருப்பது உயர்நிலைப் பட்ட இந்து இராமாயணமேயாகும்.

சமண, இராமாயணம், பௌத்த இராமாயணம், ஆந்திரநாட்டில் பிராமணப் பெண்களிடை யேயும், பிராமணர் அல்லாத பெண்களிடை யேயும் வழங்கும் இராமாயணம், கன்னட மொழியில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே வழங்கும் இராமாயணம் என இராமாயணம் பலவகைப்பட்டது. இப்பல்வேறு மரபுகளிலும் இராமர், சீதை, லக்குமணன், இராவணன், அனுமன் ஆகிய பாத்திரங்கள் உள்ளன, பாத்திரங்கள் ஒன்றேதான். ஆனால் அவை ஒரே வகையின அல்ல. அவற்றின் குணங்கள், செயல்கள் வேறுபடுகின்றன. அவற்றுக்கிடை யிலான உறவுகளில் வேறுபாடுகள் உள்ளன. கதை நிகழ்வுகளிலும் மாற்றங்கள் உள்ளன.

சமண இராமாயணம் விமலசூரி என்பவரால் ஆக்கப்பட்டது. பௌமாசரிய எனப்பெயர் கொண்டது. இந்த இராமாயணம் இராவண னுடைய வம்சாவழி கூறுவதுடன் ஆரம்பிக்கின் றது. இராவணன் அறுபத்துமூன்று சமணத் தலைவர்களுள் ஒருவனாகவே சித்தரிக்கப்படு கின்றான். அவனுடைய தவ வலிமையால் அவன் மந்திர சக்திகள் பெறுகிறான். சீதையை அவன் விரும்புவது விதியின் வலிமையாலேயே என சமண இராமாயணம் கூறுகிறது. இராமனும் கூட விடுதலை அடையத்தயா ராயுள்ள ஒரு சமண ஆத்மாகவே சித்திரிக்கப் படுகிறான். இராவணனைக் கொல்பவனாக இராமன் செயற்படவில்லை. இலக்குமணனே இராவணனைக் கொல்கிறான். இராமன் கைவல்ய (முக்தி) நிலையை அடைகிறான். இவ்வாறு சமண தத்துவ நோக்கில் பாத்திரங் களும் கதைகளில் மாறுதல்களும் அமைந்துள் ளன. அத்துடன் காரணங்களின் அடிப்படை யிலேயே செயல்கள் விளக்கப்படுகின்றன.
கன்னட மொழியில் தாழ்த்தப்பட்ட மக்களி டையே வாய்மொழிப்பாடலாக வழங்கும் இராமாயணமும் இராவணன், மண்டோதரி ஆகிய பாத்திரங்களுடனேயே ஆரம்பிக்கிறது. குழந்தைப் பேறற்ற இராவணன் பல கடுமை யான விரதங்களை மேற்கொள்ளுகிறான்.

சிவன் முனிவராகத் தோன்றி மாம்பழமொன்றை அவனுக்குக் கொடுக்கிறார். இராவணன் அந்த மாம்பழத்தைத் தனது மனைவிக்குக் கொடுப்ப தாகக் கூறிப் பெற்றுக்கொள்கிறான்.

ஆனால் அவனே அதனை உண்ணுகிறான். இதனால் அவன் கர்ப்பமடைகிறான். அவனு டைய மூக்கின் வழியாக சீதை பிறக்கிறாள். இவ்வாறு சீதையின் பிறப்பைக் கூறிய பின்னரே இராமர், இலக்குமணன் பற்றி இக்கன்னட இராமாயணம் கூறும்.

சீதையை இராவணனது புதல்வியாகக் கூறும் மரபு வான்மீகி இராமாயண மரபிலிருந்து முற்றிலும் வேறானது. இத்தகைய மரபு கன் னடம், தெலுங்கு மொழிகளில் நாட்டார் மட்டத்திலும் தென்கிழக்காசிய இராமாய ணங்கள் பலவற்றிலும் காணப்படுவதாகும்.

இன்னோர் இராமாயணம் இந்தியாவின் ஆந் திர மாநிலத்தில் தெலுங்கு மொழி பேசும் பிராமணப் பெண்களிடமும், பிராமணர் அல் லாத பெண்களிடமும் வழங்குகிறது. பிரா மணப் பெண்கள் தமது வீட்டில் நடக்கும் சடங்குகளின்போது தமது இராமாயணத்தைப் பாடுகின்றனர். பிராமணர் அல்லாத பெண்கள் பெரும்பாலும் வயலில் வேலை செய்யும்போது இராமாயணப் பாடல்களைப் பாடுகின்றனர். உழைப்பின் களைப்பை மாற்றுவதற்கும் இப்பாடல்கள் உதவுகின்றன. ஆனால் அழுத் தங்கள் வேறுபடுகின்றன. பிராமணர் அல்லாத பெண்கள், சீதையின் திருமணம், அவளது சிறையிருப்பு, பிரசவம் போன்றவை பற்றி அதிகம் அழுத்தம் கொடுக்கின்றனர். இலக்கு மணன் சீதையின் புத்திரர்களான லவ, குச ஆகிய இருவரையும் அன்புடன் பராமரிப்பது பற்றியும் இப்பாடல்கள் கூறுகின்றன. இவ்வாறு இந்த இராமாயணத்தில் பெண்பாத்திரமான சீதைக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம், இலக்

குமணன் தனது மருமக்களைப் பராமரிப் பதற்குத் தரப்பட்டிருக்கும் அழுத்தம் ஆகியவை, இந்த இராமாயணத்தினூடாகப் பெண் களது பார்வையும் விருப்பும், வியாக்கியானங் களும் இடம்பெற்றிருப்பதற்கு எடுத்துக் காட்டுகளாகும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

பௌத்த சூழலின் இரு இராமாயணக்கதை மரபுகள் காணப்படுகின்றன, ஒன்று பௌத்த ஜாதகக் கதைகளில் ஒன்றான தசரத ஜாதகம். இது வான்மீகியின் கதையைவிடக் காலத்தால் முந்தியது என்று சில ஆராய்ச்சியாளர் கூறுவர். இது பற்றி அபிப்பிராயபேதம் உள்ள போதிலும் மிகப்பழைய கதைகளில் இதுவும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. மற்றது லாவோசிய மொழியில் அமைந்துது. தாய்லாந்தின் வட கிழக்குப் பகுதி கம்போடியாவின் தென்பகுதி ஆகியவற்றில் வழங்கும் பௌத்த ராமாயணம் பற்றிய தகவல்களை இராமாயண ஆய்வாளர்கள் திரட்டியுள்ளனர்.

இவ்வாறு உயர் இந்து மரபில் மாத்திரமன்றி வேறு பாரம்பரியங்களிலும் இராமாயணம் வழங்கி வருவதை அறிந்துகொள்வது முக்கியமானதாகும். இத்தகைய வழக்காறுகளே இராமாயணத்தை பிரபல்யம் அடைய வழி வகுத்தன. அத்துடன் இவையே பல்வேறு மொழிகளிலும் பிரதேசங்களிலும் இலக்கிய மாகவும் வேறு கலை வடிவங்களாகவும் இரா மாயணத்தைப் பரிணமிக்கச் செய்துள்ளன. ஆனால் உயர்மட்டத்திலும் அதிகாரமட்டத்திலும் இராமாயணம் ஒன்றே அதன் தழுவல்களே ஏனையவை என்ற கருத்தே நிலவுகிறது.

இந்தக் கருத்தே லவன், குசன் ஆகியோரின் பிறப்பு, இராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்புதல் ஆகிய நிகழ்வுகளை உள்ளடக்கிய உத்தரகாண்டத்தை இடைச் செருகலாகவும் காலத்தால் பிந்தியதாக வாதிடுவதற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.

உண்மையில் இராமாயணத்திற்கு இரண்டு வகையான கதை முடிவுகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். ஒன்று சீதையைச் சிறை மீட்டு இராமன் அயோத்திக்குத் திரும்புதல். மற்றது அயோத்திக்குத் திரும்பிய பின்னர் சீதையை காட்டுக்கு அனுப்புவதும் அங்கு லவ குசர்களின் பிறப்பும் சீதையை நிலம் பிளந்து உள்வாங்கிக் கொண்ட நிகழ்வுகளும் கொண்ட முடிவு.

இந்த முடிவைக் கொண்ட உத்தர காண்டத்தை இராமாயண 'அறிஞர்கள்' பலர் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றனர். காரணம் அதில் இராமனுடைய தர்மத்துக்கு ஊறு விளைவிக்கும் சில கருத்துகள் அடங்கியுள்ளன என அவர்கள் கருதுவதாலேயாகும்.

இன்று தொலைக்காட்சி, வானொலி ஆகிய தொடர்பூடகங்கள் ஒரே சமயத்தில் பொதுசனங்களைச் சென்றடையக்கூடியனவாக வளர்ந்து விட்டன. இக்காலகட்டத்தில் எத்தகைய இராமாயணம் தொடர்பூடகங்களுக்குள்ளாக மக்களைச் சென்றடைகின்றது என்பது சுவாரஸ்யமான வினாவாகும். ஏற்கனவே இந்தியத் தொலைக்காட்சியான தூரதர்சனில் பல மாதங்களாக இராமாயணம் ஒலிபரப்பாகியது. இராமாயண சித்திரக்கதைப் புத்தகங்கள் பல்வேறு மொழிகளிலும் வெளியாகியுள்ளன. இவை நாம் ஏற்கனவே மேலே பார்த்தவாறு பன்முகத் தன்மையுள்ள இராமாயணப் பாரம்பரியங்களை அலட்சியம் செய்கின்றன.இவை ஒரேவகையான கருத்தையும் கதையையுமே வற்புறுத்துகின்றன. ஒரே வகையான கலாசாரம், கருத்துப்படிமம் விழுமியங்கள், கருத்து நிலை ஆகியவையே இவற்றூடு வெளிப்படுகின்றன. பல் கலாசாரச் சமூகங்களில் நிலவுகின்ற பன்மைத்துவ அம்சங்கள் மறைக்கப்படுகின்றன.

இந்நிலையில் இராமாயண கலாசாரத்தின் செழுமையையும் பன்முகப்பாட்டையும் உணரும் வகையில் இராமாயணம் ஒன்றல்ல. அது பலவாகப் பரந்து கிடக்கிறது என்பதை இராமாயண ஆர்வலர்களும் இலக்கிய ஆய்வாளர்களும் புரிந்து கொள்ளுதல அவசியமாகும். இந்தச் செழுமையையும் பன்மைப்பாட்டையும் அங்கீகரிக்கும் வகையிலேயே தலைசிறந்த தென்னாசியவியல் அறிஞரான ஏ.கே.இராமனுஜம் அவர்கள் 'முந்நூறு இராமாயணங்கள்' என்று ஒரு போது குறிப்பிட்டார்.

# கெட்ட குடி

இன்று காலையில் எழுந்ததிலிருந்து எத்தனை தடவைதான் பாக்கியம் சாமியறைக்குட் சென்று தன் இஷ்ட தெய்வமான பிள்ளை யாரை வணங்கி விட்டாள். இதற்குமுன் எத்தனையோ தடவைகள் நடந்துபோன சம்பவங்கள் எல்லாம் அவள் மன தில் அலையலையாக வந்து திரும்பிக் கொண்டி ருந்தன. படலையருகில் நின்று வீதியை நோட்ட மிட்டுக்கொண்டிருந்த பாக்கியம் சலித்துப்போன வளாய் மீண்டும் சாமிய றைக்குட் செல்கிறாள்.

''அப்பனே பிள்ளையாரே இந்தத் தடவை யெண்டாலும் எந்தத் தடங்கலுமில்லாமல் இந்த வரன் அமைஞ்சி என்மகள் கீதாவோட வாழ்க்கைக்கு ஒரு வழி பிறக்க நீதானப்பா துணை செய்ய வேணும்'' என்றிவ்வாறாகப் பிரார்த்தித்துக் கொண்டாள் பாக்கியம். மீண்டும் படலையண்டைச் செல்கிறாள். வீதி யில் சென்று தன் கண்ணுக் கெட்டிய தூரம் வரைப் பார்வையைச் செலுத்துகிறாள். ஏமாற்றம்தான் அவளுக்கு மிஞ்சுகிறது.

பாக்கியத்தின் கணவன் கந்தசாமி படிக்காத ஒரு பாமரன், குடிகாரன், தோட்டச் செய்கையே அவனது தொழில். ஊருக்குள் அவனைப்பற்றி விசாரிப்பதென்றால் குடிகாரக் கந்தசாமி என்றே விசாரிக்க வேண்டும். கந்தசாமி - பாக்கியம் தம்பதியினருக்கு மூன்று பெண்கள் மூத்தவள் கீதா, உயர்தரம் வரைப்படித்துவிட்டு வீட்டி லிருக்கிறாள். மற்றவள் மாலா, சாதாரண தரம் வரைப் படித்து விட்டுப் பரீட்சை எடுக் காமலே நின்று விட்டாள். இளையவள் லதா. ஒன்பதாம் தரம் படித்துக்கொண்டிருக்கிறாள்.

கீதாவுக்கு இதற்கு முன்பல தடவைகள் கல்யா ணம் கேட்டு வந்தபோதும் அவை அயலவர் களது தட்டுதல்கள் காரணமாகப் பேச்சாளவி லேயே முடிந்து போயின.

''அவள் பிள்ள கீதா ஏதோ பார்க்க அழகாக இருக்கிறாள் என்பது உண்மைதான். ஆனா, அந்தக் குடிகாரக் கந்தசாமியிண்ட வீட்டுல நீங்க பெண் எடுக்கிற எண்டுற விசயம் எங்க ளுக்கு அவ்வளவு நல்லாப் படல்ல. ஏதோ நாங்க சொல்லுறதச் சொல்லிப் பொட்டம் நீங்க உங்களுக்குப்பட்ட மாதிரிச் செய்யுங்க'' ஊரார் இப்படிச் சொல்லிச் சொல்லியே வந்த வரன்கள் எல்லாம் தட்டுப்பட்டுப்போக, கடைசி யாக வந்ததான். இந்தச் சம்பந்தம். இது வலியவாக வந்ததுான். பக்கத்து ஊர் நட ராசாவர்ர மகன் கீதன் கீதாவின் அழகிற்காகத் தான் அவன் விரும்பித் தம்பிராசாவர விட்டு விசாரிச்சவன். அவர்கள் நாளை பெண்பார்க்க வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

பெண்பார்க்க வருபவர்களை உபசரிக்க வேண டாமா? அதற்காகத்தான் பாக்கியம் கீதாவின் காப்பு ஒரு சோடியக் கந்தசாமியிடம் கொடுத்து அடகுவைச்சுப் பொட்டுச் சாமான்சக்கட்டு வாங்கி வரும்படி பல கட்டுப்பாடுகள் வச்சி ரவுணுக்கு அனுப்பியிருக்கிறாள். காலையில் சென்ற கந்த சாமி மாலையாகியும் வீடு திரும் பாதது அவளுக்கு ஜீரணிக்கமுடியாமல் இருக்கிறது. அதுதான் அவளது பதட்டத்துக் குக் காரணம் நேரமும் மாலை ஏழுமணி யாகிவிட்டது. கந்த சாமி இன்னும் வீடு வந்து சேர்ந்த பாடில்லை.

நேரம் இரவு ஒன்பது மணியாகிவிட்டது. பக்கத்து ஒழுங்கையில் நாய்கள் விடாமற் குரைத்துக் கொண்டிருக்கின்றன. யாரோ ஒருவன் கோவணத் தோடு அங்கே தள்ளாடிக் கொண்டு செல்வது தெரிகிறது. ஆம்! அது வேறுயாருமல்ல நமது கந்தசாமிதான். ''நான் உழைக்கிறன். நான் குடிக்கிறன். ஆருடா என்னட்டக் கேக்கிற. ஆ....'' என்று இவ்வாறு வீரப்பிரதாபம் பேசிக்கொண்டு வந்த கந்தசாமி யார் முத்துலிங்கத்தின் வளவுக்குள நுளைகிறார்.

அங்கு முத்துலிங்கம் வயிற்று வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்க, அவனது மனைவி இளஞ்சூட்டு நீரைப் போத்தலில் எடுத்து அவனது வயிற்றில் உருட்டிக் கொண்டிருக்கிறாள். வெறியோடு வந்த கந்தசாமிக்குத் தன் மனைவிதான் இன்னொருவனுடன் இருப்பதாகப்படுகிறது. ''ஆருடா அவன் வெட்டிப் போட்டுடுவன்'' என்று சத்தமிட்டுக் கொண்டே அவர்களை நெருங்குகிறான் கந்தசாமி. முத்துலிங்கத்துக்கு இந்நிலைமை மரத்தால விழுந்தவன மாடேறி மிதித்த மாதிரி திடீரென்று, துள்ளி யெழுந்த முத்துலிங்கம் கந்தசாமியைப் பிடித்து நையப் புடைக்கிறான்.

''வெறிகாறன விட்டுடுங்கோ, வெறிகாரன விட்டுடுங்கோ'' என்று முத்துலிங்கத்தின் மனைவி கத்திய சத்தத்தில் அங்கே சிலர் கூடிவிடுகின்றனர். அவர்கள் கந்தசாமியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு அவரது வீட்டை நோக்கி நடக்கின்றனர்.

''இவனெல்லாம் ஒரு மனிசன் நாளைக்குப் பெண் பார்க்க வாறாங்களாம். இந்த நிலையில் இருக்கிற வடிவா இது?'' இது கூட்டத்தில் வந்த ஒருவரின் குரல். ''இவண்ட போக்கால இல்லயா இதற்கு முதல் நாலைந்து இடத்தால வந்த வரனகளெல்லாம் தட்டுப்பட்டுப்போன'' இது மற்றொருவர். இவ்வாறு கதைத்துக் கொண்டே அவர்கள் கந்தசாமியின் வீட்டு முற்றத்தை அடைகின்றனர்.

முற்றத்திற் சத்தம் கேட்டுப் பாக்கியமும் மக்களும் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வருகின்றனர். பலபேர் மத்தியில் தங்கள் தந்தை நின்றிருக்கும் நிலையைக் கண்ட பெண்கள் மூவரும் வீட்டுக் குள் ஓடிவிடுகின்றனர். பாக்கியம் வீட்டுக்குட் சென்று ஒரு சாறனை எடுத்துவந்து கந்தசாமியின் முகத்தில் எறிந்து விட்டு வீட்டுக்குட் செல்கிறாள். ஊரார் சென்று விட்டனர்.

கதா தனது படுக்கையறைக்குட்சென்று கதவைச் சாத்திக்கொண்டு தலையணையில் முகத்தைப் புதைத்தபடி விம்மும் சத்தம் கேட்கிறது.

கந்தசாமி முற்றத்தில் விழுந்து கிடக்கிறான். ஒருவரும் இரவுச்சாப்பாடு சாப்பிடவில்லை. நேரமும் 10.00 மணியைக் கடந்து விட்டது. கீதாவைத் தவிர எல்லோரும் கண்ணயர்ந்து விட்டனர். கீதா இப்படியொரு சந்தர்ப்பத்தைத தான் எதிர்பார்த் திருந்தவள் போலிருக்கிறது. சந்தடியெதுவுமில்லாமல் மெல்ல எழுந்து ஒருதாளை எடுத்து அதில் என்னமோ எழுதுகிறாள். எழுதிய கடதாசியை மடித்துக்கொள்கிறாள்.

மெதுவாக நடந்து சென்ற கீதா தன் தாயின் பாதங்களை அவள் நித்திரை கலைந்து விடாதபடி மெல்லத்தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள். பின் தங்கைமார் இருவருக்கும் அருகிற் சென்று, அவர்களைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். பின் சமயலறைப் பகுதியில் வீட்டை விட்டு வெளியேறுகிறாள்.

முற்றம் பெருக்குவதற்காக காலையில் நேரத்தோடு எழும் வழக்கமுடையவள் பாக்கியம். இன்று வழமையைவிடச் சற்று முன்னரே எழுந்து விட்டாள். எழுந்து முற்றத்துக்குச் சென்ற பாக்கியம் தான் கண்ட காட்சியால் நிலை குலைந்து போனாள். எறும்புக் கூட்டம் கந்தசாமியின் உடலை மூடியிருந்தது.

''ஐயோ! கடவுளே! எங்கள விட்டுப் போயிட்டயாப்பா....'' பாக்கியத்தின் ஒப்பாரி அந்தப் பிராந்தியத்தையே அதிரவைத்தது. வீட்டுக்குட் படுத்திருந்த மகள்மாரும் ஓடிவந்து தலையிலடித்துக்கொண்டு ஒப்பாரி வைக்கின்றனர். கீதா மட்டும் அவ்விடத்துக்கு வரவில்லை. அவள் ரோசக்காரிதான் சற்று நேரத்தில் கந்தசாமியைச் சுற்றி ஊர் கூடி விட்டது.

கந்தசாமியின் வீட்டிலிருந்து ஆறேழு வீடுகள் தாண்டித்தான் முருகுப்பிள்ளையின் வீடு. ஒப்பாரி சத்தம் கேட்டு ஓடிவந்து தோட்டத்து

வேலியாற் பாய்ந்த முருகுப்பிள்ளை தோட்டத் துக்குள்ளேயே நின்று கொண்டு ''ஓடிவாங்கோ கீதா நஞ்சு குடிச்சிச் செத்துப்போயிட்டாள். ஓடிவாருங்கோ...'' என்று குடல் தெறிக்கக் கத்துகிறான்.

சற்று நேரத்தில் கந்தசாமியை அநாதையாக விட்டு விட்டு எல்லோரும் தோட்டத்துக்குள் வந்து விட்டனர்.

''என்ர மகளே கீதா நீ போயிட்டயாடி. உன்ன மணக்கோலத்தில காண முதல் பிணக்கோலத் தில பார்க்கிறேனடி'' என்று பாக்கியமும், ''அக்கா! எங்கள விட்டுப் போயிட்டயாக்கா....'' என்று இரு தங்கைமாரும் தலையிலடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்க, கூட் டத்தில் நின்றவர்களில் ஒருவன் கீதாவுக்குப் பக்கத்தில் கிடந்த ஒரு கடதாசியை எடுத் துச் சத்தமாகப் படிக்கிறான்.

அன்புடன் அம்மாவுக்கு:

மகள் கீதா எழுதிக் கொள்வது, அம்மா நான் இந்த முடிவுக்கு வந்ததற்கு என்னை மன்னிக்கவும். நான் இந்த முடிவுக்கு வரக் காரணம்... இவ்வாறு ஒரு பாடம் புகட்டுவதன் மூலம் அப்பாவைத் திருத்தி எமது குடும்பமும் நல்லதொரு குடும்பமாக சகலரும் மதிக்கத்தக்க வகையில் மாற்றித் தங்கைமார் இருவரதும் வாழ்க்கையைச் சிறப்பாக அமைக்கவே. எனவே எனது இந்த முடிவு நியாயமானது என்றே எண்ணுகிறேன். வருத்தப்பட வேண்டாம். என் தங்கைமார் இரு வருக்கும் எனது இறுதி வணக்கத்தைத் தெரிவிப்பதோடு நல்லதோர் வாழ்க்கைக்கு நிச்சயம் திரும்பப்போகும் அப்பாவுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அம்மா என்னால் அதிகம் எழுத முடியவில்லை. இத்துடன் முடிக்கின்றேன்.

இப்படிக்கு
அன்புமகள்
கீதா,

கடிதத்தைப் படித்து முடித்தவுடனே சொந்தக் காரர்கள் என்றில்லாமல் அவ்விடத்தில் நின்ற எல்லோரது கண்களிலிருந்து கண்ணீர்த்திவ லைகள் சொட்டுகின்றன.

சற்றுநேரத்தில் கீதாவின் உடலும் முற்றத் துக்கே கொண்டு செல்லப்பட்டது. ஆண்கள் பந்தல் போடும் வேலையில் ஈடுபட்டிருக்கின்ற னர். பெண்கள் கூடியிருந்து தங்களுக்குள் பலவாறு பேசிக்கொள்கின்றனர். பாக்கியம் மூர்ச்சித்துப் போனாள். இரு பெண்களும் பிர மைபிடித்தவர்களாய் இரு சடலங்களையும் மூர்ச்சித்துப்போன தாயையும் வெறித்துப் பார்த் தபடியிருக்கின்றனர்.

பெண்பார்க்க வருபவர்களை கோள்சொல்லித் திருப்பிவிட இன்று ஊருக்குள் ஆட்கள் இல் லாததால் மாப்பிள்ளை விட்டாரின் கார் வந்து கேற்றடியில் நிற்கிறது.

**மாணிக்கப்போடி இளையதம்பி**
தமிழ் சிறப்பு-3ம் வருடம்

கிழக்குப் பல்கலைக்கழக வெள்ளி விழாவின் சிறப்பு மலராக **'வெளி'** வெளிவருவதையிட்டு நடத்தப்பட்ட *சிறுகதைப்போட்டியில் இச்சிறுகதை முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது*

*ஒரு பண்பாட்டின் மீது இன்னொரு ஆதிக்கப் பண் பாட்டைத் திணிப்பது அல்லது இலக்கிய இடைவெளியில் மாற்றியமைப்பது என்பது இன்றைய மொழி பெயர்ப்புகளின் முக்கியமான பணியாக உள்ளது. இப்போக்குத் தொடரும் போதும் தமிழ்ப்படைப்புகள் ஒதுக்கப்படும் நிலை ஏற்படும்.*

*நன்றி - காலச்சுவடு - 85 ஜனவரி 2007*

# பத்திரிகைகளில் தமிழ்மொழி அடையும் மாற்றங்கள்

மொழிவளர்ச்சிக்கு வளம் சேர்க்கும் துறைகளுள் பத்திரிகைத் துறையும் ஒன்றாகும். இன்று இத்துறை அனைத்துத் துறைகளுடனும் பின்னிப் பிணைந்துள்ளது. சிறந்த செய்தித் தெடர்புக் கருவியாகவும் இலக்கிய மறுமலர்ச்சிக்கும், குறிப்பாக நாவல், சிறுகதை, கட்டுரை வளர்ச்சிக்கும், உரைநடைக்கும் இவை உறுதுணை புரிகின்றன. பத்திரிகைகளில் (வார, மாத, தின) நாளும் வளர்ந்து அறிவியல் மற்றும் சமுதாய வளர்ச்சியின் அடிப்படையில் புதுச்சொற்கள், சொற்றொடர்கள் தோன்றி வருவதை மறுக்க முடியாது. இது ஒரு மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். உலகளாவிய ரீதியில் நடக்கும் செய்திகளை யெல்லாம் தமிழில் கூறமுற்படும்போது மொழி பெயர்ப்பும் அதன் மூலம் நிறைய புதுச்சொற்களும் கலைச் சொற்களும் தமிழுக்கு வருகின்றன.

பத்திரிகைகளில் பேச்சுத்தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் இடையே உள்ள இடைவெளி குறைந்து கொண்டு வருகின்றது. மொழித் திட்ட மிடலுக்கு பத்திரிகையானது எழுத்துருவாக்கம், நிலைபேறாக்கம், புதுமையாக்கம், கலைச்சொல் படைத்தல் போன்றவற்றிற்கு பெரும் துணையாக உள்ளது. எழுத்துச் சீர் திருத்தம் போன்றவற்றிற்கு நாளிதழ்களே முன்னோடியாக உள்ளன. இவ்வாறு மொழிவளர்ச்சிக்குப் பத்திரிகைகள் பெரும் பங்கு ஆற்றுகின்றன.

பத்திரிகையானது பல்வேறு கூறுகளைக் கொண்டு காணப்படுகின்றது. செய்தி, பேட்டி, விளம்பரங்கள், சினிமா, அறிவுறுத்தல்கள், பொது அறிவு, காட்டூன், விவரணம், பத்தித்திரட்டு, கட்டுரை, சிறுகதை, கவிதை என்பன விளங்குகின்றன.

இவற்றில் மொழியானது பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுகின்றது. உதாரணமாக பேச்சு மொழிப் பிரயோகம் இடம்பெறல், பிறமொழிகள் (ஆங்கிலம், சிங்களம்) கலந்து வருதல், எழுத்துப் பிழை இருத்தல், சொற்களை பிழையாக எழுதுதல், வசன அமைப்பு இல்லை, இரட்டை அர்த்தம் இடம்பெறல், மயக்கமான தன்மை இருக்கும், வாக்கியங்களில் நிறுத்தற்குறி, கேள்விக்குறி, அடைப்புக்குறிகள் போன்ற அடையாளங்கள் உரிய இடங்களில் இடப்படாமை அல்லது பயன்படுத்தாமை, இலக்கணத் தன்மை இருக்காது. மொழிச்சிக்கனம் காணப்படும். வாக்கியம் முற்றுப பெறுவதில்லை. மொழி குறிப்புப் பொருளாக வருதல், உணர்ச்சியைத் தூண்டும் மொழிநடை, பல உத்திகளைப் பயன்படுத்தல் (படங்கள்) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பத்திரிகை மொழிநடை குறித்து டாக்டர் தங்கமணி பின்வருமாறு கூறுகின்றார். உலகில் நடைபெறும் அனைத்து செய்திகளையும் அன்றன்றே மக்களுக்கு வழங்க வேண்டிய நிலையில் செய்தித்தாள்கள் உள்ளன. இவ்வாறாக பத்திரிகைக் கூறுகளில் ஒன்றான செய்தியில் மொழியானது எவ்வாறு மாற்றம் அடைகின்றது என்பதைப் பார்த்தோம்.

அடுத்து விளம்பரங்களில் மொழியானது பின்வருமாறு மாற்றமடைகின்றது.

1) வசன அமைப்பு பேணப்படுவதில்லை.
   (உ+ம்) வணிகப் பிரிவில் கற்போருக்கு.....
2) இலக்கண மரபு பின்பற்றப்படுவதில்லை:-
   வேகமாக அழுக்கைப் போக்கும் புதிய நம் மரா இதனை வெள்ளை என்று நினைத்தால்...
3) வியங்கோள் வாக்கியங்களாகவும் வரும்
   (உ+ம்) என்ன ஆரோக்கியம்!

என்ன ருசி

4) உவமைத் தொடர்கள் பயன்படுத்தப்படல்
அன்புக்கு - அம்மா
வெண்மைக்கு - நில்மா.

5) குறைத்தொடர்களாகவும் பயன்படுத்தப்படல்
''புத்துணர்வு பெற''
''வீடு விற்பனைக்கு''
''பெற்றோரின் கவனத்திற்கு''

6) எழுத்துப்பிழையாக வரும்:
இயற்கை - இயறக்கை, வாடகைக்கு - வாடைக்கு, ஆராய்ச்சி - ஆராட்சி, கொழும்பு - கொழம்பு என எழுதல்.

7) பேச்சு மொழிப் பிரயோகம் பயன்படுதல்
உங்கட வீட்டிலும் பஜாஜ் எங்கட வீட்டிலும் பஜாஜ்

8) முரண் தொடையான வாக்கியங்கள்
''குறைந்த விலையில் நிறைந்த சுவை''

9) மொழியைச் சிக்கனமாகப் பயன்படுத்தல் தேவை.

10) எதுகை, மோனை பயன்படுத்தல்
உன்னத தரம்
உன்னத நம்பிக்கை
உன்னத குறிக்கோள்

11) வினா அமைப்பாலும் மொழியைப் பிரயோகித்தல்.
உங்கள் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமா?

12)வாக்கிய அமைப்பு முழுமை பெறமாட்டாது வாக்கியம் விளம்பரத்தில் கவனத்திற் கொள்ளப்படுவதல்ல.

13)குறிப்புக்களாக மட்டும் அமைதல்
எனவே அதிகமான விளம்பரங்கள் மொழியைச் சிக்கனமாக பயன்படுத்துகின்றன.

14)ஆங்கிலச் சொல்லை தமிழ்படுத்தி எழுதுதல்
(உ+ம்) டிரைவிங், டிரைவர், டயலொக், ரோட், கம்பியூட்டர், மெட்ரோ News.

15) குறியீடு பயன்படுத்தப்படல்.
(உ+ம்) உங்களைக் கவர்ந்த
. உள்♡த்துடன் பேசுங்கள்

விளம்பரங்களில் வரும் ஒருவகையே அறிவித்தல்கள். இது மரண அறிவித்தல், பிறந்ததினம், திருமணம், அந்தியேட்டி, மணமகன், மணமகள் தேவை என்பனவும் அடங்கும். இவற்றிலும் மொழியானது ஒரு சுருக்கமான மொழி நடையில் காணப்படும்.

வர்ணங்கள், விளக்கப்படங்கள் மூலம் விளங்கப்படுத்தல். இதனால் வசன அமைப்பு முக்கியம் இல்லாமல் போகின்றது. மொழிக் கலப்பும் (தமிழ் + ஆங்கிலம் + சிங்களம்) முக்கியமானதாகும்.

பத்திரிகைக் கூறுகளில் ஒன்றான செய்திகளில் மொழி எவ்வாறு மாற்றம் அடைகின்றது என்பதை நோக்குவோமாயின் செய்தியில் முக்கியமானது ''தலைப்பு'' ஆகும். தலைப்பும் இரண்டும் வகையாகக் காணப்படும். அவை தலைமைத் தலைப்பு செய்தித் தலைப்பு என்பனவாகும். செய்தியின் கருவை விளக்கும் வகையில் தலைப்பு அமைந்து காணப்படும் செய்தித் தலைப்பில் தான் உயிரோட்டமே இருக்கின்றது.

1) ஒரு சொல் ஒரு வாக்கியமாக வரல்.
(உ+ம்) கைது, காணவில்லை, அச்சுறுத்தல்

2)எழுவாய் அற்ற வேற்றுமைத் தொடர் வாக்கியமாகப் பயன்படல்
(உ+ம்) உதவி கோருகிறார்.

3) அடைகள் பயன்படுத்தப்படல்.
(உ+ம்)''மிக மோசமான தண்ணீர் பற்றாக் குறை''

4) பேச்சு மொழியிலும் அமைந்து காணப்படும்
(உ+ம்) 6 கட்சிகள் கூட்டமைப்பு வெறும் பம்மாத்து

5) கவர்ச்சியான வசன அமைப்பு.
''உண்ணாவிரதமும் பிரதமர் வாக்குறுதியும்''

6) பரபரப்பை ஏற்படுத்தும் கட்டமிடப்பட்ட செய்திகள்.

7) தெளிவில்லாத தன்மை, மயக்கமான தன்மை காணப்படல்.
(உ+ம்) மாணவி கடத்தல், பேசாலை சிறுமியைக் காணவில்லை, வியாழனன்று, நாளை கதவடைப்பு.

8) பழகு சொற்களை சுருக்கி எழுதுதல்.

(உ+ம்) யாழ். மட். திருமலை, யாழ். குடா

9) எழுத்துப் பிழை காணப்படல்

(உ+ம்) ஐநூறு-ஐந்நூறு கொழும்பு - கொழம்பு

கிளைமோர் - கிளேமோர்

10) சொற்களைச் சுருக்கி எழுதுதல்,

(உ+ம்) ஈ.பி.டி.பி. ரி.,ஆர், ஓ. ஜே. வி. பி.

11) வசனம் முற்றுப் பெறாத தன்மை

''ஒல்லிக்குளத்தில் ஆங்கில வகுப்பு''

12) வினா அமைப்பிலும் செய்திகள் காணப் படும்.

(உ+ம்) கரையோர பாதுகாப்புத் திட்டம் மக்கள் வாழ்வுரிமையைப் பறிக்கின்றதா.....?

13) செய்தியில் வேற்று மொழிக்கலப்பு வரல்

(உ+ம்) கோர்ட்

கிளைமோர் வெடிக்க வைக்கும் ரிமோட் கொண்ட்றோல் கண்டுபிடிப்பு

14) புதுப்புதுச் சொற்கள் வந்து சேரல்

(உ+ம்) மில்தொழிலாளி

பணயக்கைதி

பிணையம்

கண்ணீர் புகை

இன்றைய காலகட்டத்து பத்திரிகைகள், சஞ் சிகைகள், விளம்பரங்கள் என்பனவற்றில் மொழி யானது இவ்வாறு மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதும், தவிர்க்கமுடியாத ஒன்றாக உள் ளது. எனவே தமிழ் மொழியை வளப்படுத்த இவ்வாறான மாற்றங்களை ஓரளவுக்கு குறைத் துக் கொள்வதும் வரவேற்கக் கூடிய ஒரு விடயம். தமிழ் மொழி எமது தாய் மொழி யாகவே இருந்து வருவதால் இவ்வாறான மாற்றங்களை உட்படுத்துவது தமிழ் மொழிக் குள் சிறப்புக்களை குறைத்துவிடுகின்றது என்பதை உணரக்கூடியதாக உள்ளது"

செல்வி. சி. பேரின்பராணி
உதவி விரிவுரையாளர்
மொழித்துறை
கி.ப. கழகம்.



# வீரமா முனிவரின் தமிழ்ப் பணிகள் ஓர் நோக்கு

மொழி எனப்படுவது மனிதனுடன் ஒட்டிப் பிறந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் திராவிட மொழிகளுள் முக்கியமானதும் தொன்மையானதொன்றுமாக தமிழ்மொழி காணப்படுகின்றது. தமிழ் மொழியின் மகத்துவத்தினை உலகுக்கு தெளிவாக எடுத்துக் காட்டியவர்களுள் ஐரோப்பியர்களுக்கும் முக்கியமான பங்குண்டு திராவிட மொழிகளில் ஒப்புவமை இலக்கணநூல் செய்த கால்ட்வெல் ஐயரும், மொழிபெயர்ப்பு நூல்களை ஆக்கிய போப்பையரும், கிரால், எலிஸ், பிரபு ஆகியோரும் தமிழ்ப் புலமையுடன் இலக்கண இலக்கிய நூல்களை ஆக்கி தமிழை மேம்படுத்திய ஜோசப் கொன்ஸ்டான்டைன் எனும் வீரமா முனிவரும் ஐரோப்பியர்களே. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் இவர்கள் ஆற்றிய பணிகள் தமிழ் கூறும் நல்லுலகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டனவென்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

நிபுணத்துவத்துடன் தமிழைக்கற்று தாய்மொழி போன்று தமிழைக் கருதி தமிழுக்கு அதிக தொண்டு செய்தவர்களில் வீரமாமுனிவர் முன்னணியில் நிற்கின்றார். 1710ம் ஆண்டு போத்துக்கல்லின் லிஸ்பன் எனும் துறைமுகத்திலிருந்து இந்தியாவின் மேற்கிலுள்ள கோவாத்துறைமுகத்தை பெஸ்கி எனும் சமயப் பாதிரி வந்தடைந்தார். சமயக்குருவாக வந்த அவர் மதுரைக்கும் சமயத் தொண்டராகவே சென்றார். இவர் 1698ல் இயேசு சபையில் சேர்ந்து விட்டார். 1700ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரவீனா எனும் நகரில் இலக்கண ஆசிரியராகக் கடமை புரிந்தாரெனக் கூறப்படுகிறது. தமிழ் மொழியில் கவனம் செலுத்திய பெஸ்கி அவர்கள் பழனியிலிருந்த சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கிய இவர் இத்தாலி, கிரீக் லத்தீன் பிரஞ்சு, எபிரேயம், இந்துஸ்தான், தெலுங்கு, தமிழ், போர்துக்கீஸ் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றார்.

அச்சு நூல்கள் இல்லாத அக்காலத்தில் ஏடுகளைத் தட்டியெடுத்துப் படிக்க வேண்டும் ஏடுகளில் மெய்யெழுத்துக்களுக்கிடப்படும் புள்ளியிடப் படுவதில்லை. ''எக்ர'' ஒகரங்களின் 'ஏகார ஓகாரத்தை அறிய எழுத்தில் மேல் புள்ளியிடுவதே ஆரம்பகால மரபு (ெ, ொ) ஏடுகளில் சில இடங்களில் புள்ளியில்லாததால் கருத்தையே மாற்றி நிற்கக் கூடியதாயிருந்தது. ஏனனய மெய்யெழுத்துக்களை அறிவதிலும் இவற்றை அறிவது மிகவும் கடினமாகக் காணப்பட்டது. இதனால்

'மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்
எகர ஒகரத் தியற்கையும் அற்றே''
(தொல் - சொல்)

எனும் தொல்காப்பியரின் மரபை மாற்றி தற்போது காணப்படும் ஏகார, ஓகார உருவ நிலையை வீரமா முனிவர்தான் மாற்றிமைத்தார். இந்த மரபு மாற்றச் சீர்திருத்தத்தை தமிழ் கூறும் நல்லுலகு விரைவில் ஏற்றுக் கொண்டது.

மேலும் ஐரோப்பியராட்சிக் காலத்தில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் தகுந்த தமிழ்ப் புலமையுடன் வாழவில்லை பிறமொழிகளில் வசன நூல்கள் அதிகம் காணப்பட்டது போல் தமிழ்மொழியில் இல்லாததும் அதற்கொரு காரணமென பெஸ்கி உணர்ந்தார். இதனால் பல வசன நூல்களை செய்தமையைக் காணலாம்.''பரமார்த்த குரு கதை''எனும் கதையை அங்கதச் சுவையுடன் எழுதி அறிவுலகுக் களித்தார். வேதத்தைப் போதிப்போருக்கு ஞானம் புகட்டுவதற்காக 'வேதியர் ஒழுக்கம்' எனும் நூலையும் ஆக்கியளித்தார். கிறிஸ்த வமதத்தை இலகு வில் விளங்குவதற்காக 'வேதவிளக்கம்' எனும் நூலையும் இயற்றினார் பெஸ்கி. 'பரமார்ந்த குரு'' கதை பின்பு ஆங்கிலம், பிரஞ்சு, ஜேர்மன்,

தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. மேலும் ஞானம் உயர்தல், வாமன் கதை, எனும் நூல்களையும் செய்தளித்தார். 'வேதவிளக்கம்' எனும் நூலை ஏற்றுக்கொள்ள மறுத்த 'லுத்தர் சபை' கிறிஸ் தவர்கள் 'திருச்சபை பேதகம்'எனும் நூலைக் கொண்டு எதிர்த்தனர்.இந்நூலை மறுத்த வீரமா முனிவர் பேதகம் மறுத்தல் லுத்தர் இனத் தியல்பு என்னும் இரு கண்டன நூல்களை வெளியிட்டமை குறிப்பிடத்தக் கது. மறுப்பும், கண்டனமும் வசனத்தில் எழுந்த முதல் தமிழ் நூற்களாக இவை விளங்கின. சமயத் தொண்டு கருதி இன்னும் பலவாறான நூல்களை கடிதவடிவில் எழுதி யளித்தார். எண்பது ஈண்டு குறிப்பிடத்தக்க தாகும்.

மேலும் இவர் வாழ்ந்த காலத்தில் தமிழ் அகராதி இருக்கவில்லை. திவாகரம், சூடா மணி முதலிய நிகண்டுகளே காணப்பட்டன. நிகண்டுகள் ஒருபொருளுக்குரிய பல பெயர்க ளையும், ஒரு பெயர் உணர்த்தும் பல பொருள் களையும் அகராதி முறையிலன்றிச் செய்யுட் களாக உணர்தின. இதற்குச் செய்யுள் பயிற்சியும் கூட தேவைப்பட்டது. எனவே மேனாட்டு முறையிலுள்ள அகராதிகளின்படி தமிழ் மொழியிலும் அகர முதலாக 'ன' கர ஈறாகச் சொற்பொருள் உணர்த்த வேண்டு மெனக் கருதிய வீரமா முனிவர் ' சதுரகரா தியை' ஆக்கியளித்ததார். இவ்வகராதி பெயர், பொருள், தொகை, தொடை எனும் நான்கு அதிகாரங்க ளைக் கொண்டிருந்தது. இதைச் சான்றோரும், சாதாரனமக்களும் பயன்படுத்தினர். இதனால் தமிழுக்கு முதல் அகரா தியை செய்தளித்த உயர்ந்தோராக வீரமா முனிவர் காணப்படுகிறார். இவ்வகராதியானது இன்றைய தமிழ் அகராதிக ளுக்கும் வழிகாட்டி யாகவும் நிற்பது இதன் முக்கியத்துவத்தையே உணர்த்துகின்றது. இவற்றுடன் நின்றுவிடாமல் தமிழ், இலத்தீன் அகராதியொன்றையும் வெளியிட்ட பெருமை இவரையே சாரும்.அதேபோல் போர்த்துக்கீஸம், தமிழ், இலத்தீன் அகராதி என்பவற்றை யும் வெளியிட்டார். இம்மூன்று அகராதிகளும் தமிழ் மக்கள் பிறமொழிகளைக் கற்பதற்கும், தமிழ் நாட்டார் தமிழைக் கற்பதற்கும், பிற நாட்டு மக்கள் தமிழைக் கற்பதற்கும் உதவின. என்பது வெள்ளிடை மலை. தமிழ் மொழியின் வரலாற் றில் இப்பங்களிப்பு மிகவும் வரவேற் புக்குரிய உயர்ந்ததொன்றாகவே காணப்படு கிறது.

இதேபோல் இலக்கண அறிவு நிரம்பப்பெற்ற வீரமாமுனிவர், யாவரும் தொல்காப்பியத்தை விளங்கிக் கொள்ளும் பொருட்டு 'தொன்னூல் விளக்கம்'' எனும் நூலையும் எழுதிவெளி யிட்டார். இது நூற்பாவால் இயற்றப்பட்ட தென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் மொழியில் பரிட்சயமற்ற பிறமொழியாள ருக்கும், தமிழருக்கும் உதவுமாறு கொடுந் தமிழ் இலக்கணம் எனும் நூலையும் இலத்தீன் மொழியில் வெளியிட்டார். அதேபோல் திருக் குறளின் அறத்துப் பாலையும் பொருட்பா லையும் வீரமாமுனிவர் இலத்தீன் மொழிக்கு மாற்றி எழுதினார். இவ்விதமாக தமிழ் இலக்கியத்தின் ரசனையை மேல் நாட்டவர்க் கும் எடுத்துக் காட்டும் முக மாக மொழி பெயர்ப்புக்களை மேற் கொண்டா.

'தேம்பாவணி' எனும் நூலைத் தமிழுக்கு வழங்கிய பெஸ்கி சிற்றிலக்கியப் பிரபந்தங்கள் பலவற்றையும் செய்தளித்தார். திருக்காவலூர்க் கலம்பகம், கித்திரி அம்பாள் அம்மானை அன்னையழுங்கல் அந்தாதி, தமிழ்ச் செய்யுள் தொகை, கருணாம்பரப் பதிகம், அடைக்கல நாயகி வெண் கலிப்பா போன்றவை இவர் இயற்றிய பிரபந்தங்களாகக் காணப்படுகிறன. இவைகளிலே வீரமாமுனிவரின் தமிழ்பாண் டித்தியம் வெளிப்பட்டு நிற்கின்றன எனக் கூறப்படுவதோடு அவரை ஓர் அந்நியரா? எனவும சந்தேகிக்கச் செய்வதாகவும் கருத்துக்கள் நிலவுவதைக் காணலாம் இலக்கணம், காவியம், உரைநடை, புனைகதை, அகராதிகள், பிரபந்தங் கள் ஆகிய துறைகளிலும் சாதனைகள் புரிந்த இவரை தமிழ் இலக்கிய வரலாறு ஒரு போதும் ஒதுக்கி விடமுடியாது இதனாலேயே இவர் தமிழ் வளர்த்த தந்தை எனவும் போற்றப்படுவ தைக் காணமுடிகின்றது.

M.M. ஹம்ஸா
*தமிழ் விசேட துறை, மூன்றாம் வருடம்.*

# தமிழில் பின் நவீனத்துவ ஆய்வுகள் பற்றிய சில அவதானிப்புக்கள்

01. முகவுரை :-

தமிழில் பின் நவீனத்துவம் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள் பற்றிய ஆய்வுகள் இன்னும் விரிவாக நோக்கப்படவில்லை.தமிழில் பின் நவினத்துவம் பற்றிய நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்ற நிலையில் இது பற்றி ஆராயப்பட வேண்டியது அவசியமாகும். இக்கட்டுரையில் இது பற்றிய சில அவதானிப்புக்கள் மேற்கொள்ளப் படுகின் றன. பின் நவீனத்துவ ஆய்வுகள் பற்றி விளங் கிக் கொள்வதற்கு உதவியாக முதலில் இங்கு பின் நவீனத்துவச் சிந்தனை பற்றிச் சற்றுச் சுருக்கமாக நோக்கப்படுகின்றது.

02. பின் நவீனத்துவம் பற்றிய அறிமுகம்:-

இருபதாம் நூற்றாண்டின் பின் அரைப் பகுதியில் மேற்கத்தேய சிந்தனை மரபினூ டாக வளர்ந்து குறிப்பாக 1970க்குப் பிந்திய, ஐரோப்பிய அமெரிக்கப் பண்பாட்டையும் பண்பாட்டு நடவடிக்கைகளையும் குறிப்பிடு வதற்கு பின் நவீனத்துவம் என்னும் சிந்தனைத் தொடர் பயன்படுத்தப்படுகின்றது.1990 களிலி ருந்தே தமிழில் பின் நவீனத்துவச் சிந்தனை அலைகள் மேற்கிளம்பத்தொடங்கின. இச் சிந்தனை மரபு கலை இலக்கியத் துறையில் ஏற்பட்ட பாணியாகவும் எடுத்துரைப்பு மாற்ற மாகவும் இருக்கும் அதேவேளை சிந்தனை மரபில் ஏற்பட்ட உலகம் நோக்கப்படுவது பற்றிய மாற்றமாகவும் அடையாளப்படுத்தப் படுகின் றது.

**Post modernism** என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நேர்மாற்றீடான தமிழ்ச்சொல் லாகப் பின் நவீனத்துவம் என்னும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. பின் நவீனத்துவம் என்பதிலுள்ள பின் என்னும் முன்னொட்டு நவீனத்துவத்திற்குப் (modernism) பிந்தியது, பின்னரானது என்னும் கருத்தையே சுட்டி நிற்கின்றது. எனவே நவீனத்துவம் என்று கூறப்படுபனவற்றுக்குப் பின்னர் வந்துள்ள நிலைமையையே பின் நவீனத்துவம் என்பது குறிப்பிடுகின்றது. பின் நவீனத்துவத்தை விளங்கிக் கொள்வதற்கு நவீனத்துவம் பற்றிய அறிவு அடிப்படையானது.

பின் நவீனத்துவ சிந்தனையை முன்வைத்தவர் களுள் பூக்கோ, தெரிதா, லியோதா ஆகிய மூவரும் முக்கியமானவர்கள். பின் நவீனத்துவ மானது பொதுமைப்படுத்துதல், சாராம்சவாதம், மொத்தத் தத்துவம், தர்க்கத்தின் வன்முறை போன்ற கருத்துக்களை நிராகரிக்கின்றது. அதே வேளை சிதறுதல், பன்மைத்தன்மை, மற்றது, கருத்துவிலகல், வித்தியாசம் போன்ற கருத்தாக்கங்களை முன் மொழிவதாகவும் உள்ளது. இவை பின் நவீனத்துவத்தின் இயல் புகளாகவும் கொள்ளத்தக்கன.

03. தமிழில் பின் நவீனத்துவ ஆய்வுகள்:-

தமிழில், பின் நவீனத்துவம் தொடர்பாக அதிக மான நூல்கள் வெளிவரவில்லை. தமிழில் பின் நவீனத்துவத்தை முழுமையாக விளக்கி எழுந்த தனி நூல்கள் என்று பெரும்பாலும் நூல்கள் வெளிவரவில்லை. குறிப்பிட்ட இச் சிந்தனையோடு வேறு மேல் நாட்டுச் சிந்தனை களையும் இணைத்து எழுதப்பட்ட நூல்களும் வேறு பல விடயங்களோடு குறிப்பிட்ட இச்சிந் தனை மரபையும் இணைத்து எழுதப்பட்ட வையுமாக சில நூல்கள் வெளிவந்துள்ளன. இங்கு பின் நவீனத்துவம் தொடர்பாக வெளிவந்த நூல்களுள் குறிப்பிட்ட எட்டு நூல்கள் அவை வெளிவந்த கால ஒழுங்கின் அடிப்படையில் நோக்கப்படுகின்றன.

1. பின் நவீனத்துவமும் அழகியலும் - ந. இரவீந்திரன் - 1997 கார்த்திகை
2. தமிழில் நவீனத்துவம் பின் நவீனத்துவம் - ஞானி – 1997 டிசம்பர்
3. பின் நவீனம் ஓர் அறிமுகம் - சோ. கிருஸ்ணராஜா – 1999
4. சிதைவுகளின் ஒழுங்கமைப்பு பின் நவீனத் துவப் பிரச்சினைப்பாடுகள் - பிரேம், ரமேஷ் - 2000

5. இருபதில் நவீனத்தமிழ் விமர்சனங்கள் - தமிழவன் கட்டுரைகள் - தமிழவன் - 2000 — டிசம்பர்
6. நவீனத்துவம் - தமிழ்- பின் நவீனத்துவம் - கா. சிவத்தம்பி -- 2001 நொவம்பர்
7. பின் நவீனத்துவம் என்றால் என்ன? - எம். ஜி. சுரேஷ் - 2004 டிசம்பர்
8.பின் நவீனத்துவம் மாயைகளைக் கட்ட விழ்த்தல்-கேசவன், சிவகேசரம் முருகையன், வேணுகோபால்- 2007 ஏப்ரல்

03.1) **பின் நவீனத்துவமும் அழகியலும்** :-

பின் நவீனத்துவமும் அழகியலும் என்னும் நூல் ந.இரவீந்திரன் என்பவரால் எழுதப் பட்டது. இந்நூலில்,

1. பின் நவீனத்துவமும் அழகியலும்
2. பெரியாரின் கோபவேசமான மதவிரோதக் கோட்பாடு தமிழ்க்கலாச்சாரத்தில் ஏற் படுத்திய தாக்கம்
3.மக்கள் கலை இலக்கியத்திற்குத் தனித்து வமான அழகியல் உண்டா?
4. ஈழத்தமிழ் இலக்கியத்தில் பயன்பாட்டு வாதமும் அழகியல் வாதமும் ஆகிய கட்டு ரைகள் உள்ளன.

இந்நூலில்
''வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட மூன்று ஆய்வுரைகள் பின் நவீனத்துவமும் அழகியலும் என்னும் தலைப்பில் நூலுரு வாகியுள்ளன. இத்தலைப்பிடப்பட்ட கட்டுரை இத்தொகுதிக்காக எழுதப்பட்டது''[1]

என்று கூறப்பட்டுள்ளது. பின் நவீனத்துவமும் அழகியலும் என்னும் கட்டுரையில் பின் நவீனத்துவம் தொடர்பான சில விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இக் கட்டுரையானது பின் நவீனத்துவம் தொடர் பான விடயங்களை முழுமையாக அல்லது விரிவாக எடுத்துக் கூறவில்லை என்று கூறலாம்.

இந்நூலிலுள்ள ஏனைய மூன்று கட்டுரை களிலும் அழகியல்வாதம், பயன்பாட்டுவாதம் என்பவை பற்றிய வாதப்பிரதி வாதங்களே ஊடுருவி நிற்பதாகத் தெரிகின்றது. எனவே இந்நூலானது பின் நவீனத்துவச் சிந்தனை களுக்கும் அப்பால் அழகியல்வாதம், அழகி யல்கலை, பயன்பாட்டுவாதம் பற்றிய விடயங் களையே கூடுதலாகக் கூறுகின்றதெனலாம்.

**1.03.II "தமிழில் நவீனத்துவம் பின் நவீனத்துவம்"**

குறிப்பிட்ட வெவ்வேறுபட்ட சில விட யங்களை தொகுத்து நூலாக வெளியிடுகின்ற முறை நமது மரபிலே உண்டு. அவ்வாறு வெளிவந்த நூல்களுள் ஒன்றாக அமைவது 'ஞானி' எழுதிய "தமிழில் நவீனத்துவம் பின் நவீனத்துவம்" என்னும் நூலாகும். ஞானி ஒரு மார்க்சீயவாதி. பின் நவீனத்துவ சிந்தனை களை இந்நூலில் அவர் குறிப்பிடத்தக்க அளவு விளக்கிக்காட்ட முனைந்திருக்கின்றார்.

''இந்நூலில் தமிழில் நவீனத்துவம், பின் நவீனத்துவம், மார்க்சீயம், மரபு மெய்யியல் ஆகியவற்றை மிக இலகுவாக, சிக்குமுக்கு இல்லாமல் விபரித்துள்ளார். இத்தொகுப்பிலுள்ள தமிழில் நவீனத்துவம் பின் நவீனத்து வம் என்ற முதல் கட்டுரையின் தலைப்பை இந்த நூலுக்கு தலைப்பாக இட்டுள்ளோம்''[2].

என்னும் காவ்யா சண்முக சுந்தரத்தின் கூற்று இவ்விடத்தில் நோக்கத்தக்கதாக உள்ளது. இந்நூலில்

1. தமிழில் நவீனத்துவம், பின் நவீனத் துவம்
2. மார்க்சீயமும் இலக்கியமும்
3. தமிழ் மரபின் தடங்கள்
4. மார்க்சீயம் - ஒரு மறுபார்வை
5. இந்திய மெய்யியலில் இருப்பனவும், இறந்தனவும்.

போன்ற விடயங்களும் நூல் திறனாய்வும் உண்டு. இந்நூலிலுள்ள முதல் கட்டுரை பின் நவீனத்துவம் தொடர்பான சில விடயங்களைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

பின் நவீனத்துவத்துக்கும் தமிழ்ச் சூழலுக்கும் இடையேயுள்ள பொருத்தப்பாட்டுத் தன்மை

தொடர்பாக 'ஞானி' இந்நூலில் குறிப்பிட முற்பட்டுள்ளார்.

''எந்த ஒரு புதிய கோட்பாட்டையும் நாம் தழுவிக் கொள்கின்ற பொழுது நம் சூழலுக்கும், ஆக்கத்திற்கும் அது துணை செய்கிறதா, கூடுதலாக இருக்கிறதா என்பதைக் கொண்டு தழுவிக் கொள்ள வேண்டும். நவீனத்துவம் நம் சூழலுக்குத் தேவை என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். நமது ஆக்கத்திற்கும் அது துணை செய்திருக்கிறது. இத்தகைய நவீனத்துவம் நம் மரபிற்கும் ஒத்ததாய் இருக்கின்றது. ஆனால் பின் நவீனத்துவம் நம்மோடு ஒட்டவில்லை. நமது கலை இலக்கியம் முதலியவற்றினுள் இது நுழைந்திருக்கின்றது என்ற போதிலும் இதன் இன்றியமையாமை பற்றியும் ஆக்கம் பற்றியும் நமக்குள் நிறைய இடைஞ்சல்களும், கேள்விகளும் எழுந்திருக்கின்றன.''[3]

எனினும் அவர் (ஞானி) பின் நவீனத்துவத்தை தமிழ்ச் சூழலில் உருவான இலக்கியங்களோடு மிகவும் தெளிவாக ஒப்புநோக்கி ஆராயவில்லை.

பின் நவீனத்துவம் பற்றிய அதனுடைய தாக்கம் பற்றிய விமர்சனக் கண்ணோட்டம் குறிப்பிட்ட சில கட்டுரைகளில் தெளிவானதாக உள்ளது. குறிப்பாக,

'பின் நவீனத்துவம் இதுவரை இலக்கியம் என்ற வடிவத்தைப் பெருமளவு தகர்க்க முடியுமென்பது உண்மைதான். வாழ்விலிருந்து கதை சொல்லும் திறனையோ, மகிழ்ச்சியையோ, சுவை உணர்வையோ பின் நவீனத்துவம் ஒதுக்கிவிட அல்லது அழித்துவிட இயலாது. யதார்த்த வாதத்திற்கும் நவீனத்துவத்திற்கும் உரியது பரவச உணர்வு அன்று என்று சொல்லிப் பரவச உணர்வை வாழ்விலிருந்து களைந்துவிட முடியாது''.[4]

என்னும் பகுதியைக் குறிப்பிடலாம்.

எனவே பொதுவாக 'தமிழில் நவீனத்துவம், பின் நவீனத்துவம்' என்னும் இந்நூலானது பின் நவீனத்துவம் பற்றிய பல விடயங்களைக் கூறுகின்றது என்பது உண்மைதான். அதற்காக பின் நவீனத்துவம் பற்றி வெளிவந்த, அது தொடர்பான முழுமையுடைய நூலென்று அமைதி கண்டுவிட முடியாது. பின் நவீனத்துவம் பற்றி முழுமையாக, சிறப்பாகக் கூறத் தவறிய நூல்கள் கொண்டுள்ள குறைப்பாடுகள் இந்நூலிலும் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

**03.III. பின் நவீனம் ஓர் அறிமுகம்:-**

பின் நவீனத்துவம் தொடர்பாக வெளிவந்த நூல்களுள் ஒன்றாக சோ. கிருஷ்ணராஜா எழுதிய "பின் நவீனம் ஓர் அறிமுகம்" என்னும் நூல் உள்ளது. இந்நூலில் மொத்தமாக ஏழு கட்டுரைகள் அமைந்துள்ளன.

முதலாவது கட்டுரை பின் நவீனத்துவத்தை அறிமுகப்படுத்துவதாக, பின் நவீனத்துவத்துவத்தின் தோற்றம், அது வலியுறுத்துகின்ற விடயங்களை அடையாளப்படுத்துவதாக உள்ளது.

''பின் நவீனச் சிந்தனை என்ற இந்நூல் இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், உளவியல், இலக்கிய விமர்சனம், பண்பாடு ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க பின் நவீனச் சிந்தனையாளர்களின் முக்கிய கருத்துக்களை பரிச்சயப்படுத்துவதை இலக்காகக் கொண்டதாகும்.''[5]

என்று சோ. கிருஷ்ணராஜா ( நூலாசிரியர்) கூறுகின்ற கருத்து இந்நூல் பற்றிய பார்வைக்குத் தேவைப்பாடாகவே உள்ளது.

மேலைத்தேய சிந்தனையாளர்களின் சிந்தனைகளை விளக்குகின்றதாகவே ஏனைய ஆறு கட்டுரைகளும் உள்ளன.

விஞ்ஞான அறிவின் வளர்ச்சி -
காள்பொப்பரின் சிந்தனை
விஞ்ஞான அறிவின் வரலாற்று ரீதியான வளர்ச்சி
- தோமஸ் கானின் கூற்று
உளப்பகுப்பாய்வு
- லக்கானின் சிந்தனை
கட்டவிழ்ப்பு வாதம்
- டெறிடாவின் சிந்தனை
சமூக விஞ்ஞானங்கள்
- பூக்கோவின் சிந்தனை

பின் நவீன நிலமை
- லிலோதாரின் சிந்தனை
போன்றவையே அக்கட்டுரைகள். 'பின் நவீன நிலமை' என்னும் லியோதாரின் சிந்தனையே பின் நவீனத்துவத்தை அடையாளப் படுத்தியது என்பதை இந்நூல் சுட்டிக்காட்டுகிறது.

மேலும் லக்கான், பூக்கோ, டெறிடா ஆகியோரின் சிந்தனைகள் பின் நவீனத்துச் சிந்தனையை எவ்வாறு கட்டமைக்கின்றன என்பது பற்றியும் ஆலைத் தொழில் வளர்ச்சிக்குப் பிற்பட்ட விஞ்ஞான அறிவியல் பரம்பல் தொடர்பான சிந்தனைகள் எவ்வாறு துணை செய்கின்றன. என்பது பற்றியும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

''எனினும் பின் நவீனம் என்ற கருத்தாக்கம் தெளிவாக வரையறை செய்யப்பட்டு உள்ளதோ என்பதில் பலவிதமான ஐயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. கதம்பம், கூறுபடுத்திப் பார்த்தல், வேறுபாடு, பன்மைத் தன்மை என்பன இதன் சிறப்பியல்புகளாகத் தெரிவிக்கப் படுகின்றது."[6]

என்றவாறு கூறப்பட்டுள்ளதே தவிர பின் நவீனத்துவம் என்றால் என்ன என்பது பற்றிக் குறிப்பிடப்படவில்லை. எனவே இந்நூலிலும் பின் நவீனத்துவ சிந்தனை பற்றிய முழுமையை அல்லது முழுமையான ஆய்வுப் பார்வையை அவதானிக்க முடியவில்லை எனலாம்.

### 03. IV."சிதைவுகளின் ஒழுங்கமைப்பு – பின் நவீனத்துவப் பிரச்சினைப் பாடுகள"-

பின் நவீனத்துவம் தொடர்பாக வெளிவந்த நூல்களுள் ஒன்றாக பிரேம், ரமேஷ் ஆகிய இருவரும் இணைந்து எழுதிய சிதைவுகளின் ஒழுங்கமைப்பு – பின் நவீனத்துவப் பிரச்சினைப்பாடுகள் என்னும் நூல் உள்ளது. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் 2000ஆம் ஆண்டு காவ்யா வெளியீடாக வெளிவந்தது.

இந்நூலில் மொத்தமாக 22 கட்டுரைகள் உள்ளன. இவை மூன்று இயல்களாக பிரித்துக் கூறப்பட்டுள்ளன.

- ❖ தன்னிலை பற்றிய அர்த்த மறுப்பு – பின் நவீனத்துவம் தடங்காட்டும் பிரச்சினைகள்
- ❖ சிலப்பதிகாரம் மணிமேகலை - பெண்மையின் நாடகம் பின் நவீனத்துவ ஆய்வு
- ❖ எழுத்தில் படிந்த நிலம் - கி. ரா. ஒரு பின் நவீனத்துவ மிகை வாசிப்பு
- ❖ பின் நவீனத்துவத்திற்குப் பின்னும் அரங்கம் - போன்ற கட்டுரைகள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை

இந்நூலின் முன்னுரையிலுள்ள ''இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகளை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். 1. பின் நவீனத்துவ தத்துவமாக்கல் மற்றும் தத்துவ மறுத்தல் நிலைக்கான அழுத்தத்தை, சிக்கல்களை உடைய கட்டுரைகள், 2. பின் நவீனத்துவத்தின் தொடர்களைப் புரிந்து கொள்ள தமிழ்ச் சூழலில் இடப்படுத்துவதற்கான செயல்பாட்டை உடைய கட்டுரைகள். 3. பின் நவீனத்துவத்தின் கவித்துவத் தத்துவத்தை அறிதல் முறையாகக் கொண்டு, மொழியாகக் கொண்டு செயல்படும் கட்டுரைகள். மைய மறுப்புடன் கூடிய ஒரு அணுகுமுறை இவை அனைத்திற்கும் பொதுவானதாக உள்ளதை இப்போது உணர முடிகிறது.''

என்னும் பகுதி இந்நூலில் உள்ள கட்டுரைகளை எவ்வாறு நோக்குவது அல்லது இந்நூலில் உள்ள கட்டுரைகள் எதைப் பற்றிப் பேசுகின்றன என்னும் புரிதலுக்கு தேவைப்பாடு உடையதாக உள்ளது.

இந்நூலில் உள்ள "தன்னிலை பற்றிய அர்த்த மறுப்பு – பின் நவீனத்துவம் தடம் காட்டும் பிரச்சினைகள்" என்னும் கட்டுரையில் பின் நவீனத்துவம் பற்றிய பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. பாசிசத்தோடு நவீனத்துவம் எவ்வாறு தொடர்புபடுகின்றது. நவீனத்துவத்தின் மறுதலிப்பாக பின் நவீனத்துவம் வருகின்ற முறை, நவீனத்துவத்தோடு தொடர்புபட்ட பாட்டாளி வர்க்கம், முதலாளி வர்க்கம் என்பவற்றின் வரலாற்று உருவாக்கம், பின் நவீனத்துவத்தின் இயல்புகள் அவை பற்றிய விளக

கங்கள் போன்ற கருத்துக்கள் காணப் படுகிறன.

ஏனைய கட்டுரைகளும் பின் நவீனத்துவம் பற்றிய விடயங்களையே வலியுறுத்தி நிற் கின்றன என்பதை மறுக்க முடியாது. ஆனால் புதிதாக வருகின்ற ஒரு சிந்தனையை குழப்ப மின்றி, தெளிவாக எவ்வாறு கூறவேண்டும் என்பதில் இந்நூல் முழுமை பெறவில்லை யென்றே எண்ணத் தோன்றுகின்றது. இந்நூ லில் கையாளப்பட்டுள்ள மொழி, விடயத்தை தெளிவாக விளங்கிக் கொள்வதற்குத் தடை யாகவே உள்ளது. எனவே இந்நூலினை பின் நவீனத்துவத்தைப் பற்றிய அடிப்படை அறிவு டையவர்களாலேயே சிறப்பாக விளங்கிக் கொள்ள முடியும் என்பதையும் அவ்வாறான அறிவற்றவர்களால் சரியாகப் புரிந்து கொள் ளப்படுவதில் சிக்கல் உண்டு என்பதையும் இங்கு கூறிக்கொள்ள முடியும்.

### 03. V. "இருபதில் நவீன தமிழ் விமர்சனங்கள் -தமிழவன் கட்டுரைகள்"

பின் நவீனத்துவத்துவ சிந்தனையோடு குறிப்பிட்ட வேறு சில விடயங்களையும் உட்கொண்டு வெளிவந்த நூலாக இரு பதில் நவீனத் தமிழ் விமர்சனங்கள் தமிழ வன் கட்டுரைகள் என்னும் நூல் உள்ளது. இந்நூலில் மொத்தமாக 32 கட்டுரைகள் உள்ளன. இந்நூலிலுள்ள,

1. நவீனத்துவத்துவமும், பின் நவீனத்து வமும்
2. பின் நவீனத்துவமும் தமிழ்ச் சூழலும்
3. அமைப்பியலில் இருந்து பின் நவீனத் துவம் வரை

ஆகிய மூன்று கட்டுரைகளும் பின் நவீனத்து வத்துவம் தொடர்பாக எழுதப்பட்டுள்ளன. இத் தன்மை அக்கட்டுரைகளைப் பார்க்கும் போது தெரிகின்றது. இங்கு முக்கியமாகக் கூற வேண்டிய கருத்து யாதெனில் பின் நவீனத் துவம் பற்றி இக்கட்டுரைகள் கூறுகின்ற கருத் துக்கள் தெளிவாக இல்லை என்பதேயாகும். அதாவது இந்நூலில் உள்ள முக்கியமான குறைபாடு பின் நவீனத்துவ சிந்தனை பற்றிய விளக்கமின்றி இக்கட்டுரைகளை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. குறிப்பாக படைப் பாளியின் மரணம் என்னும் விடயத்தை கூற வரும்போது

''எந்தவித அழுகுரலும் எழுப்பப்படாமல் இங்கு சவ அடக்கம் செய்யப்பட்டது மனித சாராம்சம் தான் இந்த சவ அடக்கம் பற்றித்தான் அமைப்பியல் வாதிகளில் இருந்து பின் நவீனத்து வர்கள் வரை பிரகடனம் செய்கிறார் கள்."[8]

( பின் நவீனத்துவமும் தமிழ்ச் சூழலும்)

என்று கூறப்பட்டுள்ளது.இக்கருத்து எல்லோரா லும் விளங்கிக்கொள்ள முடியும் என்று கூற முடியாது. இவ்வாறான எடுத்துக் காட்டுகள் இந்நூலில் பல உண்டு. எனவே பின் நவீனத்துவம பற்றிய முழுமையுடைய நூலென்று இதனைக் கூறி விட முடியாது. ஆனால் பின் நவீனத்துவ சிந்தனை பற்றிய கருத்துக்கள் உண்டு.

### 03.VI."நவீனத்துவம்- தமிழ் -பின் நவீனத் துவம்"

"நவீனத்துவம்- தமிழ்- பின் நவீனத்துவம்" என்னும் நூல் பேராசிரியர் கார்த்திகேசு சிவத் தம்பி அவர்களால் எழுதப்பட்டு 2002ஆம் ஆண்டு மக்கள் வெளியீடாக வெளிவந்தது. இந்நூலில் ஒன்பது கட்டுரைகள் உண்டு. அவை நவீனத் துவம், மார்க்சியம், அமைப்பியல், பின் அமைப் பியல், பின் நவீனத்துவம், போன்ற விடயங் களை விளக்குவனவாக உள்ளன.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் அடிப்படை யில் ஒரு மார்க்சீயவாதி. மார்க்சீய வாதிகள் பின் நவீனத்துவத்தை ஏற்றுக்கொள்ளப்பின் நிற்பவர்கள். அது பற்றிப்பேச விரும்பாதவர்கள் ஆனால் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் மார்க்கீய வாதிகளிலிருந்து சற்று வித்தியாசப் பட்டவராகக் காணப்படுகின்றார்.

''மார்க்சீய வாதிகளான நண்பர்கள், தோழரகள் பலர் அமைப்பியலவாதம், பின் அமைப்பியல் வாதம், பின் நவீனத்துவம் ஆகியன பற்றி பேசுவதே பாவச்செயல் என்று கருதுகின்றார்

கள். இது ஒரு தவறான அணுகுமுறை. இது மார்கசீயத்தை மத வெறியாக்கும் மடமை. இது பற்றிப் பின் நவீனத்துவம் பற்றிய கட்டுரையில் மிக விரிவாகவே குறிப்பிட்டுள்ளேன்.[9]

என்று இந்நூலின் முன்னுரையில் அவர் கூறும் கூற்று மேற்படி விடயத்தை தெளிவாக்குவன வாக உள்ளது.

இந்நூலில் பின் நவீனத்துவம் பற்றிய கருத்தைத் தெளிவாகப் பெற்றுக்கொள்ள முடியும். அதே வேளை பின் நவீனத்துவத்தை அறிந்து கொள்வதற்குரிய வகையில் இந்நூல் அமைந்துள்ளதென்பதையும் மறுக்க முடியாது. பொதுவாக இந்நூல் முழுவதும் மார்க்சீய சிந்தனை வலிமை பெற்று நிற்கின்றதென் பதையும் இவ்விடத்தில் கூறியாக வேண்டும்.

இந்நூலிள்ள ''பின் நவீனத்துவம் அதன் சிந்தனைப் பின்புலம், கலை, இலக்கிய அரசியல் பரிமானங்கள் ஆகியன பற்றிய ஒரு அறிமுக விமர்சிப்பு'' என்னும் கட்டுரையே பின் நவீனத்துவ அறிவைத் தருவதாக உள்ளது. ஏனைய கட்டுரைகள் அதனைப் புரிந்து கொள்ளத் துணையாக இருக்கின்றன. பின் நவீனத்துவம் என்றால் என்ன? அதன் தோற்றம் எவ்வாறானது அதன் இயல்புகள், கலை, இலக்கியத் துறைகளில் அதன் தாக்கம் பற்றி அறிய இந்நூல் உதவுமென்றே கருத முடிகின்றது. குழப்பமற்ற விமர்சிப்பாக[10] பேராசிரியர் கா.சிவத் தம்பி அவர்கள் பின் நவீனத்துவ சிந்தனையை எடுத்துக் கூறியுள்ளார் பின் நவீனத்துவம் பற்றிய சிறந்த விளக்க முறைக்கு இந்நூலில் பல பகுதிகளை எடுத்துக் காட்ட முடியும். இலக்கியத்தில் பின் நவீனத்துவத்தின் தாக்கத்தை இந்நூலில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

''புனைகதைக்குரிய கதையமைப்பில் புதிய அம்சங்களைப் புகுத்திய அதே வேளையில புனைகதை அளிக்கைமுறையிலும் (Presentation of the fiction) முக்கிமான ஒரு மாற்றம் ஏற்பட்டது. புனை கதைகள் பத்திரிகைச் செய்திகள் எழுதப்படுவது போன்று எழுதப்படத் தொடங்கின இவற்றினைப் புனைகதை சாரா நாவல்கள் (nonfiction novels) என்று குறிப்பிடுவதுண்டு.''[11]

எனவே பொதுவாக பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் ஒன்பது கட்டுரைகள் அடங்கிய நவீனத்துவம்- தமிழ்-பின் நவீனத்துவம் என்னும் நூலில் இறுதியாக உள்ள பின் நவீனத்துவம் பற்றிய கட்டுரை பின் நவீனத்துவத்தைப் பலரும் குழப்பமானதாக விபரித்துக் கொண்டிருந்த நிலையில் அது பற்றிய அடிப்படையான அறிவை விளங்கிக் கொள்வதற்கு துணையாக உள்ளதென்றே கூறவேண்டும்.

03. **VII.** பின் நவீனத்துவம் என்றால் என்ன? :-

பின் நவீனத்துவம் பற்றி வெளிவந்த நூல்களில் ஒன்றாக பின் நவீனத்துவம் என்றால் என்ன என்னும் நூல் உள்ளது. எம்.ஜீ.சுரேஸ் என்பவரே இந்நூல் ஆசிரியர். இந்நூலில் மொத்தமாக பததொன்பது கட்டுரைகள் உள்ளன. இக்கட்டுரைகளில் நவீனத்துவம், அதற்குள் அடங்குகின்ற கோட்பாடுகள், அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம், பின் நவீனத்துவத்துக்கும் ஏனைய இலக்கியம், சமூகவியல் போன்ற துறைகளுக்குமான தொடர்பு, உறவு போன்ற விடங்கள் பற்றி எடுத்தாளப்பட்டுள்ளன.

பின் நவீனத்துவம் பற்றிப்பல விடயங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளதை மறுக்க முடியாது. பின் நவீனத்துவமும் இலக்கியமும் எனும் கட்டுரையில்

''படைப்பாளி அவனது புத்தகத்துக்கு தந்தை போன்றவன். புத்தகத்துக்கு முன்பே அவன் இருக்கிறான். புத்தகத்தைத் தன்னுள் கருவாகச் சுமக்கிறான் அதற்காக உழைக்கிறான் போராடுகிறான் பிறக்கிறான் புத்தகம் பிறக்கும் போது இறக்கிறான''.[12]

என்று பின் நவீனத்துவம், இலக்கியம் தொடர்பாகக் கூறுகின்ற கருத்தை மிகவும் எளிமையாக கூறுகின்றமையைக் காணலாம். இந் நூலில் உள்ள சிறப்பு அம்சங்களுள் ஒன்

றாக்ககூட குறிப்பிடலாம். ஆனால் பின் நவீன த்துவம் என்றால் என்ன? என்னும் இந்நூலில் பின் நவீனத்துவம் தொடர்பான சரியான வரைவிலக்கணம் இல்லை. இத்தன்மை இன்று பின் நவீனத்துவம் பற்றி பேசுகின்ற நூல்களுக்கும் பொருந்தும். எனவே இந்நூலிலும் சிற்சில குறைபாடுகள் தலைகாட்டியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

**03.VIII. பின் நவீனத்துவம் : மாயைகளைக் கட்டவிழ்த்தல் :-**

இதுவரை பின் நவீனத்துவம் தொடர்பாக வெளிவந்த நூல்களுக்குள் குறிப்பிடத்தக்க சிறப்புடைய நூலாக பின் நவீனத்துவம் மாயைகளைக்கட்ட விழ்த்தல் என்னும் நூல் உள்ளது. கேசவன், சிவசேகரம், முருகையன், வேணுகோபால் ஆகிய நால்வரும் எழுதிய ஐந்து கட்டுரைகளை கொண்டதாக இந்நூல் உள்ளது. இந்நூலின் அடிப்படையான கருத்து பின் நவீனத்துவத்தை எதிர்ப்பதே.

இந்நூலில் ஏற்கனவே கூறியது போன்று ஐந்து கட்டுரைகள் உண்டு.

1. தமிழ்ச்சூழலில் பின் நவீனத்துவம்
   - சி. சிவசேகரம்
2. ஆசிரியனாவது சாவதாவது
   - இ. முருகையன்
3. முதலாளியத்தின் மறுபக்கம்
   - இ. முருகையன்
4. பின் நவீனத்துவம் ஒரு நவீன அத்வைதமே!
   – வேணுகோபால்
5. பின் நவீனத்துவத்தின் தத்துவமும் அரசியலும் - கோ. கேசவன்

என்பவையே அவை. இக்கட்டுரைகளில் இக்கட்டுரையாசிரியர்கள் தங்களை மார்க்சீய வாதிகளாகவே அடையாளப்படுத்தி காட்டியுள்ளனர். மார்க்சீய வாதிகள் பின் நவீனத்துவத்தை மறுப்பவர்கள். அவ்வடிப்படையிலேயே இக்கட்டுரைகளும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. பின் நவீனத்துவம் பற்றிய ஒரு தெளிவான அறிவை எமக்குத் தருவதில் இக்கட்டுரைகள் சிறப்புடையவையாக உள்ளன என்பதை யாருமே இலகுவாக மறுத்துவிட முடியாது.

இந்நூலின் நோக்கு, தெளிவான தன்மை என்பவற்றை எடுத்துக் காட்டும் வகையில் இந்நூலிலிருந்து சில பகுதிகளை அடையாளப்படுத்திக் காட்ட முடியும். சி. சிவசேகரம் அவர்கள்,

''பின் நவீனத்துவத்தின் பிற்போக்குத்தனமான அரசியலையும், அதன் தத்துவ வறுமையையும் தெட்டத் தெளிவாக்குகின்ற முற்குறிப்பிட்ட நான்கு கட்டுரைகளையும் ஆசிரியனாவது சாவதாவது என்கின்ற எனது சிறிய குறிப்பை உரிய திருத்தங்களுடனும் நூல் வடிவில் தருவது பின் நவீனத்துவம் பற்றிய அரைகுறை விளங்கங்களால் ஏற்பட்டுள்ள குழப்பங்களை தெளிவுபடுத்த உதவுமென்று நம்புகின்றேன்''[13]

என்று கூறுவது இந்த நூல் பற்றிய அறிமுக விமர்சிப்பை எமக்கு தருவதாக உள்ளது. 'பின் நவீனத்துவம் - முன்னுரையாக சில குறிப்புக்கள்' என்ற தலைப்பில் பேராசிரியர் நு.்மான் அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் இந்த நூலை மிகவும் அழகுபடுத்துவனவாக உள்ளன.

பின் நவீனத்துவம் பற்றிப் பேசுகின்றவர்களும் எழுதுகின்றவர்களும் அவசியமாக வாசிக்க வேண்டிய பகுதிகள் இந்நூலில் உள்ளன. பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் இந்நூலில் கூறியுள்ள கருத்தில் பின்வரும் பகுதி அவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

"பின் நவீனத்துவம் என்ற கலைச்சொல் இலங்கையில் பத்தாண்டுகளுக்கு மேலாக அடிபடுகின்றது. அதை மார்க்சீயத்துக்கும் விஞ்ஞானத்துக்கும், வரலாற்றுக்கும் மாற்றாக பரிந்துரைப் போரும் உள்ளனர். எனினும் பின் நவீனத்துவத்தை விளக்கி அதை நடைமுறையில் பிரயோகிக்கும் ஆற்றல் இங்கு எவரிடத்தும் இப்பதாகத் தெரியவில்லை. பின் நவீனத்துவம் பற்றிய சில விளக்கக்குறிப்புகள் பேராசிரியர்கள் சோ. கிருஷ்ணராஜா, சபா. ஜெயராஜா ஆகியோரால் நூல் வடிவில் வெளியிடப்பட்டிருப்பினும் அவர்களையும் பின் நவீனத்துவம் பற்றிய ஈடுபாடுடையோர் என்று கூறிவிட முடியாது.''[14]

இந்நூலிலுள்ள தமிழ்ச் சூழலில் பின் நவீனத் துவம் என்னும் கட்டுரை 1999 இல் சி. சிவ கேசரம் அவர்களால் எழுதப்பட்டது. இக் கட்டுரை தமிழ்ச் சூழலிற் பின் நவீனத்துவப் பிரயோகம் எவ்வாறு உள்ளது என்பதை விளக்கும் ஒரு விமர்சிப்பாக உள்ளது.

பின் நவீனத்துவம் கொண்டுள்ள அடிப்படை யான கருத்துக்களுள் படைப்பாளியின் மர ணம், என்னும் கருத்தும் ஒன்று. இக்கருத்தை பின் அமைப்பியல் வாதமும் வலியுறுத்துகின் றது. பின் நவீனத்துவத்தின் மூலம் ஒரு படை ப்பை உருவாக்குகின்ற படைப்பாளி இப்படை ப்பு வெளிவந்தவுடன் அதற்குப் பொறுப்பற்ற வனாகிவிடுகின்றான். இக்கருத்து குறிப்பிட்ட படைப்பாளியின் குறிப்பிட்ட படைப்பின் பாற் பட்ட அதிகார நடைமுறைக்கு வாய்ப்பளிப்ப தாகவே உள்ளது. என்னும் கருத்து விளக்க அடிப்படையில் சிவசேகரம் அவர்கள் 'ஆசிரியனாவது சாவதாவது' என்னும் கட்டுரையை நோக்கி படைப்பாளியின் மரணம் பற்றிய கருத்தை மறுக்கின்றார்.

'முதலாளியத்தின் மறுபக்கம்' என்னும் கட்டுரை யில் இ. முருகையன் அவர்கள் பின் நவீனத் துவத்தை எதிர்த்து தனது கருத்தை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். பின் நவீனத்துவம் ஒரு நவீன அக்வைதமே! என்னும் கட்டு ரையை ந. வேணுகோபால் எழுதியுள்ளார். இக்கட்டுரையில் அவர் பின் நவீனத்துவத்தை முற்று முழுதாக மறுதலிக்கின்றார். பின் நவீனத்துவம் இந்திய தமிழ்ச் சூழலுக்குப் பொருந்திவராத ஒரு சிந்தனை என்பதை வலியுறுத்துகின்றார்.

''10–15 வருடங்களாகவே நான் பின் நவீனத்துவ எழுத்துக்களைப் படித்துவருகின்றேன் என்றாலும் பின் நவீனத்துவத்தை எதிர்க்க அல்லது எதிர்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கடந்த இரண்டு வருடங்களாகத்தான் ஏறபட்டது. பின் நவீனத்துவ எழுத்துக்களைப் படிக்கும் போது அது ஒரு மேற்கத்திய அறிவு ஜீவி களின் தற்காலிக மோஸ்தராகத்தான் காணப் படுகின்றது. அது மேற்கு ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவிற்கும் மட்டுமே பொருந்தக்கூடியது என்று நினைக்கின்றேன் இந்தியாவிற்கு பயன் படக் கூடியதோ அல்லது இந்திய நிலைமை களை விளங்கக் கூடியதாகவே அது இல்லை. [15] என்றும் மேலும் ஓரிடத்தில்,

''மேற்கத்திய பின் நவீனத்துவம் பிரான்சிலும், அமெரிக்காவிலும் நவீன கருத்துக்களை முன் நிறுத்தியது. இவை எல்லாமே வர்க்கப் போரா ட்டத்திற்கு எதிரானவை. நான் புரிந்து கொண்ட வகையில் என் பார்வையில், சமுதா யத்திற்கு எதிரானவை. சமுதாயத்தை நான் விளக்குகின்ற விதத்திற்கு நான் புரிந்து கொண்டு இருப்பதற்கு, சமூகப் பங்களிப்பு செய்வதற்கு அது எதிரானது எனவேதான் என்னை ஒரு பின் நவீனத்துவ வாதி என்று அழைக்க முடியாது என்றேன்.'' [16]

என்றும் கூறுகின்ற கருத்துக்கள் பின் நவீனத் துவ எதிர்ப்பு பற்றிய எழுத்தின் ஆதார படுத்தலை தெளிவாக, எடுத்துக் கூறுகின்றன வாக உள்ளன. மேலும் இக்கட்டுரையில் பின் நவீனத்துவத்தின் பொருள் அதன் தோற்றம் பற்றிய கருத்துக்கள், பின் நவீனத்துவத்தின் போக்குகள் போன்ற பல விடயங்கள் பற்றியும் நோக்கப்பட்டுள்ளன.

பின் நவீனத்துவத்தின் தத்துவமும், அரசியலும், என்னும் கட்டுரை கோ. கேசவன் என்பவரால் எழுதப்பட்டுள்ளது. பின் நவீனத்துவ சிந்தனை மரபு எவ்வாறு வருகின்றது. பின் நவீனத்துவம் என்பது முக்கியமாக எதைக் குறிக்கின்றது. பின் நவீனத்துவ சிந்தனையை முன்வைத்தவர் யார், அவர்களது பங்களிப்பு எத்தகையது பின் நவீனத்துவம் நிராகரிக்கின்ற கருத்தாக் கங்கள் யாவை அது முன்வைக்கின்ற கருத் தாக்கங்கள் எவை போன்ற பல விடயங்கள் இக்கட்டுரையில் தெளிவாக எடுத்துக் கூறப்பட் டுள்ளன.

எனவே ''பின் நவீனத்துவம் மாயைகளைக் கட்ட விழ்த்தல்'' என்னும் இந்நூலானது பின் நவீனத் துவம் பற்றி வெளிவந்த நூல்களுக்குள் குறிப்பிடத்தக்க சிறப்புடையது, எனலாம் கருத்துக்கள் தெளிவாகவும் விளங்கக்கூடிய மொழி நடையிலும் கூறப்பட்டுள்ளன. பின்

நவீனத்துவம் பற்றிய மயக்கங்களைப் போக்கு வதற்குரிய நூல்களுள் இந்நூல் முதன்மை யானது என்று கூட கூறலாம்.

04. தொகுப்பும் முடிவும் :-

தொகுப்பாகவும், முடிவாகவும் பின் நவீனத் துவம் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள் குறித்த இச்சிறு நோக்கில் சில விடயங்களை கூறமுடியும். முதலாவதாக ஏற்கனவே கூறப் பட்டுள்ளது போன்று தமிழின் நவீனத்துவம் தொடர்பாக அதிக நூல்கள், ஆய்வுகள் மேற் கொள்ளப்படவில்லை. இச்சிந்தனையானது மிகவும் அண்மைக்காலத்தில் இருந்தே தமிழில் அறிமுகமாகிக் கொண்டிருப்பதனாலும்[17] அது தமிழ் இலக்கியப் படைப்பில் முழுமையான தாக்கத்தை இன்னும் எற்படுத்தவில்லை என்ப தாலும் தமிழ் ஆய்வாளர்களால் அதிகம் கவனிக்கப்படாமல் இருக்கலாம். அத்தோடு "ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் இங்கு ஓரளவுக்கேனும் பின் நவீனத்துவம் பற்றிய பயனுள்ள விவாதங்கள் நடந்துள்ளன. ஆனால் தமிழில் பின் நவீனத்துவ பிரசாரம் செய்கின்ற எவருக்கும் அது பற்றிய அறிவு மட்டுமன்றி பின் நவீனத்துவ அணுகுமுறையில் கனதியான ஆய்வு எதையும் மேற்கொள்ளும் முனைவுங் கூட இல்லை"[18]

என்று சி. சிவசேகரம் அவர்கள் கூறுகின்ற கருத்தும் இதற்குப்பதிலாக இருக்கலாம்.

அடுத்ததாகப் பின் நவீனத்துவம் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்களிலும் அதிகமானவை குழப்பமானவையாக தெளிவற்ற கருத்தாடல் சொல்லாடல்களை கொண்டவையாக உள்ளன என்பதையும் கூறவேண்டும்.

"பொரும்பாலும் தமிழகத்தில் பின் நவீனத் துவம் என்கின்ற பேரில் நடந்து ஓய்ந்த விவா தங்களிலும் குழப்பமான சிந்தனைகளிலிருந்து எந்தவிதமான விளங்கமுமின்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொற்றொடர்களை பொறுக்கி எடுத்து கட்டுடைத்தல், மீள் கட்டமைத்தல் மறு வாசிப்பு என்பன போன்ற வார்த்தைகள் செறிந்த குழப்பான மொழி நடையில் எழுது வதற்கு மேலாக இதுவரை தமது பின் நவீனத் துவ பிரசாரர்கள் எவரும் எதையும் செய்ய வில்லை. பின் நவீனத்துவம் என்றால் என்ன என்பதைக் கூட அவர்களால் இதுவரை விளக்க இயல வில்லை."[19]

என்று சி. சிவசேகரம் கூறுகின்ற கருத்து அமைதி கொள்ளத்தக்கது. இதுவரை பின் நவீனத்துவம் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் குறை பாடு உடையனவாகவே உள்ளன. ஒரு நூலில் காணப்படுகின்ற குறைபாடுகள் இன் னொரு நூலில் தவிர்க்கப்பட்டிருப்பினும் வேறு சில குறைபாடுகள் தலைகாட்டவே செய் கின்றன. பின் நவீனத்துவம் என்பதே தமிழில் புரிந்து கொள்ள கஷ்டமாக உள்ள போது அது பற்றி விளக்கி எழுதுகின்றதாக உள்ள நூல்களும் விளக்கமற்றதாக, தெளிவற்றதாக உள்ளமை தமிழில் பின் நவீனத்துவம் பற்றிய புரிதலை முழுமைப்படுத்தாதென்றே கூற வேண்டி யுள்ளது.

பின் நவீனத்துவம் தொடர்பாக இதுவரை வெளிவந்துள்ள நூல்களுள் அண்மையில் வெளிவந்த 'பின் நவீனத்துவம் மாயைகளைக் கட்டவிழ்த்தல்' என்னும் நூல் முக்கியமானது அதனுடைய தலைப்பிற்கேற்ப அந்த நூல் அமைந்துள்ளதென்று கூறினும் தவறாக இருக்காது. எனினும் பின் நவீனத்துவத்தை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக, பின் நவீனத்துவத்தை இலக்கியத் தோடு ஆராய்ந்து வேறுபல நிலைகள் சார்ந்து நோக்கியும் -நூல்கள் வெளிவரவேண்டியது தமிழுக்கு அவசியமானதாகும்.

அடிக்குறிப்புகள்

1. இரவீந்திரன். ஆ. பின் நவீனத்துவமும் அழகியலும், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1997, பக். VI

2. ஞானி, தமிழில் நவீனத்துவம் பின் நவீனத்துவம், காவ்யா, 1997 பக். 3

3. மே. கு. நூ. பக். 26

4. மே.கு. நூல். பக். 63

5. கிருஷ்ணராஜா. சோ. பின் நவீனம் ஓர் அறிமுகம், தென்கிழக்குப் பல்கலைக் கழக மெய்யியற் சங்க வெளியீடு, 1999, பக். 13.

6. மே. கு. நூல். பக். 98.

7. பிரேம், ரமேஷ், சிதைவுகளின் ஒழுங்கமைப்பு - பின் நவீனத்துவப் பிரச்சினைப்பாடுகள், காவ்யா, 2000, பக்கம் குறிப்பிடப்படவில்லை.

8. தமிழவன், இருபதில் நவீனத் தமிழ் விமர்சனங்கள் - தமிழவன் கட்டுரைகள், காவ்யா, 2000. பக் 286.

9. சிவத்தம்பி. கா. பேராசிரியர், நவீனத்துவம்-தமிழ்-பின் நவீனத்துவம், மக்கள் வெளியீடு, 2001 நவம்பர், பக் - 15.

10. 'குழப்பமற்ற விமர்சிப்பாக' என்னும் சொல் பின்நவீனத்துவம் பற்றி எழுந்த அநேகமான நூல்கள் தெளிவற்ற குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்க பின்நவீனத்துவ சிந்தனை பற்றிய அறிவை பெற்றுக்கொள்ள உதவு வதாக. இந்நூல் உள்ளது என்ற கருத்திலேயே இங்கு குறிக்கப்பட்டுள்ளது.

11. சிவத்தம்பி. கா. பேராசிரியர், நவீனத்துவம்-தமிழ்-பின் நவீனத்துவம், மக்கள் வெளியீடு, 2001 நவம்பர், பக் - 193.

12. சுரேஷ். எம். ஜி. பின் நவீனத்துவம் என்றால் என்ன? புதுப்புனல், 2001, நவம்பர், பக். 110

13. கேசவன், சிவசேகரம், முருகையன், வேணுகோபால், பின் நவீனத்துவம், மாயை களைக் கட்டவிழ்த்தல், தேசிய கலை இலக்கியப் பேரவை, 2007, ஏப்ரல், பக் - 7

14. மே. கு. நூல். பக். 14

(இதன் தொடர்ச்சி 37ம் பக்கத்தில்)

(33ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுப் பீ விட்டுக் கத்த ............றப்பா் பொம்மை யிலே உடலுறவு கொண்டு/ கருக்கட்டும் காலத்துச் சிசுக்கள்/ வாப்பாவின் பெயரென்ன அவர்களுக்குத் தெரியும்/ அவர் வந்த வழியென்ன? அவர்களுக்குப் புரியும் □ ......................

இவ்வாறான சர்ரியலிஸப் பண்புகளை இவரின் கவிதைகளில் காணலாம்.அதாவது முரண்பட்ட உருவங்களை உருவாக்குதல் சாதாரண படிவக்காட்சிகளுக்குப் பதிலாக அதிர்ச்சி யூட்டும் படிமங்களை அடுக்கிச் செல்லுதல் மரபுகள் மீது கேள்விகளை உருவாக்குதல் போன்ற பண்புகளையே இவரது கவிதைகளில் காண முடியும்

தமிழகக் கவிஞர்களைப் பொறுத்தவரைக்கும் ஆழமான பரந்த வாசிப்பும் தனது படைப்பில் தன்னுணர்ச்சிப்பாங்கினை வெளிப்படுத்தலும் சர்ரியலிஸப் பண்புகளை கவிதைகளில் இடம் பெறச் செய்ய காரணமாக அமைகின்றது எனில் ஈழத்து கவிஞர்களைப் பெறுத்தவரை அவர்கள் காலத்து அரசியல் சூழலே இதை ஏற்படுத்தும் காரணியாக அமைந்து விடுகிறது. சோலைக்கிளியிடமும் இதன் தாக்கமே அதிகம் எனலாம். எனவே சோலைக்கிளியின் கவிதைகளில் முழுமையான சர்ரியலிஸப் பண்புகளை எல்லாப் படைப்புக்களிலும் காணமுடியாது எனினும் சில தனித்துவமான வேறு பண்புகளும் காணப்படுகின்றன. அந்த வகையில் அவர் முக்கியமானவர்.

### உசாத்துணை

1.பாலா, சர்ரியலிஸம், 1977 ,அன்னம்
2.சோலைக்கிளி, காகம் கலைத்த கனவு, 1991, பொன்னி
3.சோலைக்கிளி, எட்டாவது நரகம், 1988 வியூகம்.

சுஜந்தன்
4ம் வருடம்
தமிழ் சிறப்பு

# சர்ரியலிஸ நோக்கில் சோலைக்கிளியின் கவிதைகள்

20 ஆம் நுற்றாண்டில் அரசியல, பொருளாதாரம், பண்பாடு, இலக்கியம் என்பவற்றில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் காரணமாக மேலை நாடுகளில் பல்வேறு நவீன இலக்கியக் கொள் கைகள் தோற்றம் பெற்றன. இவை இலக்கியத் தில் புதியசிந்தனை மரபினை அதன் உள்ளடக் கம்,உருவம்,வெளிப்பாடு என்பற்றிலும் உத்தி முறையிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. அந்த வகையில் பிரான்சு நாட்டில் செல்வாக்குடன் திகழ்ந்த ஒருகலை இலக்கிய இயக்கமாக சர்ரி யலிசம்(surrealism) தோன்றியது. ஓவியம், இலக்கியம்,சிற்பம் போன்ற பல துறைகளிலும் ஐரோப்பா மட்டுமன்றி உலகம் முழுவதும் இந்த இயக்கத்தின் தாக்கம் 20ம் நுற்றாண்டில் வெளிப் பட்டது என்பதில் ஐயமில்லை.

சர்ரியலிசம் டாடாயிஸத்தின் (Dadaism) அடுத்த கட்டமாகக் காணப்படுகின்றது. சர்ரிய லிசம் என்ற சொல் பிரென்சு நாடக ஆசிரியர் அப்போலினைரால் முதல் முதல் ஆக்கப்பெற்றது. 1924ல் ஆந்தர் பிரெடன் என்பவரால் சர்ரியலிஸ அறிக்கை(Surrealist mani festo) வெளியிடப் பட்டது. பின் கலை இலக்கிய வாதிகள் கவனத்தை ஈர்த்தது. ஒரு சமூக இலக்கியமாகவே உருப் பெற்றது.

இயற்கையைக் கண்டு பயந்த மனிதன் காலப் போக்கில் இயற்கையோடு போராட முனைந்து வெற்றியும் பெற்றான். இயற்கையை தன்வச மாக்கினான். இதன் பின்னர் தொழில் புரட்சியின் காரணமாக இயற்கையை வெல்லும் அளவிக்கு இயந்திரங்களையும் கருவிகளையும் கண்டறிந் தான். எனினும் எல்லாம் வல்ல இறைவனின் பெயரால் அரசன் மனிதனை அடக்கி ஆண் டான். அதே ஆண்டவன் பெயரால் எல்லாம் வல்ல போப்கள் அரசர்களையே அடக்கி ஆண்ட னர். ஆக ஐரோப்பிய மனிதனுக்கு விடுதலை வேண்டுமெனில் கடவுளையும் அரசனையும் போப் பாண்டவரையும் பதவி நீக்கம் செய்தாக வேண்டும் என்ற நிலைமை வந்தது..பிரென்சு புரட்சி அதைச் செய்தும் காட்டியது. இவற்றின் விளைவால் குடியாட்சி மலர்வதாய் உணரப் பட்டது. எனினும் அறிவியக்க சிந்தனை வளர்ச் சியால் அதனை அமைதிப்படுத்த முடியவில்லை. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் புதிய தொரு சிந்தனைக் கூட்டுக்குள் அவனை இடம் மாற்றம் செய்திருப்பதாக அவன் நம்பினான். இத்தகைய அசாதாரன சூழலில்தான் முதலாவது உலகப் போர் எதிர் பாராத புயலைப் போல அவனைத் தாக்கியது.

மனிதன் கற்பனையிலும் எதிர் பாராத நாசத்தை உலகப் போர் ஏற்படுத்தியது. ஒவ்வொரு மனிதனுக்கும் தன் சகமனிதன் குற்ற வாளி யாகத் தோன்றினான். ராஜ தந்திரிகள்,அறிவியல் அறிஞர்கள்,கலை இலக்கியவாதிகள், மதவா திகள்,தத்துவ ஞானிகள் எவருமே பொறுப் புடன் நடந்து கொள்ளவில்லை – நடந்து கொள்ள முடியவில்லை என்ற உண்மையை உலகப் போர் வெளிச்சம் போட்டுக் காட்டியது. அர்தமற்ற ஒரு சண்டையில்லிருந்து மனிதனை காப்பாற்ற முடியாத சமூகச்சட்டமும். ஒழுக்கமும், சமயமும், பண்பாடும் போரில்லிருந்து திரும்பிய மனிதனு க்கு கோபத்தை ஏற்படுத்தின. மனிதனை காப்பாற்ற முடியாத இவையெல்லாம் மனிதனுக்கு தேவைதானா. என்ற சந்தேகம் பிறந்தது. அவ நம்பிக்கை,மன முறிவு, வாழ்க்கையால் ஏமாற் றப்பட்ட சோகம், ஆத்த மற்ற ஒரு வாழ்க் கையை நடத்திக் கொண்டிருப்பதான வெறுப்பு, தன் சக்திக்கு மீறிய புறவுலக நிகழ்வு களால் தன் வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகிறதே என்ற ஆற்றாமை தன் சோகங்களுக்கு கை கொடுக்க எந்த தேவதூதனும் இறங்கி வர வில்லையே என்ற கசப்பான நடப்பியல், பண்பாடும், நாகரி கமும் படுகுழிக்குள் தம்மை தள்ளிய பயம் என பல உணர்வுகளின் தாக்குதலில் மனிதன் தடுமாறினான்.

இந்த குழப்பங்களுக்கு விடை கிடையாதா? இந்த சோகங்களில் இருந்தது மீட்சி கிடை யாதா? என எழுந்த ஏக்கக் குரல்களுக்கு சில விசித்திரமான விடைகள் கிடைத்தன. தற்க்கொலை செய்து கொள்ளுங்கள்,புதிய உலகை நிர்மாணிக்க

புரட்சி செய்யுங்கள். உலகமே மாயம் என்று ஒதுங்கி நில்லுங்கள் என மனித குலம் இத்தகைய பிரச்சினைகளில் சிக்கி தவித்த போது புதியதொரு வாழ்கை முறையைக் கண்டு கொள்ள முயற்சித்த மனிதர்கள்தான் சர்ரியலிஸ்டுகள்.

டாடா ஒரு அராஜகநிலை எதிர்பு இயக்கம் மட்டுமே. அழிவுகளை கட்டமைப்பதே அதன் இலட்சியமாக இருந்தது. சர்ரிலிஸம் ஒரு திட்டமான வழியில் இயங்கமுறபட்டது. ஒரு புதிய கலை இலக்கிய வகையை பிரஞ்சு இலக்கித்திலோ ஐரோப்பிய இலக்கியத்திலோ படைக்க வேண்டும் என்ற கொள்கை ஏதும் அவர்களுக்கில்லை. உள்மனம் அல்லது நனவற்ற மனத்தின் செயற்பாட்டை புரிந்து கொள்வதே அவர்களின் நோக்கம் மனித மனத்தை பிராய்டு வெளிமனம் ,உள்மனம் உன பிரிந்த பிரிப்பை இவர்கள் பற்றிக்கொண்டனர். வெளிமனம் அறிவின் ஆளுகைக்கு உட்பட்டது. உள் மனம் அறிவியலின் ஆளுகைக்கு அப்பாற் பட்டது. அறிவியலை எதிர்த்த இவர்களுக்கு பிராய்டின் நனவற்ற மனம் (Un conscious mind) கவர்ச்சியானதாய் இருந்தது. குழந்தையின் பேச்சு,பைத்திய காரனின் உரையாடல் ,கனவு, நித்திரையில் பேசுதல் இதையே இவர்கள் உண் மை என வாதிட்டனர். இதன் முன்னோடிகளாக ஆந்தர் பிரெடன்,ஆரகான், சோபால்ட், டெஸ் னாஸ் போன்றோரை குறிப்பிடலாம் மேற் கூறியவற்றை சர்ரியலிஸத்தின் அறிமுகமாகக் கொள்ளலாம்.

இலக்கியத்தை பொறுத்தவரை இவர்கள் கனவு இலக்கியம் ,தடையற்ற தன்னியக்க எழுத்து என்ற கொள்கையினை கையாண்டனர். இவற்றை கவிதையிலே கையாண்டனர்.1930ல் கவிதை பற்றிய ஒரு பிரகடனத்தை பிரெடன்.,எலுவார்டு ஆகிய இருவரும் வெளியிட்டனர். தொடர்ச்சியாக படிமங்களைப் பெற்றெடுப்பதே கவிதை என்பது சர்ரியலிஸ்ட் களின் கருத்து "சிந்தனைகள் கருத்துக்கள் என்பன நமது காலத்தில் இல்லை இப்போது நம்முன் இருப்பதெல்லாம் படிமங்கள்தான் அவற்றை நாம் ஒழுங்காகப் பெற்று வெளியிட முடிந்தால் அறிவியலுக்கும் தர்க்கவியலுக்கும் மரண அடி கொடுக்க முடியும்மென" ஆரகன் எழுதினார். கவிஞனுக்கு சொல்விடம் பொறுமை இருக்கவேண்டும் என்றும் தவறான சொற்களை தவிர்க்க வேண்டும் எனவும் கருதினர். வார்த் தைகளின் வலிமையையுணர்ந்து கட்டற்ற இயை புப்படி பயன் படுத்தும்போது உருவங்களுக்கு புதிய சக்தி கிடைக்கின்றது சர்ரியலிஸ்ட்களின் நோக்கமான அதிசயத்தையும் விழிப்புணர் வையும் படைத்துக்காட்ட அவை உதவுகின்றன உதாரனமாக "செங்குத்தான பாலை வனம் தர்களில் மீன் முட்கள்" என்ற அதிர்ச்சி யூட்டும் படிமங்களையும் அபத்தத்தையும் ஏற்படுத்தும் செங்குத்தாக பாலைவனத்தைப் பார்ப்பது அபத்தமாகவும் ஆச்சரியமாகவும் காணப்படுகிறது.

"ஒரே ஒரு கீற்று மட்டும் நறுக்கப்பட்டிருக்கும் ஆப்பிளின் உட்புறத்தைப் போல பருவகா லங்கள்"என்ற பிரெடனின் வரிகள் ஒன்றுக் கொன்று முரணான விடையங்களை ஒப்பிடுகின்றன. இவர்களின் இந்தப்படிம உத்தி அதிர்ச்சியூட்டு பனவாக காணப்படுகின்றன. இவை மேற்கத்தேய கவிஞர்களின் சர்ரியலிஸக் கவிதை உத்தி முறைக்கு உதாரணங்களாகும்

80கள் அளவிலே தமிழ் குழலில் இத்தகைய மேல் நாட்டு இலக்கியக் கொள்கைகள் அரும்பத் தொடங்குகின. தன்னியக்க எழுத்து கனவுகள் கனவுத்தனமான கற்பனைகள் வினோத காட்சி கள் எதேட்சை நிகழ்வுகளுக்கு முக்கியத் துவம் ஆகியவற்றை இலக்கியப்படைப்பில் தீவிரமாக பயன்படுத்துவதனை நாம் சர்ரிய லிஸக் கூறுகள் என்கிறோம். மரபு மத எதிர்ப்பு அறிவி யக்க எதிர்ப்பு விஞ்ஞானத்தின் மீது சந்தேகம் உழைப்பெதிர்ப்பு சமூக மதிப்புக் களில் இருந்து மீட்கப்பட்ட காதல் சமூகத்தை தோலுரித்திக் காட்டும் நகச்சுவை ஆகியவற்றை சர்ரியலிஸப் போக்குகள் எனலாம்.

தமிழ் நாட்டில் நவீன தமிழ் இலக்கியங்களில் சில சர்ரியலிஸ கூறுகளை காணமுடியும். டிகே துரைஸ்வாமி போன்றோரை குறிப்பிடலாம். எஸ்

வைத்தீஸ்வரன், மீரா, ஞானக்கூத்தன், காலாப் பிரியா, நா.காமராசன் ஆகியோரின் கவிதை களில் கனவுத் தன்மை இடம் பெறுகிறது. "எல்லா வண்ணாத்துப்பூச்சிகளும் /செத்துச் சருகான பின் இவள் என் பூந்தோட்ட வாசலில் ஈரக்கூந்தலுடன்" என்ற காலப்பிரியாவின் கவிதை அழகுக் கனவாக வெளிப்படுகிறது ....இலையிடையில்/ எலி நினைவில்/ பூனை நீண்டு/ புலியாகும்/ செவிகள் கொம்பாகி வாலில் மீன் பாயும் .............. என்ற எஸ். வைத்தீஸ்வரனின் கற்பனை விநோதக் காட்சி யாக விரிகிறது. ஞானக்கூத்தனின் கவிதை களிலும் அதிர்ச்சியூட்டும் கற்பனைகளை காணலாம். "விழிகின்றேன் முழங்காலொன்று காணலை /படுக்கையில் தூங்கும் என்னை கொன்று போனார்/ ஒளித்துவைத்த மூக்கை எடுத்துப் பொருத்திக் கொண்டு உயிர்க்கத் தொடங்கினேன். என்ற வரிகளில் இவற்றைக் காணலாம். இவை தமிழக கவிஞர்களின் கவிதைகளில் காணப்படும் சில சர்ரியலி ஸப் போக்குகளாக நாம் இனங்காண முடியும்

மேற் கூறிய சர்ரியலிஸப் பண்புகளை தனது கவிதைகளில் சிறப்பாக கையாள்பவரே ஈழத்தைச் சேர்ந்த தனித்துவமான கவிஞர் சோலைக்கிளி ஈழத்திலக்கியத்தில் புதிய தடங்க ளையும் தளங்களையும் ஏற்படுத்திய 80கள் காலப் பகுதியில் வந்தவரே சோலைக்கிளி. நானும் ஒருபூனை (1985) எட்டாவது நரகம் (1988) காகம் கலைத்த கனவு (1991) ஆணிவேர் அறுந்த நான்(1994) பாம்பு, நரம்பு, மனிதன் (1997) பனியில் மொழி எழுதி (1998) என்பன வெளிவந்த இவரது கவிதைத் தொகுதிகளாகும். இவரது கவிதைகளில் கானப்படும் சர்ரியலிசப் போக்குகளை நோக்கலாம்

சோலைக்கிளியின் கவிதைகளில் காணப்படும் சர்ரியலிசப் போக்குகளில் ஒன்று அதிர்ச்சி யூட்டும் படிமங்கள். பலகவிதைகளில் இவற் றைக் காணலாம். இவரது தொப்பி சப்பாத்து சிசு என்ற கவிதை பின்வருமாறு தொடங்குகிறது தொப்பி/காற்சட்டை சப்பாத்து/ இடுப்பில் ஒரு கத்தி /மீசை/ அனைத்தோடும் பிள்ளைகள் கருப்பைக்குள் இருந்து/ குதிக்கின்ற காலம் வரும் ......... சோளம் மீசையுடன் நிக்காது/ மனிதனைச்சுட்டுப் புழுப் போல குவிக்கின்ற/ துவக்கை ஓலைக்குள் மறைத்துவைத்து ஈனும்......வற்றாளைக்கொடி நட்டால் /அதில் விளையும் நிலக்கண்னி/ வெண்டி வரைப் பீக்கை/ நிலக்கடலை தக்காளி/ எல்லா உருப்படியும் சதை கொட்டை இல்லாமல் ...எனத்தொடரும் இந்தக்கவிதையை படித்ததும் எம் கண்முன்னே இந்தப் படிமக் காட்சி விரிவதுடன் அதிர்ச்சியையும் அபத்தத்தையும் தோற்றுவிக்கின்றது நாம் நினைத்துப் பார்க்காத முரண்பட்ட விடையங்கள் கவிஞரால் படிம மாக்கப்பட்டுள்ளன. இவை சர்ரியலிஸ போக் கிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்து விடுகிறது.

படிமங்களை கையாள்கிற போது முரண்பாடான உருவகங்களைப் பயன்படுத்துவது சர்ரிய லிஸ்டுகளின் கொள்கை. அது சோலைக் கிளியின் கவிதைகளிலும் வெளிப்படுவதினைக் காணலாம். அவரின் வெள்ளை இரவு என்ற கவிதை பின்வருமாறு தொடங்கும் "ஒவ்வொரு இரவும் இப்படித்தான்/ நாய்க் கறுப்பும்/ நரிக்கறுப்பும் / ஒரு குட்டி முயலும்/ பச்சை இலையிலே/ வண்ணாத்துப் பூச்சிகள் பீச்சிய/ வெள்ளை எச்சங்கள் சிலவும்/ நிலவென்றும் ... வெள்ளிகளென்றும்/ ஒரு வெள்ளை இரவுவராதா /இந்த நித்திரைக் கண்களை/ ஒருநாளைக் கேனும்/ மூடாமல் திறந்து வைக்க..............

இந்தக்கவிதையில் நிலவையும் நட்சத்திரங்க ளையம் பொருத்தமற்ற உருவ ங்கள் முலம் படிமமாக்குகிறார். நட்சத்தி ரங்களை பச்சை இலையிலே வண்ணாத்துப் பூச்சிகள் மீச்சிய எச்சம் என்கிறார். இயற்கை யின் காரணமாக எபபோதும் கறுப்பாய் இருக்கும் இரவை வெள்ளை இரவாக்க முயற்சி செய்கிறார் இது சர்ரியலிச வாதிகளின் கனவின் வெளிப்பாடு.

முன்பு உதாரணம் காட்டப்பட்ட ஞானக் கூத்தனின் கவிதையின் சர்ரியஸத்தொனி இவரின் பின்வரும் கவிதையில் ஒலிக்கிறது

"கைவேறு/ கால் வேறாய்/ அங்கங்கள் பொருத்தி பொருத்தி /மனிதர்கள் தயாரிக்கப் படுவதை/ நேற்று என் கனவில்கண்டேன். கண்கள் இருந்தன ஒருபைக்குள்/ மூக்கும் இருந்தது இன்னொன்றில்/ முழங்கால் பின் முட்டு/ விலா குதி எல்லாமே/ ஏற்கனவே செய்து கடைகளிலே தொங்க"——

என தொடர்ந்து செல்லும் கவிதையில் மனிதர்கள் கடையில் தயார் செய்யப்படு வதைக் கனவாகக்காண்கிறார் இந்தப்படி மங்கள் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகின்றன.என்வேப்பைமரப் பெண்டாட்டி என்ற கவிதையில் வேப்பைமரத்தை தனது பெண்டாடியாகக் காண்கிறார் இவை முரணானபடிம உத்திகளாக அமைந்து விடுகிறன.

சர்ரியலிஸத்தின் இன்னொரு பண்பாகக் காணப்படுவது விஞ்ஞானத்தின் மீதான சந்தேகம் அறிவியக்க எதிர்ப்பு இவையும் இவரின் கவிதைகளில் காணப்படுகின்றன இவரது நான் பிள்ளை என்ற கவிதையில் இதனைக் காணலாம்

திடீரென வானம் விழுந்தது/ நாலு தென்னைகளும்/ ஆறேழு பனையும் தலை யாலே முறிந்து தொங்கின/ ஒரு கோழி வீறிட்டுக் கத்தியது

எனது பிள்ளை விளையாடிக் கொண்டிருந் தான்/ வாசல் முழுக்க/ நட்சத்திரங்கள்/ உடைந்து நொருங்கிக்கிடந்தன/ ஒரு முகிலை எடுத்து அனைத்து விட்டு முத்தமிட்டான்.

பின்னர் எழுந்து/ அங்கே சிதறிக் கிடந்த நிலவின் துண்டுகளை/ ஒட்டிப்பார்த்தான் - பிறகு எறிந்தான்/ இன்னொரு நிலவை செய்யலாம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டு நடந்தான்——

எனத் தொடரும் கவிதையில் விஞ்ஞான காலத்தில் இயற்கையில் இப்படியான மாற்றங்கள் நிகழும் என கனவு காண்கிறார் நவீன இலங்காபுரி என்ற அவரது கவிதையில் விஞ்ஞானத்தின் மீது சந்தேகம் கொள்கிறார்.

"....இந்த 1984லும்/ விஞ்ஞானம் தழைத்ததென்று சொன்னவனின் வாய்க்குள/ மண்ணள்ளிக் குவித்து/ வார்த்தையில் போடு/ பேசாமல்/ இளித்த வாயனை இருக்கச் சொல .......... இங்கே/ கடலுக்குள் ஆய்வு நடத்து வதும் சுத்தப் பொய்/ பெண்ணுடைய கருப்பைக குள் உறைகின்ற சதைக்கட்டி/ குஞ்சா மணியுள்ள குழந்தையா வேறேதுமா/ என்றெ ல்லாம் இவர்கள் அறிகின்ற அளவுக்கு முன்னேற்றம் நடந்திருந்தால் .............
இந்த இராவணர்கள் எங்கிருந்து வந்தார்கள்?

இந்தக் கவிதையிலும் விஞ்ஞானத்தின் மீதும் அறிவியக்கத்தின் மீதும் அதிதிருத்தியை வெளிப்படுத்துகிறார் அறிவியக்கத்தின் எதிர்ப்பை இவரின் வால் மனிதர்கள் என்ற பின்வரும் கவிதையில் காணலாம்

"வெடிக்கும்/ இன்னமும் குண்டுகள் வெடிக் கும்/ இங்கிருந்து சுடப்போகும் துப்பாக்கி ரவையினால் வெள்ளிகள் மரணிக்கும/ அதனால் பொத்தல் விழுந்து ஆகாயம்/ தொங்கும்/ நிலவு சில நேரம் நாளைக்கோ ......................

தான் வாழும் யுகத்தின் மீதுள்ள வெறிப்பினை இதயத்துள் உறைகிற மேகம் என்ற கவிதையில் வெளிப்படுத்துகிறார்

"......நான் நினைக்கிறேன்/ இந்த நூற்றாண்டில் வெண் மேகம் மட்டுந்தான் பரிபூரணமான சுதந்திரத்தை அனுபவிக்கின்ற ஒன்றென்று இது தும்பிக்கிக் கூட சிறகுகள் நோண்டப்பட்டு வாலில் கடதாசி முடியப்படும் யுகம் .......

இவ்வாறு படிமங்களை அடுக்கிச் செல்வதன் மூலம் கவிதையை உருவாக்கி விடுகிறார் இது சர்ரியலிஸ்ட்டுக்களின் பண்பையே காட்டுகிறது இதே போன்று இன்னொரு கவிதையும் அமைந்து விடுகிறது தொட்டில் என்ற இவரது கவிதையில்"பாப்பாக்கள் இனி/ விரல் சூப்பமாட்டார்கள்/ ஒன்பதாம் நூற்றாண்டுயுகமா விரல் சூப்ப/ கை நக்க

(இதன் தொடர்ச்சி 29ம் பக்கத்தில்)

# இலங்கை தொலைக்காட்சி நிறுவனங்களின் ஒளி பரப்பு நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சன கண்ணோட்டம்

இலங்கையில் பல்வேறு தொலைக்காட்சி அலை வரிசைகள் காணப்பட்டபோதும் தமிழ் நிகழ்ச்சிகளை முழுநேரமாக ஒளிபரப்பக் கூடிய நிறுவனமாக எதனையும் பெயர்குறிப்பிட முடியாது. ஏனெனில் குறிப்பிட்ட சிலமணி நேரங்களி லேயே தமிழ் நிகழ்ச்சிகளை இவை ஒளிபரப்புகின்றன. அந்தவகையில் ''சக்தி, ஐ, சுவர்ணவாஹினி, சுயாதீன தொலைக் காட்சி, தெரன'' போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதில் ''சக்தி, ஐ'' ஆகிய இரு அலை வரிசைகளுமே தமிழ்மொழி மூலமான நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. ''சுயாதீன தொலைக் காட்சி, சுவர்ணவாஹினி, தெரன'' போன்ற அலைவரிசை களில் தமிழ்த் திரைப்படம் மாத்திரமே இடையிடையே ஒளிபர பப்படுகின்றது. அரச தொலைக்காட்சி நிறுவன மான ''ஐ'' அலைவரிசையையும், தனியார் தொலைக்காட்சி நிறுவனமான சக்தி அலை வரிசையையும் கருத்தில் கொண்டு அந்தநிறுவனங்களின் ஊடாக ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் பற்றிய கண்ணோட்டமாகவே இக்கட்டுரை அமைகின்றது.

''சக்தி, ஐ'' அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் சமூக, பொருளாதார, அரசியல், கலை, பொழுதுபோக்கு, கல்வி என்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. இதிலே சமூகபொருளாதார நிகழ்ச்சிகளாக வர்த்தக உலா, ஊரும் உலகமும், இப்படிக்கு நீங்கள், இயற்கையோடு ஒருநிமிடம், போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றிலே உள்ளூர் தொடர்பான பிரச்சனைகள் மட்டுமன்றி வெளிநாட்டு தொடர்பான பிரச்சனைகளும் வெளிக்காட்டப்படுகின்றன. பறவைக்காய்ச்சல், எயிட்ஸ் தொற்று, சுனாமியால் ஏற்பட்ட இடப்பெயர்வு, அழிவுகள், யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகள், மண்சரிவினால் ஏற்படுகின்ற ஏற்பட்ட அபாயங்கள் போன்றன சுட்டிக்காட்டப்படுகின்றன. இப்படிக்கு நீங்கள் என்ற நிகழ்ச்சியும் மக்களிடம் நேரடியாக சென்று அவர்களின் கருத்துக்களை நேரடியாகவே பெறுகின்ற நிகழ்வாக காணப் படுகின்றது. இந்த நிகழ்ச்சிகளின் மூலம் அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்த அரச, தனியார், அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலமான உதவிகளும், அவ்வாறு கிடைக்காத சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டோர் வெளிப்படுத்துகின்ற மன உணர்ச்சிகளையும், இன்னல்களையும் காண முடிகின்றது. இயற்கையுடன் ஒருநிமிடம் என்ற நிகழ்ச்சி குறுகிய நேர ஒளிபரப்பாக இருப்பினும் அதனது முக்கியத்துவமானது கவனத்தில் கொள்ள வேண்டிய தொன்றாகும். இயற்கை அழிவுகளுக்கு மனிதன் எவ்வாறு காரணமாக இருக்கின்றான் என்பதனை இந்நிகழ்ச்சி தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது.

இவற்றோடு உதயதரிசனம், GoodMorning Sri Lanka என்ற நிகழ்ச்சிகளும் சமூக, பொருளாதார நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. நாளாந்த சந்தையில் பொருட்களின் விலைகள், மருத்துவர்களுடனான சந்திப்புக்களும் ஆலோசனைகளும், கைவினைப் பொருட களின் செய்முறை, அழகுக்கலை நிபுணர் களின் கலந்துரையாடல் என்பவற்றை இந்த நிகழ்ச்சிகள் மூலம் காணலாம். இது காலை வேளையில் ஒளிபரப்பப்படுவதனால் இல்லத் தரசிகள் பெரும்பாலான நன்மையடையக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. எனினும் சில நேயர்கள் தொகுப்பாளர்களுடன் தொலை பேசியினூடாக அவசியமற்ற தனிப்பட்ட வடயங்களை

உரையாடமுற்படுவதையும் காணமுடிகின்றது.

அடுத்து மாணவர்கள் பயனடையத்தக்கதான அறிவு, களம் போன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப் பப்படுகின்றது. பொதுஅறிவு, சமயச்சார்பான விடயங்கள் என்பவற்றை மாணவர்கள் மத்தி யில் வளர்க்கும் தன்மையினை இவ் நிகழ்சி களினூடாக காணமுடிகின்றது. கலை நிகழ் வுகள் என்று குறிப்பிடும்போது சப்தஸ்வரங் கள், இளையகானம், திமிதகதா, பாட்டுக் குப்பாட்டு, ராஜகீதம் என்பன இசை, நடனம் தொடர்பான செய்திகளை வெளிப்படுத்து கின்றது. ''ஐ'' அலைவரிசையில் ஒலிபரப் பாகின்ற பிரவாகம், சிகரம் என்பனவும் இலக்கி யத்துடன்தொடர்பான விடயங்களை விமர்சன ரீதியில் வெளிக்கொணர்கின்றன. புதியவர் களின் ஆக்கங்கள் அறிமுகப்படுத்தப்படுகின் றன. ''விசுவின் அரட்டை அரங்கம்'' என்ற சண் அலைவரிசை நிகழ்ச்சி உண்மையி லேயே பயனுள்ள விடயங்களையும், சில அனுபவங்களையும் எமக்கு பெற்றுத் தருவன வாகக் காணப்படுகின்றது.

சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளில் ''மலரும் மொட்டும்'' ''குட்டிச்சுட்டி'' போன்ற நிகழ்ச்சி கள் ஒளிபரப்பாகின்றன. இதிலே சிறியவர்களது ஆக்கங்கள், உரையாடல்கள், கதைசொல்லல், பாட்டுப்பாடல் என்பனவும், காட்டூன் படங்களும் காண்பிக்கப்படுகின்றன. குட்டிச்சுட்டி நிகழ்ச் சியின் தொகுப்பாளராக சிறிய வயதுடைய சிறுமி ஒருவரே நிகழ்ச்சியை நடாத்துவது பங்கு பற்றுகின்ற சிறார்களை ஈடுபாடுகொள்ள வைக் கின்றது.

பெண்கள் தொடர்பாக நடாத்தப்படுகின்ற நிகழ்ச் சிகளாக ''மங்கை'', ''மனையாள் மண்டபம்'' என்பவற்றைக் கூறலாம். குறிப்பிட்டதுறையில் ஆர்வமுடைய, ஆளுமையுடைய பெண்களை அழைத்து அவர்களது அனுபவங்களை அத் துறைசார்ந்த விடயங்களை கலந்துரையாடு வதன் மூலம் பெறுவதாக இந்த நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன,
பொழுதுபோக்குநிகழ்ச்சிகள் எனக்குறிப்பிடும் பொழுது பெரும்பாலான நிகழ்ச்சிகள் பொழுது போக்கானவையாகவே காணப்படுகின்றது. சினிமா உலகு சார்ந்த விடயங்களையே மிகுதி யாக ஒளிபரப்பப்படுவதைக் காணலாம். சமூகத்தினரின் விருப்பு, இரசிப்புத்தன்மை, எதிர்பார்பு என்பவற்றோடு தொலைக்காட்சி நிறுவனங்களின் இலாப நோக்கத்திற்கும் சினி மாத்துறையே தற்காலகட்டத்தில் பெரும் பங்காற்றுகின்றது. திரைப்படங்கள், தொலைக் காட்சி நாடகங்கள், சினிமாத்தகவல்கள் என்பவற்றை பொழுதுபோக்கான விடயங் களுக்குள் கூறலாம். அவ்வகையில் சக்தி, ஐ போன்ற அலைவரிசைகளினூடாக பல நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. S.M.S Show, சின்ன சின்ன ஆசை, மதிய நேரப்பல் சுவை, போன்றன. இதிலே சில நிகழ்ச்சிகளில் தொகுப்பாளர்கள் தொலைபேசியில் இணைந்து கொள்ளும் நேயர்களுடன் ஒரே பாணியிலான கேள்விகளையே கேட்கின்றனர். ''உங்களது பெயர் என்ன?''உங்களது பொழுத போக்கு எப்படி? இலட்சியம் என்ன? இவையே அவர்கள் கேட்கும் கேள்விகள். பார்ப்போருக்கு இத் தன்மையானது ஈடுபாட்டைக்குறைக் கின்றது. இது குறிப்பிட்ட நிகழ்ச்சியினை தரங்குறைப் பதாகவும், தொகுப் பாளருக்கு போதிய பயிற்சி, அனுபவம் இன்மை போன்றவற்றை வெளிக் காட்டுவதாகவும் அமைகின்றது.

தற்போதைய காலகட்டத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் முக்கியப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி யாக சின்னத்திரைநாடகங்கள் காணப்படு கின்றன. இந்திய தொலைக்காட்சி நாடகங் களை ''சக்தி, ஐ'' ஆகிய இரு அலைவரிசை களுமே மறு ஒளிபரப்புச் செய்கின்றன. மிக மிக நீண்ட தொடர்களான இவை குறிப்பாகப் பெண்கள் சமூகத்தினரால் விரும்பிப்பார்க்கப் படுகின்றது. அண்ணாமலை, அகல்யா, ஆனந்தம், காவ்யாஞ்சலி, கணவருக்காக, மனைவி, செல்வி, முகூர்த்தம், சலனம், கண்மணி, கல்கி என கவர்ச்சிகரமான தலைப் புக்களுடன் இவை ஒளிபரப்பப்படுகின்றன.

சின்னத்திரை நாடகங்களுடன் எமது சமூகத்து பெண்கள் எவ்வளவு தூரம் ஒன்றிப் போகின்

றனர் எனபபார்க்கும்போது வியப்பாகவும், பரிதாப மாகவும் உள்ளது. யதார்த்தப்பாங்கு என்ற விட யமே இல்லாத சம்பவங்களோடும் கதைகளோடும் ஒன்றிப் போய்விடுகின்றனர். தமிழக மக்களின் வாழ்க்கைமுறை, பேச்சு வழக்கு, பழக்கவழக்கங்கள், குடும்ப உறவு முறைகள், கலாசாரம் பண்பாடு என்பன எமது நாட்டுடன் ஒப்பிடும்போது சிறிது மாறுபட டவை. இவ்வாறான சூழலில் உருவாகின்ற நாடகங்களை எமது நாட்டில் ஒளிபரப்பாக் கும்போது சில முரண்பாடுகளைச் சந்திக்க நேர்கின்றது.

சின்னத்திரை நாடகங்களில் பெண்கள் முதன் மைப் படுத்தப்படுகின்றனர். என்ற போர்வையில் அவர்களை மேலும் கோழைகள் ஆக்குகின்ற செயற்பாடாகவே இவை அமைகின்றன. பெண என்பவள் இப்படித்தான் இருக்க வேண்டும். இவள்தான் இலட்சியப்பெண் என்ற ரீதியில் ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுற்றிச்சுழன்று வருகின்ற சூழ்நிலையை தொலைக்காட்சித் தொடர்கள் உருவாக்குகின்றன. பெண்கள் கல்வி கற்று உயரிய பதவிகளில் இருந்தாலும், அவளுக்கு பூவும் பொட்டும் மட்டுமே வாழ்வில் கிடைக்கும் அரிய பாக்கியமாகவும், அதனை அவள் தனது வாழ்நாள் முழுவதும் போற்ற வேண்டும், அவற்றிலே தான் பெண்களது முழுமை அடங்கியுள்ளது எனவும், ஒவ்வொரு பெண்ணுக்கும் கணவனே கண்கண்ட தெய்வ மாகவும் அவனது துணை, நிழல், அன்பு மட்டும்தான் பெண்ணின் வாழ்வை செழிப்ப டையச் செய்யக் கூடியது என்ற ஒரு நிலைப் பாட்டை இந்த நாடகங்கள் உருவாக்கு கின்றன. தன் கணவன் தவறு செய்து வேறு ஒரு பெண்ணுடன் வாழச் சென்றாலும் அவன் வரும் வரை அவனுக்காக வாழ்வதே இலட்சி யப் பெண் என்ற நிலையினை அப் பெண் பாத்திரத்தின் மூலமே பேச வைக்கின்ற செயற் பாட்டை இன்றைய தமிழ் தெலைக்காட்சி நாட கங்கள் செய்து வருகின்றன. இந்த நிலைப் பாடானது ஒருவரை மீண்டும் மீண்டும் தவறு செய்யத் தூண்டுகின்றது.

''கணவருக்காக'', ''மனைவி'' போன்ற நாட கங்களில் கலாச்சாரச்சீர்கேடு, இரட்டை அர்த்த முள்ள வசனம், பெண்கள் கவர்ச்சிக் கண்ணிக ளாகவும், குரோத சிந்தனை கொணடவர்க ளாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். எந்த நாட கத்தை எடுத்தாலும் குடும்ப உறவுகளே கொலை செய்கின்ற கொடூர நெஞ்சம் கொண்டவர் களாகவும், சூழ்ச்சி செய்பவர்களாகவும் விபரிக் கப்படுகின்றனர். தங்கை அக்காவை குரோதத் துடன் கொல்வதாகவும், அண்ணன் தம்பியை ஆட்கள் வைத்து அடிப்பதாகவும் காட்டப்படு கின்றது. நாளாந்தம் வாழ்கின்ற குடும்ப உறவு களை சிதைக்கின்ற செயற்பாடாகவே இவற் றைக் கொள்ளலாம். ஒருவனுக்கு பல மனைவி, ஒருத்திக்கு பல கணவர் என யதார்த்தம் சிறிது மின்றி கற்பனை உலகை முன்வைத்து, பழி வாங்கும் செயற்பாட்டினை அத்திவாரமாகக் கொண்டு இவை உருவாக்கப்படுகின்றன.

இவ்வாறான நாடகங்களில் கவர்ச்சிகரமான பெண்கள், அழகான தோற்றமுடைய ஆண் கள், ஆடை அலங்காரம், உயரிய வாழ்க்கை முறை, ஆடம்பர கார், பங்களா என்ற வசதி வாய்புக்களைக் கொண்ட பணக்கார கோடீஸ் வர சமூகத்தையே எம் கண்முன் நிலை நிறுத்துகின்றனர். மத்திய தர வர்க்கம், அதன் பிரச்சனைகள், நாளாந்த தேவைகள், வாழ் க்கை முறை என்பன இந்த நாடகங்களில் காட்டப்படுவதில்லை. அவ் வாறு காட்டினாலும் நாளடைவில் அவர்களைப் பணக்கார வர்க்க மாகக் மாற்றிவிடுகின்றனர். இவற்றினையே யதார்த்தம், உண்மை என நம்பி நாளாந்தம் மேற்கொள்கின்ற தமது தேவைகளைக்கூட நிறைவேற்றாது தமது வீட்டுத் தொலைக் காட்சிப் பெட்டியின்முன் ஆண்கள், பெண்கள் படிக்கின்ற பிள்ளைகள் என ஒரு ரசிகர் வட் டமே தவம்கிடக்கின்றனர். இவற்றைப் பார்ப்பத னால் நம்பிக்கை இன்மை, அசட்டுத் தனம், உணர்ச்சிவசப்படும் இயல்பு, ஐயம், கோபம், வெறுப்பு, மனவேதனை மனதில் விரக்தி

என்பவையே மிஞ்சுகின்றன. மாலை 6.30 தொடக்கம் 9.30 மணிவரை எத்தனை சிறுவர் சிறுமியர்கள் இந்த நாடகத்தின் முன் அமர்ந்து தமது படிப்பின்மேல் உள்ள கவனத்தை சித றடிக்கின்றனர்.

இந்திய கலாசாரத்தின் அம்சங்களையும், மரபு ரீதியான விடயங்களையும் உட்புகுத்தி குடும்ப உறவுக்குள் நாளாந்தம் அல்லல்படும் அப லைகளாகப் பெண்களையும், அவர்களைக் கண்டு கண்ணீர் சிந்துபவர்களாக எம்மையும் இந்தத் தொலைக்காட்சி நாடகங்கள் உருவாக் குகின்றன. பெண்கள் திட்டமிட்டுச் செயற்பட முடியாத வர்கள், பிறர்மீது சார்ந்து வாழப் பழக்கப் பட்டவர்கள், கவர்ச்சியானவர்கள், பொறாமை, எரிச்சல் போன்ற சுபாவம் கொண் டவர்கள், பயந்தாங் கொள்ளிகள், எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள் என மரபு ரீதியாக முன்பு கூறப்பட்ட கருத்துக்களை மீளக்கட்டி எழுப்புகின்ற ஓர் செயற்பாட்டையே பெரும்பாலான நாடகங்கள் செய்து வரு கின்றன.

இவ்வாறான கற்பனை உலகு சார்ந்த விடயங் களைத் தவிர்த்து யதார்த்தப்பாங்கான, அன் றாட மனித வாழ்க்கையில் இடம்பெறுகின்ற சிக்கல்கள், இன்பதுன்பங்கள் என்பவற்றை எடுத்துக் கூறுகின்ற ''மெட்டி ஒலி'' போன்ற நாடகங்கள் ஒளிபரப்பப்படுமேயானால் அதுவர வேற்கத்தக்கது. நல்ல கலைத்துவமான, கருத்தாழம் மிக்க, நம்பிக்கையை ஊட்டு கின்ற, சிந்திக்கத் தூண்டுகின்ற நாடகங்கள் குறைவாகவே உள்ளன. ''கோலங்கள்'' என்ற நாடகத்தில் கூறப்படுகின்ற விடயங்கள் ஒருவர் மனதில் தன்னம்பிக்கை, முயற்சி என்பவற்றை பதியவைக்கின்றன. சமூகத்தில் ஒருபெண் முகம் கொடுக்க வேண்டிய சிக்கல்கள், பெண் என்ற தளத்தில் நின்று அபி என்ற பாத்திரம் எதிர்கொள்கின்ற சவால்கள் அவற்றை எவ்வாறு தனது சாதனையாக மாற்றுகின்றாள் என்ப தனை ''கோலங்கள்'' தொடர் வெளிக்காட்டு கின்றது. இவ்வாறான முற்போக்குச் சிந் தனைகொண்ட, சுய ஆர்வத்தைத் தூண்டுகின்ற, தொடர்கள் தயாரிக்கப்படவேண்டும். ஏனெனில் தமது ஓய்வு நேரங்களைப் போக்குவதற்காகத் தொலைக் காட்சிப் பெட்டியின் முன் அமர் வோருக்கு மனதில் ஆற்றல், ஆளுமை, தன்னம்பிக்கை என்பவற்றைக் கொடுக்கின்ற விடயங்களை ஒளிபரப்பினால் அது பயனுடை யதாக இருக்கும்.

குகநிதி குகநேசன்
உதவி விரிவுரையாளர்
மொழித்துறை
கலைக்கலாசாரப்பீடம்

கிழக்குப் பல்கலைக்கழக வெள்ளி விழாவின் சிறப்பு மலராக 'வெளி' வெளிவருவதையிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் இக்கட்டுரை மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

(29ம் பக்கத் தொடர்ச்சி)

15. மே. கு, நூ. பக். 58
16. மே. கு, நூ. பக். 59

17.பின்நவீனத்துவ சிந்தனையிலான வெளிச் சங்கள் எமது சமூகத்திலே நீண்ட காலமா இருந்துள்ளது என்று கூறப்படுகின்ற போதும் அது கட்டமைக்கப்பட்ட ஒரு சிந்தனையாக, மேற்குலகினூடாக தமிழில் மிக அண்மைக் காலத்திலேயே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டது.

18. கேசவன், சிவசேகரம், முருகையன், வேணுகோபால், பின் நவீனத்துவம், மாயைக ளைக் கட்டவிழ்த்தல், தேசிய கலை இலக்கியப் பேரவை, 2007, ஏப்ரல், பக் - 6

19. மே. கு, நூ. பக். 6

த. மேகராசா
4ம் வருடம்
தமிழ்ச் சிறப்பு

# மூச்சறுந்த சுவாசங்களாய்....

நாங்கள் பிரசவிக்கும்
கொட்டாவிகள் எல்லாம்
வட்ட மேசைமுன் எழுதப்படும்
ஒப்பந்தங்களில் காணாமல் போக -
நாங்களும்
சுமக்கின்றோம் நிறையக் கனவுகளை
உங்களைப் போலவே....

மூச்சறுத்த சுவாசங்களாய்
நாதியற்று நடைப்பிணமாய்
தெருவோரம் வீசப்படும்
குருதி கழுவிய மானிடவுடல்கள்

காகங்கள் அல்ல
கழுதுகளும் வல்லூறுகளும்
தீனிக்காய் எம் மேனி கொத்திப்போயின.
இருண்ட யுகங்களுக்குள் முகம்புடைத்து
மூச்சறுந்த விம்மியமும் எனதுணர்வுகள்
இன்னமும் மரணிக்கவில்லை என்பதை
என் சுவாசக் காற்று ஞாபகப்படுத்துகிறது

கதறக் கதறக் கற்பழித்தான் தமிழன்னையின்
கனவினை,
கைவேறு, கால்வேறாக்கி
குரல் வளை அறுக்கப்பட்டு குற்றுயிராய்
துகில் உரியப்படும் என் தாயவளின்
மார்பினை ருசிபார்க்க.....

முட்டையில்
கரு பிடுங்கி
நிர்வாண மார்புகளை
ருசிபார்த்த பின்பும் எமக்கு
கண்ணீரே வரவில்லை.

எம் முன்னோர்களே....
ஆசையாய் குலுங்கி குலுங்கி
நீங்கள் பதித்த தடங்கள்
எல்லாம் இன்று முழுதாய்
அழிந்து போக நாங்களும்
சுமக்கின்றோம் நிறையக் கனவுகளை
உங்களைப் போலவே....

நெருக்கு வாரங்களின்
நெஞ்சறுக்கும் எனச்செயல்
மனித விழுமியத்திற்கு நிரந்தரமாய்
புதைகுழிதோண்டி
புதைக்கப்படும் முன் ~ புனித

யாக வேள்வியில்
புதுப் பிறப்பெடுத்து
புதுயுகம் படைப்போம் – எம்
எதிர்காலக் கனவுகளுடன்

ஜெ. டானியல்
நுண்கலைச் சிறப்பு
3ம் வருடம் (2006)

கிழக்குப் பல்கலைக்கழக வெள்ளி விழாவின் சிறப்பு மலராக 'வெளி' வெளிவருவதையிட்டு நடத்தப்பட்ட கவிதைப்போட்டியில் இக்கவிதை மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

# தற்கொலை - ஒரு சமூகவியல் அணுகுமுறையும் இலங்கை பற்றிய பார்வையும்

அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் வெளியீடுகள் மனித ஆயுளினை அதிகரித்துச் செல்வதுடன் மரணத்தினை வெல்வதற்கான தடைகளைத் தகர்த்தெறிந்து பல்வேறுபட்ட படிமுறைகளைக் கொண்ட முன்னெடுப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றமை மனித நாக ரிகத்தின் வளர்ச்சிப் போக்கினைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது எனலாம்.

இவ்வாறான சூழ்நிலையில் மனிதர்கள் தங்க ளது பெறுமதியான வாழ்க்கையினை விரை வாக முடிவுக்குக் கொண்டுவருகின்ற துர்ப் பாக்கிய நிலைமை தற்கொலை எனும் செய லினால் சமூகத்தில் அரங்கேற்றப்பட்டு வருகின் றமை சமூகவியல் ரீதியில் ஒரு சமூகச் சிக்க லாகவே நோக்கப்படுகின்றது.

தற்கொலை என்பதற்கான வரையறைகள் பல வாறாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் ஒருவர் தன்னைத்தானே வேண்டுமென்றே கொலை செய்து கொள்கின்ற செயற்பாடே தற்கொலை எனப்படுகிறது. Suicide எனும் சொல் லத்தீன் சொல்லாகும். Self Killing அதாவது தானாகவே கொல்லுதல் என்பதே இதன் அர்த்தமாகும். ஒருவர் ஆழ்ந்து யோசனை செய்து தன்னுடைய சொந்த வாழ்க்கையை முடித்துக் கொள்ளுதல் என்பதே இதன் விரி வாகும்.

(Ruth S. Cavan) தமிழில் ரூத்.எஸ். கவன் எனும் அறிஞரின் கருத்துப்படி ''வேண்டு மென்று ஒருவனுடைய வாழ்வை எடுப்பது அல்லது மரணம் ஒருவனுடைய வாழ்வை எடுப்பது அல்லது மரணம தன்னை நெருக்கும் போது அதிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு வாய்ப் பிருக்கும்போது தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத தவறுவதுதான் தற்கொலை எனக் குறிப்பிடுகி ன்றார்.

தற்கொலையை ஒரு சமூகப் பிரச்சினை யாகவே பலர் இனங்காணுகின்றனர். அதாவது சமூகத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு பிரச்சினை யாகவே இது நோக்கப்படுகின்றமையை விளங்கிக கொள்ளலாம். இங்கு தற்கொலை க்கு முயல்பவர்களை நான்கு வகையாகப் பாகுபடுத்தலாம்.

1) மரணம் என்ற இலக்குடன் முயற்சிப்ப வர்கள்.
2) அடுத்தவர்களின் கவனத்தை ஈர்க்கும் முக மாக முயன்று மரணத்தைச் சம்பவித்துக் கொள்வோர்.
3) மரணத்தைத் தழுவும் நோக்குடன் தற் கொலைக்கு முயன்றும் தோல்வியடை பவர்கள்.
4) பிறரின் கவனத்தை ஈர்க்க முயன்றும் தற் கொலை முயற்சியில் தோல்வியடைவோர்.

இதில் முதல் இரு தரப்பினர் தமது நோக்கங் களை எய்திக் கொள்வர். மற்ற இரு தரப்பினர் மரணத்தைத் தழுவுவதில் தோற்றுப்போய் விடுகின்றனர். போதிய கவனத்தை ஈர்க்க முடியா தவர்கள் மீண்டும் மீண்டும் தற்கொ லைக்கு முயற்சிக்கின்றனர். பொதுவாக, அளப்பரிய இழப்புக்களைச் சந்தித்தவர்கள், தொழில் வாய்ப்பற்றவர்கள், யுத்த சூழ்நிலை யால் பாதிக்கப்பட்டவர்கள், பாலியல் துஸ்பிர யோகத்திற்கு (Sexual abuse) உட்படுத்தப பட்டவர்கள், பரீட்சையில் சித்தி யடையத் தவறியவர்கள், காதலில் தோல்வி யுற்றவர்கள், பரம்பரை வியாதிகள் (மனநோய்) உள்ளோர் மற்றும் மௌன மாகத் தனித்து இருப்பவர்கள் போன்றோரே அதிகமாக தற்கொலை செய்பவர்களாக இனங் காணப்பட்டுள்ளனர் எனலாம்.

தற்கொலை செய்து கொள்வது என்பது உலகில் பொதுவானதாகவும், கால வரை

யறையற்றது மானதொரு செயற்பாடாகவே நோக்கப்படுகிறது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் (W.H.O) தகவல்களின்படி 2000ம் ஆண்டில் சுமார் ஒரு மில்லியன் மக்கள் உலகெங்கிலும் தற்கொலை புரிந்துள்ளனர். அதாவது 40 நிமிடங்களுக்கு ஒரு மரணம் என்ற அடிப்படையில் இத்தற் கொலைகள இடம்பெற்றுள்ளன அத்துடன் மரணம் சம்பவிக்கும் பத்துக் காரணிகளுள் தற்கொலையும் ஒன்று எனக் கருதப்படுகின்றது.

தற்கொலை தொடர்பான புள்ளி விபரங்களின் படி அதிகளவான தற்கொலைகள் மத்திய ஐரோப்பா, வடகிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா ஆகிய வலயங்களைச் சேர்ந்த நாடுகளிலும், மிகக் குறைந்த தற்கொலைகள் இடம்பெறும் பிரதேசங்களாக மேற்கு ஆசியா, மத்திய அமெரிக்கா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் திகழ்கின்றன. மேலும், உலகில் அதிகளவான தற்கொலைகள் நிகழும் நாடுகளாக முன்னாள் சோவியத் ரஸ்யா நாடுகள் காணப்படுகின்றன. உலகின் அதிகரித்த தற்கொலை விகிதம் காணப்படும் முதல் பத்து நாடுகளில் இலங்கை 7வது இடத்தைப் பெறுவதுடன் முதல் இடத்தை முறையே லத்துவேனியா, ரஸ்யா, லத்வியா, எஸ்தோனியா, பெலாரால், ஹங்கேரி ஆகிய நாடுகள் பெறுகின்றன.

இவ்வாறான சிக்கல் தன்மை பொருந்திய சமூகப் பிரச்சினையான தற்கொலை பற்றிப் பல்வேறு அறிஞர்கள் ஆய்வுகளை மேற்கொண்டிருந்த போதும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சமூகவியல் அறிஞரான (Emile Durkheim) அத்துடன் சமூக அமைப்புக்கள் சக்திகளைத் தொடர்புபடுத்தியே எமில் துர்க்கைம் இன் ஆய்வானது குறிப்பிடத்தக்க தாகும். சமூகச் சூழ்நிலைகளும், கூட்டான உணர்வுகளும்தான் தற்கொலைக்கு முக்கிய பொறுப்பு என்கிறார். இவர் தற்கொலை என்பது சமூக உண்மை (Social fact) எனக்குறிப்பிடுகிறார். அத்துடன் சமூக உண்மைக் கான விளக்கத்தினைப் பெற முடியும் என்பதுடன், குறிக்கப்பட்ட விடயங்கள் பற்றிய ஆய்வு முறை மூலமே ஒரு தனி நபரின் தற்கொலை செயல் முறைக் குச் சிறந்த விளக்கம் தரமுடியும் என்பது இவரது வாதம் ஆகும். இம்முறையினூடே சாதக மான வேளைகளில் தற்கொலை யாளி யின் மனநிலை உந்துதல்கள், நோக்கங்கள் பற்றிய சான்றாதாரங்களைப் பெற்றுக்கொள் ஏலாம்.

மேலும், சாதாரணமாக நிகழும் மரணத்திற்கும் தற்கொலைக்கும் இடையிலான வேறுபாட்டினையும் இவர் புரிந்துள்ளார். தற்கொலைக்கு சமூக முறிவினைச் சுட்டிக்காட்டும் இவர் ஒருவனுடைய தனிப்பட்ட குணத்திற்கும், சமூகத்தேவைக்கும் (Social Needs) ஒத்துப் போகாத தன்மையும், தவறான பொருத்தப்பாடும் ஏற்படும்போது ஒருவன் தற்கொலை செய்துகொள்கின்றான். எச்சந்தர்ப் பத்தில் ஒருவன் தான் வாழ்கின்ற சமுதாயச் சூழலில் தான் வாழத் தகுதியற்றவன் என்று உணர்கின்றானோ அப்போதே அவன் தற் கொலை செய்துகொள்ள உந்தப்படுகின்றான். இச்சந்தர்ப்பதில் தற்கொலையாளி குறித்த பலனைத் தரும் என உணர்ந்த நிலையில் நேர்முகமாகவோ மறைமுகமா கவோ அவரின் செயலில் நிகழும் எல்லா மரணங்களையும் தற்கொலை எனும் பதம் சுட்டுவதாகக் கூறு கின்றார். இவர் மனிதனிடம் காணப்படுகின்ற தனிப்பட்ட குணாம்சங்களையடிப்படையாக வைத்து தற்கொலையை மூன்று பிரிவாக வகுத்துக் காட்டுகின்றார். அவை:

1) தன்முனைப்பு சார் தற்கொலை
2) பொதுப் பண்பு சார் தற்கொலை
3)முரண்பாட்டு நிலைசார் தற்கொலை என்பனவாகும்.

இங்கு தன்முனைப்பு சார் தற்கொலை என்பது தற்பெருமைக்கும், சுய மரியாதைக்கும் முதலிடம் கொடுத்து மேற்கொள்ளுபவர்களின் தற்கொலையைக் குறிக்கும். எவருடனும் விருப்பன்றி தனிமையாக வாழ்பவர்கள்தான் தற்கொலை செய்து கொள்ளும் தன்மை உடையவர்கள். அத்துடன் விதவைகள், தபுதாரர்கள், மற்றும் சொந்தப் பிள்ளைகளால கைவிடப்பட்ட

வர்கள் இவ்வகையினுள் அடங்குவர்.

பொது நலப்பண்புசார் தற்கொலை என்பது ஒரு குழுவுடனோ, அல்லது சமுதாயத்துடனோ நெருக்கமான தொடர்புடைய ஒருவர் அந்தக் குழுவின் அல்லது அந்தச் சமுதாயத்தின் நன்மைக்காகத் தற்கொலை செய்வதைக் குறிக்கும். உதாரணமாக படைவீரர்களின் இறப்பு, இந்தியாவில் காணப்பட்ட உடன்கட்டை ஏறுதல், அரசியல் கட்சித் தொண்டர்களின் தீக்குளித்து மரணம் அடைதல் என்பன அடங்கும்.

முரண்பட்ட நிலைசார் தற்கொலை என்பது சமூகச் சீர்குலைவுடனும், பதட்ட நிலையுடனும் தொடர்புடைய வாழ்க்கையில் எதிர்நோக்குகின்ற எதிர்பாராத பிளவினால் நிகழ்வதாகும். பொருளாதார நிலையில் ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வுகளை வைத்து இவ்வகையான தற்கொலையை விபரிக்கின்றார்.

கோடீஸ்வரனாக இருந்த ஒருவனுக்குத் திடீரென பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டால் அவன் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்கின் றான். இதற்கு அடிப்படைக்காரணம் பொருளாதாரமல்ல. அவனுக்கு ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தின் விளைவாக சமுதாயத்தில் அவன் பெற்றிருந்த மதிப்பு, அதன் உறவுமுறை ஆகியவற்றை இழந்து விடுவ தால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தற்கொலை செய்துகொள்ள முடிவுசெய்து கொள்ள முடிவு செய்கின்றான்.

இவ்வாறாக எமில் துர்க்கைம் இன் தற்கொலை பற்றிய கருத்துக்கள், முன்னேற்றகரமானதொரு பார்வையினை சமூகவியல் துறையில் பெற்றிருக்கின்றது.

உலகில் தற்கொலை இடம்பெறாத நாடோ, இடமோ இல்லை என்றுதான் கூறவேண்டும். அந்த வகையிலேயே இலங்கை பற்றிய பார்வை அமைகின்றது.

உலகில் அதிகம் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கையில் இலங்கை 7வது இடத்தைப் பெறுகின்றது. ஒப்பிட்டளவில் மூன்றாம் உலக நாடுகளில் தற்கொலை எண்ணிக்கை குறைவாகவுள்ள போதிலும், இலங்கையில் தற்கொலை, ஓர் சமூகப் பிரச்சினையாகவே மாறியுள்ளதெனலாம். இலங்கை சுதந்திரமடைந்ததன் பின் மிகமோசமான பிரச்சினையாக இது காணப்படு கின்றது.

1950களில் இலங்கையின் தற்கொலை விகிதம் ஒரு லட்சம் பேருக்கு 6.5% ஆகக் காணப்பட்டது. 90களின் நடுப்பகுதியில் ஒருலட்சம் பேருக்கு 4.5% ஆகக் காணப்பட்டது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) தகவல்களின் படி ஒரு தற்கொலைக்கான முயற்சிகள் 20 தடவைகளுக்கு அதிகமாக இருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால் 90களின் நடுப்பகுதியில் இலங்கையில் தற்கொலை முயற்சிக்கான எண்ணிக்கை 2 லட்சத்திற்கு அதிகமாக இருக்கலாம் என மதிப்பிடப்பட் டுள்ளது.

இலங்கையின் சமூகநலன்புரிமேம்பாட்டினைப் பின் தள்ளுவதில் தற்கொலை முக்கிய இடம் வகிக்கின்றது எனலாம். அதாவது சமூக நலன் புரி மனிதவள சமூக மேம்பாட்டிற்காக அதிக நிதியினை இலங்கையரசாங்கம் செலவிடுகின்றது. ஒருவரின் தற்கொலை முயற்சியால் எவ்வளவு தூரம் பொருளாதாரப் பாதிப்பை இந்த அரசாங்கம் எதிர்நோக்குகின்றது எனப் பார்ப்போ மானால்,

1990 தொடக்கம் 2000மாம் ஆண்டுவரையான 10 ஆண்டுகளில் சுமார் 70 ஆயிரம் மக்கள் இலங்கையில் தற்கொலை செய்துள்ளனர். இவர்களில் 75% சதவீதமானோர் இளைஞர்கள். இதனால் அபிவிருத்தியின் முதுகெலும்பான தொழிலாளர் படையை இலங்கை இழந்துள்ளது. கிட்டத்தட்ட 189 ஆயிரம் மில்லியன் வரு மானத்தை எமது பொருளாதாரம் இழந்துள்ளது. வருடாந்தம் தற்கொலைக்கு முயற்சிப்பவர்கள் மற்றும் தற்கொலை புரிவர்களால் 196,035 மில்லியன்கள் வருமானம்

இழக்கப்படுகின்றது.

மேலே குறிப்பிட்டப்பட்ட 10 ஆண்டுகளில் சுமார் 1.4 மில்லியன் மக்கள் தற்கொலைக்கு முயற்சித் துள்ளனர். இதனால் இத்தொகையில் 30சதவீத மானவர்கள் உளவியல், உடலியல், ரீதியில் பாதிப்படைந்துள்ளனர். இதனால் உழைப்பாளர் படையில் இவர்களால் பங்கு பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் தற்கொலைகள் உளவியல் காரணங்களான மனஅழுத்தம், மனக்கசப்பு, விரக்திநிலை என்பன காரணமாக பெருகு கின்றன. அடிப்படை வசதிகளைக் கூடப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலை, பொருளாதாரப் பற்றாக்குறைகள், உள்நாட்டுப போரி னாலான பாதிப்புக்கள் என்பன இதற்குக் கார ணங்களாக அமைந்துள்ளன.

அத்துடன் இலங்கையின் பாரம்பரியக் குடும்ப அமைப்புக்களில் ஏற்பட்டுள்ள சிதைவு இங்கு முக்கிய காரணமாகும். இலங்கை எதிர்நோக்கி யுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் அதன் சமூக வாழ்கையில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. மேலும் போட்டி மலிந்த சமூகத் தில் பொருளாதாரக் கட்டுக்கோப்புக்கள் சமூக, குடும்ப வாழ்க்கையின் இருப்புக்குச் சவால் விடக் கூடிய பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய சூழ்நிலை களில் பொருளாதாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல், மனிதாபிமானமா, பொருளாதாரமா என்ற சங்கடங்கள் மனிதத்தை மழுங்கடித்து குடும்பங்கள் சிதறிவிடக் காரணமாக அமை கின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் குடும்ப அங்கத்தவர்களிடையே தற்கொலைகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாத விடயமாகி விட்டது.

மேலும், மேலைத்தேய சமூகத்தில் ஒரு பொது மரபாக இருந்துவரும் காதல் வயப்படும் நிலை எமது சமூகத்தில் வேரூன்றிக் காணப் படுகின்றது. நகரமயமாக்கம், உயர்கல்வி வாய்ப்புக்கள், சுதந்திர வர்த்தக வலயங்கள், தொழிற்சாலைகள் என்பனவற்றின் காரணமாக இளைஞர், யுவதிகளிடையே ஏற்படுகின்ற காதல்கள் பெரும்பாலும் தோல்வியிலே முடி வடைகின்றன. இதன் தாக்கத்தினால் மனமுடை யும் காதலர்கள் தனியாகவே, அல்லது ஜோடியாகவோ, ஓடும் புகையிர தம் முன்பாய் தல், தூக்குப்போடுதல், நஞ்சு விதைகளை உட்கொள்ளல், நஞ்சு எண்ணெய் அருந்துதல், மலையில் இருந்து பாய்தல் (குறிப்பாக இலங்கையின் World End மலைப்பகுதி) போன்ற முறைகளைப் பயன்படுத்தி தற் கொலை செய்து கொள்கின்றனர். காதல் தோல்வியினால் 84% பெண்களும், 72% ஆண் களும் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இத்து டன் வறுமையின் காரணமாக 52வீதமான சிறுவர்கள் தற்கொலை செய்து கொள்கின் றனர். என்பது கவலைக்குரிய விடய மாகும்.

அது மாத்திரமன்றி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியத்தின் அண்மையத் தகவலின்படி, தொழில் புரிவதற்காக வெளி நாடுகளுக்குச் சென்ற இலங்கையர்களில் 22 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

இவ்வாறான தற்கொலைகளைத் தடுப்பதற்கு பின்வரும் உபாயங்களைக் கையாள்வது அவசி யமானது எனலாம். தற்கொலையைத் தடுப் பதற்கான வழிமுறைகளாக

1) உலகப்பெருஞ் சமயங்கள் தற்கொலைக்கு எதிரான கருத்துக்களையும், எண்ணத்தி னையும் (தற்கொலை செய்தல்) மாற்றிக் கொள்ளக் கூடிய விழிப்புணர்வினையும் ஊட்டுதல் வேண்டும்.
2. சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதுடன் சமூகத்தில் சமத்துவத்தினை (Equality) ஏற்படுத்துதல் வேண்டும்.
3) தற்கொலை செய்வதற்கு ஏதுவான சமூகச் சீர்குலைவினையும், சிதறிய சமூக அமைப் புக்களையும், அனைத்து நாடுகளும், ஒன்றி ணைந்து சீர்படுத்த முனைவதுடன் மது

பானப்பாவனை, போதைப்பொருள் பாவனை போன்ற சமூகச் சீர்கேடுகளைச் சமூகத்தில் இருந்து அகற்றுவதற்கு உழைத்தல் வேண்டும்.

4) சமூகத்தில் தனித்திருப்பவர்களைச் சமூகத் துடன் தொடர்பாடல்களை மேற்கொள் வதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

5) தற்கொலை முயற்சியிலிருந்து தவறியவர் களுக்குத் தற்கொலை எண்ணத்திலிருந்து மீளுவதற்கான உளவியல் ஆலோசனை களை வழங்கிப் புதிய வாழ்க்கைக்கு இட்டுச் செல்லுதல்.

மேற்குறிப்பிட்ட வழிமுறைகள் சமூகத்தில் அதிகரித்துவரும் தற்கொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதுவாக அமையும் எனலாம்.

தொகுத்து நோக்கும்போது ''நம்பிக்கை உன் னிடம் இருக்குமானால் எதையும் சாதிக்க லாம்" என்ற சிந்தனையுடன் தோல்விகளையும் இழப்புக் களையும் வெற்றிக்கான திறவு கோலாகக் கொண்டு செயற்படுவோமானால் தற்கொலையை சமூகத்திலிருந்து ஒழித்து விடலாம் என்று கூறினால் அது மிகை யாகாது.

ஆ. மதுசூதனன்
சமூகவியல் சிறப்புக் கற்கை
விடுகை வருடம் - 2007

*சின்னஞ்சிறு ஓடைகளையும், காட்டாறுகளையும், அடிப்படையாக் கொண்டு மக்கள் உருவாக்கிய அரிப்பாசனம் ஏகாதிபத்தியத்தின் லாப வெறி யால் அழிக்கப்பட்டு வருகிறது. ஆனால் மழையின் மையும், வறட்சியும்தான் விவசாயத்தின் அழிவுக் குக் காரணம் என்று நம்பவைக்கப்பட்டுள்ளது.*

*- ரா. முருகவேள். -*
*தலித்முரசு - செப்டெம்பர் -2006*

# முருகசோம் அல்லசு புலமை மரபு.

வேடராய் விருத்தராய்
தோற்றினார் எவரோ - அவரே
மூளைப் புயல் கிளம்ப
முருகராய்த் தோற்றினார் தோற்றினாரே...

குரலை மாற்றி குணத்தை மாற்றி
சேவலும் மயிலுமாய்
சிறகடித்துக் கூவி உசுப்பேற்றி
தோகை விரித்தாடி அழகேற்றி
மேடைக்கு மேடை
வேடங்கள் புதிது புனைந்தேற்றி
மூளைப் புயல் கிளம்ப
முருகராய்த் தேவராய் வல்ல அசுரராய்
தோற்றினார் தோற்றினாரே...

பெரியோர் மேலோர் என
நம்பிப் பின்தொடர்ந்தோர் - தாம்
பழனி ஆண்டிகளாய்
ஞானப் பட்டாடை போர்த்திப்
பவனி வரும் நவபக்தி மரபினராகி
பின்வழி வருவோர் அவர்தம்
தடந்தோள்கள் மீதேறிப் பல்லக்கூரும்
பெருமாள் பெருமாளே என
புகழ்வலம் வந்தனர் வந்தனரே...

அதிகாரத் தேரேறி
அரச உலா வரும் பொழுதில் - விடுக்கும்
வார்த்தைகளை
விழுங்கி அழித்து ஏப்பமெழும்
பொதுமேடைப் பொழிவுகளில்
நனைந்து நெக்குருகி நிற்பர் நிற்பரே...

சி.ஜெயசங்கர்
(செப்டெம்பர் - 2007)

# இறுதி வருடக் காதல்

மூன்று வருடம்
முடிந்த பின்பும்
முற்றுப் பெறவில்லையே....!
என் காதல் காவியம்.

அன்பே....!

உன்னை கண்டதும் ஏனோ?
என் ரத்த நாளங்கள்
நடனமாடும்
மேடையின்றி.
இருதயம்கூட
இயந்திரமாய் மாறிவிடும்.
இரவிலும் நான்
இரும்புப்பாதையில் நடந்த
இம்சையை அனுபவிக்கிறேன்.

என்னுள்ளே
இரசாயன மாற்றங்களை
இரகசியமாய் செய்து விட்டு
இரம்மியமாய் திரிகிறாய்
நீயோ....
இரக்கமில்லா அரக்கிபோல்.

யாருக்கோ நீ
வணக்கம் சொல்கையில்
அதை
நான் வாங்கிக் கொள்கிறேன்
யாருக்காகவோ நீ
சிந்தும் புன்னகையை
எனக்குரியதாக்கி
இன்புற்றுக்கொள்கிறேன்.
அயலில் உன் குரல் கேட்டால்
நான்
அரசியல் வாதியாக
ஆவேசமாய் பேசுகிறேன்.

இத்தனைக்கும் நான்
என் விருப்பம் சொல்லவில்லை.
உன் விருப்பம் இல்லாமலே
உன்னுடனே வாழ்கிறேன்
என் விருப்பம் சொல்லத்தான்
எத்தனையோ சந்தர்ப்பங்கள்
அத்தனையும் அடங்கிவிடும்
அனல் பறக்கும் உன் பேச்சால்.

ஏனடி...?
என்னிலை தெரிந்தும் நீ...
எகத்தாளமாய் திரிகின்றாய்.
இன்றுவரை என்காவியத்தில்
நீதான் கதா நாயகி
உன்காவியத்தில்
எனக்கேனோ....?
இன்றுவரை கேலிப் பாத்திரம் தான்.

என்னை புரியவில்லையா...?
அல்லது
புரிந்தும் புரியாதாய்
புதிர் போடுகிறாயா?
எனக்கும் புரியவில்லையே....!
பிரிந்திடும் நேரத்திலுமா
பிரியத்தை காட்ட மறுக்கிறாய்...?

இறுதியாக சொல்லுகிறேன்
இன்றுடன்
என் காதலுக்கு
இருப்பிடமே இருட்டறைதான்.
கனிமொழியே........!
கடைசியாக கேட்கிறேன்
உன்
நட்பை மட்டுமாவது
நாடு கடத்த அனுமதி....

க. தமிழ்ச்செல்வன்
இறுதிவருடம்.(௨00௬)
பொதுக்கற்கைநெறி.

# தூண்டிற் புழுவினைப் போல்

-சிறுகதை-

வானம் அமைதியான ஒரு தென்றலின் அரவணைப்பில் என்றும் போல புலரத் தொடங்குகின்றது. இரத்தக் கறையுடன் போர்க்களத்திலிருந்து வெளிவருபவன் போல கதிரவன் எழுந்து கொண்டு இருக்கிறான். எந்த நேரத்திலேயும் அமைதி இல்லாத அந்த ஆண்கள்விடுதி இன்றும் சுறுசுறுப்பாய் ஆரவாரத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் மதி வழமைக்கும் மாறாக கட்டிலில் புரண்டு கொண்டிருக்கிறான். இந்தச் சூரியபுலர்வு சுறுசுறுப்பு எல்லாம் அவன் காணாத ஒன்று. நித்திரையின்றி படுக்கையில் புரண்ட மதி ஒருவாறு சோம்பலைப் போக்கியவனாக எழுந்து தன் கண்களைக் கசக்கிக் கொண்டு கட்டிலின் ஓரமாக தடவிக் கொண்டிருக்கிறான். ஒரு நிமிட தடவுதலின் பின் அவன கைகளில் அந்த ''வெள்ளைப்பிரம்பு" அகப்பட்டுக் கொள்கிறது. மெதுவாக எழுந்து சுவர்களை தடவிச் சென்றபடி தன் காலைக் கடன்களை முடிததுக்கொண்டு அமைதியாக தன் அறைக்குள்ளேயே இருக்கிறான்.

அவனோடு, அதே அறையில் இருக்கும் சுதா. கணேஸ். ரவி மூவரும் குதூகலத்துடன் அன்றைய ஞாயிறு விடுமுறையைக் கழிக்க மட்டக்களப்பு நகருக்குச் செல்ல ஆயத்தமாகின்றனர். அவர்களின் நடவடிக்கைகளை உணர்ந்து கொண்ட மதி ''மச்சான் எங்கவோ வெளியில.... வெளிக்கிடுறியல் போல இருக்கு என்னையும்... கூட்டிக்கொண்டு போறீங்களடா? இங்க தனிய இருக்க ஒரே போராக இருக்கு: என்று கூற நண்பர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர். சுதா ஒருவாறு திட்டமிட்டவனாய் ''மச்சான் மதி நாங்கள் ரவுனுக்கு பொய்ற்று, லேட்டாகித்தான் வருவம். உனக்கு எங்களோட வாறது சரியான கஸ்ரமா இருக்கும். கவலைப்படாத பின்னேரம் உன்னை ஏறாவூருக்கு கூட்டிப் போறம்" ஈன்றவர்களாக விடை பெற்றனர்.

மதி தனிமையில் விடப்பட்டவனாக கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டான். தன்னைப் பற்றிய.... தனது குடும்பம் பற்றிய... தனது நிலை பற்றிய... எண்ணங்கள் அவன் மனதில் நிழலாடத் தொடங்கின. மதி தனது தாய்க்கும் தந்தைக்கும் மூத்த மகனாகப் பிறந்தவன். பிறக்கும்போது எல்லாக் குழந்தைகளையும் போல வீறிட்ட அழுகையோடு இந்த உலகத்தின் நிஜங்களையும் நிழல்களையும் பார்த்தவாறு தான் பிறந்தான். ஆனால் இந்த கண்பார்வை அவன் வாழ்வில் ஏற்பட்ட மறக்க முடியாத ஒரு நிகழ்வால் அல்லவா நடந்தது. மதிக்கு அப்போது எட்டு வயது இருக்கும். நாட்டிலே நடந்து கொண்டிருந்த இனப்பிரச்சனை மதியின் தந்தையை போராட்ட இயக்கமொன்றின் தளபதிகளில் ஒருவராக மாற்றியிருந்த வேளை ஒருநாள் இரவு தந்தையின் மடியில் இருந்து மதி உணவருந்திக் கொண்டிருக்கும்போது சில துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட தந்தையை வேறு சில ஆயுததாரிகள் சுற்றி வளைத்துவிட அவரோ கழுத்திலே கிடந்த ''சயனைட்" குப்பியை கடித்து அவன் கண் முன்னேயே தன்னை மாய்த்துக் கொண்டார். அன்றிலிருந்து சில நாட்கள் மதியால் எதையுமே செய்ய முடியாமல் அவனை பயமும் காய்ச்சலும் பிடித்துக்கொள்ள அவன் கண்பார்வை ஒருநாள் இரவு தூங்கியபொழுது அற்றுப் போனது. மருத்துவர்கள் நரம்புத்தளர்ச்சி தான் காரணம் என்றனர்.

இரவு பார்த்த உலகம் விடிந்ததும் அவனிடமிருந்து பிடுங்கப்பட்டிருந்தது. இது அவன் செய்த பிழையா கல்வி இல்லாமல் வீட்டிலே பொழுதைக் கழித்தவனை உறவுக்கார நண்பரொருவர் கண்டு மட்டக்களப்பு ''தரி சனம்" விழிப்புலனற்றோர் பாடசாலையில் சேர்ந்தார். மதியின் தாயும் இந்த சமூகத்தின் கீழ் நிலைப் பேச்சுக்கெல்லாம் ஆட்பட்டு இறுதியாக மறுமணம் செய்து கொண்டாள.

தரிசனத்தில் சேர்க்கப்பட்ட மதிக்கு அங்கே தன்னைப்போன்ற உறவுகளுடன் பழகப் பழக அவன் தனக்கென்றான ஒரு உலகை படிப் படியாக ரசிக்கக் கற்றுக் கொண்டான். எத்தனையோ பேரின் அனுதாபங்கள் எல்லாம் தவிடு பொடியாகி விட்டன. இந்த உலகம் பற்றிய கதைகள், விளையாட்டுக்கள், படங்கள் எல்லாமே அவனுக்கு அந்நியமாய்ப் போயின. இருள்மயமான அந்த அவனது உலகு அவனுக்கு மட்டுமே சொந்தமாக இருக்கிறது. அவனது கற்பனைகள், கனவுகள் அவனது உலகு சார்ந்தது. அதை மற்றைய யாராலும் புரிந்து கொள்ள முடியாது. கரிசனை காட்டுவதாக பழகும் ஒரு சில மிருகங்கள் பாலியல் சேட்டைகள் புரியும் அசம்பாவிதம் எல்லாம் அவனது உணர்வுகளில் ரணங்களாக மரத்துப் போயின.

உயர்கல்வி கற்று தன் திறமையை வளர்த்துக் கொண்டமதி நாளடைவில் தன்னை ஒரு பல் கலைக்கழக மாணவனாக வளர்த்துக் கொண்டான். புதிய சூழல், புதிய இடம், புதுவிதமான நட்புகள் எல்லாமே அவனுக்கு புதுமையான உலகத்தை அறிமுகம் செய்து வைத்தன. அங்கும் சில அவனை சோதிக்கும் சம்பவங்களும் நடக்கத்தான் செய்தன. கண்தெரியாதவன் என்ற காரணத்தால் அவன் உடமைகள் சூறையாடப்பட்டன. அவன் சிலரால் தாக்கவும் பட்டான். றாக்கிங் என்ற பெயரால், இவையெல்லாம் நடந்தேறி ஒரு வருடம் கடந்து போய் விட்டன. ஆனால் அன்று நண்பர்கள் தன்னை தனிமையில் விட்டு விட்டுச் சென்றது முதல் தடவையல்ல என்றாலும் அவனது மனதை அது பாதிக்கவே செய்தது. வெளியிலிருந்து கதவு தட்டும் சப்தம் கேட்டு தனது நினைவுகளில் இருந்து மீண்ட மதி கண்களை அடைத்துக் கொண்டு, மெதுவாக கதவை நோக்கி நடக்கலானான். தடுமாறியபடி கதவினைத் துறந்து ''யார் மச்சான், என்ன வேணும் உங்களுக்கு" என கேட்க அவனது நண்பனாக சுகுமார்''இல்ல மதி தனியா இருப்பீங்க எண்டுதான் கதைக்க வந்தனான்" என்றான் ''ஆர் சுகுமாரா வாங்க. நான் கொஞ்சம் கோபிச்சுக் கொண்டு இருந்தனான். அதுதான் கதவைத் திறக்க நேரம் போயிற்று" எனக் கூறியவனாக மதி தன் கதிரையில் அமர்ந்தான்.

சுகுமார் மதியை உற்றுப் பார்த்தவனாக ''மதி ஏன் கண்ணில் இருந்து கண்ணீர் வந்திருக்கு. ஏதும் தூசி விழுந்துட்டா..? இல்ல கத்தினனீங்களா?" எனக்கேட்க. மதி ''சுகுமார் உங்களுக்குச் சொல்லுறதுக்கு என்ன? சுதா, கணேஸ், ரவி மூண்டு பேரும் ரவுனுக்குப்போக வெளிக்கிட்டவன்கள். நானும் வாறன் எண்டு சொன்னன். அவன்களுக்கு நான் இடைஞ்சல் போல இருக்கு என்னை கூட்டிக்கொண்டு போக இல்ல. அது தான் படுத்துக் கிடந்து என்னைப் பற்றி யோசிச்சனான். எனக்கு அழுகைதான் வருது சுகுமார்" என தேம்பத் தொடங்கினான். மதி.

"இங்க மதி...... மதி..... ஏன் அழுறீங்க? பிளீஸ்டா.... அழாத! உனக்கு நாங்கள் இருக்கிறம். நீ ஏன் கவலைப்படுகிறாய்? நான் உன்ன வெளியில கூட்டிக்கொண்டு போறன். இப்ப அழாத நீ வெளிக்கிடு... நாங்க வெளியில போவம்...." என சுகுமார் சமாதானப் படுத்தினான்.

அதுக்காக இல்ல சுகுமார் நான் அழுதது. என்னப்போல இன்னும் எத்தன பேர் இப்படி கண்தெரியாம... காது கேட்காம... வாய் பேச முடியாமல் இருக்கிறாங்க. எங்கட வாழ்க்கை எப்பவுமே மற்றவங்களை நம்பித்தானே இருக்கு. எங்களுக்கு எண்டு ஆயிரம் லட்சியங்கள் இருந்தாலும் கூட எங்களால் எங்கட சொந்தக்காலில நிற்க முடியாதுதானேடா? அதுதான் நான் அழுதனான். ''எங்களைப்போல குறைபாடு உடையவங்களை உங்களை மாதிரியானவர்கள் சுமையா நினைச்ச நாங்கள் எப்படியடா வாழுறது? நீயே சொல்லு எனக்கு என்ன தெரியும்? ஏன் கடவுள் என்ர கண்களைப் பறிச்சவர்? நான் என்ன கெடுதல் செய்தனான்?

உங்களைப்போல பார்க்க முடியல்ல. விளையாட முடியல்ல. உலகத்தைப் பற்றிப் பேச முடியல்ல. எப்படி நான் இந்த சமுதாயத்துக்

குள்ள போய் என்னை பயன்படுத்தி வாழப் போறன். எனக்கொண்டு ஒரு வாழ்க்கை இல்லை! எல்லாமே எனக்கு துணையாக இருக்கிற வங்க போட்டுத்தார ரைம்ரேபில்தானே நான் நடக்க வேண்டி இருக்கு" என்றவனாக மதி அழத் தொடங்கினான். அதைக்கேட்ட சுகுமார் ''மச்சான் கொஞ்சம் பொறுடா. நீ சொல்றது எல்லாம் சரி. இந்த உலகத்தை நீ பார்க்காம இருக்கிறது எவ்வளவோ நல்லதுடா. எங்க ளோட வாழ்கிற ஒவ்வொரு மனிதனுமே பல் வேறு முகங்களோட தாண்டா வாழ்றான். அவனுக்கு பார்க்கிற பொம்பிளையல் எல்லா ரையும் கட்ட வேண்டும் ஆசை. பார்க்கிற வீடுகள் எல்லாத்தையும் தனக்கு சொந்த மாக் கனும் எண்டு விருப்பம். இப்படி.... இப்படி... கண்களை வைத்துக்கொண்டு வாழ்கிறதை விட உங்களைப்போல திறமை யோட நல்லா வாழலாம் மதி. மதி இதை நீ ஒரு குறையா நினைச்சால் தான் குறை. நீ இதையே மனதில் போட்டு குழப்பாமல் உன்ர திறமைகளை வெளிக்காட்டி முன்னுக்குவர இந்த பல்கலைக் கழகத்தில துணைவேந்தரில் இருந்து, நல்ல நல்ல விரிவுரையாளரெல்லாம் உதவி செய் யக் காத்துக்கொண்டு இருக்கிறாங்கள் மச் சான். நீ கவலையை மூட்டை கட்டி போட்டுட்டு, உண்ர திறமைகளை எடுத்துக்கொண்டு இந்த கெட்ட உலகத்தை வேரோடு சாய்க்க போரா டனும் மச்சான்" என்றான்.

மதி தன் கண்களைத் துடைத்தவனாக ''சுகு மார் நீ சொன்னது எனக்கு புது உணர்ச்சியை தருதுடா. இனி நான் இப்படி எல்லாம் நினைத் துக் கவலைப்பட மாட்டார். என்னை வளர்க்க முயற்சி செய்யப் போறன்டா. தூண்டில் புழு வைப்போல எங்கட வாழ்க்கை அமைஞ் சாலும் அதை நம்பிக்கையோடு எதிர்கொண்டு வாழ நான் நினைக்கிறன் மச்சான்." என்றான். தூரத்தில் எங்கிருந்தோ

''ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே
வாழ்வென்றால் போராடும் போர்க்களமே
நம்பிக்கை என்பது வேண்டும் எம் வாழ்வில்..

என்ற அடிகள் காற்றில் கலந்து மதியினதும் சுகு மாரதும் காதில் இசைக்கின்றன.

மதி தன் குறைகளை, துயரை மறந்து தன் குத்தெழுத்து இயந்திரத்தை எடுத்து ஆயத்த மாகிறான். தன் இருத்தலை நியாயப்படுத்தும் நோக்கோடு. இனி அவன் வானம் அவன் கைகளில தான்.

ச. கோபிரமணன்
2ம் வருடம், (2006)
தமிழ்சிறப்பு.
கலைகலாச்சாரபீடம்

கிழக்குப் பல்கலைக்கழக வெள்ளி விழாவின் சிறப்பு மலராக 'வெள' வெளிவருவதையிட்டு நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் இச்சிறுகதை இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

*ஒடுக்கப்பட்டவர்கள் அல்லது வேட்டையாடப்பட்ட வர்கள் தங்களுடைய வரலாறுகளைத் தாங்களே எழுதிக்கொள்ளாமல் இருக்கின்ற வரைக்கும் அவர்களுடைய வரலாறு என்பது, வேட்டையாடு கிற வர்களுடைய வரலாறாகத்தான் இருக்கும்.*

*நன்றி - தலித்முரசு -*

***கிழக்குப் பல்கலைக்கழக வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட த. சேரலாதன் அவர்களின் கவிதையும், இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட ப. சுஜந்தன் அவர்களின் கவிதையும் இவ் இதழில் இடம் பெறவில்லை. அத்தோடு கட்டுரைப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கோ. குகன் அவர்களின் கட்டுரையும் இங்கு இடம்பெறவில்லை.***

# மெய்யியல் ஆய்வில் பொதுமைகள்

மெய்யியல் உரையாடல்களில் பொதுமைகள் பற்றிய பிரச்சினை பிரதான இடத்தைப் பெறுகின்றது. பொதுமை என்றால் என்ன என்பதை நாம் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும் மனித சிந்தனைக்கு வெளியில் இருக்கும் பதார்த்தங்களான (substance) மரம், விலங்கு, மலர்கள், தளபாடங்கள் முதலான வற்றின் சாரத்தை (Essence) எமது உள்ளம் பற்றிக் கொள்வதாகும். உதாரணமாக மலர்கள் எனும் பதார்த்தத்தை எடுத்துக் கொண்டால் செவ்வரத்தை, சூரிய காந்தி, மல்லிகை முதலானவை ஒரே வடிவத்தன்மை வாய்ந் தவை அல்ல ஆனால் இவற்றில் மலர்கள் எனும் சாரம் பொதுவாக உள்ளது இதேபோன்று தான் மரம், மனிதன் முதலா னவை வடிவங் களில் வேறுபட்டு இருந்த போதும் அவற்றின் பொதுமையை ஒரு பெயர்ச்சொல்கொண்டு அதாவது பொதுமையான கருத்துப் படிவங் களின் பொருள பொதுமைகள் (universal) என அழைக்கப்படுகின்றபோது பிரச்சினைகள் எழுகின்றன.

பொதுமையான பொருட்கள் நாம் அறிந்து கொள்ளக்கூடிய உலகில் உள்ளனவா. அறிந்து கொள்ளக்கூடிய உலகில் தனிப்பட்ட பொருட் கள் மட்டும்தான் உள்ளனவா. தனிப்பட்ட பொருட்கள் மட்டும்தான் உள்ளதெனில் நம் உள்ளத்தில் உள்ள பொதுமையான கருத்துப் படிவங்களுக்கு எவ்வாறு விளக்கம் கொடுக்க முடியும். மேற்குறித்த பிரச்சினை தொடர்பாக பல்வேறு விதமான கருத்துக்கள் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன அவை பொதுமை கள் தொடர்பான கோட்பாடுகளாக காணப்படு கின்றன.

அவற்றுள்

1) கடந்த நிலை யதார்த்தவாதம் (Ultra Realism)
2) மத்திய யதார்த்தவாதம் (Moderate Realism)
3) பெயர் மாத்திரைவாதம் (Nominalism)
4) எண்ணக்கருவாதம் (Conceptualism)
5) சமவாயக்கொள்கை (Epiphenomenalism)

கடந்த யதார்த்தக்கொள்கையின்படி, பொதுமையான சாரங்கள் எமது உள்ளத் துக்கு புறம்பாக அப்படியே இருப்புடைய னவாக இருக்கின்றன. இக் கொள்கையை முன்வைத்தவர்களுள் பிளட்டோ (Plato) நவபிளட்டோனிய வாதிகள் (New Platonists) கெகல் (Hegel) போன்றவர்கள் முககியமான வர்கள் பிளட்டோ என்பவர் பொதுமைகள் வடிவஉலகத்திலே இருக்கின்றவைகள். உதார ணமாக மனிதன் எனும் பொதுமை வடிவ உலகில் இல்லையாயின் நிலவுகின்ற தோற்றப் பாட்டியல் உலகில் மனிதர்கள் அல்லது தனி மனிதர்களுக்கு இருப்புத்தன்மை இல்லை என்கிறார். இதனால் வடிவஉலகத்தில் உள்ள பொதுமைகள் நித்தியமானவை. நிலையான வை, அமரத்துவமானவை என்கின்றார். மேலும் வடிவ உலகத்தில் மனிதன் எனும் பொதுமை இருப்பதற்கு தோற்றப்பட்டியல் உலகில் மனிதர்கள் அவசியம் இருக்க வேண்டும் என்பதற்கில்லை. பிளட்டோ இவ்வாறு கூறுவதா னால் வடிவ உலகில் உள்ள மனித னது பொதுமைக்கும் தோற்றப் பாட்டியலில் உள்ள மனிதனுக்கும் இடையிலான தொடர்பு என்னவென்பது தெளிவில்லை.

இவ்வாதத்தில் இருந்து திருத்தியமைக்கப்பட்டதே மத்தியயதார்த்த வாதமாகும். இதன்படி நிலவுலகில் காணப்படும் யாதாயி னும் ஒரு தொகுதியினை அல்லது இனத் தினை பிரதி நிதித்துவப்படுத்தும் இலட்சனம் பொது மைகள் ஆகும். அதாவது மரம் எனும் பொதுமை யானது நிலவுலகில் காணப்படும் எல்லாத் தனிமங்களினதும் இலட்சணமாகும். இதில் இருந்து நிலவுலகில் உள்ள தனிமங்கள் அல்லது பதார்த்தங்களினாலேயே பொது மைகள் என்பதற்கு இருப்புக்கிடைக் கின்றது

இதன் மூலம் பொதுமைகள் என்பது தனியான அம்சமல்ல அது தனிமரத்துக்கு அல்லது பதார்த்தத்திற்கு இருக்கின்ற பொது வான தொரு பண்பு என கருதப்படுகின்றது. இவ்வாதத்தினை பின்பற்றுபவர்களாக, அருஸ் ரோட்டில், அன்சலம், தோமஸ் அக்குவைனஸ் போன்றோர்களை குறிப்பிடலாம். அரிஸ்ரோட் டில் தனிமங்களுக்கிடையே பொதுமை அடங் கியிருக்கின்றது என்றார். தனிமங்களை மட்டுமே காண்கின்றோம். பொதுமைகளை அல்ல என்றார். இவரின் கருத்து பொதுமைகள் பற்றிய கருத்தல்லாமல் மாயை ஆகிய பதார்த்தம் பற்றிய உரையாடலாகவே இருக் கின்றது என விமர்சிக்கப்பட்டது.

பெயர்மாத்திரை வாதத்தின்படி, பொதுமைகள் இயல் உலகத்திலோ அல்லது நமது உள்ளத் திலோ இருப்புடையது அல்ல பொதுமைகள் பதார்த்தங்களின் சாரங்கள் அல்ல, பொதுமை கள் என்பது பொருட்களின் குழுக்களுக்கு எமது உளமானது பெயர்களைக் கொடுக் கின்றன எனக்குறிப்பிடுகின்றார். எமது உள்ள மானது சிந்திக்கின்ற அல்லது அறிந்து கொள்ளுகின்ற எண்ணக்கரு அடங்காப் பொருட்களை நாம் ஏதோ ஒருவகையில் குழுக்களாகப் பிரிந்து அக் குழுக்களுக்கு பெயர்களைச் சூட்டிக்கொள்வது கட்டாய மானதாக இருக்கின்றது. இவ்வாதத்தை முன்வைத்தவர்களுள் கெராக்கிளிட்டஸ் முதலான பண்டைக்கால மெய்யியலாளர் களும், நவீன கால மெய்யியலாளர்களான கொப்ஸ், லொக், கியும், மில் போன்றவர்க ளைக் குறிப்பிடலாம். இவ்வாதத்தை விமர் சித்தோர் எமது உள்ளமானது எதுவித அடிப் படையும் இன்றி தனிப்பட்ட பொருட்களை ஒரு குழுவாக அடையாளப்படுத்தி அக்குழு வுக்கு எவ்வாறு பெயர்களை வழங்கமுடியும்? என வினவுவதன் மூலம் தன்னிலையிலே ஒரு சுயமுரண்பாட்டிற்கு உள்ளான வாதமாகும். என இதனை விமர்சிக்கின்றனர்.

எண்ணக்கருவாதத்தின்படி பொதுமைகள் என்பது ஒரு புறப்பொருள் சார்ந்தது அல்ல அகரீதியான எண்ணக்கருக்களாக உள்ளன. அதாவதுபொது மைகள் உண்மையாக இருப் புடையவையல்ல இது எமது உள்ளமானது இயல்பான கட்டாயத்தினால் தனிப்பட்ட பொருட்களினை ஒன்று சேர்க்கும் எண்ணக் கருக்களாக உள்ளன. இவ்வாததை முன் வைத்தவர்களாக வில்லியம் ஒக்காண்ட, இமானுவல்காண்ட், வேக்ளி, போன்றவர்களை குறிப்பிடலாம். இவ்வாதத்தை விமர்சிப்போர் எண்ணக்கருக்களின் புறப்பொருள் சார்ந்த தன்மை முழுமையாக நிராகரிக்கப்பட்டு எமது உள்ளமே எண்ணக்கருக்களை உருவாக்கும் ஒரு தொழிற்சாலையாக ஆக்கப்படுகின்றது. மேலும் இவ் வாதம் புறப்பொருட்களின் இருப் புத்தன்மையை ஏற்றுக்கொண்டாலும் அப் பொருட்களுக்கும் நமது அறிவிற்கும் இடை யிலான எவ்விதத் தொடர்பையும் அது ஏற்றுக் கொள்ளவில்லை. இதனாலேயே இவ்வாதத் தின்படி உண்மையான அறிவு என்பது எந்த வொருபொழுதிலும் பெற்றுக்கொள்ள முடியாத தாக இருக்கின்றது எனக்குறை கூறப்பட்ட தோடு, மேலும் இது ஐயவாதத்திற்கு இட்டுச் செல்கின்றது. எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

இவ்விதம் பொதுமைகள் பற்றி எழுப்பப்பட்ட பல்வேறு விதமான பதில்களும் திருப்தி அளிக் காத நிலையில் சமகாலமெய்யியலாளர் களான பேட்டன் றசல், விக்கின்ஸ்டைன், இல்பேட்றயல் முதலானவர்கள் பொதுமை பற்றிய பிரச்சினையை மீண்டும் ஆய்வு செய்யத் தொடங்கினர். இவர்களது எண்ணங் கள் யாவும் பொதுமைகள் பற்றிய பிரச்சினை ஒரு இன்றியமையாத பிரச்சினை அல்ல என்பதை எடுத்துக்காட்டுவதாகவே அமை கின்றது.

இவர்களுள் ஒரு சிலர் சமவாயக்கொள்கை எனும் புதிய கொள்கையை அறிமுகப்படுத்தி இப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டனர். இதில் விக்கின்ஸ்டைனின் பங்களிப்பு முக்கியமானது.

சமவாயக்கொள்கையின் பிரதான இலட்சண மாக அமைந்தது என்னவென்றால் பொதுமையை ஒரு பாதார்த்தமாக ஏற்றுக்கொள்வதென் பதனை நிராகரித்துவிடுவது. பிளட்டோ உள்ளிட்ட பல மெயயியலாளர்கள் பொதுமைகளை ஒரு பதார்த்தமாகவே கருதுகின்றனர். இவ்வித மான பௌதீக அதீதக்கருத்துக்களில் விலகி நின்று விளக்கம் அளித்த சமகால மெய்யிய லாளர்கள் பொதுமை என்பதனை எமது பொழிப் பாவனையில் இருந்து வெளியேற்றிவிடுவதையே அவர்களது நோக்கமாக கொண்டிருந்தனர். ஏனெனில் மெய்யியல் வரலாற்றில் குறித்த இச்சொல் தெளிவற்ற முறையில் பயன்படுத் தப்படுகின்றமையே இதற்கு காரணம் எனலாம்.

பொதுமை என்ற சொல்லை விலக்கியதன் பின்பு இதற்குப்பதிலாக பொதுச்சொல் என் பதைப் பாவிப்பதே இச்சமவாயக்கொள்கையின ரின் பிரதான இலட்சணமாக இருந்தது. இப்பொருச் சொல் என்பது எந்தவொரு பதார்த் தத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தாமல் ஒரு பதார்த்தத் தொகுதியில் இருந்து இன்னொரு பதார்த்தத் தொகுதியை வேறுபடுத்திக் காட்டு வதற்கு கையாளப்படும் ஒரு முறையாகவே மெய்யியலாளர்களினால் அறிமுகப்படுத்தப் பட்டது. இதன்மூலம் பொதுமைகள் பற்றிய பிரச்சினைகளை தீர்ப்பது மிக சிரமமான காரியம் எனக்கருதியிருந்தாலும் கூட நாம் அதனை நீக்கி விட்டோம் என அவர் கள் கருத்து தெரிவிக் கின்றனர்.

குறிப்பாக விக்கின்ரைனின் பொதுமைகள் பற்றிய கருத்துக்களை நோக்கும்போது நாம் தனிமங்களை அல்லது பதார்த்தங்களைப் பார்த்து அவற்றுக்கு பெயரிடுவதற்கு பழகி யிருக்கின்றோம் இப்பழக்கமே எம்மை தவ றான ஆய்வுகளுக்கு இட்டுச்சென்றது. பௌதீக பதார்த்தங்களுக்கு கொடுக்கப்படுகின்ற பெயர்களுக்கும் அதற்கு கொடுக்கப்படுகின்ற வடிவத்துக்கும் இடையே எமது வாழ்க்கையின் எல்லாவற்றினையும் தீர்மானிப்பதற்கு அல்லது உருவாக்குவதற்கு முனைகின்றோம். சாரம் என்பதனை நாம் பொதுமை என கருதுகிறோம். இது ஒரு நோயாகும். இவ்வாறான வெற்று வினாக்களை வினாவி அவற்றுக்கு தீர்வுகாண முயலாமல் வித்தியாசமான முறையில் அவற்றை அணுகிக்கொள்ள முயற்சிப்பதாகும். அதாவது ஒரு பொளின் காரணத்தினை இலக்கணம் விபரிக்கின்றது. (இலக் கணம் என விக்கன்ஸ் டைன் கூறுவது சொற்பாவனையின் ஒழுங்கமைப பினையே) பதார்த்தம் எந்த வகையில் சார்ந் தது என்பதை இலக்கணம் எமக்கு கூறுகின் றது. ஒரு சொல்லைப் பயன்படுத் தும்போது அதனை தெளிவாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சொற்பாவனையின் ஒழுங்க மைப்பில்தான் விபரணத்தன்மையின் தெளிவு டமை தங்கியுள்ளது. இவரது இக்கருத்துக் கள் இரண்டாயிரமாண்டுகளாக இருந்த இப் பிரச்சினை போலியானது. வெறுமையானது, வெறுமையான சொற்கள் (Fieticase) மட்டுமே எனக்கூறு கின்றார்.

சோமசுந்தரம் ஜெகநாதன்
உதவி விரிவுரையாளர் (மெய்யியல்)
கிழக்குப் பல்கலைக்கழகம்.

*நான் படிக்காதவன் என்று சிலர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். உண்மைதான் எந்தப் பல்கலைக் கழகத்திற்கும் போய் நான் படித்தது கிடையாது. ஆனால் எனக்குப் பூகோளம்- தெரியும். தமிழ் நாட்டி லுள்ள எல்லாப்பகுதி களையும் நான் நன்றாகவே அறிவேன். என்னென்ன ஆறுகள் எங்கெங்கு ஓடுகின்றன. என்று எனக்குத் தெரியும், ஏரிகள், குளங் கள் எங்கு இருக்கின்றன. என்று நான் அறிவேன். எந்த ஊரில் மக்கள் என்ன தொழில் செய்து பிழைப்பு நடத்துகிறார்கள் என்ப தும் எனக்குத்தெரியும். இவைகள் எல்லாம்பூகோளம் இல்லையா? குறுக்கு நெடுக்குக் கோடுக ளும், வளைந்து செல்லும் கோடுகளும் கொண்ட புத்தகம் மட்டுந்தான் பூகோளமா?*

*தமிழக முன்னாள் முதல்வர்*
*-காமராஜர்-*

# பழமொழிகளும் சமூகத்தில் பெண்கள் பற்றிய கீழ்நிலையும்

மனித வரலாற்றினை நோக்கும்போது பெண்களை ஆதிகாலம் தொடக்கம் இரண்டாம் பட்சமாக கருதும் நிலை இருந்துகொண்டே வருகின்றது. அதாவது பெண்கள் நாட்டின் கண்கள் என்றும் அவர்களைப் புகழ்ந்து ஆணாதிக்க சமூகத்தில் இருந்து விடுதலை பெறுவது போன்று பெண்ணியல் கருத்துக்கள் பத்திரிகை வாயிலாகவும் கருத்தரங்கு வாயிலாகவும் வந்தாலும் சமூகம் பெண் விடுதலையின் பூரண தாற்பரியத்தை விளங்கிக் கொண்டதாக தெரியவில்லை. இந்நிலையில் பெண்களின் சமூக நிலையை நாட்டார் இலக்கியங்களில் ஒன்றான பழமொழிகளில் காண முடிகின்றது.

பழமொழிகள் அனுபவ மொழியாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவனவாகவும் நற்கருத்துக்களை கூறுவனவாகவும் பல நூறு ஆண்டுகளாகப் பல்லாயிரம் மக்களால் வழிவழியாக பயன் படுத்தப்பட்டு வருவதனைக் காணலாம். இவ்வாறான நற்கருத்துக்கள்கொண்ட, பழமொழிகளுக்கூடாக ஆண் அதிகாரத்தை கொடுத்து பெண்ணை இரண்டாம் பட்சமாகக் கருதும் அறியாமைக் கருத்துக்களும் வெளிப்படுகின்றன. போலி நியாயங்களையும் பெண்ணை அடிமையாக்கும் கலாச்சாரப் பண்புகளையும் கொண்ட சில பழமொழிகளை இன்றும் கூட நாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பதில்லை பெண்களே பழ மொழிகளைக் கூறிக் கொண்டு அறியாமையால் ஆணாதிக்க சமூகத்துக்குள் சென்று விடுகிறார்கள்.

இவ்வாறான நிலையில் பழமொழிகளில் கீழ் நிலைக்கருத்துக்களாக பெண்ணை வெறுப்பாகக் கருதுவதும், பெண்ணை இரண்டாம் நிலையில் கூறுதலும், கல்வியில் ஏற்றத்தாழ்வாகவும், பெண்களே பலவீனமாகக் கருதுவதற்கு பழ மொழிகள் வழிசமைத்துக் கொடுக்கின்றன. அதாவது,

''ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்''

''ஆறாம் பேறு பெண்ணாய்ப் பிறந்தால்
ஆறான குடித்தனம் நீறாகி விடும்''

''சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை வேண்டும்''

இவ்வாறான பழமொழிகளின் மூலம் சமூகம் பெண்ணின் மீது வெறுப்பினை ஏற்படுத்துகின்றது. ஆணின் உழைப்பிலே வாழ்பவர்களாகவே பெண்கள் கணிக்கப்படுகின்றனர். அத்தோடு சீதனம் என்ற போர்வையாலும் ஆண்கள் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர். அதனால் ஆண்கள் செல்வந்தராக கருதப்படுகின்றனர். இன்று எத்தனையோ வீடுகள் பெண்களின் உழைப்பினால் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அத்தோடு பெண்கள் இன்று சமூகத்தில் ஆற்றும் பங்கு அளப்பரியது. அது மட்டுமல்லாது ''சாண் பிள்ளை ஆனாலும் ஆண பிள்ளை வேண்டும்'' என்ற பழமொழி மூலம் ஆணுக்கு உயர்வு கொடுத்து பெண்ணை சமூகத்தில் தாழ்வாகவே சமூகம் மதிப்பிடுகின்றது.

மேலும் ஆண் என்றால் எவ்விடத்துக்கும் சென்று வரலாம் பெண்கள் எங்கும் போகாமல் வீட்டில் இருப்பதே நல்ல பெண்ணுக்கு இலட்சணம் என்று கூறி பெண்ணுக்குக் கட்டுப்பாடுகள் ஏராளம்.

''ஆண் சேற்றைக் கண்ட இடத்தில் மிதிப்பான்
தண்ணியைக் கண்ட இடத்தில் கழுவுவான்''

''ஆண் ஒரு தவறு செய்தால் அது சம்பவம்
பெண் தவறு செய்தால் அது சரித்திரம்''

அதாவது ஆண் எவ்வாறான தவறினையும் செய்யலாம். பெண் அவ்வாறு அல்ல. ஒரு தவறு செய்தால் கூட சமூகத்தில் இருந்து விலக்கப்படுவாள். ஆண்கள் தவறு செய்து தப்புவதற்கு நிறையவழிகள் இருக்கின்றன என நினைத்து

பெண்ணை மட்டும் கற்பு என்ற கடிவாளத்துள் தள்ளிவிடுகின்றனர். இந்த நிலமை மாற வேண்டும்.

மேலும் இப்பழமொழிகள் ஆணிடம் எவ்வாறான குறைபாட்டையும் காணாத சமூகம் பெண் என்றால் அவர்களின் உடல், நடத்தை அதை மீறி அவன் உடல் தோற்றம் இருந்தால் வெறுத்து ஒதுக்கப்படுகின்றாள். இவை பெண் மீதான சமூகக் கட்டுப்பாட்டையே காட்டு கின்றன.

''விரிச்சுக் கெட்டது போயில
சிரிச்சுக் கெட்டது பொம்புள''
''சீறும் பாம்மை நம்பினாலும்
சிரிக்கும் பெண்ணை நம்பாதே''
'' உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு''
''கெண்டைக்கால் சிறுத்தவளும் கொண்டை
பெருத்தவளும் கொண்டவனுக்காகாள்''
''குண்டிக் கூந்தல் குடிக்குதவாது''

இப்பழமொழிகள் மூலம் இன்னும் சமூகம அறியாமையில் இருந்து விடுபட வில்லை என்பதையே காட்டுகின்றது. அதாவது ஏன் ஆண்கள் சிரிப்பதற்கு வரையறை இல் லாமல் பெண்கள் சிரிப்பதை விரிந்த போயி லைக்கு ஒப்பிட்டு பெண்களின் சந்தோசத்தை சமூகம் அழக்கமுனைகின்றது. அதுமட்டும ல்லாது பெண்கள் தினமும் அலங்கரித்துச் சென்றால் அப்பெண் நல்ல நடத்தை இல்லா தவள், ஒழுக்கம் கெட்டவள் என சமூகம் கூறு கின்றது.

''தட்டுவாணி கொண்டையில தப்பாமல் பூவிருக் கும்'' இங்கு தட்டுவாணி என்பது நடத்தை கெட்டவள் என குறிப்பிடும்போது அறியாமையே வெளிப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது கற்பு என்ற போர்வைக்குள் பெண்களைத் தள்ளி சில கட்டுப்பாடுகளை பழமொழிகள் விதிக்கின்றன.

''தாய் எட்டடி பாஞ்சா மகள் பதினாறடி பாய் வாள்'' இதில் மகள் தண்டிக்கப்படுகின்றாள். தாய் கற்பு தவறினால் அவளுடைய பிள்ளையும் கற்பு தவறுவாள் எனவும் அப்பழிச் சொல்லை காலம் முழுவதும் பிள்ளையும் ஏற்க வேண்டிய கட்டாயத்திற்குள் செல்ல நேரிடுகின்றது.

''கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானே வரும்''
''கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன''
''செத்தவன் பெண்டிலக் கட்டினாலும்
உற்றவன் பெண்டிலக் கட்டக் கூடாது''
''சேலை கட்டும் மாந்தரை நம்பாதே'' என சந்தேகம் கூட கற்பிக்க பழமொழிகள் முனை கின்றன. அதாவது ஆண்கள் எவ்வளவு கொடு மைகளையும் தவறுகளையும் செய்யலாம். ஆனால் பெண்கள் கணவனுக்கு பணிந்து போதல என்று கூறி பெண்ணை சமூகம் பழிவாங்கு கின்றது. அத்தோடு பெண்களை கல்வியில் கூட இரண்டாம் நிலையிலே பழமொழிகள் ஒதுக்கி விடுகின்றன.

''அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு ''
''எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும்
பெண்புத்தி பின்புத்தியே''
''பெண்ணை சிந்திக்க வைப்பதை விட
நடமாட விடுவது இலகு''
''பெண் சமர்த்து அடுப்பங்கரை வரைதான்''
''பெட்டைக்கோழி கூவி பொழுது விடியாது''

இப்பழமொழிகள் மூலம் பெண்கள் கல்வி கற்பதை நிறுத்தியோ, அடுப்பூதவோ கற்றுக் கொள்ள வில்லை. பெணகளின் ஆற்றல், சிந்தனை, திறமை இன்று உலகளாவிய ரீதி யில் சிறப்புப்பெற்று வருகின்றது என்பது குறிப் பிடத்தக்கது.

எனவே பெண்களை விவேகம், ஆளுமை குறைந்தவர்கள் அறிவில் இரண்டாம் நிலை வைத்து கணிக்கப்படுவது போன்ற பழமைக் கருத்துக்கள் இல்லாது ஒழிக்க வேண்டும். இன்று பெண்களின் ஆளுமை சர்வதேசம்வரை பல்வேறு துறை சார்ந்து அமைந்துள்ளமையும் குடும்பப் பொறுப்பு உடையவர்களாகவும் பெண கள் திகழ்கின்றனர். எனவே ஆணாதிக்க கருத் துக்களை தாங்கிய பழமொழிகளை பயன் படுத்துவது தவிர்க்கப்பட வேண்டியதும் பெண் களின் போதனை வழிகாட்டலில் இருந்து அவை முற்றாக விலக்கப்பட வேண்டியதும் ஒன்றாகும்.

*உசாத்துணை நூல் - பெண்சஞ்சிகை தொகுதி 04*

ஆக்கம்:-க. இந்துஷா
தமிழ் சிறப்புக்கலை 4ம் வருடம்(2007)

# தாய்மார் பள்ளி பரீட்சார்த்தமும் பயன்பாடும்

மனித வள அபிவிருத்தியென்பது பரந்த பொருளுடையது. நிறுவனங்களில் பணியாற்றும் பணியணியினரது திறமைகளை மேம்படுத்துவது மட்டுமன்றி சாதாரண மக்களின் அறிவுத் திறன், மனப்பாங்கு என்பனவற்றை மேம்படுத்துவதும் மனிதவள அபிவிருத்தியிலேயே உள்ளடக்கப்படும். இந்த வகையில் கல்வியறிவற்ற பாமரமக்களுக்கும் பல்வேறு விடயங்களில் விழிப்புணர் வும், திறன்களும் ஏற்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

இக்கட்டுரை மட்டக்களப்பிலுள்ள கல்வியறிவில பின்தங்கிய கிராமம்ஒன்றில் 8 மாதங்க ளுக்கு நடாத்தப்பட்ட தாய்மார் பள்ளி பற்றியும் அது மேற்கொண்ட பல்வேறு கற்றல் செயற் பாடுகள் பற்றியும் அதனால் அக்கிராமம் அடைந்து கொண்ட பயன்கள் குறித்தும் தகவல்களைத் தர முற்படுகின்றது.

2003ஆம் ஆண்டு யூன் மாதம் தாழங்குடா எனும கிராமத்தில் தாய்மார்களுக்கான ஒரு பாடசாலை பரீட்சார்த்தமாக நடாத்தப்பட்டது. இப்பாடசாலை 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை 8 மாதங்களுக்கு நடைபெற்றது. இப்பாடசாலையின் குறிக்கோள்களாகப் பின்வருபவை அமைந்தன.

1. பிள்ளை வளர்ப்பு தொடர்பான போதிய விளக்கத்தைப் பெற்றாரிடையே ஏற்படுத்தல்.
2. பிள்ளை விருத்தியுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு பெற்றாரின் விழிப்புணர்வை உயர்த்துதல்.
3. வீட்டுச் சூழலையும் அயற்சூழலையும் சுத்தமாகப் பேணுவதற்குத் தாய்மார்க்குப் பயிற்சியளித்தல்.
4. தாய்மார்களின் வீடுகளில் அமைதியானதும் மகிழ்ச்சியானதுமான சூழலை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
5. பெற்றார்களிடம் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்திப் பொருத்தமான பிள்ளைப் பராமரிப்பை உருவாக்கல்.
6. குடும்ப வருமானத்தை அதிகரிக்கவும் கிடைக்கும் வருமானத்தை முறையாகப் பயன்படுத்தவும் குறிப்பிட்டளவு வருமானத்தை பிள்ளைகளின் நலன்களுக்கு செலவிடவும் பயிற்சியளித்தல்.
7. பிள்ளைகளுக்கான விளையாட்டு கற்றல் போஷாக்கு உணவு, உடற்பயிற்சி, நோய்த் தடுப்பு முறைகளைப் பின்பற்றுவதற்குப் பயிற்சியளித்தல்.

என்பனவாக அமைந்தன. இத்தாய்மார் பள்ளி ஒரு பிள்ளை மையப்பள்ளியாகவே நடாத்தப்பட்டது. அதில் மேற்கொள்ளப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் அனைத்தும் பிள்ளையை இலக்காகக் கொண்டனவாகவே அமைந்தன.

தாய்மார் பள்ளிக்கான மாணவர்கள் தாய்மார்களாகவே இருந்தனர். குறிப்பிட்ட கிராமத்தில் முன்பள்ளிகள், மற்றும் ஆரம்பப் பள்ளிகள் என்பனவற்றுக்குப் பிள்ளைகளை அனுப்பும் தாய்மார்களாகவே இதில் கற்பதற்கான ஆட்கள தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தாய்மார்களது எண்ணிக்கை 110 ஆகும். இவர்கள் பொதுவாகக் கல்வியறிவு குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். இதற்கான மாணவர்களது தெரிவு கிராமம் முழுவதையும் பிரதிபலிக்கத் தக்கவகையிலும் எல்லா சமூகக் குழுக்களையும் பிரதிபலிக்கத் தக்க வகையிலும் தெரிவு செய்யப்பட்டனர்.

தாய்மார் பள்ளி ஆசிரியர்கள் பதின்மர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் பெண் பட்டதாரிகள், கல்விவியலை ஒரு பாட மாகக் கற்றவர்கள். இவர்களுக்கு தாய்மார் பள்ளியில் ஆசிரியராகத் தொழிற்படுவதற்கான சிறப்புப்

பயிற்சியளிக்கப்பட்டது. தாய்மாருக்குக் கற்பிக்கக் கூடிய பாடத்திட்டத்தில் அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியளிக்கப்பட்டது. மூன்று பிரதான அம்சங்களில் இவர்களது பயிற்சி இடம் பெற்றது. அவை:

- சனிக்கிழமை வகுப்புக்கள்
- விஷேட செயற்றிட்டங்கள்
- வீடுகளைத் தரிசித்தலும் ஆலோசனை வழங்குதலும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் விரிவான பயிற்சி 15 நாட்களுக்கு வழங்கப்பட்டது. சனிக்கிழமை வகுப்புக்கள் பிற்பகலில் நடாத்தப்பட்டன. பிற்பகல் 2.00 மணியிலிருந்து 5.00 மணிவரை 3.00 மணித்தியாலயங்கள் கொண்டதாகச் சனிக்கிழமை வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. 32 வாரங்களுக்கு நடாத்தப்பட்ட இச்சனிக்கிழமை வகுப்புகளுக்கு 32 கருப்பொருட்கள் தெரிவு செய்யப்பட்டன. அவை பிள்ளைப் பராமரிப்பில் குடும்பத்தின் முக்கியத்துவம், தாய் தந்தை பிள்ளை உணவு, பிள்ளை விருத்தி, பிள்ளையின் பாதுகாப்பு, நற்பழக்க விருத்தி, பிள்ளையின் உரிமை, விழுமியங்களின் விருத்தி, பிள்ளையின் தேவைகளும் குடும்ப வரவு செலவுத் திட்டமும், பிள்ளையின் உடைப் பழக்க வழக்கம், வீட்டுச் சூழல், முன்பள்ளிகளில் பெற்றார் ஈடுபாடு, விழாக்களில் பிள்ளைகளை ஈடுபடுத்தல், பிள்ளை களும் ஊடகங்களும், பிள்ளைகளது விஷேட பிரச்சினைகள், விஷேட செயற்றிட்டமும் பெற்றோரும், பிள்ளைகளுடன் பெற்றார் ஈடுபாடு, உணவுப் பழக்க வழக்கம், பிள்ளைகளின் விஷேட தினங்கள், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புதல், பிள்ளையும் சூழலும் பாரம்பரியங்களைப் பிள்ளைகளுக்குப் பயிற்று வித்தல், முன்பள்ளிகளில் பெற்றார் ஈடுபாடு, கர்ப்பிணித் தாய்மாரின் நிலையும் கண்காணிப்பும், பாரம்பரியப் பயிற்சிகள் மகிழ்ச்சியான வீடு என்பனவாக அவை அமைந்தன.

ஒன்பது ஆசிரியர்களுக்கு தாய்மார்களாகிய மாணவர்கள் பிரித்தளிக்கப்பட்டனர். வகுப்புக்கள் ஒன்பது குழுக்களாக நடாத்தப்பட்டன. பள்ளி ஆரம்பிக்கும் முறை போன்றே தாய்மார் பள்ளியும் அகவணக்கம், நற்சிந்தனை என்பனவற்றுடனும், பொது அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதுடனும் ஆரம்பிக்கப்படும். பிரதான வள ஆளர் குறிப்பிட்ட தினத்திற்குரிய கருப்பொருளில் பொதுவானதும் விளக்கமானதுமான குறிப்புரை வழங்கியதுடன் வகுப்புக்கள் குழுக்களாக இடம்பெறும். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு ஆசிரியா பொறுப்பாக இருந்து குறிப்பிட்ட தினத்திற்கான பொருளில் கருத்துரைகளைக் குறிப்பாக வழங்கிக் கலந்துரையாடலை ஏற்படுத்தி, தாய்மார்களைக் கலந்துரையாடலில் ஈடுபடுததுவார். தாய்மார்களது அனுபவங்கள் குழுக்கலந்துரை யாடலில் விளக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும். இவ்வாறு குழுக்கலந்துரையாடலுக்கு விடப்பட்ட விடயங்கள் பொதுவானதும், சகலருக்குமான பொது வகுப்பில் குறிப்பிட்ட குழுவின் தலைவரால் விளக்கிக் கூறப்படும். சிறப்பாகச் செய்த குழுக்கள் பாராட்டையும் பெறும். இதனால் தாய் மார்களாகிய மாணவர்கள் தமது குறுகிய சிந்தனைகள் செயற்பாடுகளிலிருந்து நாளா வட்டத்தில் போதிய விளக்கங்கள், உடன்பாடான மனப்பாங்குகள், சிந்திக்கும் ஆற்றல் என்பன பற்றிய திறன்களைப் பெறலாயினர். பின்தங்கிய கிராமப் பெண்களுக்குரிய சில பழக்கங்களிலிருந்து முறபோக்கானவர்களாகவும், சபையின் முன்னே தமது கருத்துக்களை முன்வைக்கும் ஆற்றலுள்ளவர்களாகவும் மாற்றியமைத்தனர். வகுப்பு நடாத்திய ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோரால் தாய்மார்களாகிய மாணவர்களிடம் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தது.

தாய்மார் பள்ளியின் இன்னுமொரு பிரதான விடயமாக அமைந்தது. விஷேட செயற்றிட்டங்களாகும். இவை செயற்பாடு சார்ந்ததாக அமைந்தன. சத்துணவு சமைத்துக் காட்டுதல், பிள்ளைகளுக்கான வைத்திய முகாம் நடாத்துதல், அவசியமான இடத்தில் முன்பள்ளி ஆரம்பித்தல், வீட்டுத்தோட்டம் செய்தல், ஊஞ்சல் வழங்குதல், விளையாட்டுப் பொருட்கள் செய்தல், முதலுதவிப் பயிற்சி பிள்ளை களுக்கான

சுற்றுலா, முதலுதவிப் பயிற்சி போன்ற விஷேட செயல் முறை சார்ந்த திட்டங்கள் நடாத்தப் பட்டன. இவற்றை விஷேட வள ஆளணியினர் நடாத்தினர். மனையியல் ஆசிரியை, வைத்தியர், விவசாயப் போதனா சிரியர், வைத்தியர் தாதி போன்றோரால் இத்தகைய விஷேட செயற் பாடுகள் செய்து காட்டப்பட்டன. ஒவ்வொரு செயற்றிட்டத்திற்கும் ஒவ்வொரு ஆசிரியர் (தாய்மார் கல்வியூட்டு வோர் / Parent Educators) பொறுப்பாக எடுத்து நடாத்தினர்.

தாய்மார்களது வீடுகளைத் தரிசித்துப் பொருத்த மான ஆலோசனைகளை வழங்கும் செயல் முறையும் ஒரு பிரதான அம்சமாகத் தாய்மார் பள்ளியில் இடம்பெற்றது. இது தாய்மார் பள்ளிக்கும் சமூகத்திற்குமிடையே ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்த உதவியது. தாய்மாரின் அறிவு, திறன் அவர்களது மனப் பாங்கு என்பனவற்றில் ஒரு நிலையானதும் விருத்தி சார்ந்ததுமான ஒரு மாற்றம் ஏற்பட இத்தகைய வீடுகளைத் தரிசிக்கும் செயல் முறை அமைந்தது. மொத்தமாக இருந்த 110 வீடுகளும் 9 தாய்மார் பள்ளி ஆசிரியர்களி டையே பிரிக்கப்பட்டு, வாரந்தோறும் அவர்க ளது வீடுகளுக்குச் சென்று வீடுகள், அவற்றின் ஒழுங்கமைப்பு, சுத்தம் சுற்றுப்புறச் சூழல் சுத்தம் என்பன அவதானித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. வீடுகளைத் தரிசிக்கும் செயற்றிட்டத்தின் நோக்கங்களாகப் பின்வரு வன அமைந்தன.

1. தாய்மாரின் வீட்டுச் சூழலை நேரடியாகச் சென்று அவதானித்து அவர்களின் நடத்தை களில் நல்ல பண்புகளை ஏற்படுத்தல்.
2. தாய்மார் பள்ளிகளில் கிழமை வகுப்புக் களில் போதிக்கப்படும் கருத்துக்களை வீடுகளில் நடைமுறைப்படுத்தலை உறுதிப் படுத்தல்.
3. வீடுகளில் பெற்றார் பிள்ளைகளுடன் தொடர்பு கொண்டு அவர்கள் எதிர்நோக்கு கின்ற பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.
4. பெற்றார் தமது பிள்ளைகளுடன் மகிழ்ச்சி யானதும் சுமுகமானதுமான கலந்துரை யாடலை மேற்கொண்டு வீட்டில் மகிழ்ச்சி யாக இருப்பதற்கான வழிகாட்டலை மேற் கொள்ளல்.
5. விஷேட செயற்றிட்டங்களில் வழங்கப்பட்ட பயிற்சிகளை வீட்டில் பின்பற்றுவதை உறு திப் படுத்தல்.
6. வீட்டுச் சூழலில் சுகாதாரத்தைப் பேணுவதற் கான ஆலோசனை வழங்கல்.
7. வீட்டில் உள்ள அங்கத்தவர்களிடையே மகிழ்ச்சியானதும், உடன்பாடானதுமான உறவுகளை மேற்கொள்ள வழிகாட்டல்.
8. வீட்டுச் சூழலை விளங்கி தாய்மார் பள்ளி செயற்பாடுகளால் பொருத்தமான மாற்றங் களைப் புகுத்தல்.
9. ஒவ்வொரு வீட்டினதும் தரவுகளைத் திரட்டி அவற்றைத் தாய்மார் பள்ளி நோக்கங் களை முழுமையாக அடைவதற்குப் பயன் படுத்தல்.
10. ஒவ்வொரு வீட்டிலும் வசிப்பவர்கள் சமூகத் துடன் சுமுகமான உறவுகளைப் பேணவும் அயல் வீட்டவர்களுடன் சினேகமான உறவு களை ஏற்படுத்தவும் ஊக்குவித்து முன் பள்ளிகள், பாடசாலைகள் செயற்பாடுகளில் தம்மை இணைத்துக் கொள்ளவும் தயார் படுத்தல்

வீட்டுத்தரிசிப்பின் மூலம் கல்வியூட்டுவோராகச் செயற்பட்ட 10 பேரும் தாய்மார் பள்ளி தொடர் பாகவும் சமூகம் தொடர்பாகவும் நிறைந்த அனுபவத்தைப் பெற்றுத் தமது தொழில் துறை யில் ஆற்றல் பெறவும் உதவியது.

பிள்ளைகளின் கல்வியில் பெற்றாரின் பங்க ளிப்பு மிகவும் முக்கியமானது என்பதைச் சிறப் பாக உணர வைத்தமை வீட்டுத்தரிசிப்பில் ஏற்பட்ட நன்மைகளுள் ஒன்றாகும். பிள்ளை களின் ஆளுமை வளர்ச்சியில் 5 வயதினுள் பெற்றார் ஆற்ற வேண்டிய பெரும் பொறுப்பு இதன் மூலம் வலியுறுத்தப்பட்டது. வீட்டில் பிள்ளைகளை விளையாட்டின் மூலம் மகிழ்ச்சி யாக வைத்திருக்கும் சூழல் அமைக்கப் பட்டது. மொழி வளர்ச்சி தொடர்பாடல் திறன்

என்பனவற்றை ஏற்படுத்துவதற்கு வீட்டுச் சூழல் மாற்றியமைக்கப்பட்டது. பெற்றாரின் மூட நம்பிக்கைகளும் தப்பெண்ணங்களும் களையப்பட்டன. பொதுவாகப் பெற்றாரிடையே உடன்பாடான மாற்றமொன்று ஏற்பட்டு குடும்பத்தில் மனைவி, பிள்ளைகள், கணவன் உறவில் மகிழ்ச்சியான நிலை தோன்றியதுடன் கணவர்மார் மது அருந்தும் பழக்கத்திலும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. புகை பிடித்தல், மது அருந்துதல் என்பனவற்றைத் தமது பிள்ளைகளது நலனை முன்னிட்டுக் குறைத்தனர். அல்லது முற்றாக விட்டனர் என்பதற்குச் சான்றுகள் அவதானிக்கப்பட்டன. பிள்ளைகளது சேமிப்பில் அதிகரிப்பு ஏற்பட்டது. வீடுகள் தோறும் பூந்தோட்டங்கள் மரக்கறித் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

தாய்மார் பள்ளி மூலம் ஏற்பட்ட விளைவுகளைப் பின்வரும் தலைப்புகளில் அவதானிக்கலாம்.

1. பிள்ளை வளர்ப்பும் பாதுகாப்பும்
2. வீட்டுச் சுற்றாடல்
3. போஷாக்கு சுகாதாரம்
4. பொருளாதாரச் செயற்பாடுகள்
5. மனப்பாங்கு, அறிவு மாற்றம்
6. பிள்ளைகளின் கல்வி தொடர்பான சிந்தனை மாற்றம்

மாதங்களாக மிகுந்த கவனத்துடன் நடாத்தப்பட்ட தாய்மார் பள்ளியின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு பள்ளியை நடத்தியவர்களுக்குப் போதிய திருப்தியை அளித்தது. 95வீதமான தாய்மார் பள்ளியில் கற்றுக்கொண்ட விடயங்களை நன்றாகப் பின்பற்றுவதாகக் குறிப்பிட்டனர். பள்ளியில் பின்பற்றப்பட்ட கற்றல் முறைகளில் ஒன்றான குழுக்கலந்துரையாடலை 75% ஆனோர் பிடித்தமான முறையாகவும் அதன் மூலம் அதிக பயன் கிடைத்ததாகவும் குறிப்பிட்டனர். இப்பள்ளிச் செயற்பாடுகள் தாய்மார்கள் அனைவரையும் சமூக இயைபாக்கம் உள்ளவர்களாக ஆக்கியது. 99%மான தாய்மார் குடும்பத்தை வழி நடத்தும் ஆற்றல் பெற்றதாகக் குறிப்பிட்டனர். பாடசாலைகள், முன்பள்ளிகள் என்பவற்றுக்குத் தாய்மார் கெடுக்கும் முக்கியத்துவம் முழுமையானதாக அமைந்ததாக 86%மான தாய்மார் கூறினர். தாய்மார் பள்ளியால் கிராமத்திற்கு ஏற்பட்ட நன்மைகளுள் முக்கியமானது கிராமத்தின் மத்தியில் முன்பள்ளியொன்றைப் பெற்றார் உருவாக்கியமையாகும். இது ஒரு மாதிரி முன்பள்ளியாகக் கருதப்படுவதுடன் கிராமத்தைச் சேர்ந்தவர் ஒருவரது குடும்பத்தினர் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டிக் கொடுக்கும் வாய்ப்பையும் பெற்றனர். மதிப்பீட்டில் பெறப்பட்ட எல்லா விபரங்களையும் இங்கு குறிப்பிடல் சாத்தியமில்லையாகையால் சுருக்கமாகச் சில விடயங்கள் கூறப்பட்டன.


முடிவாகக் கூறின் தாய்மார் பள்ளி இக்கிராமத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இத்தகைய தாய்மார் பள்ளி இன்று பல பின்தங்கிய கிராமங்களின் தேவையாக உள்ளது என்பதை எவ்வித சந்தேகமுமின்றிக் குறிப்பிடலாம். இத்தகைய பரீட்சார்த்தம் பயனுள்ளதொன்றாக அமைந்த காரணத்தால் இவ்வனுபங்கள் பொதுக்கல்வியையும் முன்பள்ளிக் கல்வியையும் மேம்படுத்த ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படலாம். தாய்மார் பள்ளி அல்லது பெற்றார் பள்ளிகள் தேவையான கிராமங்களில் திட்டமிட்டு நடத்தப்படுமாயின் கிராமியக் கல்விக்கு ஒரு ஊக்குவிப்பு ஏற்படும்.


மா. செல்வராஜா
தலைவர்,
கல்வித்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்.

*With Best Compliments from :*

# Krishna Book Centre

**Dealers in School Books,**
**Office Stationeries,**
**Printing Items,**
**Gift Items, Sports Items,**
**Computer assessories,**
**Publishers of all Kind.**





*Trinco Road,*
*Batticaloa.*

*T.P. No. 060 2653253,*
*077 7738173*

## எடுவச்சிப் போட்டாள்..

''உயிர்காக்க. உதவுங்கள்'' எண்ட அந்த விளம்பரத்த முழுசாப் படிச்சதில இருந்து எண்ட மனசெல்லாம் படபடத்துப் போச்சிது. உடனே அந்தப் பேப்பர அப்பிடியே கையில எடுத்து கொண்டு ''பரத்த'' தேடிப் போனனான் தான். ஓம் ''பரம்'' வேற ஆருமில்ல எண்ட அம்மா விண்ட அண்ணண்ட மகள்தான். சின்ன வயசில இருந்து ஒண்டா விளையாடி, ஒண்டாச்சாப்பிட்டு வளந்த நாங்கள். அவள் பருவமடஞ்ச பிறகு தான் விதி எங்கட வாழ்க்கையிலயும் விளை யாட ஆரம்பிச்சிது.

சின்னவயசில இருந்தே, சகோதரத்தப் போல பழகிட்டம். ஆனா மாமியின்ட விருப்பம் பர மேஸ்வரிய எனக்குக் கட்டி வைக்கிறதுதான். எவ்வளவோ பிரச்சினைக்குப் பிறகுதான் அது நிண்டு போச்சு. ''ம்'' அதெல்லாம் நினைச்சி பாக்கிற நேரமா இது...

புது இடம், புது மனுசனுகள், எல்லாம் அறி யாத முகங்கள்தான். ஆனா... அந்தக் கூட் டத்துக் குள்ள என்னால பரமேஸ்வரிய சரியா இனங்காணுறத்தில பிரச்சினையாய் போயிட் டுது. ''அட என்ர பரமேசல்லோ மறக்கவா முடியும்? அதுபர மேசுதான் எண்டு நினைச்சிக் கொண்டு கிட்டப் போனனான்தான் ''ஓ'' எண்டு அழுதிட்டா.

''என்னாச்சி... ஏன் அழுற....'', ''இப்போ பிள் ளைக்கு பரவால்ல...'' , ''பிறகேன்...''

''எனக்கு அப்போவரைக்கும் பரத்தின்ர அழு கைக்கு காரணம் தெரியல...''

நாளும் கடந்து போச்சிது. நானும் இப்பவ ரைக்கும் அம்மா, அப்பாவோடதானே... காத்திண்ட ஓட்டத்தில எவ்வளவு மாற்றங்கள். அதான் பரத்தப் பற்றித்தான் சொல்றன். அண்டை க்கு நடந்த சம்பவத்துக்குப் பிறகு நான் பரத்த காணவே இல்ல. இருந்தாலும் அவளப்பற்றி இப்பிடி... மனதுக்கு வருத்தமாத்தான் இருந்தது. என்ன செய்யிறது. விதி ஆரத்தான் விட்டு வச்சிது.

நெஞ்சு வலி எண்டு ஆஸ்வத்திரிக்குப் போன நான். என்னோட படிச்ச சிவாதான் அந்த சம்பவத்த அங்கேயே போட்டு உடைச்சவன். எனக்கு எந்த வலியத்தாங்குறதெண்டே தெரியாமப் போச்சிது. வேறொண்டுமில்ல....

பரம் வயசுக்கு வந்த பிறகு எங்கட மாமி பரத்த எனக்குத் தான் முடிச்சுவைக்க ஆசப்பட்டவ. ஆனா எங்கட உணர்வு அப்பிடி இருக்கல்ல. இதுமட்டுமில்ல பரமேஸ்வரிக்கும், எங்கட பக்கத்துவீட்டுக் கண்ணனுக்கும் இருந்த காதல் விசயம் எனக்குத் தெரியும்

மாமி, மாமாக்கு இஸ்டமில்லாததால அதுகள் ஊர விட்டே ஓடிப் போயிட்டுகள். அதான் பரமேசும், கண்ணனும் இதுக்குப்பிறகு நடந்த சம்பவத்தத்தான். சிவா சொன்னது. ஓம். இவங்க ஓடிப்போய் கொஞ்சக்காலத்துக்குள்ளே இவங் களுக்கெண்டு ஒரு பிள்ளகிடச்சிருக்கு. உழைப பிலேயே கவனஞ்செலுத்தின கண்ணன காலன் கொண்டு போயிட்டான். பிறகு பரத்தின்ர முயற்சி யாலயும், உழைப்பாலயும் தான் குடும்ப வாழ்க்கை ஓடிருக்கு.

பிள்ளைக்கு ஒரு ஏழுவயசிருக்கும்போல என் னப் போலதான் நெஞ்சுவலி எண்டு சொல்லிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்கள். அங்க பிள்ளையச் ''செக்'' பண்ணிப் பாத்த டொக்டர் பிள்ளையின்ர ஈரல்ல கல் விளஞ் சிருக்குதாமெண்டும் அதச் சரி செய்யணு மெண்டா நிறயச் செலவாகுமெண்டும் சொல்லி அனுப்பியிருக்காரு.

பாவம் பரம், அது என்ன செய்யும் எங்கெங் கெல்லாம் காசிக்கு ஓடித்திரிஞ்சு கடைசியில ஒரு காடையன் கிட்ட மாட்டிருக்குது. அவனும் காசி தாறதாச்சொல்லி பரத்தக் கூட்டிட்டுப் போயிருக்கான். அவளும் என்ன செய்வாள் ''பெத்தமனம் பித்து'' என்றத்தப்பபோல பிள்ளைக்காக ஊர் பேரே தெரியாதவனோட போய்... அங்க... அந்த விபச்சாரவிடுதியில...

அந்தக்காசுதான் பரத்தின்ரபிள்ளை இண்டைக் கும் உயிரோட... அண்டைக்கு பரத்தின்ட கண ணுல வடிஞ்ச தண்ணிட அர்த்தம் எனக்கு சிவா சொன்ன கதைக்குப் பிறகுதான் விளங்கிச்சு..

கிழக்குப் பல்கலைக்கழக வெள்ளி விழாவின் சிறப்பு மலராக 'வெளி' வெளிவருவதையிட்டு நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் இச்சிறுகதை மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

# இலங்கைப் புகலிட நாவல்கள்

கலாநிதி செ. யோகராசா

## 1. பின்புலம்:

இலங்கைத் தமிழரின் புலப்பெயர்வு சென்ற நூற்றாண்டிலே எண்பதுகளுக்கு முன்னர் இரு தடவைகள் (1920-1930, 1950-1960) இடம் பெற்றிருப்பினும் எண்பதுகளளவில் இடம் பெற்ற புலப்பெயர்வு வித்தியாசமானது. இவ் வாறு புலம்பெயர்ந்து சென்றோரில் கணிசமா னோர் இலங்கையிலே இடம்பெற்ற அரச இராணுவ பேரினவாத ஒடுக்குமுறை காரண மாக அரசியல் தஞ்சம்கோரி ஐரோப்பிய நாடுகள் (எ.டு: ஜேர்மனி, பிரான்ஸ், நெதர் லாந்து, டென்மார்க், நோர்வே, சுவிஸ், பிரித் தானியா) அமெரிக்கா, கனடா, அவுஸ்திரே லியா நாடுகளுக்குச் சென்றனர். இவ்வாறு சென்றோர் ஆங்கில மொழியையோ, ஐரோப் பிய மொழியையோ அறியாதிருந்தனர். உயர் கல்வி கற்காதவர்களாகவிருந்தனர். புகலிட நாடுகளில் அகதிநிலை வாழ்க்கையை எதிர் கொள்பவர்களாகவும் பண்பாடு, மொழி, நிறம், தொழில், மதம், காலநிலை அனைத்திற்கும் முற்றிலும் புதியவர்களாகவும் காணப்பட்டனர். இவ்வாறான புதிய சூழ்நிலையோடும் குடும்பப் பிரிவும், ஊர் நினைவும் இலங்கையில் நிகழ்ந்து வந்த ஒடுக்குமுறைக் கொடுமைகள் பற்றிய செய்திகளும், தனிமையும், அன்னிய மும் இளமை உணர்வுகளும், குடும்பப்பொறுப் பும் எதிர்கால வாழ்க்கை பற்றிய அச்சமும் இவர்களை வாட்டி வதைத்தன. இவ்வாறு புலம் பெயர்ந்தோர்களில் முன்னாள் எழுத்தாளர்க ளும் எழுத்தார்வம் மிக்கவர்களும் காணப் பட்டனர். இவர்கள் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தனர். விளைவாக புகலிட இலக்கியங்கள் பிறப்பெடுத்தன. இவற்றின் ஊடாக இவர்கள் தமது அனுபவங்களையும் வெளிப்படுத்தினர்.

நவீன இலக்கியத்தின் வடிவங்களுக்குரிய தனித்துவ இயல்புகள் காரணமாக தவிர்க்க இயலாதவாறு புகலிட இலக்கியங்களுள் கவிதைகளே முதன்மை இடம்பெற்றன. சிறுகதைகள் அதற்கு அடுத்த நிலையில் காணப்பட்டன. நாவல்கள் மிகக் குறைவாகவே எழுந்தன. குறுகிய கால அடைவில், பரந்த அனுபவ வட்டத்தை அவாவி நிற்கும் நாவல் கள் அதிகமெழ முடியாமை இயல்பானதே. ஆயினும், இவ்வாறு எழுந்துள்ள நாவல்களை ஆய்விற்குட்படுத்துவது தவிர்க்க இயலாததே ஆகும்.

## 2. அணுகுமுறை

இத்தகைய புகலிட நாவல்களை ஆய்வு வசதிகருதி

1. இலங்கையில் வாழ்கின்ற தமிழர் பற்றி யவை.
2. புகலிட நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் பற்றியவை.

என்று வகைப்படுத்தி அணுகுவது பொருத்தமானது. (இவ்வாறு வகைப்படுத்தினா லும் இவ்வாறான நாவல்கள் பல, ஈரிடங்க ளையும் களமாகக் கொண்டிருப்பதையும் கவ னத்தில் கொள்ள வேண்டும்)

## 3. இலங்கையில் வாழ்கின்ற தமிழர் பற்றியவை

### 3.1 சீதனப் பிரச்சினை:- "ஆண்கள் விற் பனைக்கு"

இலங்கைத் தமிழர் மத்தியிலே நீண்ட காலமாக நிலவி வருகின்ற பிரச்சினைகளுள் இப்பிரச்சினை முக்கியமானதொன்று. கவிஞர் பாரதியார்கூட இலங்கையில் நிலவிவரும் இப்பிரச்சினை பற்றி 'இந்தியா' பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இப்பொருள் பற்றிய நாவல்கள் மிக அரிதாகவே இங்கு வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் புகலிட நாவலாகிய 'ஆண்கள் விற்பனைக்கு' கவனத்திற்குரிய படைப்பாகின்றது.

இந்நாவல் பற்றி நோக்கும்முன், புகலிட நாட்டில் இருந்துகொண்டு, தாய் நாட்

டின் சீதனப்பிரச்சினை பற்றி எழுதுவது தொடர்பாக பார்த்தீபன் குறிப்பிடும் காரணம் இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் கூறுவதாவது :

'சீதனம் என்பது இப்போது பெரிய பிரச்சினை அல்ல என்பது போல பலர் பேசிக் கொள்கின்றார்கள். அது தவறானது என்பதை என்னால் நேரடியாகவே கண்டுகொள்ள முடிந்தது. சகோதரிகளுக்காக 12 மணித்தியாலங்களுக்கும் மேலாக காச்சம்பளத்தில் அடுப்பு வெக்கைக்கு முன்னால் வெந்து கொண்டிருக்கும் சகோதரர்களைச் சந்தித்தபோதும் அட்டகாசமான திருமணக் கொண்டாட்டங்களில் பங்குபற்றும் பலர் தங்களுக்குள் மணமக்களைப் பற்றிக் கதைத்துக் கொள்கின்ற போதும், அரசியல் தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், வேலை செய்பவர்கள், குடியேற்ற அந்தஸ்து கிடைத்தவர்கள் தங்களது 'விலை' கூடிவிட்டதாக அறிவிக்கும் போதும், ஊரில் உள்ள ஆதனங்களை விற்று கூடவே குடும்பத்தையும் கடனாளியாக்கிவிட்டு, சீதனப் பொதியுடன் பிராங்போட் விமான நிலையத்தில் வந்து குவியும் தமிழ்ப் பெண்களைப் பார்த்தபோதும் சீதனம் என்பதன் பாதிப்பு தெளிவாகவே புரிந்தது . . . . .'[1]

ஆக புகலிட நாட்டுச் சூழல் நாவலாசிரியரை இப்பொருள் பற்றி எழுதத் தூண்டியுள்ளதென்பது எமது கவனத்திற்குரியது.

'ஆண்கள் விற்பனைக்கு' எனும் நாவல், பத்மா, உமா என்ற இரு பெண்களின் கதை. பத்மா அறிவும், அனுபவமும் எதிர்நீச்சல் போடும் இயல்பும் கொண்டவள்; தன்னைப் போன்று கதை இலக்கிய ஈடுபாடுள்ள இளைஞன் ஒருவனை விரும்புபவள். எனினும் அவன் போலியானவன் என்றறிந்த பின் அவனிடமிருந்து ஒதுங்கிவிடுகின்றாள். உமா, முதிரா இளம்பருவத்தினள் 'ரியூட்டரி'யில் கற்கும் ஒருவனைக் காதலித்து, ஊர் சுற்றித்திரிந்தவள். எனினும், இறுதியில் அவனால் கைவிடப்பட்டவள். தற்கொலை செய்ய முயல்கின்ற போது பத்மாவின் உபதேசங்களுக்காட்பட்டு தற்துணிவு பெற்றவள். முடிவில், இருவரும் இம்முடிவிற்கு வருகின்றனர்.

''எபபவாவது உண்மையான ஆம்பிளை ஆராவது எங்களை சந்திக்கும் மட்டும் இப் படியே இருப்பம், சந்திச்சால் கல்யாணத் தைப்பற்றி யோசிப்பம்''. இலங்கையிலிருந்து இப்பொருள் பற்றி அரிதாகவே நாவல்கள் வெளிவந்துள்ளன என்ற விதத்திலும் நாவலின் முற்போக்கான முடிவுகாரண மாகவும் இந்நாவல் இலங்கை நாவல் வளர்ச்சியில் முக்கியம் பெறுகின்றது.

### 3.2. சாதிப்பிரச்சினை: ''வித்தியாசப்படும் வித்தி யாசங்கள்''

இலங்கைத் தமிழர் மத்தியில் புரையோடிப் போயுள்ள பிரச்சனைகளுள் அண்மைக்காலம் வரையும் சாதிப்பிரச்சினை முக்கியம்பெற்று வந்துள்ளது. தற்போது, இலங்கையில் இப்பிரச்சினை கணிசமான அளவு குறைந்துள்ளதாயினும் நாட்டுத்தமிழர் மத்தியில் குறைந்து போகவில்லை. இதன் விளைவாக இப்பிரச்சினையை பொருளாகக்கொண்டும் ஒரு நாவல் வெளிவந்துள்ளது. 'வித்தியாசப்படும் வித்தியாசங்கள்' என்ற அந்நாவலின் ஆசிரியரும் பார்த்தீபன்.

இப்பொருள் பற்றி ஏலவே பல நாவல்கள் இலங்கையிலிருந்து வந்துள்ளன. இவ்வித நாவல்கள் எழுதிய டானியல், செ.கணேசலிங்கன் ஆகியோர் நன்கறியப்பட்டவர்களே. இவர்களது நாவல்கள் போன்றே இந்நாவலும் மார்க்சிய நோக்கில் -' போராட்ட வடிவில் அமைந்துள்ளது. ஆயினும், ஆசிரியரது மார்க்சியப் பார்வை தெளிவற்றமை கவனத்திற்குரியது. எனினும் இளந்தலைமுறை எழுத்தாளரொருவர் சாதிப்பிரச்சினை பற்றி எழுதியுள்ளமையும் 'சமகால'ப் பிரச்சினையுடன் (விடுதலை இயக்கப்பின்னணி) அது தொடர்புபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதே.

### 3.3 குழந்தை வளர்ப்பு: 'பாதி உறவு'

இலங்கைத் தமிழ் நாவலாசிரியரெவரும் இன்று வரைத் தொட்டிராத பிரச்சினையொன்றினை - குழந்தை வளர்ப்பு முறையினை - தொட்டு வெளியான புகலிட நாவலாக உள்ளது, பார்த

தீபன் எழுதிய பாதிஉறவு.

'குழந்தைகளுடன் அவர்களின் மனங்களும் படிப்படியாக அனுபவங்களினாலும் படிப்பினாலும் தான் வளர்ச்சியடைகின்றன. திடீரென அவர்கள் பெரியவர்களாகி விடுவதில்லை. குழந்தைப் பருவத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் தான் அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. குழந்தைகளை பெற்றோர்களுடன் சூழ்நிலைகளும் சேர்த்தே வளர்க்கின்றன. தமது பிள்ளைகள் தீயவர்களாகவே வளரவேண்டும் என எந்தப் பெற்றோரும் திட்டம் போட்டு வளர்க்காவிடினும் தங்களது கவனக்குறைவால் பிள்ளைகளை அழிவுப் பாதையில் செல்ல அனுமதித்து விடுகின்றார்கள். இதைத் தடுக்க முடியாதா? முடியும் என்பதனை, ரவீந்திரன் நந்தினி குடும்ப வாழ்க்கையூடாக வெளிப்படுத்துகின்றார் நாவலாசிரியர்'.[2]

நாவலின் உள்ளடக்கப்புதுமையும், உளவியல் பாங்கும் இலங்கை நாவல் வளர்ச்சியில் இப்படைப்பிற்கு ஓர் இடத்தை வழங்குகின்றன என்பதில் தவறில்லை.

எவ்வாறாயினும் பார்த்தீபன் எழுதிய மேற்குறிப்பிட்ட மூன்று நாவல்களிலும் கருத்திற்கு - சமூக சீர்த்திருத்த நோக்கிற்கு முதன்மை அளித்திருப்பது காரணமாக இந்நாவல்களில் இயல்பான உணர்வுநிலை வெளிப்பாடும் அழகியல் அம்சங்களும் குறைந்தளவே வெளிப்பட்டுள்ளமை மனம் கொள்ளத்தக்கது.

### 3.4 கிராமத்து வாழ்க்கை : தில்லையாற்றங்கரை

புகலிட வாழ்க்கைச் சூழல் இலங்கைத் தமிழ்க்கிராமத்து வாழ்க்கையை ஒட்டிய நாவலின் வரவிற்கும் வழிகோலியுள்ளமை வியப்பிற்குரியது தான். ஆயினும் 'தில்லையாற்றங்கரை' என்ற நாவலின் ஆசிரியை இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் இதுபற்றி இவ்வாறு கூறும்போது வியப்பின் வலிமை குன்றிவிடுகின்றது எனலாம்.[3]

'லண்டன் கனன்பரி வீதிக்கும் இலங்கையில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த சிறுகிராமமான கோளாவிலுக்கும் எத்தனையோ வித்தியாசம். ஒவ்வொருநாளும் நான் கடந்து போகும் தேம்ஸ் நதிக்கும் ஒரு காலத்தில் சேறு புரள சிரித்து நீச்சலடித்த தில்லை யாற்றுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. ஆனால் நீண்டோடும் தேம்ஸ் நதியைப் பார்க்கும்போது நினைவலைகள் தில்லையாற்று மணற்பரப்பில் தவழ்கின்றது. நிலவுக்குத் தாலாட்டி நெஞ்சுக்குள் குளிர் தரும் தென்னோலை சரசரப்பை இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னும் மறக்கமுடியாது . . . எதை மறந்தாலும் பிறந்த மண்ணை மறக்க முடியாது . . .'

மேலே நாவலாசிரியை கூறும் பிறந்த மண்ணை மறக்க முடியாநிலை இருபத்தைந்து வருடங்களுக்கு முற்பட்ட காலமோ, இருபத்தைந்து மாதங்களுக்கு முற்பட்ட காலமோ எவ்வாறாயினும் அது புகலிட படைப்புக்கள் பலவற்றின் ஆதார சுருதியாகின்றமையே இங்கு கவனத்திற்குரியது. (அது சொந்த மண்ணிலே உலாவும் எம்மால் உணர்ந்துகொள்ள முடியாதது என்றே கூறவேண்டியுள்ளது). அது மட்டுமன்றி புகலிட எழுத்தாளரான விமல், குழந்தைவேல் கூறுவது போன்று, 'கடந்தகால நிகழ்வுகள் பற்றி இலங்கையிலுள்ள எழுத்தாளர்கள் எழுதுவதைவிட, புலம்பெயர் எழுத்தாளர்கள் எழுதுவதே சிறப்பானதாக அமையும் என்று எண்ணுகின்றேன். புலம்பெயர் எழுத்தாளர்கள் எழுதும்போது அந்த இலக்கியத்திற்கான வலு கூடவாக அமையும்'[4]என்றும் கருதுகின்றேன்.

நிற்க, மேற்குறிப்பிட்ட தில்லையாற்றங்கரை கோளாவில் கிராமத்தின் 1957-1962 காலப் பகுதியைப் பின்னணியாகக் கொண்டது. குழந்தைப்பருவத்தைத்தாண்டி, 'குமரியாகிக்' கொண்டிருக்கும் கௌரி, மரகதம், சாரதா ஆகிய மூன்று பெண்களைப் பற்றிய கதையாகவுள்ளது. அவர்கள் மூன்று தலைமுறைகளின் சட்டதிட்டத்தை எதிர்த்துப் போராடியதைப் பற்றி அல்லது போராடியதாக நினைத்ததைப் பற்றிய கதையாகவுமுள்ளது.

இந்நாவலில் முற்பகுதியில் மண்வாசனை

மிகுந்திருப்பினும் பிற்பகுதியில் அது அருகிவிடு -கின்றது. பிற்பகுதியில் 'சமகால' அரசியல் வாடை வெளிப்பட்டிருப்பினும் முற்பகுதியல் அது காணப்படவில்லை. இவ்விதத்தில் பல - வீனங்களை இந்நாவல் கொண்டிருப்பினும் குறிப்பிட்ட காலகட்ட கிராமம் ஒன்றின் கதையை பலத்தோடும். பலவீனத்தோடும் சித்திரிப்பதாக வும் இவ்விதத்தில் மட்டக்களப்பு பிரதேச கிரா மிய நாவல்களுள் முதன்மை பெறுவதா கவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

3.5 பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் விளைவுகளும்

புகலிட எழுத்தாளர்கள், தமது சமகால இலங்கைப் பிரச்சினைகள் பற்றி, அதாவது அரச, சிங்கள இராணுவ பேரினவாத ஒடுக்கு முறைகள் அவற்றிற்கு எதிரான விடுதலை இயக்கங்களின் போராட்டங்கள், போராட்ட இயக்கங்களின் பரஸ்பர முரண்பாடுகள் என்பன பற்றி குறிப்பிடத்தக்க சில படைப்புக்களைத் தந்துள்ளனர். இவை பற்றித் தனித்து நோக்கு வதற்கு முன்னர், இவற்றுள் பெரும்பாலானவை இலங்கையின் அரசியல் சூழ்நிலை காரண மாக இலங்கையிலிருந்து எழுதப்பட்டிருக்கவோ வெளிவந்திருக்கவோ முடியாதென்பதனை முதலில் மனங்கொள்வது அவசியமாகின்றது.

3.5.1. மண்ணும் மல்லிகையும்

ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்தில் அக்கரைப்பற்றுக் கிராமத்திலே வாழ்ந்த 'பெரிய' குடும்பமொன்று, சிங்கள இராணுவ ஒடுக்குமுறை காரணமாக சிதைந்து போன வரலாற்றை, புகலிடநாட்டிலிருந்து தமது ஊருக்கு வருகின்ற ஒருவரது நினைவு னூடாகப் பதிவு செய்துள்ளது. இத்தகைய நாவல்கள் மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து மிக அரிதாகவே வெளிவந்ததுள்ளன என்ற விதத்தில் இந்நாவலின் வரவு அவசிய மாகின்றது.

3.5.2 வெகுண்ட உள்ளங்கள், வேலிகள்

'கடற்புத்திரன்' எழுதிய மேற்கூறிய இரு படைப்புக்களும், ஈழ விடுதலைப்போராட்ட நோக்குடன் இயக்கங்கள் உருவான காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பிரதேசக் கிராம மொன்றிலே வாழ்கின்ற மக்களது வாழ்க்கையி லேற்பட்ட சிறுசிறு மாற்றங்களையும், மக்க ளுக்கும் இயக்கங்களுக்குமிடையிலான உறவு களையும் (மேலோட்டமாகப்) பதிவு செய் துள்ளன.

3.5.3 ஒரு கோடை விடுமுறை

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழு திய இந்நாவலில் இலங்கையிலே இடம்பெறும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட (ஒரு) பகுதி, தன் குடும்பம் தன்சுற்றம் என்று வாழ்ந்தவர்கள் தமது இனத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு எப்படி முகங்கொடுக் கின்றார்கள் என்பதைச் சித்திரிக்கின்றது. சம்பவங்களை விட, பாத்திரங்களும் (எ-டு: சபேசன்) உரையாடல்களும் இவ்விதத்தில் இந்நாவலில் முக்கியம் பெறுகின்றமை இந்நாவ லின் சிறப்பம்சங்களாகின்றன.

3.5.4 ஒரு பூ

கே.எஸ். துரை எழுதிய இந்நாவல் யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள பொலிகண்டி என்ற கிராமத்தில் தன் மகனையும் கணவ னையும் உலகமாகக் கொண்டு வாழ்ந்த பூமணி என்ற அப்பாவிப் பெண்ணின் குருவிக் கூட்டு வாழ்க்கை சிங்கள இராணுவவேட்டை என்ற பெரும்புயலிலே சிக்குண்டு சிதைந்து போவதை உருக்கமான சித்திரமாக்கித தந் துள்ளது. இராணுவம் அநியாயமாகக் கொன் றொழித்த தனது ஒரே ஒரு மகனையும் அக்க வலை காரணமாக மரணித்த கணவனையும் இழந்து சித்தப்பிரமையோடு நடைப்பிணமாகி அலைந்து திரிந்து தனது வாழ்வை முடித்துக் கொண்ட ஒரு பெண்ணின் - தாயின்-கதையாக மட்டும் இந்நாவல் உருவாகவில்லை. அவ்வா றான அனைத்துத் தாய்மாரின் கதையாகவும் இப்படைப்பு மலர்ந்துள்ளதே இதன் வெற்றி யாகின்றது. பூமணி ஒரு ஞானிபோல் உற வினர்களுக்கு தென்படுகின்றாள். அவளது ஆன்மீக ஒளியில் விடுதலைப் போராட்டமும் போராளிகளான மாவீரரது தியாகங்களும்

மகத்தானவையாகத் திகழ்கின்றன. இவ்விதத்தில் இங்கு பின்வரும் பகுதியை எடுத்தாள்வது பொருத்தமானது.

'............ மாதக்கரசு, பிரச்சனையள் முடியிறதும் முடியாததும் அவரவர் கையிலதான் . . நாங்களெல்லாம் பிறக்க முந்தியே எத்தினையோ பிரச்சினையள் முடிஞ்சுது. ஆனால் ஒப்பாரியள் மட்டும் முடியாமலே இருக்கெண்டு ஒரு சுடலைக்குருவி பாடிக்கொண்டு போச்சு அதொரு கிழட்டுக் குருவி . . . !'

'அக்கா சொல்லுறனேயெண்டு குறை விளங்க வேண்டாம்' உங்களுக்குச் சித்தப்பிரமையெண்டு ஊர்முழுக்கக் கதைக்குது. என்ரை பிள்ளையளெண்டால் பைத்தியமெண்டுதுகள். உங்கடை கதை காரியங்களைப் பார்த்தால் நீங்க பைத்தியமோ நாங்கள் பைத்தியங்களோ எண்டு மனசிலை ஒரே கயிறிழுப்பாய்க கிடக்கு. நான்தான் பைத்தியம்.

இல்லையக்கா இந்தப் பிரச்சினைகள் தான் உங்களை இந்த நிலைக்கு ஆளாக்கிப் போட்டுது. இல்லாட்டி இப்படியே இருந்திருக்கப் போறியள்? என்ன செல்வாக்கா இருந்த குடும்பம்.

மாதக்கரசு, இந்த விடுதலைப்போரைப் பிரச்சினையெண்டு பேசுறதே ஓர் அறியாமைதான். இதைப் பிரச்சினையாகப் பார்க்கிறதை நிப்பாட்டிப்போட்டு எண்டைக்கு உன்ரை கடமையாகப் பாக்கிறியோ அந்தக் கணமே உன்னளவிலை தமிழீழப் போரும் வாழ்க்கையாமாறிடும். இதைக் கொஞ்சம் ஆழமாய் யோசிச்சால் பிறகு உனக்கு கவலையே வராது.

"எனக்கு வயதேறிப் போச்சு. . . பிறந்தண்டு பிடிச்ச கஸ்டம் . . . இண்டுவரை துலைஞ்சபாடில்லை . . . பிரச்சினையளாலை கலைபட்டு மான்கூட்டங்கள் போலை ஓடிக் கொண்டிருக்கிறம். என்னாலை உங்களைப் போலை யோசிக்க முடியேல்லை . . பூமணி அவளுடைய மருண்டுபோன கண்களையே பார்த்துக்கொண்டிருந்தாள்,' பிறகு பேசத் தொடங்கினாள்.

"மான்கள் ஓடுறபடியால் தான் மற்ற மிருகங்களெல்லாம் மான்களை வேட்டைப் பொருளாகவும் தங்களை வேட்டைக்காரராகவும் நினைச்சிட்டுதுகள் நீயும் ஓடுறதும் ஒப்பாரி வைக்கிறது மாய்த் திரிஞ்சா பிறகு அதுதான் உன்ரை வாழ்கையாவும் போயிடும். ஓடாமல் நில். பிரச்சினையளை நேருக்கு நேர் சந்தி என்றாள்.'

அதைக் கேட்டபின் மாதக்கரசு கடுமையாக யோசித்தாள். இந்தக் கிராமத்துக் கிழவி இதையெல்லாம் எப்படித் தெரிந்துகொண்டாள் . . .

'இப்ப நீயும் பைத்தியக்காரிதான். இந்தக் காட்டைவிட்டு வேறைகாட்டுக்கு ஓடினால் போல பிரச்சினையள் முடிஞ்சு போயிடுமே?

ஓடுற மான்களைத் துரத்துறதுக்கு எல்லாக் காடுகளிலையும் மிருகங்களிருக்கு ஓடுற சனந்தான் பிரச்சினை எப்ப முடியுமெண்டு பேப்பருகளிலை தேடும். இப்பவே நில். இப்பவே பிரச்சினையள் முடியும் என்று பூமணி கூறிவிட்டு வெளியேறினாள் . . .'[5]

மேற்கூறப்பட்டுள்ள பகுதி பூமணியை ஒரு ஞானியாக இனங்காட்டுகின்றதென்றால், பின்வரும் பகுதி, பூமணியை ஊருக்குரிய தாயாக வெளிப்படுத்துகிறது.[6]

'வெளியே போனவள் மறுபடியும் திரும்பி வந்தாள். மூலஸ்தானத்திற்குள் பிரவேசித்து, விநாயகர் கையிருந்த அந்த ஒற்றைச் செவ்வரத்தம் பூவைக் கையில் எடுத்துக் கொண்டு வடக்கு வீதியைத் தாண்டி நடந்தாள். அவள் வழமையாக வந்தமர்ந்திருக்கும் மாவீரர் சமாதிக்குக் கீழே யாரோ விளக்கேற்றி வைத்திருப்பது தெரிந்தது.

நேற்று நடந்த போரினால் அந்தச் சமாதியின் படிக்கட்டுக்கள் யாவும் உடைந்து ஒழுங்கின்றிக் கிடந்தன. அழகிய செவ்விளநீர் வடிவமான அந்தச் சமாதி மட்டும் அப்படியே ஒளிகுன்

றாது நின்றது.

தன்னுடைய மகனே வாழ்க்கையாக, உலக மாக, பிரபஞ்சமாக நினைத்து வாழ்ந்த பூமணி, அந்தச் செவ்வரத்தம் பூவுடன் அங்கேயே மௌனித்து நின்றாள்.

குங்குமம் இழந்து காடுடைய சுடலைப் பொடிக ளேந்திய இந்திரா போன்ற அபலப்பெண்கள் துணையில்லாத பூங்கொடிகளாக பிரபஞ்சப் பெருங்காற்றில் அங்குமிங்குமாக ஆறலை படுவது தெரிந்தது.

ஈஸ்வரன் போன்று வாழத்துடித்து, அவச்சாவில் போன ஜீவன்களின் 'ஐயோ...!' என்ற ஆதங் கம் பேரலையாக எழுந்து பாறைச் சுவரில் மோதிப் பிளப்பது போல ஒரு பெரும் பிரளயச் சத்தம் செவிப்பறைகளை வெடிபடச் செய்தது.

அனுபவப் பார்வை மனதில் மண்டிக்கிடக்க இருட் பாலைவனத்தை கிழித்துக்கொண்டே வேகமாக ஓடிவந்து ஓரிடத்தில் நின்றது. அறிவுக் கண்களால் தாண்ட முடியாத அந்த இறுதிக் கதவைத் திறக்க முடியாது மனத்தின் ஒளி தடைப்பட்டு நின்றது. மறுபடியும் மறுபடி யும் மனதைச் சுடர்ந்த வைரமாக்கி, அந்த இருட்கதவின் மீது ஓங்கி உதைத்தாள். தடாலென்ற பேரொலி எழுந்தது. அந்த ஒரு நொடியில் மரண பயத்தை மனம் வெற்றி வாகை சூடியது. இம்மைக்கும் மறுமைக்கும் உண்மைக்கும் பொய்மைக்கும் பேதமில்லாத நிலையில் அவள் நின்றாள். அப்பொழுதுதான் அந்த மாவீரர் சமாதியின் முன் அவள் கையி லிருந்த செவ்வரத்தம் பூ தானாக விழுந்தது. அந்தச் சமாதியின் ஒவ்வொரு கற்களிலும் தியாகிகள் ஸ்படிகமாகத் தெரிந்தனர். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அஞ்சியோடிய இனம் தமது ஓட்டத்தை நிறுத்தி, வேட்டைக்காரரைத் துணிந்து வழிமறித்த வீரச்சுடர்ப்பு அந்தக் கட்டிடமெங்கும் பொன்மயமாகப் பேராளி யெறிந்தது. எடுத்து விபரிக்க முடியாத பெரு மைகொண்ட அந்தத் தியாகத் துறவிகளின் முன் பூமணி தலைசாய்த்து நின்றாள். சொற்ப நேரம்தான் வந்த பாதை வழியே மறுபடியும் வேகமாகத் திரும்பினாள்...'

தவிர, வடமராட்சி பிரதேச மண்வாசனையை வெளிப்படுத்தும் நாவலாகவும் கவித்துவ நடையோடு எழுதப்பட்ட நாவலாகவும் இது விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

3.4.5 சுயம்வரம்

கே.எஸ்.துரை எழுதியுள்ள இந்நாவலின் ஒரு பகுதி யாழ்ப்பாணத்திலுள்ள கடலோரக் கிராம மொன்றிலே நிகழ்கின்றது. சிங்கள நேவிக் கப்பலின் செல்வீச்சினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுள் ஒரு வயோதிபரும் கடற் புலிகளும் இணைந்து தங்களுக்கு கொடு - மைகள் விளைவித்த நேவிக்கப்பலை வெடி வைத்துத் தகர்ப்பதே இங்கு நிகழ்கின்றது.

இந்நாவலின் தனித்துவம் பற்றி நூலிற்கு முன்னுரை எழுதிய முல்லையூரான் பின்வரு மாறு குறிப்பிடுவது கவனத்திற்குரியது:[7]

'..... ஈழத்தில் வெளிவந்த தேசிய இனப்பிரச்சி னையை கையாண்ட நாவல்களிலிருந்து கே.எஸ்.துரையின் இந்த சுயம்வரம் என்கின்ற நாவல் சற்று வித்தியாசப்பட்டிருப்பதனை குறிப் -பிட்டே ஆகவேண்டும். அதாவது அரசியற் சித்தாந்தங்களுக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு யதார்த்த நிலையில் நின்றும் விலகி வெறும் சிந்தாந்தக் கலவையாக பல நாவல் -கள் மக்களைச் சென்றடைய முடியாமற் போன ஒரு துர்ப்பாக்கிய நிலையினின்றும் விலகி நின்று, இந்த நாவல் வடமராட்சியின் மண் வாசனையுடன் வெளிவருகின்றது. எழுத்தா ளரின் அனுபவங்கள் இங்கே வருவிக்கிடப் பதை வாசகர்கள் காணலாம். புத்தகமெங்கும் மீன் மணக்கின்றது. கடலும் கடல் சார்ந்தும் வாழ்பவர்களின் வாழ்வையும் அவர்களின் போராட்ட உணர்வினையும் ஆசிரியர் சித்தரி க்கின்றார். இங்கே இரண்டு அதிமுக்கிய விட யங்களுக்கு ஆசிரியர் முனைப்புக் கொடுக்க முன்வருகின்றார். ஒன்று, தாயகத்தின் மக்கள் போராட்ட உணர்வுகளை முனைப்புப் படுத்தல். இரண்டு, தாயகத்தினை விட்டு இடம் பெயர்ந்த

ஈழத்தவர்களின்பால் தமிழ்த்தேசிய உணர்வினை வளர்த்தல் என்பனவாகும். மண்வாசனை, அத்துடன் தமிழ்த்தேசிய எழுச்சி ஆகிய இரண்டு வேறுபட்ட உணர்வு, அழகு ஆகிய இரண்டு புள்ளிகளை இணைக்க முயன்று வெற்றிபெறுவது ஓர் அசாதாரண விடயமாகும்.

'சுயம்வரம் நாவலில் மேற்கூறியவற்றோடு இரத்தமும் சதையும் கொண்ட மாந்தர்களும் வந்துபோகின்றார்கள். வீச்சுக்கார சிவலிங்கம், மயிலர் ஆச்சிமுத்துக்கிழவி, வள்ளிக்கொடி, செங்கமலம், ஜீவா முதலான பாத்திரங்கள் அத்தகைய பண்புகள் கொண்டவை.

சுயம்வரம் நாவலின் சிறப்புக்களுக்கு எடுத்துக் காட்டாக இவ்விடத்தில் ஒரு சம்பவத்தை மட்டும் குறிப்பிடுகின்றேன். நேவிக் கப்பலைத் தாக்குவதற்குரிய வியூகத்திற்கான திட்டம் கிழவர் மயிலரிடம் கருக்கொண்டது. கடற் கரைச் சூழலிலே நிகழ்கின்ற இயற்கைச் சம்பவமொன் -றின் ஊடாகவே, அது இதுதான்.[8]

'தூரத்தே பருந்தொன்றை மூன்று காகங்கள் விரட்டி விரட்டி கொத்திக் கொண்டிருந்தன. அவைகளின் தாக்குதலுக்குப் பயந்து, பணிந்து, வெலவெலத்த தோரணையில் அந்தப்பருந்து உயரக் கடல்நோக்கிப் பறந்து கொண்டிருந்து.

பருந்தின் அச்சத்தாலும் தோல்வியாலும் உற்சாகம் பெற்ற காகங்கள் அதை மேலும் மேலும உற்சாகமாகத் துரத்திக்கொண்டே சென்றன. இடையில் ஒரு காகம் களைப்படைந்து ஆளைவிட்டால் போதுமென்ற நிலையில் கரைப பக்கமாகப் பறந்து வாபஸ் வாங்கிக் கொண்டது. ஆனால் மற்றைய இரண்டு காகஙகளும் பருந்தை இடைவிடாது துரத்திக் கொண்டே அதனுடன் பறந்து நெடுந்தூரம் சென்று மறைந்தன.

மயிலர் சிறுபிள்ளையாக இருந்த காலத்திலிருந்தே காகங்களின் இந்த அறியாமையைப் பார்த்துக்கொண்டே வருகிறார். நடுக்கடல் வரை பயந்த பாவனையுடன் பறந்து செல்லும் பருந்து காகங்கள் களைப்படைந்ததும் திடீரெனத் தனது மூர்க்கத்தனமான தாக்குதலை மிக வேகமாக ஆரம்பிக்கும். களைப்படைந் திருக்கும் காகங்கள் அதன் பிறகுதான் கரையைத் திரும்பிப் பார்க்கும். அவற்றிற்கு நான்கு புறமும் கடலே தெரியும். களைப்பினால் பதகளித்துப் போகும் காகங்கள் கொடிய பருந்தினால் கொத்தப்பட்டு, கடலில்வீழ்ந்து, பரிதாபமாகத் தமது வாழ்வை முடித்துக்கொள்ளும்.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாரோ தெரியாது காகங்களுடன் பறந்து, தூரத்தே மறைந்த பருந்து மறுபடியும் வெற்றிகரமாகத் திரும்பி வந்துகொண்டிருந்தது. அத்துடன் சென்ற காகங்கள் இரண்டும் வழமை போலவே இன்று திரும்பவேயில்லை.

ஆண்டாண்டு காலமாகக் கடற்கரைப் பக்கங்களில் நடதுவரும் இந்தச் சம்பவம் இத்தனை யாண்டு காலமாக மயிலரின் மனதில் சாதாரணமான நிகழ்ச்சியாகவே இருந்து வந்தது. ஆனால் இன்றுமட்டும் அவருக்கு அதில் ஓர் புது அர்த்தம் தெரிந்தது.

அமைதியாக எழுந்து வேம்படிப் பக்கமாக நடக்கத் தொடங்கினார். அவர் மூளையில் ஏதோ ஒரு பொறி தட்டியிருந்தது . .. . இயற்கையின் அழகைக் கெடுக்கும் அந்த நேவிக் கப்பலை மயிலரின் ஆசைப்படி வெடிகுண்டு நிரப்பப்பட்ட படகொன்று மோதி அழிக்க வேண்டுமானால் கருடன் அழைத்துச் செல்லும் காகங்களைப் போல அந்தக் கப்பலையும் தந்திரமாகக் கரைக்கு அழைத்து வர வேண்டும் . . .'

### 3.4.6 ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து

விடுதலைப் போராட்டம் நடைபெறும் நாடுகளிலே ஒன்றிற்கு மேற்பட்ட இயக்கங்கள் உருவாவதும் காலஓட்டத்தில் ஒன்று மேலாதிக்கம்பெற, ஏனைய இயக்கங்கள் செல்வாக்கிழப்பதும் கண்கூடு. இலங்கைத் தமிழ் ஈழப்போராட்டச் சூழலிலும் இஃது நிகழ்ந்

துள்ளது. இங்கு மேலாதிக்கம் பெற்ற இயக்கத்திற்கும் மாற்று இயக்கத்திற்கும் இடையே முரண்பாடுகள், தேடுதல்கள், எதிர்வினைகள் நிகழ்ந்து வந்துள்ளன. இந்நிலையில் மாற்று இயக்கம் சார்ந்தோர் தமது அனுபவங்களை எழுத்தில் வடித்து வந்துள்ளனர். இவ்விதத்தில் இரு படைப்புக்கள் எமது கவனத்திற்குரியன. இவற்றிலொன்று, செழியன் எழுதிய 'ஒரு மனிதனின் நாட்குறிப்பி லிருந்து'.

மேற்குறிப்பிட்ட நாவல் எழுந்த சூழல் பற்றி நாவலாசிரியர் கூறுவன எமது சிந்தனைக் குரியனவாம். அவர் கூறுகிறார்:[9]

'இவன் எந்த நேரமும் கைது செய்யப்படலாம். உயிருக்கு ஆபத்தான நிலைமை. இவனைத் தேடி தெருத்தெருவாக 'அவர்கள் அலைகின்றனர். தலைமறைவான ஒரு வாழ்க்கை. இந்நிலையிலும் இவன் தினமும் எங்கள் மண்ணில் தனக்கு நிகழ்ந்தவற்றை அன்றாடம் குறிப்புகளாய் எழுதி வெளிநாடு ஒன்றிற்கு இரகசியமாகக் கடத்துகின்றான். இவ்வாறு எழுதிக் கடத்தப்பட்ட குறிப்புகளிலிருந்தே இத்தொடர் எழுதப்படுகின்றது'.

இயக்கமொன்றின் தேடுதல் வேட்டைச் சூழலில் தமது ஊரிலிருந்து தப்பி, கொழும்பை அடைந்து, விமானத்தில் ஏறுவது வரையான (13 மார்கழி 1986 தொடக்கம் 29 தை 1987 வரை) அனுபவங்கள் இப்படைப்பில் பதியப் பட்டுள்ளன.

துயரமும் ஏக்கமும் நம்பிக்கையும் விரவ, நாட்குறிப்பு இவ்வாறு முடிவுறுகின்றது : 'இனியதேசமே, மறுபடியும் நான் வருவேன். மனிதன் எனும் இனம் எழுந்துவரும் நாளில் மறுபடி நான் வருவேன். ஒருவேளை என் முற்றாத கனவுகளோடு முதிர்ந்த வயதில் ஏதோ ஒரு நாட்டில் ஒரு அகதியாய் அநாதைப் பிணமாய் பனிக்கட்டிகளுக்கு நடுவிலோ இயந்திரங்களுக்கு அடியிலோ மரணித்துப் போகலாம். காற்றே, மரம், செடிகொடிகளே, என் தலைமுறை மறுபடி இங்குதான் வேர் விட்டு, இரு தளிர்க்கரம் நீட்டி வளரும் என் புதல்வர்கள் அல்லாது போனால் என் பேரர் களில் ஒருவர் வருவார்கள். இத்தாய்த்திரு நாட்டை முத்தமிட வருவார்கள். இனிய தேசமே, தெரிந்தோ, தெரியாமலோ நான் ஏதும் தவறு செய்திருந்தால் என் தலைமுறை யாவது இங்கு வாழவிடு. விமானம் மேகக் கூட்டத்தினுள் புகுந்து மறைந்து போனது.

### 3.4.7 கொரில்லா

ஷோபா சக்தி எழுதிய கொரில்லா, இலங்கை யிலிருந்து தப்பி பிரான்ஸ் சென்ற கெக்கிராஜ் என்பவர் அரசியல் தஞ்சம்கோரி, விண்ணப்பம் செய்யும் வழி தனக்கு இலங்கையில் இலங்கை - இந்திய இராணுவத்தினராலும் தமிழ்ப்போரா ளிக் குழுக்களாலும் ஏற்பட்ட கொடுமைகளை விபரிக்கும் பாணியில் எழுதப்பட்டுள்ளது. எழு தப்பட்ட முறைமையும் உண்மைச் சம்பவங் கள் அடிக்குறிப்புகளாக இடம்பெறுவதும் இப்படைப்பினை உண்மைத் தன்மைமிக்க தாகப் பரிணமிக்கச் செய்துள்ளன. இத்தியாதி தன்மைகளால் இப்படைப்பு தன்மைய ஓட்டத் துடன் வாசகரை உணர்வு பூர்வமாக நெருங்க வைக்கிறது.

'பூமிப் பரப்பின் எந்த ஒரு புள்ளியிலும் நிலை கொள்ள முடியாமல் பரிதவித்து அலைய நேர்கின்ற மனங்கள் பற்றிய நேர்மையான பதிவு' என்றும் 'ஒரு குடும்பத்தின் கதையைக் கலைத்துப் போடுவதன் மூலம் தீர்வு முழுவதும் நடத்தும் கதையாகி விடுகிறது' என்றும் 'சீரிய ஸான படைப்பு என்றாலே மிடுக்கான வாக்கி யங்களும் கரடுமுரடான சொற்பிரயோகங் களும் கொண்டது என்ற மறைமுகக் கருது கோள் உருவாகியிருக்கும் இக்காலகட்டத்தில் சரளமான, இயல்பான நடையில் எழுதப்பட் டுள்ளது'. என்றும், 'தமிழ் சுவை என்ற அம்சம் இந்த நாவல் முழுவதும் காணக்கிடைக் கின்றது' என்றும் 'பல்வேறு கோணங்களில் தமிழ்நாட்டு விமர்சகர்கள், வாசகர்கள் மத்தியிலே கொரில்லா பாராட்டுக்குள்ளாகியுள்ளமை இவ் விடதத்தில் விதந்துரைக்கப்பட வேண்டிய தாகின்றது'.

4. புகலிட நாடுகளிலே வாழ்கின்ற தமிழர் கள் பற்றியவை

4.1. அகதி நிலை வாழ்வு

4.1.1. வானம் வசப்படும்

புகலிட நாடுகளிலே குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே வாழ்கின்ற தமிழர் -களுள் கணிசமானோர் நிரந்தரமான அரசி யல் தஞ்சம் கோரி விண்ணப்பித்து அது கிடைக்கின்ற வரையிலே அகதி நிலை அந்தஸ்தில் அகதி முகாம்களிலே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அத்தகைய வாழ்க் கையின் சொல் லொண்ணா அவலங்களை விபரிக்கின்ற புகலிட நாவல்களுள் பொ.கருணா கரமூர்த்தி எழுதிய 'வானம் வசப்படும்' குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

மேற்கு ஜேர்மனியில் அகதிமுகாமாக -வுள்ள புராதனமான டியூலிப்ஸ் ஹோட்டலி -லுள்ள மூன்றாம் தளத்தில் வதிகின்ற இலங்கை அகதிகளான முத்துராசா, அத்வைகன், திலகன, நகுலன், சுருவில் ஆகியோரது அன்றாட வாழ்க்கையை சித்திரிப்பதனூடாக, தமிழ் அகதிகள் அனைவரதும் புகலிட வாழ்க் கையின் குறுகிய வெட்டுமுகமாக இந்நாவல் அமைகின்றது என்பதில் தவறில்லை.

இவர்களோடு வாழ்கின்ற ஏனைய நாட்டு அகதிகளுக்கும் இவர்களுக்குமிடையே யான தொடர்புகளும் ஆங்காங்கே எடுத்துக் காட்டப்படுகின்றது. இவ்விதத்தில் அவலமான வாழ்வை ஓரளவு வெளிப்படுத்த முயல் கிறது என்றுகூடக் கூறலாம்.

இவர்களோடு எவ்வாறோ தொடர்புபட்டு விடுகின்ற மேலைத்தேயப் பெண்களது வாழ்க்கை முறையில் ஏற்பட்டுவரும் அதிர்ச்சியூட்டும் மாற்றங்களையும் (எ-டு : சிறுசிறு கைச்செலவு -களுக்காக, அவ்வப்போது சோரம் போதல், இந்தியர்களிடம் பிள்ளைகளைப் பெற்று விலை பேசி விற்று வருமானம் தேடுதல்) இந்நாவல் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

4.1.2 ஒரு அகதி உருவாகும் நேரம்

பொ.கருணாகரமூர்த்தியின் இந்நாவல், அகதி நிலை வாழ்க்கை பற்றியதன்று, மாறாக இலங் கைத் தமிழரொருவர் அகதியாக ஒரு நாட்டில் நுழைவது தொடக்கம் தஞ்சம்தரத் தயாரா கவுள்ள நாடுகளிலே சேர்வது வரையில் எதிர் கொள்ள நேர்கின்ற சிக்கல்கள் - ஆபத்துக்கள் -பிரச்சினைகள் பற்றி அகன்ற தளத்தில் நின்று ஆழமாக - அங்கத உணர்வுடன் அலசுகின்றது.

4.2. பெண்கள் வாழ்வு

4.2.1 மாற்றம்

மேற்குறிப்பிட்ட எழுத்தாளரே எழுதியுள்ள இப்படைப்பு, பெண்நிலைவாதச் சிந்தனைக் குட்பட்டிருந்த பெண்ணொருத்தி தனக்கென ஒரு துணையைத் தேடவேண்டிய கட்டாயம் வரும்போது தடுமாறிப் போவதையும் புகலிட நாட்டில் குடும்ப வாழ்வில் ஈடுபட்டபின் முற்றாக பாரம்பரியப் பெண்ணாக மாறிவருவதையும் தத்ரூபமான முறையில் வெளிப்படுத்துகின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று படைப்புக்கள் பற்றியும் தமிழ்நாட்டு எழுத்தாளரும் விமர்சகருமான ஜெயமோகன் கூறும் விடயங்களுள் மூன்று கவனத்திற்குரியவை. அவர் கூறுவதாவது [12]

'...... இந்தத் தொகுப்பிலுள்ள கதைகள் இலங்கைப் படைப்புகளுக்கு மிக அபூர்வமான கூரிய அவதானிப்பின் மூலம் உருவாகும் சிக்கல் தன்மையும், சமநிலையும் உணர்ச்சி நிலையுடன் இணைந்து வெளிப்படுகின்றன. சமீப காலத்திய ஆகச் சிறந்த சில தமிழ் நூல்களில் ஒன்றாக இதை நான் கருதுகிறேன்.

'கருணாகர மூர்த்தியின் கதைகளில் இச்சிரிப் புத்தான் (நாட்டார் கதையொன்றிலே, யானை தலையை இடறவருகையில் அதற்குரியவன், சூழவுள்ள ஏனைய விடயங்களைவிட, கூட்டத் தில் நிற்கும் ஒரு பெண்ணைப் பார்க் கும்போது தனக்கு ஏற்பட்ட ஆண்மை எழுச்சியை எண்ணிச் சிரித்தமை: க-ர்) உள்ளது. அநேகமாக எல்லா பக்கங்களிலும், மிகச் சுவாரஸியமான வாசிப் பனுபவத்தை தருவதாக இருப்பது அதுவே, இலங்கையின் குக்கிராமத்திலிருந்து மொழி தெரியாத அன்னிய தேசத்திற்கு வந்து, விமான நிலையம் என்ற ஏமாற்றுச் சூழல்

பாதையைத் தாண்ட முடியாமல் சுற்றிச்சுற்றி வரும் சட்டநாதனின் கதை (ஒரு அகதி உருவா கும் நேரம்) முதல் வாசிப்பில் புன்னகையை உருவாக்கத் தக்கதுதான். ஆனால் அதில் பெரிய சோகம் உள்ளுறைந்துள்ளது. அந்த ஏமாற்றுச் சுழல்பாதை உண்மையில் விமான நிலையமே அல்ல. புலம் பெயர்ந்த தமிழனின் வாழ்வேதான் என்று எண்ணத் தோன்றியது. ஒருவர்மீது ஒருவராக எட்டடிக்கு எட்டடி அறை யில் வாழும் நண்பர்களின் வேலைத் தேடல், காமம் எல்லாமே முதல் வாசிப்பில் புன்னகை யைத் தான் எழுப்பு கின்றன. மானுட இயல்பு களையும் அவை சூழலில் பிரதி பலிக்கும் விதத்தையும் கூர்மையாக அவதானித்து பதிவு செய்திருப்பதன் மூலம் எழுப்பப்படும் புன்னகை இது மிக அடக்கிய தொனியில் அசோக மித்திரனிலும் சற்றுத் தூக்கலான அங்கத்துடன் சுந்தரராமசாமியிலும் கதை சொல்லும் வக்கணை யுடன் கி.ராஜநாராயணனிலும் இந்த அம்சம் வெளிப் படுவதனாலேயே அவர்கள் சமகாலத் தமிழின் ஆகப்பெரிய படைப்பாளிகளாக கருதப்படுகிறார்கள்.....

'இப்படைப்புக்களில் தெரிவது நானே தான் முகமறியா ஊரின் விமான நிலையத்தில் வழிதவறிய எலி மாதிரி தவிக்கிறேன். இடுக் கின அறையில் காமத்தில் குமைகிறேன், அகதியாகிறேன். என்னை எனக்குக் காட்டும் இக்கதைகள் புதுப்புது வாசல்கள் திறக்க மீண்டும் மீண்டும் படிக்க முடியும். இது ஒரு 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' என்று அடை யாளம் போடுவது எனக்கு கசப்பு தருகிறது. மேலான படைப்புக்கள் அத்தகைய கூண்டு களிலிருந்து சிறகடித்து எழுந்து வருகின்றன என்பதற்கு இந்நூலும் ஓர் உதாரணமாகும்.

### 4.3 தனிமை வாழ்வு

அழிவின் அழைப்பிதழ் தியாகலிங்கம் எழுதி யுள்ள அழிவின் அழைப்பிதழ் என்ற கவனத் திற்குரிய நாவல் பின்வருமாறு ஆரம்பிக்கப் படுகின்றது. [13]

'ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன, இந்த நாட் டிற்கு வந்து என்னதான் நண்பர்களுடன் சேர்ந்து இருந்தாலும் தனிமையில் இருப்பது போன்ற உணர்ச்சிதான் எப்பொழுதும் மனதில்!. நாட்டிலே அப்பா அம்மாவுடன் இருக்கும்போது இப்படி தனிமை உணர்ச்சி தோன்றியது இல்லை. ஆண்களுடன் ஆண்கள் அன்னி யோன்னி யமாக இருப்பது நடிப்பது போல . . . உடம்பைத் தொட்டுக்கொள்ளாத உறவு இது, இதில் எப்படிப்பட்ட அன்னியோன்னியம் இருக்க முடியும்...'

எத்தனை ஆண்களுடன் சேர்ந்திருந்தாலும், தனிமையில் இருப்பது போன்றதோர் உணர்ச் சியே எப்போதும் சிலருக்கு இப்படி வாழ்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் என்னால் இதைத் தாங்க முடிய வில்லை. எனக்கு இப்படி வாழ்வது நரகவேத னையாக இருந்தது. இப்படி வாழ்வதைவிட தற்கொலை செய்துவிடலாம் போலத் தோன் றும்..... மனதில் அந்த ஆசை வந்தபின்பு எந்தச் சமாதானத்தையும் மனம் கேட்பதில்லை. ஊரில் இருந்தால் இப்படி பூதாகரமான பிரச்சி னையாக இது இருந்திருக்காது. இங்கு தனிமை ஒரு பக்கம். வெள்ளையர் அனுபவிப்பதைப் பார்த்தால் ஏற்படும் ஏக்கம் இன்னொருபுறம் இரண்டும் சேரும்போது மனசின் வேதனை ஆயிரம் மடங்குகளாகி விடுகிறது. அப்பா, அம்மா அந்த வேதனையைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை .... நான் சாதாரண மனிதன் என்னைப் பருவம் பந்தாடுவதை உணரு கிறேன். பலருக்கு உண்மையைத் சொல்கி றேன். பலருக்கு உண்மையைச் சொல்லத் துணியவில்லை..... நான் உண்மையைச் சொல்கிறேன். நான் வெக்கப்படவில்லை. வெக் கப்படவேண்டிய விஷயமல்ல. இந்தப் பெண் -களைப் பார்த்தால் மனசு பேதலிக்கிறது. காதல் வருகின்றதோ இல்லையோ அவ ளோடு கலவி செய்ய வேண்டும் போல ஓர் உணர்ச்சி...... பந்தி நீண்டதாயினும் புகலிட நாட்டுத் தமிழ் இளைஞர்கள் எதிர்நோக்கும் ஒரு முக்கிய பிரச்சினை பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் அதனால் தமிழ் இளைஞர் வாழ்வில் - ரமணராகவன் - ஏற்படும் பாரதூரமான

பதிப்புப் பற்றியும் (எயிட்ஸ் நோக்குள்ளாதல்) இந்நாவல் மனத்தை உருக்கும் வண்ணம் சித்திரிக்கின்றது, முக்கிய பாத்திரங்களின் மன உணர்வுகள் நுணுக்கமாகவும் தத்ரூபமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. பலரும் எழுதத் தயங்கும் பிரச்சினையொன்றை அசல முற்படு வது மட்டுமன்றி, இலங்கைத் தமிழ்ச் சமூகத் தை குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத் தையும் அதன் இறுக்கமான பண்பாட்டுப் பேணுகை யையும் கேள்விக்குட்படுத்துவதனாலும் இந்நாவலின் வரவு முக்கியம் பெறுகின்றது.

### 4.4 இனவெறி நாளை

மேற்குறிப்பிட்ட நாவலாசிரியர் எழுதிய பிறிதொரு நாவல் இதுவாகும். பதிப்பாசிரியர் கூறுவது போல[14]. ''இந்த நாவல் கையாளும் கதை தமிழுக்குப் புதிது ..... புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்கும் இலங்கைக் கும் விடுமுறைகளிலே வரும் நம்மவர்கள் உண்மைகளைப் பேசத் தயங்குகின்றார்கள். மேற்குலகின் வளமான வாழ்க்கையைப் பெற்று விட்டதான கனவுகளைக் கலைக்க விரும்பாத நாகரிகத்தைப் பயிலுகின்றார்கள். புகலிட நாடுகளில் உருவாகிவரும் புதிய நெருக்கடிகள பற்றி மனம் திறந்து பேசுவதைத் தவிர்க்கின் றார்கள். அவர்கள் அனுபவிக்கும் இன்னல் களும், இழப்புகளும் ஆழமானவை'. இத்தகைய சிக்கலான புதிய பிரச்சினைகளுள் ஒன்றுதான் ஐரோப்பிய நாடுகளிலே உருவாகியுள்ள நவநாஜிகள் இயக்கம். இந் 'நவநாஜிகள் வெள்ளைத்தோல் பெருமிதர்கள் தமிழர்களை வெறுக்கின்றார்கள். கறுப்புப் பன்றிகள் என்று தூற்றுகின்றார்கள்'[15].

மேற்குறித்த நவநாஜிகள் இயக்கத்திற்கு நோர்வேயில் வாழ்கின்ற தேவகுருவின் குடும்பம் இலக்காகின்றது. காந்தியவாதியான தேவகுரு அகிம்சையில் உறுதிகொண்டு, அந்த நவ நாஜிகளை அன்பினால் திருத்த முயல்கிறார். அவருடைய மனைவியின் மீதான துன்புறுத் தல்களில் தொடங்கி அவருடைய மகள் உயி ரோடு எரித்துக் கொல்லப்படும் வரை வன் முறை வளர்கின்றது. இறுதி மட்டும் அகிம்சை நெறியில் நிற்கும் தேவகுரு, அந்த நொஸ்க் (நார்வே மொழி) இனவெறியர்க ளுக்கு, தன் அகிம்சை நெறியின் உறுதியை விளக்கி, தன்பக்கத்து நியாயத்தை உணர்த்து வதோடு நாவல் நிறைவு பெறுகின்றது.

'இது புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் கதை. இன்றளவும் தகவல் ஊடகங்களால் இருட்டடிப்புச் செய்யப்படும், தமிழ் மக் களின் அறியப்படாத துயரம்'[16] என்று இன் குலாப் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பினும் நாவல் எடுத்தாண்ட பிரச்சினை புகலிட நாடு களிலே வாழ்கின்ற மூன்றாம் உலக நாட்டினர் அனைவருக்கும் உரியதே. இவ்விதத்தில் இவ் இலங்கைப் புகலிட நாவலூடாக, தமிழ்நாவல் தனது எல்லைகளை அகட்டி, மூன்றாம் உலக நாடுகளின் நாவல் போக்குகளுடன் சங்கமித் துக் கொண்டிருக்கின்றதென்பதில் தவறில்லை.

### 4.5. இலண்டன் வாழ் தமிழர்

புகலிட நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் பற்றிய நாவல்களுள் இலண்டன் வாழ் தமிழர்கள் பற்றிய நாவல்களே அதிகம் வெளி வந்துள்ளன. அனைத்தும் ராஜேஸ்வரி பாலசுப பிரமணியத்தினால் எழுதப்பட்டுள்ளன.

இவரது நாவல்களுக்கென பொதுவான சில இயல்புகளுள்ளன. இவற்றுள், (i) இலங்கை யிலும் புகலிடத்திலும் வாழ்கின்ற தமிழ்ச் சமூகம், அதன் பண்பாடு, அதன் அரசியல் என்பன விமர்சனத்திற்குட்படுகின்றமை. (ii) இவற்றிற்கேற்றவாறு பாத்திரங்கள் சிருஷ்டிக்கப் படுகின்றமை என்பன குறிப்பிடத்தக்கன. இலங்கை யிலோ புகலிட நாடுகளிலோ எழுந்த வேறெந்தத தமிழ் நாவல்களிலும் இப்பண்புகள் இடம் பெறுவது அரிதாகும்.

இவரெழுதிய 'ஒருகோடை விடுமுறை' இலண் டனில் வாழ்கின்ற தமிழ் இளைஞர்களின் அரசியல் ஈடுபாட்டை ஓரளவு வெளிப்படுத்த முற்படுகின்றது. தமிழர் சிங்களவர் ஒற்றுமை யைப் பேசும் முற்போக்கு வாதிகளும் (எ-டு சத்தியன்) தமிழீழ விடுதலையில் நாட்டம்

கொண்டு செயற்படுவோரும் (எ-டு: சபேசன்) இதில் இடம் பெறுகின்றார்கள்.

'உலகெல்லாம் வியாபாரிகள் 1970 - 1980 காலப் பகுதியில் இலண்டனில் வாழ்ந்த தமிழரது அரசியலுணர்வுகளை வெளிப்படுத்துகின்றது. பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்ட தமிழ்த் தலைவர்களை ஆதரிப்பவராக பேரின்ப நாயகமும் ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பவனாக கார்த்திகேசனும் இடம்பெறுகின்றார்கள். இலண்டன் வாசியான அன்ரனியைக் காதலிப்பவளாக பேரின்பநாயகத்தின் ஒரு மகளான மீனாவும் தந்தைக்கடங்கி தனது காதலைத் துறந்து பணக்காரனாகிய சிவநேசுவை மணந்து அவனது கொடுமைகள் தாங்காமல் அவனைக் கைவிட்டு தனது காதலனான கார்த்திகேயனை அடையும் தீர்மானமுடையவளாக பேரின்பத்தாரின் மற்றொரு மகளான சகுந்தலாவும் இடம் பெறுகின்றார்கள்.

இந்நாவலாசிரியரின் சமூகப் பார்வையின் அடிப்படை எத்தகையதென்பதனை வெளிப்படுத்துவதாக நாவலுக்கான தலைப்பு (உலகெல்லாம் வியாபாரிகள்) அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆங்காங்கு இடம்பெறும் உரையாடல்கள் அதனை தெளிவாக்குகின்றன. எ - டு :

'கல்யாணம் என்பது என்னைப் பொறுத்தவரையில் இரண்டு மனிதப்பிறப்புகளுக்கிடையில் நடக்கும் ஒரு நிகழ்ச்சி. அது சமயச் சார்பிலோ அல்லது வேறு எந்தப் பொருளாதார முறையிலோ அமைவது வெறும் வியாபாரம். உன் தந்தை போன்றவர்களுக்கு வாழ்க்கையில் எல்லாமே வியாபாரம். தனிப்பட்ட வாழ்க்கையிலோ அரசியலைப் பொறுத்த வரையிலோ எதிலும் லாப, நட்டத்தின் அடிப்படையிலே தான் அவர்களால் யோசிக்கமுடியும்.'[17].

- கார்த்திகேயன் -

'காசுக்காக எதையும் வாங்க எத்தனையோ தமிழர்கள் காத்திருக்கினம். எங்கட தமிழர்களைப் பொறுத்தவரையில் பெண்கள் வெறும் கத்தரிக்காய்கள் தானே வாங்கலாம் விற்கலாம்'[18].

- சகுந்தலா -

'சில பெண்களுக்கு தங்களை தாங்களே வருத்திக் கொள்வதில் ஒரு திருப்தி, தன் ஆத்மீக உணர்ச்சிகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு மற்றவர்கள் கண்களுக்கு நல்ல பிள்ளைப் பட்டத்துக்கு நடிப்பதும் ஒரு வியாபாரம் தான். முதலாளியும் ஏகாதிபத்திய வாதியும் தங்கள் சுயதேவைக்கு மற்றவர்களின் உழைப்பையும் உரிமையையும் விலைக்கு வாங்குகிறார்கள். உன்போன்ற பெண்கள் ஊருக்கு வேடம்போட தியாகம், பெண்மை, கற்பு, குடும்பம் என்ற கௌரவமான சொற்களுக்காகத் தங்களையே விற்றுக் கொள்கிறார்கள். தங்கள் தன்மானத்தை சுய உணர்வை விற்றுக் கொள்கிறார்கள்'[19].

- கார்த்திகேயன் -

தேம்ஸ் நதிக்கரையில், 1972 - 74 கற்கும் நோக்குடன் இலண்டனுக்கு வந்து வாழ்ந்த தமிழ் இளைஞர்களின் மன ஓட்டங்கள் வாழ்க்கையைப் பார்க்கும் விதம் என்பவற்றை அடிபடையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக அக்காலப் பகுதியில் வந்த பெரும்பாலான இளைஞர்களின் 'காதல்கள்' வெளிநாட்டுப் பெண்களின் உறவில் தங்கியிருந்தமை (எ - டு : செந்தில், மெரா) பற்றியும் அவ்விளைஞர்கள் கல்வி முடிந்ததும் இலங்கைக்குத் திரும்பி திருமணச் சந்தையில் தம்மை விற்பது பற்றியும் (எ -டு : செந்தில், யாழ்ப்பாணப் பெண் ஒருத்தி) இந்நாவலில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

'பனிபெய்யும் இரவுகள்' அடிப்படையில் காதற்கதை எனினும் வித்தியாசமான காதற்கதை, பருவகால அடிப்படையில் தோன்றும் காதல் (ராதிகா - தியாகு), காதலுக்காகத் தன்னை அர்ப்பணிப்பது (தியாகு, சாரதா) பரஸ்பரம் உணர்ந்து கொண்டவரின் இன்டெலெக்சுவல் காதல் (இராமநாதன் சாரதா) என மூன்றாகக் காதலை பிரித்துப் பார்க்கும் கோட்பாட்டை நாவலாசிரியர் கதை மாந்தர் மூவரின் தனிப்

பட்ட காதலுணர்வுகள் மூலம் நாவலில் காட்ட முனைந்துள்ளார்.

மேலும், குழந்தைக்காக ஏங்கும் சாரதாவிற்கு 'ரெஸ்ற் ரியூப் பேபி'க்கு வழிகாட்டுவதும் அதற்காக கணவன் இராமநாதன் கையாளும் தந்திரோபாயமும் பாரம்பரியத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் அதிர்ச்சி தரக்கூடியன.

பெண்கள் மட்டும் தியாகம் செய்ய வேண்டும் என்ற ஆணாதிக்கக் கருத்தியலுக்கு மாறாக ஆண்களாலும் முற்போக்காக வாழ்ந்து தியாகம் செய்ய முடியுமென்று (இராமநாதன் ஊடாக) காட்ட முனைவதும் அத்தகையதே.

'வசந்தம் வந்து போய்விட்டது' என்ற பிறிதொரு நாவல் மாறிவரும் பண்பாட்டுச் சூழலுக்கு புகலிடத் தமிழ்ப்பெண்கள் எவ்வாறு முகங்கொடுக்க முற்படுகிறார்கள் என்பதனை அதிர்ச்சிகளுடன் வெளிப்படுத்துகின்றது.

'அவனும் சில வருடங்களும்' என்ற இன்னொரு நாவல் மேற்கூறிய நாவல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு, திரைப்படக் கல்லூரியில் பயில்கின்ற சிலரது அனுபவங்களைப் பற்றி பேசுகின்றது.

### 4.6. மேற்கு ஐரோப்பியரது வாழ்க்கை

புகலிட நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் பற்றிய நாவல்களிலே மேற்கு ஐரோப்பியரது வாழ்க்கை பற்றியும் பேசப்படுவது இயல்பானதே. இ:்.து குறிப்பிட்ட சில நாவல்களின் முக்கிய கூறாகவிருக்கின்றது. சில நாவல்களில் பலவிடயங்களுள் ஒன்றாகவிருக்கின்றது. இவ்விதத்தில் முதல் வகை நாவல்கள் பற்றிக் கவனிப்போம்.

முன்னர் குறிப்பிட்டதுபோல, சுயம்வரம் நாவலின் ஒரு பகுதி, டென்மார்க்கில் டேனிஷ் குடும்பமொன்றின் வீட்டிலே தங்கியிருக்கின்றான். வீட்டின் சொந்தக்காரர் இயரிக் ஜென்சன், மகள் சோபியா இவர்கள் வாழ்க்கை அமைதியை விரும்பும் டெனிஷ் குடும்பத்தினர் பலரது வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றது. ஜீவாவை விரும்புகின்ற சோபியா ஊடாக, டேனிஷ் பெண்களது நற்பண்புகள் தத்ரூபமாக வெளிப்படுத்தப்படுகின்றன.

''அழிவின் அழைப்பிதழில்'' இடம்பெறும் நோர்வேஜியர்களுள் கெய்தி என்ற பெண் முக்கியமானவள். அவள் உடல் விற்பவளாயினும், அவளிடமும் நற்பண்புகளிருப்பது எடுத்துக் காட்டப்படுகின்றது.

இலண்டன் வாழ் தமிழர்களது வாழ்வைப் பற்றிச் சித்திரிக்கின்ற ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாவல்கள் அனைத்திலும் இலண்டன் வாழ் ஆங்கிலேயர்கள் முக்கிய இடம் பெறுகின்றார்கள். இவற்றுள் ''தேம்ஸ் நதிக கரையில்'' முக்கியமானது. இதில் வருகின்ற அபலைப்பெண் மைரா செந்திலை விரும்புகின்றாள். நம்புகின்றாள். வயிற்றில் கருவைச் சுமக்கின்றாள். இறுதியாக செந்திலால் ஏமாற்றப்படுகின்றாள். இத்தகைய மைரா சிறந்த குணசித்திர பாத்திரமாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளாள்.

## 5. முடிவுரை

இலங்கைப் புகலிட நாவல்களாக 1983 தொடக்கம் இன்றுவரை வெளியானவற்றுள் 22 நாவல்கள் இங்கு கவனத்திற்குட்படுத்தப்பட்டுள்ளன. தவிர, வெளிவந்த வேறுசில நாவல்கள் பற்றிய தகவல்கள் இருப்பினும்.[20] இவ் ஆய்வின்போது அவற்றைப் பெறமுடியவில்லை. தொடர்ந்து கதையாக வந்து முற்றுப் பெறா சில நாவல்களுமுள்ளன.[21] எவ்வாறாயினும், புகலிட நாவல்களாக இன்றுவரை ஏறத்தாழ 30 நூல்களே வெளிவந்திருக்கலாமென்று ஊகிக்கலாம்.

ஆய்விற்குக் கிடைத்த 22 நாவல்களுள் இலங்கைவாழ் தமிழர்கள் பற்றியவையாக 09 நாவல்களுள்ளன. புகலிட நாடுகளில் வாழ்-கின்ற தமிழர்களைப் பற்றியனவாக 04 நாவல்-களுள்ளன. ஏனையவை, புகலிட நாடுகளையும் இலங்கையையும் களமாகக் கொண்டுள்ளன.

மேற்கூறிய நாவல்கள் இலங்கை நாவல் வளர்ச்சியில் பெறுகின்ற முக்கியத்துவம் தொடர்பாக பின்வருவனவற்றைக் குறிப்பிட லாம்.

1. இலங்கையின் அரசியற் சூழலில் இலங்கை யில் வெளிவந்திருக்க முடியாத பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் வெவ்வேறு மட்டத்திலான விளைவுகளும் பற்றிய நாவல்களின் வரவு இலங்கை நாவல் வளர்ச்சிக்கு வலுவும் வளமும் அளிக் கின்றது.
2. புகலிட நாட்டு வாழ்க்கை காரணமாக புதிய அனுபவங்கள், புதிய களங்கள், புதிய பிரச்சினைகள் என்பவற்றால் இலங்கை நாவல்களின் பரப்பு அகன்றுள்ளது. (அழ காகக் கூறுவதாயின் 'தில்லையாற்றங்கரை தொடக்கம் தேம்ஸ் நதிக்கரை வரை அது வியாபித்துள்ளது'.)
3. இலங்கைத் தமிழ்ச்சமூகம், அரசியல் பாரம்பரியப் பண்பாடு என்பன இவற்றின் வரவால் ஆழமான விமர்சனத்திற்குட்பட் டுள்ளது.
4. இலங்கையின் நண்டகால நாவல் வரலாற்றிலே கூட ஒருங்கே அத்தன்மைகள் கொண்ட நாவல்களாக உள்ளடக்கமும் கலைத்து வமும் இலங்கை நாவல்கள் அருகிய சூழ லில், 'அழிவின் அழைப்பிதழ்', 'கெரில்லா', 'ஒரு பூ', 'வானம் வசப்படும்', 'ஒரு அகதி உருவாகும் நேரம்', 'சுயம்வரம்', ஆகிய நாவல்கள் குறுகிய காலப்பகுதியில் வெளி வந்துள்ளமை இலங்கை நாவல் வளர்ச் சியை ஓர் ஆரோக்கியமான நம்பிக்கை யுடனான-திசை நோக்கித் திருப்பியுள்ளன.
5. அழிவின் அழைப்பிதழ், வானம் வசப்படும் புகலிட நாவல்கள் கையாளும் விடயங்கள் தமிழருக்கு மட்டுமன்றி புலம் பெயர்ந்து வாழ்கின்ற மூன்றாம் உலக நாட்டினர் அனை வருக்கும் பொருந்துகின்றன. . . . இவ்வழி, இந்நாவல்களுடாக, ஒட்டுமொத்த மான தமிழ் நாவல் வளர்ச்சி மூன்றாம் உலக நாட்டு நாவல் வளர்ச்சியோடு ஒன்றித் துப் போகின்றமை தமிழ்நாவல் வளர்ச்சிப் போக்கி லேற்பட்ட பாய்ச்சல் என்னும் படியாகவுள்ளன.
6. இறுதியாக இலங்கையில் தமிழ் நாவல் வளர்ச்சி எய்தவில்லை என்று கருதுகின்ற தமிழ்நாட்டு விமர்சகர் சிலரது அபிப்பிரா யத்தை உடைக்கின்ற சில நாவல்கள் (பொ.கருணாகரமூர்த்தியின் படைப்புகள்) வெளிவந்துள்ளமையும் அழுத்தியுணரப்பட வேண்டியதாகின்றது.

**அடிக்குறிப்புக்கள்**


1. பார்த்திபன; ஆண்கள் விற்பனைக்கு, வெளி யீடு : தென்னாசிய நிறுவனம், மார்கழி 1988, ப.5.
2. பார்த்திபன்; பாதிஉறவு, வெளியீடு: தென் னாசிய நிறுவனம்
3. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம;' தில்லை யாற்றங்கரை', மணிமேகலைப் பிரசுரம், சென்னை 1998, ப.4.
4. விமல் குழந்தைவேல; பேட்டி, வீரகேசரி, 10.08.2003
5. துரை கே.எஸ்.; ஒருபூ; டென்மார்க், பக் 159-162.
6. மே.கு.நூ, பக் 165 - 167
7. துரை.கே.எஸ்., சுயம்வரம், டென்மார்க் 1993
8. மே.கு.நூ. பக் 54-55
9. செழியன், ஒரு மனிதனின் நாட்குறிப்பி லிருந்து, கனேடியன் நியூ புக் பப்ளிகேசன், ரொறான்ரோ, கனடா, 1998
10. மே.கு.நூ. பக் 174
11. யுவன் சந்திரசேகர்; எனக்குப் பிடித்த புத்தகம், கொரில்லா, காலச்சுவடு, மார் - ஏப் 2003, பக் 58 - 59.
12. ஜெயமோகன், 'இவை என் முகங்கள்', ஒரு அகதி உருவாகும் நேரம், பொ.கரு ணாகரமூர்த்தி, ஸ்நேகா, 1998.
13. தியாகலிங்கம்.இ, அழிவின் அழைப்பிதழ், மித்ர வெளியீடு, சென்னை, ப.1.
14. தியாகலிங்கம்.;இ; நாளை, மித்ர வெளியீடு, சென்னை, 1999, ப.5
15. மேகு.நூ. பக் 5

16. மே.கு.நூ. பக் 7
17.ராஸேஸ்வரி பாலசுப்பிரமணியம், உலகெல் லாம் வியாபாரிகள், நீலமலர், 1992, பக். 66.
18.மே.கு.நூ. பக் 98
19.மே.கு.நூ. பக் 197
20.நிஜங்கள், ஜனனம் ஆகிய இரு படைப் புகள் பார்த்தீபனால் எழுதப்பட்டுள்ளன. ஆதாரம் 'பாதி உறவு' நாவலின் அட்டைக் குறிப்பு.
21.'தூண்டில்' (1988) சஞ்சிகையில் 'கனவை மிதித்தவன்' என்ற நாவல் பிரசுரமாகி யுள்ளது. பார்த்திபன் எழுதிய இந்நாவல் அகதிமுகாம் வாழ்வு பற்றியது. சுவடுகள் (1994) சஞ்சிகையில் ஆதவன் எழுதிய 'மண்மனம்' போராட்ட சூழலில் அப்பாவி இனைஞனொருவன் பற்றியது.

மூல நூல்கள் - (புகலிட நாவல்கள்)
1.ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், ஒரு கோடை விடுமுறை, அலை வெளியீடு, 1981.
2.பார்த்தீபன், வித்தியாசப்படும் வித்தியா சங்கள், தென்னாசிய நிறுவனம், 1986
3. ......... பாதி உறவு, தென்னாசிய நிறுவனம், ஜுலை, 1987
4. ......... ஆண்கள் விற்பனைக்கு தென்னாசிய நிறுவனம் மார்கழி 1988
5. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் உலகெல் லாம் வியாபாரிகள் நீலமலர் ஏப்பிரல் 1991.
6. .......... தேம்ஸ் நதிக்கரையில் பாரி நிலையம் ஆகஸ்ட் 1992
7. துரை.கே.எஸ். சும்வரம் டென்மார்க் பெப் 1993
8. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் பனிபெய் யும் இரவுகள், பாரிநிலையம் சென்னை செப். 1993
9. துரை.கே.எஸ். ஒரு பூ, டென்மார்க் ஆகஸ்ட் 1995
10. கருணாகரமூர்த்தி.பொ, அகதி உருவாகும் நேரம் (வானம் வசப்படும், மாற்றம் என்பன வும் உள்ளடங்கியுள்ளன.) ஸ்நேகா, ஏப்ரல் 1996
11. தியாகலிங்கம்.இ; அழிவின் அழைப்பிதழ் மித்ர வெளியீடு சென்னை 1997
12. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் வசந்தம் வந்து போய்விட்டது குமரன் பப்ளிஷர்ஸ் சென்னை 1997
13. ......... தில்லையாற்றங்கரையில் மணி மேகலைப் பிரசுரம் சென்னை 1997
14. செழியன் ஒரு மனிதனின் நாட் குறிப்பி லிருந்து கனேடியன் நியூ புக் ப்ப்ளிகேசன் ரொறன்ரோ கனடா ஜுன் 1998
15.கடற்புத்திரன், வேலிகள் ('வெகுண்ட உள் ளங்கள்' படைப்பும் இணைந்துள்ளது.) கும ரன் பப்ளிஷர்ஸ் சென்னை 1998.
16. தியாகலிங்கம்.இ, நாளை மித்ர வெளியீடு, சென்னை, ஏப்ரல் 1999, மண்ணும் மல்லி கையும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 1999.
17.விமல் குழந்தைவேல், மண்ணும் மல்லிகை யும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 1999
18. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அவனும் சில வருடங்களும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 2000
19. ஷோபாசக்தி, கொரில்லா, அடையாளம் திருச்சி நவம் 2001.

*உலகமுதலாளிகள் தங்கள் மேலாதிக்கத்தைத் தொடர்ந்து நிலைநாட்டுவதற்கு உலக உழைக்கும் மக்கள் மீது தாக்குதலை நடத்தி வருகின்றனர். வாழ் வாதாரங்களை சிதைப்பது, கொள்ளை யடிப்பது, கூலியை குறைப்பது, சந்தை விதிகளை மாற்றுவது என முன் உணரமுடியாத மாற்றங்க ளுக்கு உலகை அடிபணிய வைப்பதும் அதில் அடங்கும்.*


*- எரிக் டூசைன்ட் -*


# சூழலின் வளங்களில் கைகளில் விளையும் அழகு

மனிதரில் உள்ளுறைந்து கிடக்கின்ற ஆற்றல்களை படைப்பாக்கற் திறன்களை நாம், நாடகம், நடனம், இசை, ஓவியம், சிற்பம், கவிதையாக்கம் போன்ற கலைகளினூடாக வெளிக்கொண்டுவருவது போல, சூழலின் வளங்களில் விளையும் கைவிளைப் படைப்பாக்கத்தினூடாகவும் வெளிப்படுத்தலாம். கைவிளைப் படைப்பாக்கம் என்பது படைப்ப வரின் கற்பனாசக்தி, திறன், ஆற்றல் என்பவற்றி னூடாக அழகியல் அம்சத்தோடு படைக்கப் படுகின்ற பொருட்களை குறிப்பிடலாம்.


இன்றைய வணிகமயப்பட்ட சூழலில் அதிகமானவை ஒரே இடத்திலிருந்து வருபவையாக உள்ளன. வடிவமைப்பு, உருவாக்கம் என்பவை ஒரு சிலரால் திட்டமிட்டு தீர்மானிக்கப்படுகின்றது. இதனால் எம்மில் பலர் இன்று நுகர்வோராக மட்டுமே காணப்படுகின்றனரே தவிர படைப்பவர்கள் குறைவு. இது உலகின் பன்மைத் தன்மையை மறுக்கின்ற செயலாக மாற்றப்பட்டு வரும் வேளையில் இவ்வாறு எமது சூழலில் விளையும் வளங்களைக் கொண்டு இக்கை விளைப்படைப்பாக்கங்களை முன்னெடுப்பது உலகின் பன்மைத் தன்மையை வளர்ப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

எமது சூழலில் விடுப்பட்ட பொருட்களை அதாவது எமது சூழலுக்கு நட்பான பொருட் களையும் சூழலிலுள்ள வளங்களையும் பயன்படுத்தி அழகிய படைப்புக்களை படைப் பது கைவிளை படைப்பாக்கத்தின் புதிய முயற் சியாகும். எமது சூழலில் உள்ள சிரட்டை, ஈர்க்கு, பறவை இறகுகள், சிப்பிகள், சங்குகள், மரவேர்கள், களிமண், நெசவுத்துணி என பல வளங்களையும் பயன்படுத்தி மாலை கள் தோடு கள் என பல ஆபரங்களும் வீட்டு அலங்காரப் பொருட்களையும் படைக்கலாம். இயந்திரங்களின் உதவியால் உலோக ஆபரங்கள் அதிக பயன் பாட்டில் உள்ளன. குறிப்பாக தங்கள், வெள்ளி எனும் உலோகங்களும்









வைரம், முத்து எனும் விலையுர்த்தப்பட்ட பொருட்களினால் தயாரிக்கப்பட்ட ஆபரணங்களையே அதிக பயன்பாட்டில் உள்ள இக்காலத்தில் அதுமட்டும் அழகல்ல. எமது கைவிளைப் படைப்பாக்கத்திலும் அழகு உள்ளது என்பதை உணர்ந்த பலர் இவ்வாறான ஆபரணங்களை அணிவது கைவிளைப் படைப்பாக்கத்தின் ஆக்க பூர்வமான தன்மையை வெளிப படுத்துகிறது.

இக் கைவிளைப்படைப்பாக்கத்தை முன்னெடுப்பதில் இன்னொரு விடயமும் எங்களிடையே பரப்பப்படுகின்றது. அதாவது எங்கோ தயாரித்ததை வாங்கி அழகு பார்க்கும் எமது சமூகத்தில் இக்கைவிளைப்படைப்பாக்கத்தினூடாக செய்து ரசித்தல் இடம்பெறுகின்றது. அதாவது எமது சூழலுக்கு நட்பான பொருட்களைக் கொண்டு அழகிய ஆபரணங்கள் அலங்காரப் பொருட்களை நாமே படைக்கும் போது அதனால் கிடைக்கும் மகிழ்ச்சி அளவேயில்லை.

சிருஷ்டி, புத்தாக்கம், தேடல், மிக அவசியமாக உணரப்பட்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்தில் இக்கைவிளைப்படைப்பாகத்தை முன்னெடுப்பது இதன் தேவையை உணர்த்துகின்றது. அத்தோடு ஆக்கபூர்வமான தலைமுறை உருவாக்கத்திற்கு சிறுவர்களிடத்திலும் இதனை மேற்கொள்ளும் போது இதன் பயன் பன்மடங்காகும். அதே வேளை மேலும் பல புதிய விடயங்களையும் உள்வாங்கிக் கொள்ளும்.

ச. சந்திரசேகரம்,
இறுதிவருடம்,(2007)
நுண்கலை சிறப்பு

# சமூக உற்பத்தியான வறுமையும் அதிகாரக்கட்டமைப்பும் - ஒரு சமூகவியல் பார்வை

இன்றை உலகில் உடனடித்தேவையாக வுள்ளது வறுமைக்கு (Poverty) எதிரான உலக லாவிய யுத்தமாகும். அபிவிருத்திக்கும் அமைதிக்கும் எதிராயுள்ள பலம் வாய்ந்த அச்சுறுத்தலாகவும், சவாலாகவும் உள்ள விடயம் வறுமைத் தவிர வேறு எதுவுமில்லை யென அனைவரினாலும் கவனம் கொள்ளவும் பட்டுள்ளது. 'எவரேனும் ஒரு நபர் அல்லது குடும்பத்திற்கு அன்றாட வாழ்க்கையில் பேணிவருவதற்கு ஏற்புடையதாயுள்ள அடிப் படைத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாதவகையில் குறை பொருளாதார மட்டம் நிலவுவதோடு, சமூக உறவுகளில் சமத்துவமில்லாத தன்மையும் நிலவுகையில் குறித்த நபர் அல்லது குடும்பம் வறுமையான நிலையில் உள்ளதென' இலகு வாக விளங்கிக்கொள்ள முடியும்.

உலகம் பூராகவும் பரவிச்செல்லும் சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள வறுமை யானது சமூகரீதியிலான வறுமை, பண்பாட்டு ரீதியிலான வறுமை, கடுமையான வறுமை யெனப் பொதுவாக மூன்று கண்ணோட்டங் களில் பகுத்து நோக்கப்படுகின்றது. இதன் உருவாக்கத்திற்கு அடிப்படையாக பல கார ணிகள் அமைந்து காணப்படினும், இவ் விடத்தில் 'அதிகாரக்கட்டமைப்பு' சமூகத்தில் வறியவர்கள் உருவாகக் காரண மாகவுள்ளமை அடையாளப்படுத்தபபட்டுள்ளது. ஆதலினால் இக்கட்டுரையின் குவிமையம் வறுமைக்கு அதிகாரக்கட்டமைப்பு எவ் வகைகளில் காரணமாகவுள்ளது என்பதை சுருக்க மாகக் காண்பதை நோக்காகக் கொண்டுள் ளமை குறிப் பிடத்தக்கதாகும்.

சமூகத்தில் நிலவும் அதிகாரக்கட்டமைப்புக் களில் வறுமையானது பிரதானமாக மூன்று வகைகளில் நிலவுவதை அடையாளப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

1. சமூகத்தில் பொருளாதாரத்தினுடைய கீழ் மட்டத்தில் பிரத்தியேகமானவர்களாக வறிய வர்கள் இருத்தல்.
2. தொழில்ரீதியிலான அதிகாரக்கட்டமைப் புக்களில் அவர்கள் கொண்டிருக்கும் தொழில்களின் அடிப்படையில் கீழ்நிலைப் பட்டுள்ளமை உணரப்பட்டுள்ளது.
3. கூட்டுறவற்ற, நவீன கைத்தொழில்மயமான சமூகங்களில் தொழிலாளர்கள் வேலைக ளைச் செய்துகொண்டிருக்கையில் அதிகா ரிகள் ஒன்றின்மேல் ஒன்றாக கட்டளைக ளைக் கொடுத்துக் கொண்டிருப்பதும், செயல்திறன் குறைந்த தொழிலாளர்களிற் கிடையே ஆதிக்கக்காரர்கள் இருப்பதும் வறியவர்களிற்கு அதிகம் நேரிடக்கூடியன வாகவுள்ளது.

இந்நிலைமைகளினால் வறியவர்கள் சமூகத் தில் விசாலமான அதிகாரக்கட்டமைப்புக்கள் உடையவர்களினால் கீழ்நிலையான இடத் திற்கு இட்டுச்செல்லப்படுவதோடு, அரசியல் ரீதியில் வறியவர்கள் புறமொதுக்கவும்படு கின்றனர். இந்நிலைமைகள் மேலைத்தேய சமூகங்களில் மட்டுமல்லாது எமது நாட்டிலும் உணரப்பட்டுள்ளதொரு நிலையாகவுள்ளது. மேலைத்தேய சமூகங்கள் அநேகமாக வர்க் கங்களாகவும் கீழைத்தேய சமூகங்கள் சாதிப்படி நிலைகளாகவும் கட்டமைக்கப்பட் டுள்ளது. இக்கட்டமைப்புக்கள் ஒவ்வொன்றி னுள்ளும் படிநிலை அந்தஸ்த்தில் உயர் நிலை யிலும், நடுநிலையிலும், கடைநிலையிலும் வர்க்கங்களாக அல்லது சாதிகளாக மக்கள் சமூகப் படையாக்கம் (Social Stratificcation) செய்யப்பட்டுள்ளனர். இப்படையாக்க வகைப் படுகளில் அமைந்து சமூகத்தில் தொழில்களை மேற்கொண்டு பொருளாதார நிலையில் கீழ்நிலையில் இருப் பவர்களாகவும், அரசியல்

ரீதியில் அதிகாரச் சார்பு இல்லாதவர்களாகவும் பெருமளவில் இருப்பவர்கள் வறியவர்களாக இருப்பதனைக் காணமுடிகின்றது.

சமூகப்படையாக்கத்தின் அடிப்படையில் சமூ கத்தில் தொழிலால் அதிக பொருளாதாரத் தினை ஈட்டியும், மேலான கல்வி அறிவினைப் பெற்றும், தம் சமூக அந்தஸ்த்தினை உயர்த் திக்கொண்டும் இருப்பவர்கள் எண்ணிக்கையில் குறைவாகக் காணப்படினும், சமூக அந்தஸ்த் தில் (Social Strates) மேலான இடத்தில் அதிகாரக கட்டமைப் புக்களில் இருக்கும் இவர்களிற்கு சமூக ஆதரவும், அரசியல் ஆதரவும் தொடர்ந தும் அதிக அளவில் இருப்பதனால் வழமை யான தம் நிலையைப் பேணிக்கொள்கின்றனர். அதேவேளை பொருளாதாரம், கல்வி, சமூக அந்தஸ்து என்பவைகளில் குறைவிருத்தி பெற்றிருக்கும் எண்ணிக்கையில் அதிகமான மக்களை வழிநடத்துபவர்களாகவும், கட்டளை களைப்பிறப்பித்து அதனை அவர்கள் மீது செயற் படுத்துபவர்களாகவும், அவர்களை ஆதிக்கப் படுத்துவர்களாகவும் இருப்பதனால் கடை நிலை மக்கள் தொழில் ரீதியிலும் கீழ்நிலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு வறியவர்களாகும் நிலை சமூகத்தில் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின் றது. இது வறுமை நிலையதைத் தொடர்ந்து தக்கவைத்திருக்க ஏதுவாகின்றது.

இவ்வாறாக, சமூகத்தில் அதிகாரக்கட்டமைப் புக்களில் இருக்கும் சிலரின் செயல்கள் அமைந்திருப்பதனால் கடைநிலை தொழிலாளர் களிற்கும் அவர்கள் உறுப்பினர்களிற்கு மான உரிமைகள் அடிப்படைத் தன்மையற் றனவாக இருப்பதோடு, பொருளாதாரத்தினை ஈட்டு வதிலும், சமூக நிகழ்வுகளில் பங்கு கொள்வதி லும் பின் தள்ளப்படுகின்றனர். இதன்போது சமூக நிறுவனங்களில் (Social Institution) உள்ள அதிகாரக்கட்டமைப்புக்களில் உள்ளவர் கள் தம்தேவைகளை இலகுவாகப் பூர்த்தி செய் யக்கூடியவர்களாகவும், படிநிலை அந்தஸ்த் தில் கடைநிலையில் உள்ளவர்கள் பல தேவைக ளைப் பூர்த்தி செய்ய முடியாதவர் களாகவும் வறியவர்களாக்கப்பட்டுள்ளனர். இந்நிலைமை களை கவனத்தில் கொண்டு அரசியல் ரீதியில் வறுமையாக்கப்பட்டவர் களிற்கு வாக்குரிமை களையும், அரசியல் மரியாதைகளையும், அரசில் பிரதிநிதிகளாக இருப்பதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்ப தோடு, அரசியல் தவிர்ந்த பிற சமூக நிறுவன அமைப்புக்களில் அதிகாரக் கட்டமைப்புக்களில் இருப்பவர்கள் இவர்களுக்க சமூக நிகழ்வுகளில பங்குகொண்டு உரிய சமத்துவத் தினை பெற வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டி யது அவசியமானதாகவுள்ளது. இதனால் வறுமையின் இறுக்கமான தன்மையை நெகிழ்வ டையச் செய்து இல்லாமல் செய்யவும் முடியும்.

அரசியல் அதிகாரக்கட்டமைப்புக்களிலும், மற்றைய சமூக நிறுவனங்களில் நிலவும் அதிகாரக்கட்டமைப்புக்களிலும் இருக்கும் படி நிலை அடிப்படையில் அந்தஸ்தில் உயர்ந்த சிலர், தாம் இந்நிலையை அடைய படிநிலை அந்தஸ்த்தில் கடைநிலையில் அமைந்து வறு மைச் செயன்முறைக்கு உள்ளானவ ர்களின் பங்கும் இருப்பதை சிலசமயம் மறந்து விடலாம். ஆனால் கஸ்டமான நிலையில் உள்ள வறிய வர்கள் முற்றிலும் அதிகாரமற்ற வர்களாகவும் இருந்து விடவுமில்லை. இவர்கள் மனித சமுதாயத்தில் படையாகத்தினுடைய முழு வரலாற்றுச் சம்மதத்தினையும் பெற்றிருப் பதனால் சமூகக்கட்டமைப்பிலுள்ள அதிகாரக் கட்டமைப்பில் இருப்பவர்களின் நிலையை நீடிக்கச்செய்யவும் அல்லது அதனை இல்லாது செய்யவுமான சக்தியை ஒருங்கே கொண்டிரு ப்பது அவர்களிடமுள்ள அதிகாரமாக வுள்ளது.

சமூக விஞ்ஞானிகளினால் சமூக உற்பத்தி யாக (Social Production) கவனம் கொள் ளப்பட்டுள்ள இவ்வறுமையானது ஏனைய உலக நாடுகளில் மட்டுமன்றி இலங்கையிலும் நிலவும் சமூகப்பிரச்சினையாகவுள்ளது. இது இலங்கையில் ஒரு பிரச்சினையாக உருவெ டுக்க இயற்கை அனர்த்தம், உள்நாட்டு யுத்தம், வேலைவாய்ப்பின்மை, வறுமை தணிப் புத்திட்டங்களில் நிலவும் குறைபாடுகள், வறுமை அரசியல் மயமாக்கப்படுகின்றமை, செயல் வாதம் சார்ந்த நடவடிக்கைகள் விழிப்புணர் வுத் திட்டங்கள் குறைவிருத்தியுடன் இருக்கி

ன்றமை. வளப்பகிர்வில் ஏற்படும் சிக்கல் நிலை என பல காரணங்கள் அடிப்படையாக அமைந்து காணப்படி னும் அதற்கும் அப்பால் அரசியல் ரீதியிலான அதிகாரக்கட்டமைப்புக்களும் மற்றைய சமூக நிறுவனங்ளில் காணப்படும் அதிகாரக்கட்டமைப்புக்களும் காரணமாக அமைகின்றது.

நாட்டில் வறியோர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு அரசினால் பல திட்டங் கள், அரசியல் கொள்கைகள் முன்னெடுக் கப்படும் அதேசமயம் அரசசார்பற்ற அமைப் புக்களினாலும் பல செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டும் வருகின்றன. இந்நிலையில் வறுமை யானது மக்களை விட்டு அகன்றதாக மக்கள் மனதில் பேச்சில்லை. எனவே வறுமையை ஒழித்து விருத்தியுடன் கூடிய ஒருநாட்டை உருவாக்கு வதற்கான திட்டங்களையும், செயல் களையும் வறுமை ஒழிப்பில் பங்கு கொள்பவர் களும் அந்த மனப்பாங்குடையவர்களும் முன்னெ டுக்க வேண்டும் என்பது அனைவரினதும் அவாவாகவுள்ளது. ஆதலி னால் சமூகத்தில் அனைத்து கட்டமைப்புக் களிலுமுள்ள வறு மையை ஒழித்து வளமான வாழ்வை எய்துவது அனைவரினதும் எதிர்பார்ப் பாகவுமுள்ளது.


யுவராஜா மயூரன்
சமூகவியல் சிறப் புக்கற்கை
கிழக்குப் பல்கலைக்கழகம்
3ம் வருடம்


## எமபெருமானே நானும் நானும்!

கயிறு நீட்டி
கழுத்தை நெருக்கி
உயிர்களை
காவு கொள்ளும்
எம பெருமானே!
வணங்குகின்றேன்.
உன்னைப் பார்க்க
படாதபாடுபட்டேன்
காணேன்
நான் உன்னை.

நானும் உன்
பிள்ளைதானே:
எனக்குமொரு
கடவுச்சீட்டைத் தந்துவிடு நானும்
உன்னுடன் வந்து சேர

உயிர்களின் மேன்மை
உலகத்தின் ஒளி
உயிர்களின் தந்தையென
எல்லோராலும் போற்றப்படும்
மதிப்புள்ள மானிடா?
பொறுமையை
கைப்பிடி..........

நீ விரும்பும்
நரகலோகம்
அங்குமில்லை எங்குமில்லை

அங்கு வந்து
என்ன செய்யப் போகிறாய்?

ஐயனே!
உனக்குப் பொருத்தமாய்
நரகலோகம்
வந்தபின்னர்
உன்னை
அரவணைப்பேன்
ஓர் நாள்.

எமதருமன்
கருங்கல் ஒன்றில் குந்தி இருந்து .......

காதல் மூடர்களால்
இடவசதியும் கவனிப்பாரும் இங்கில்ல
என்னால்
தனித்திருந்து
என்ன செய்ய
முடியும்..? என்றான்


வை. பிரபாகரன்
தமிழ்ச் சிறப்பு
நான்காம் வருடம் (2007)

மக்களுடன் நேரடியாக தொடர்புகொள்ளக் கூடிய சிறந்த கலைவடிவமாக அரங்கு விளங்குவதால் அன்றாட வாழ்வில் எதிர் கொள்ளும் சிக்கல்கள், சவால்கள், அவைகளி னூடான உணர்வு வெளிப்பாடுகள், சிந்தனை போக்குகள் முதலியவற்றை செயற்பாட்டு நிலையில் முன்வைப்பதற்கான சிறந்த ஊடக மாக அரங்கை பலரும் பல நிலைகளிலும் கையாண்டு வருகின்றனர்.

## செயல்வாத அரங்காக – வீதி நாடகங்கள் ஓர் அறிமுகக் குறிப்பு.

த. விவேகானந்தராஜா
நுண்கலைச்சிறப்பு, இறுதி வருடம் (2007)

வாழ்வை, வாழ்வதிலுள்ள சிக்கல்களை அதை எதிர்கொள்ளும் தரப்பினரின் பங்குபற்றல்கள் ஊடாகப் பேசுகையிலேதான் உணர்வுகைளப் புரிந்துகொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்புண்டு. அதேவேளை ஆக்கபூர்வமான சமூகமலர்வையும் எதிர்பார்க்கலாம்.
ஆனால் மக்களையே பேசுவதாக தம்மை அடையாளப்படுத்தி நடைமுறையிலுள்ள அரங்கப்போக்குகள் பலவும் நவீன சிந்தனை முறைமை கட்டமைத்துள்ள ஒற்றைவழிப் பாதையிலான அறிவின் கலையாக்கத்தின் அதிகாரத்துவ நிலையிலேயே வெளிப்படுத்தப் படுவதைக் காணலாம். அதாவது கருத்துக் கள், சிந்தனைகள், தீர்வுகள் என அரங்கு கூறவிளையும் விடயங்கள் யாவும் அறிஞர், கலைஞர் மையத்திலிருந்து மக்களை நோக்கிய திணிப்புக்களாகவே உள்ளன.

இங்கு பல்வேறு வித்தியாசமான பண்பாடுக ளைக் கொண்ட மனிதர்களிடம் உள்ள பல் வேறு வகைப்பட்ட தனித்துவமான அறிவுமுறை மைகள், அழகியல் உணர்வுகள், திறன்கள், ஆற்றல்கள், சுயசார்புமிக்க வாழ்க்கை முறை கள், அதன் அனுபவங்கள், இதன் விளைவான சிந்தனைமுறைமைகள், எண்ணக்கருக்கள் எனப்பலவும் கவனத்திற் கொள்ளப்படுவ தில்லை. மாறாக வெறும் பார்வையாளர்களாக குறித்த வரையறுக்கப்பட்ட இடத்தில் கட்டுப் பாட்டு நிலையில் இருக்க அவர்களை அறிவற் றவர்களாக கருதி செயற்படும் அரங்கச் செயற பாடுகளையே பரவலாக அறியவும் அவதானிக் கவும் முடிகின்றது.

இன்றைய மேலைத்தேய முதலாளித்துவ ஏகா திபத்தியவாதிகளால் திட்டமிட்டு செயற்படுத்தப் பட்டுவரும் உலகத்தின் ஆளுகையினை ஒற்றைத் தன்மையாக்கி தம் பிடிக்குள் வைப் பதற்கான உலகமயமாக்கற் செயற்பாடுகளுள் ஒன்றாக மேலைத்தேய தகவல் தொழில்நுட்ப ஊடகங்களால் திணிக்கப்பட்டுவரும் மக்களை வெறும் நுகர்வோராக மட்டும் வைத்துக் கொள் ளும் ஒரே நோக்கிலான பல கலை வெளிப் பாடுகளையும் இங்கு நினைவிற்கொள் ளல் அவசியமாகின்றது.

இந்நிலையில்தான் மக்களை மையப்படுத்திய 'மாற்று அரங்க' முன்னெடுப்புகளில் ஒன்றாக செயல்வாத அரங்குகளின் அவசியம் பலரா லும் பல நிலைகளிலும் உணரப்படுகின்றது. ஆக்கபூர்வமான சமூக அடைவை நோக்காகக் கொண்டு நடைமுறையில் இருந்து வருகின்ற வாழ்வியல் சிக்கல்கள், அதுசார் கருத்தி யல்கள், முறைமைகளில் தெளிவான சிந்த னையும், நிலைப்பாடும், செயற்பாட்டு நிலை யில் தொடர்ச்சியான கடைப்பிடிப்பும், பகிர்வும் செயல்வாதமாகின்றது. இது முன்வைக்கப்படும் வடயம் சார்ந்தும் முன்னெடுக்கப்படும் முறைமை சார்ந்தும் பல வகைகளிலமையும். இத்தகைய செயல்வாத முன்னெடுப்புக்கள் அரங்கை ஊடகமாகக் கொண்டு இடம்பெறுவதால் அவை செயல்வாத அரங்குகளாக பேசப்படு கின்றன.

இங்கு நவீன அரங்கப் போக்குகள் முன்வைக் கின்ற மக்கள் குறித்த இடத்தில் பார்வையா ளர்களாக இருக்க ஆற்றுகையாளர்கள் ஆற்றுகையை மேற்கொண்டு விட்டுப்போகும் நிலைமையல்லாது பார்வையாளர்கள் பங்கா ளர்களாகவும், ஆற்றுகையில் பங்கு கொள் ளும் கலைஞர்கள் பல்வேறு வித்தியாசமான ஆற்றல்கலுள்ள மக்கள் திரளில் ஒரு பகுதி யாகவுமே அமைவர். இங்கு ஆற்றுகை யாளர்கள் ஒரே நிலையில் கலைஞர்களாகவும் செயல்வாதிகளாகவும் விளங்குவது குறிப்பிடத் தக்கது.

இதனால் தான் செயல்வாத அரங்க உருவாக்கம் என்பது களப்பயிற்சியரங்குகளினூடாகவே பெரிதும் சாத்தியமாகின்றது. குறித்த நடைமுறை விடயம் சார்ந்து ஆக்கபூர்வமான குழு நிலையிலான உரையாடல்கள், பயிற்சிகள், சிந்தைத்தெளிவு, அதன் ஊடாக தமது உணர்வுகளை, கருத்துக்களை கலை ஊடகங்களூடாக வெளிப்படுத்தல் (பாடல், கவிதை, உரையாடல்கள், ஆற்றுகை) என இது தொடர் செயற்பாடுகளாக அமையும்.



இத்தகைய செயல்வாத அரங்க முன்னெடுப்புக்களில் ஒன்றாக வீதி நாடகங்கள் பலராலும் பல நிலைகளிலும் முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

முன்னர் குறிப்பிட்ட செயல்வாத அரங்க உருவாக்கங்களுக்கமைய குறித்த குழுவால் உருவாக்கம் பெற்ற வீதி நாடகம் மக்கள் பெரிதும் கூடும் சந்திகள், சந்தைகள் பெரு வீதிகளில் குறித்த காலவரையறைக்கு உட்பட்டதாக ஆற்றுகைபெறும்.

இங்கு அரங்கை மக்கள் நாடிச்செல்லும் நிலைமை மாறி மக்களை நாடி அரங்கு செல்வதும், ஆற்றுகைக் களங்கள் மக்களையும் பங்காளர்களாகக் கொண்ட உரையாடல் தளங்காளக அமைவதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை குறித்த ஆற்றுகையினூடு பேசவிளையும் விடயம் குறித்த மக்களுக்கு எளிமையாக புரியும் விதமாகவும், அனைவரையும் அவ்விடயத்தில் இணைத்திடும் விதத்திலும் ஆற்றுகைக்கான அழகியல் உத்திகளும் (பாடல், ஆடல், அபிநயம், இசை . . .) உள்வாங்கப்படுவதும் நோக்கத்தக்கது.
இன்றைய நடைமுறைச்சூழலில் பலரும் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல்சார் பிரச்சினைகள், நடைமுறைக்கல்வி முறைமையின் போதாமை, சவால்கள், பெண்கள் பற்றிய பிற்போக்கு பார்வைகளும் நடத்தைகளும் என பல விடயங்கள் இவ்வீதி நாடகங்களினூடாக செயல்வாதங்களாக முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பில் சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலைய கலாசாரகுழு, பெண்களை பாரபட்சமாக நடாத்தும் சமூகக்கட்டமைப்பிற்கு எதிராக வீதிநாடகங்களுடாக குரல் கொடுப்பதும் தொடர் செயல்வாதங்களை முன்னெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இவர்களது 'இது எமது படைப்பு' எனும் வீதி நாடக அளிக்கை கணிப்பிற்குரியது.

இதேபோல் சமூகத்தில் பெண்களை பெரிதும் ஒடுக்கும் ஆண்கள் தரப்பிலிருந்து ஒடுக்குமுறைகளுக்கெதிராக குரல் கொடுப்பதும் அதனூடாக வன்முறைகளை குறைப்பதும், தடுப்பதும் எனும் நோக்கில் குறிப்பாக குடும்ப வன்முறைகளுக்கு எதிராக பேசும் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான ஆண்களின் செயல்வாதமான 'வேணடாம் என்று சொல்கின்றோமே' எனும் மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக் குழுவின் வீதி நாடக அளிக்கையும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு YMCA இற்காக அரங்கியலாளரும் செயற்பாட்டாளருமான விரிவுரையாளர் சி.ஜெயசங்கர் தயாரித்த 'நஞ்சினில் விளையவோ' வீதி நாடகம் சுற்றுச்சூழல், ஆரோகக்கியம் பேணும் உள்ளூர் உற்பத்தி முறைமைகள் சார்ந்து பேசும் முக்கிய படைப்பு. இதேபோல் கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை நடாத்திய உலகநாடகதினவிழா - 2005ல நுண்கலைத்துறை மாணவர்களைக் கொண்டு து.கௌரீஸ்வரன் தயாரித்த 'சுனாமிக்குப்பின்' எனும் வீதிநாடகம் சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டமைப்பின் அபத்தம் சார்ந்து பேசிய கணிப்பிற்குரிய படைப்பு.

இவ்வாறாக பல்நிலைகளிலும் செயல்வாத அரங்காக வீதி நாடகங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையையும் அதன் அவசியத்தையும் விளங்கிக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

# தமிழில் நாவல் ஆய்வுகள்: சில அவதானிப்புகள்

1929 இல் இருந்து பல்வேறு அடிப்படைகளில் நாவல் தொடர்பான ஆய்வுகள் நடைபெற்றிருக் கின்றன.[1] முழு நூலாகவும், ஒரு நூலின் ஒரு பகுதியாகவும் நாவல் தொடர்பான திறனாய்வுக கருத்துக்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் முனைவர் பட்டத்துக்காகச் செய்த ஆய்வேடுகளும் அடங்குகின்றன. இந நிலையில், ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு அடிப்படையைக் கொண்டிருப்பதாலும் இவை சரியான முறையில் வகைப்படுத்தப்பட்டு மதிப்பிடப்படுவது நாவல் தொடர்பான ஆய்வை மேலும் வலுப்படுத்த உதவும்.

1995 வரை வெளிவந்த நாவல் ஆய்வு நூல் களை ம. மதியழகன் வகைப்படுத்திச் சில கருத்துக்களைக் கூறியுள்ளார்.[2] இவர் 1929 தொடக்கம் 1970 வரை நாவல் ஆய்வு நூல் கள் இருபத்தைந்திற்கும் குறைவாக வெளி வந்துள்ளதால், அவற்றைக் காலகட்ட அடிப்ப டையில் வைத்து மதிப்பீடு செய்துள்ளார். இவற்றில் நாவல் பற்றிய முழு ஆய்வு நூல்கள ஐந்தே ஆகும்.

1970இன் பின் நூற்றுக்கணக்கான நூல்கள் வெளிவந்துள்ளதால் அவற்றை நாவலாசிரி யரை அடிப்படையாகக்கொண்ட திறனாய்வு நூல்கள், நாவல் கூறுகள் பற்றிய திறனாய்வு நூல்கள், கால அடிப்படையில் எழுந்த திற னாய்வு நூல்கள், நாவல் வகைகள் பற்றிய திறனாய்வு நூல்கள், ஒப்பியல் அடிப்படையில் அமைந்த திறனாய்வு நூல்கள், வெளிநாட்டுத் தமிழ்நாவல் பற்றிய திறனாய்வு நூல்கள், நாவல் பொருள் பற்றி எழுந்த திறனாய்வு நூல்கள். நாவல் இலக்கணம் கூறும் நூல்கள் என வகைப்படுத்தி ஆய்வு செய்யலாம் என்றும் கூறுகின்றார். இந்த வகைப்பாட்டுமுறை தெளி வான தன்மையைக் கொண்டிருக்கவில்லை.[3] இதனால், புதியதொரு வகைப்பாட்டை மேற்கொள்வதற்கான அவசியமுள்ளது. மதியழகன் வகைப்பாட்டில் உள்ள குறைகள் எனப் பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டத் தக்கன.

1) முக்கியமான ஆய்வு நூல்கள் என்று கருதப் படுகின்ற சில நூல்கள் இவருடைய வகைப் பாட்டில் அடங்கவில்லை அல்லது அடக்க முடியாமை.

உதாரணம்

I. சுப்பிரமணியம் க.நா. 1985 நாவல்கலை, கலைஞன் பதிப்பகம்.

II. தோதாத்திரி. எஸ். 1988 தமிழ் நாவல்கள் சில ஆய்வுகள் நியூ புக் ஹவுஸ் பிறை வேட் லிமிடெட்.

2. ஆரம்பகாலம் முதலே நாவல் திறனாய்வு நூல்கள் ஈழத்தவரால் எழுதப்பட்டிருந்தும் அவற்றுக்குத் தனித்துவமான இடம் கொடுக்கப்படாமை.[4]

3. கலாநிதி க. கைலாசபதியின் 'தமிழ்நாவல் இலக்கியம்' (1968) என்ற நூலை தனி யொரு பிரிவுக்குள் அடக்க முடியாமை.

மேற்கூறிய நிலையில் பின்வரும் வகைப்பாட்டை மேற்கொண்டு கருத்துக் கூறுவது பொருத்தமானதாகும்.[5]

1) நாவலின் பண்புகளுக்கு அழுத்தம் கொடுப் பவை.

i. தண்டாயுதம். இரா. 1979 சமூக நாவல்கள் தமிழ்ப்புத்தகாலயம்.

ii. தோதாத்திரி. எஸ். 1988 தமிழ் நாவல்கள் சில ஆய்வுகள்.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.

iii. சிறிகுமார். எஸ். 1992. நாவலும் சமுதாய மும். சுபா பதிப்பகம்

2. கால அடிப்படையில் எழுதப்பட்டவை.

i. சிட்டி.(சுந்தரராஜன். பெ.கோ), சிவபாதசுந்தரம். சோ. 1997. தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்.

**3. ரசனை நோக்கில் எழுதப்பட்டவை.**

i. ஜகந்நாதன். கி.வா. 1966. தமிழ்நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்

ii. சுப்பிரமணியம். க.நா. 1967 முதல் ஐந்து தமிழ் நாவல்கள் அமுத நிலையம்.

iii. சுப்பிரமணியம். க. நா 1985 நாவல்கலை கலைஞன் பதிப்பகம்.

**4. பாத்திரப்படைப்பு பற்றிய ஆய்வுகள்.**

i. சிதம்பரசுப்பிரமணியன். ச. 1994 தமிழ் நாவல்களில் பெண்கதை மாந்தர்கள், பாரி நிலையம்.

**5. ஈழத்து நாவல் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள.**

i. சில்லையூர் செல்வராசன். 1967. ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி, அருள்நிலையம்.

ii.சுப்பிரமணியம். நா. 1978 ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம் முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்.

iii. சிவகுமாரன் கே. எஸ். 1999 ஈழத்து தமிழ நாவல்களில் சில திறனாய்வுக் குறிப்புகள். மீரா பதிப்பகம்.

iv. அருணாசலம் க. 1999 இலங்கையின் மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம்.

v. மயில்வாகனம் இரகுநாதன் 2004 ஈழத்துத் தமிழ்நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்.

**6. கைலாசபதி க. கலாநிதி 1968 தமிழ் நாவல் இலக்கியம் குமரன் பப்ளிசுஷர்ஸ்**

மேற்கூறியவை தவிர, தனிநாவலாசிரியர் பற்றி எழுதப்பட்டவை[6], தனித்தனி நாவல்களைப் பற்றி ஒவ்வொரு திறனாய்வாளர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு[7], தனித்தனி நாவல்களைப்பற்றி திறனாய்வாளர் ஒருவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு[8], பெண்ணிலைவாத நோக்கில் அணுகியவை[9], உலக தரம் நோக்கித் தமிழ் நாவல்களை மதிப்பிட்டமை[10] என்று இவ்வகைப்பாட்டை மேலும் அகலப்படுத்தலாம் போலத் தோன்றுகிறது. இரா. தண்டாயுதம் 1963இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனது முனைவர் பட்டத்துக்காக மேற்கொண்ட "A study of the Sociological Novels in Tamil' என்ற ஆய்வு 1979இல் 'சமூக நாவல்கள்' என்ற பெயரில் வெளிவந்தது. வேதநாயகம்பிள்ளை தொடங்கி கல்கி காலம் வரை நாவலின் தோற்றம் வளர்ச்சி பற்றிய ஆய்வாக வெளிவந்த நூல் இதுவே எனலாம். இரா. தண்டாயுதம் 'சமூகநாவல்' என்ற தொடரை அதன் பரந்த பொருளில் பயனபடுத்தியதாக அதன் முன்னுரையில் குறிப்பிடுகிறார்[11] இத்தகைய அகலமான பார்வை தமிழில் வந்த எந்த நாவலையும் சமூக நாவல் என்று சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது எனலாம்.

தமிழ்நாவல்கள் சில ஆய்வுகள் என்ற எஸ். தோதாத்திரியின் நூல், தமிழ்நாவல் பற்றி மார்க்சிய நோக்கில் எழுதப்பட்டதாகும். மார்க்சிய விமர்சனம் உள்ளடக்கத்தைப் பற்றியது என்ற குற்றச்சாட்டை மறுக்கும் எஸ். தோதாத்திரி, உருவ உள்ளடக்க சமநிலையைச் சுட்டிக் காட்டுவது மார்க்சிய விமர்சகர்களின் நோக்கம் என்று கூறுகிறார்.[12] இவ்வகையால் துப்பறியும் நாவல் பற்றிய கட்டுரையும், ராஜம் கிருஷ்ணன் நாவல் பற்றிய கட்டுரையும் முக்கியமானவை.

எஸ். சிறிகுமார் எழுதிய நாவலும் சமுதாயமும் என்ற நூல் தாழ்நிலை மக்கள் சார்பாக நின்று செய்யப்பட்ட திறனாய்வாகும். நாவல்களைச் சமூக நோக்கில் அணுகிய இம்மூன்று நூல் களும் நாவலில் இடம்பெறும் சமூகத்தை ஒவ் வொரு கோணத்தில் பார்க்கின்றன. இத்தகைய பார்வைகள் இந்நூல்களை இன்னுமொரு பண்பைப் பெருமளவிற்கு இட்டுச் செல்கின்றன.

தமிழ்நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலை சிட்டி, சோ. சிவபாத சுந்தரம் என்ற இருவரும் இணைந்து எழுதினார்கள்.

தமிழ் நாவலின் வரலாற்றைப் பொருள் அடிப்படையில் பண்பாட்டுக்கவலை (1879-1900), சமுதாய விமர்சனம் (1900 - 1945) என்ற இரண்டு காலப்பகுதிகளாகவும், வளர்ச்சியை வடிவ அடிப்படையில் இலக்கிய உணர்வு (1945க்குப் பிறகு) என்ற தலைப்பிலும் ஆராய்ந்துள்ளார்கள். இந்த நூலில் தலைப்புப் பொருத்தத்தோடு தகவல்கள் அடுக்கப்பட்டிருப்பதும், ஈழத்து நாவல்கள் பெருமளவாகப் பேசப்படுவதும் சிறப்பான அம்சமாகும்.

க. நா. சுப்பிரமணியத்தின் முதல் ஐந்து தமிழ் நாவல்கள், நாவல்கலை என்ற இரண்டு நூல்களும் ரசனை நோக்கத்தில் எழுதப்பட்டனவாகவும், வாசகர்களை வாசிக்கத் தூண்டுவனவாகவும் உள்ளன. இவ்விரு நூல்களுக்கும் இவர் எழுதிய முன்னுரைகள் இக்கருத்தை உறுதிசெய்கின்றன.[13] இவ்விரு நூல்களிலும் ரசனைத் தன்மை மேலோங்கி இருந்தாலும் ஆரம்பகால நாவல்கள் என்ற நிலையில் அவற்றைப் பற்றிக் கருத்துக் கூறுவதால், வரலாற்றுத்தன்மை கொண்டதாகவும் கொள்ளலாம். எனினும், வரலாறு என்பதைவிட, 'ரசனை' என்பதற்கு கொடுக்கப்படுகின்ற அழுத்தம் இந்நூல்களில் அதிகமாக வெளிப்பட்டுள்ளது.

1964இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'கல்கி (கிருஷ்ண மூர்த்தி) நினைவுச் சொற்பொழிவு" மூலம் கி.வா. ஜகந்நாதன் 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் மூன்றுநாள் சொற்பொழிவை நிகழ்த்தினார். இது 1966இல் நூல் வடிவம் பெற்றது. தமிழர்களுடைய கதைகேட்கும் மரபைக்காட்டித் தொல்காப்பியத்தில் சுட்டப்படும் பொருளொடு புணராப் பொய்ம்மொழியைச் சுட்டி: ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஏற்பட்ட மாறுதல்களைக் கூறி தமிழ்நாவலின் தோற்றத்தைக் கூறியுள்ளார். தொடக்க கால நாவல்களான பிரதான முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் என்ற மூன்றையும் கதைச் சுருக்கம், கதை மாந்தர்கள், கட்டுக்கோப்பு போன்ற பிரிவுகளில் ஆராய்கிறார். இந் நாவல்களின் நிறைகளும் குறைகளும் சுட்டிக்காட்டப் படுகின்றன.

மூன்றாவது பகுதியில் கல்கியின் நாவல்கள் விமர்சிக்கப்படுகின்றன. சிவகாமியின் சபதமும், அலையோசையும் பல்வேறு வகைகளில் அலசப்படுகின்றன. ஆனால், அக்கால கட்டத்தில் அந்நாவல்கள் எழுந்ததற்கான காரணங் கள் என்ன? மற்ற நாவல்களில் இருந்து இவை எங்ஙனம் மாறுபட்டுள்ளன? போன்றவற்றை விளக்காமல், நேராக நாவலுக்குள் நுழைந்து விடுகிறார். 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்புக்கு ஏற்ப தமிழ் நாவலின் தோற்றத்துக்கான காரணங்களும் வளர்ந்த வகைகளும் பற்றியதாக நூலின் போக்கு அமையவில்லை.

ச. சிதம்பரசுப்பிரமணியன் எழுதிய தமிழ் நாவல்களில் பெண்கதை மாந்தர்கள் என்ற நூல் மு. வரதராசன், ஜெயகாந்தன், ராஜம் கிருஷ்ணன் என்ற மூவரும் தமது நாவல்களில் உருவாக்கிய பெண்கதாபாத்திரங்களைப் பற்றிய ஆய்வாக அமைகிறது. இம்மூவரும் சமூக உணர்வு மிக்க நாவலாசிரியர்கள் மூவருமே சமகாலப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்டு நாவல்களைப் படைத்திருக்கிறார்கள். இவர்களது நாவல்களில் இடம் பெறும் பெண் கதைமாந்தர்களுள் பெரும்பாலானோர் குடும்ப, சமூக, பொருளாதாரச் சூழல்களால் பல்வேறு சிக்கல்களைச் சந்திக்கிறவர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். இப்பெண் கதைமாந்தர்கள் சந்திக்கின்ற சிக்கல்களையும், அச்சிக்கல்களை ஆசிரி யர்கள் அணுகுகின்ற முறைகளையும், காட்டு கின்ற தீர்வுகளையும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

ஈழத்து நாவல்களைப் பற்றிய ஆய்வு என்ற வகையில் சில்லையூர் செல்வராசனால் 1962இல் எழுதி 1967இல் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி என்ற நூலை முதல் நூலாகக் கூறலாம். இந்நூல் 1962க்கு முன் வந்த இலங்கைத் தமிழ் நாவல் பற்றிய திறனாய்வு முயற்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.[14]

அதேநேரம், ஈழத்துத் தமிழ் நாவல்களின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆய்வதற்கான அடிப் படைக் கருவியான நாவல் தொகுப்பு தேவை என்ற கருத்து வெளியிடப்பட்டுள்ளது. அதனா லோ என்னவோ 1891இல் இன்னாசித் தம்பி எழுதிய ஊசோன் பாலந்தை கதையை ஈழத்தின முதல் நாவல் எனக் கருதியதோடமையாது, யாழ்ப்பாணம் பின்னிற்க திருகோண மலை முன்னின்றது என்ற கருத்தை நூலினூடு எடுத்துச் செல்கிறார். கால அடிப்படையில் தொகுக்கப்பட்ட நாவல் பட்டியல் இருந்தா லேதான் நாவல் திறனாய்வு முழுமையுறும் என்ற கருத்தை 1962இலேயே நூலாசிரியர் முன் வைத்துள்ளார்.[15]

ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிய வளர்ச்சி யைப் பார்க்கின்ற ஆய்வுமுறை 1962இல் ஓரளவிற்குச் செம்மையாக நடந்திருக்க 1966இல் கி.வா. ஜகந்நாதனின் நூல் இத்தகு ஆய்வுப்பார்வை இல்லாது வெளிவந்துள்ளமை தமிழகத்தின் திறனாய்வு நிலையை உணர் வதற்குச் சிறந்த சான்றாகும் என மதியழகன் கூறுகிறார்.[16]

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கால ஈழத்துத் தமிழ்நாவல்களை வரலாற்று நோக்கில் ஆராய்ந்து விளக்கும் முதல் நூல் நா. சுப்பிர மணியத்தால் எழுதப்பட்ட ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய மாகும். ஈழத்துத் தமிழ்நாவல் இலக்கிய வரலாற்றை ஐந்து முக்கிய கட்டங் களாக வகைப்படுத்தி நோக்கும் பண்பு இந்நூலில் அமைந்துள்ளது. ஒவ்வொரு இயலிலும் முதலில் சூழ்நிலையை விளக்கி, அதன்பின் அக்கால நாவல்களை வகைப்படுத்தி நோக்கி இறுதியில் மதிப்பீடு செய்யும் முயற்சி மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வகையில் இந்நூல் ஈழத்து நாவல் தொடர்பான வரலாற்று நூலா கவும், திறனாய்வு நூலாகவும் அமைந்து ள்ளது. அதேவேளை, அவ்வப்போது தமிழக நாவல்களும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

1968இல் வெளிவந்த தமிழ் நாவல் இலக்கியம் என்ற தனது நூலில் தமிழ்நாவலின் தோற்றத் தையும், வளர்ச்சியையும் இன்றியமையாத வரலாற்றுச் செய்திகளுடன் இணைத்துப் பார்க்கின்ற முயற்சியைக் கையாண்டுள்ளார். கைலாசபதி. இதற்கேற்ப கால ஆராய்ச்சியும் நாவல் பண்பாய்வும் ஒருங்கே மேற்கொள்ளப் பட்டுள்ளன. கி. வா. ஜகந்நாதனின் நூல் தமிழ நாவலின் தோற்றத்தை ஓரளவே கணித் திருக்க, கைலாசபதியின் நூல் காவியத் திற்கும் நாவலிற்கும் உள்ள தொடர்புகள் தொடர்பின்மைகள், உரைநடையோடு நாவல் கொண்ட நெருக்கம், தனிமனிதவாதம் நாவல் இலக்கியத்தில் இடம்பெற்றமை, சிறுகதையின் தொய்விற்கும் நாவலின் வளர்ச்சிக்கும் உள்ள காரணங்கள் போன்றவற்றை மார்க்சிய கண்ணோட்டத்தில் அணுகியிருப்பது, தமிழ் நாவல் திறனாய்வுப் போக்கில் குறிப்பிடத்தக்க முயற்சி.

இவ்வாறான கருத்துக்களை வெளிப்படுத்து கின்ற இந்த ஆய்வு நூல்களின் கருத்துக்களைத தொகுத்து நோக்குகின்றபோது, ஒவ்வொரு ஆய்வாளனதும் பலமும் பல வீனமும் வெளிப படுகிறது. இவ்வகையில் முடிவாகச் சில கருத்துக்களைக் கூறுவது பொருத்தமானது.

நாவல்களைப் பற்றிய ஆய்வுகளைச் செய்தவர் கள் ஆரம்பகால நாவல்கள் என்ற வகைக்குள் 1900 வரை வெளிவந்த பிரதாபமுதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம், தீனதயாளு என்பவற்றைப் பற்றியே அதிகமான அக்கறை காட்டினார்கள். இக் காலப் பகுதியில் மேலும் பல நாவல்கள் வெளிவந்திருக்கின்றன. அவை பற்றி ஏன் ஆய்வுகள் செய்யப்படக்கூடாது? உதாரண மாக ஸீ. வை. குருஸ்வாமி சர்மாவால் 1881இல் எழுதப்பட்டு 1893இல் வெளிவந்த 'பிரேம கலாவத்யம்' என்ற நாவலைக் குறிப் பிடலாம். மாற்றாந்தாய் செய்யும் கொடுமைகள், நட்பின் உயர்வு, கல்வியின் பெருமை என்ற மூன்றயும் படம்பிடித்து நடப்பியலும் அற்புத நவிற்சியும் கலந்து எழுதப்பட்ட நாவ லாக இது காணப்படுகிறது. இந்நாவல் தொடர் பாக விரிவான ஆராய்ச்சிகள் நடைபெற வில்லை.

ஆனால், வரலாற்றை முழுமைப் படுத்த எண்ணுபவர்கள் பிரதாப முதலியார் சரித்திரத்திற்கும், கமலாம்பாள் சரித்திரத்திற் கும் இடையில் இதனைச் சுட்டிக் காட்டுகின் றனர்.[17]

இதேபோல், கணக்கிலெடுக்கப்படாத நாவல்கள் இன்னும் பல உண்டு. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியின் மதிவாணன் (1897), வி.நடராஜ ஐயரின் ஞானபூஷணி (1896) வி.ஏ. கோபாலகிருஷ்ண ஐயரின் குணசீலன் (1900) எனப்பல நாவல்கள் அங்கங்கே சுட்டிக்காட்டப்படுகின்றனவே தவிர அவற்றுக்குரிய இடம் பற்றி எதுவும் பேசப்படவில்லை.[18] இந்த நாவல்களையெல்லாம் உள்ளடக்கி தெளிவான நாவல் வரலாறு எழுதப்படவேண்டும்.

நாவல்கள் சமூக நாவல்கள், வரலாற்று நாவல்கள், வட்டார நாவல்கள், மொழிபெயர்ப்பு நாவல்கள், துப்பறியும் நாவல்கள் எனப்பலவாறு வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வகை நாவல்கள் ஏதோவொரு வகையில் ஒன்றோடொன்று தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன. இதனால், தமிழில் உள்ள ஒரு நாவலை இரண்டு, மூன்றுவகைகளுக்குள் வைத்துப் பார்க்கின்ற நிலை தோன்றுகிறது. எனவே, சமூகநாவல் என்றால் என்ன? என்ற இறுக்கமான, தெளிவான வரையறையை செய்து ஆய்வுகளை மேற்கொள்ளும்போதுதான் எந்தெந்த வகையைச் சேர்ந்தன என்று தெளிவாகக் கூற முடியும். இரா. தண்டாயுதம் 'சமூக நாவல்கள்' என்ற நூலில் கல்கியுகம் வரை வெளிவந்த அனைத்து நாவல்களையும் உள்ளடக்குகிறார். அதனால், வரலாற்று நோக்கில் அந்நூல் மதிப்பிடப்படுகிறது.

தமிழக நாவல், ஈழத்து நாவல் என்ற அடிப்படையில்தான் நாவல்கள் மதிப்பிடப்படுகின்றன. ஆனால், இரண்டையும் பொதுமைப் படுத்தித் தமிழ்நாவல் என்ற அடிப்படையில் ஆய்வுகள் நடைபெறவில்லை. விதிவிலக்காக, தமிழ்நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும், தமிழ்நாவல் இலக்கியம் என்ற இரண்டு நூல்களும் ஈழத்து நாவல்களைச் சுட்டிக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சில குறைகளை நிவர்த்திக்கும் வகையிலேதான் கைலாசபதி தனது தமிழ் நாவல் இலக்கியத்தை எழுதினார். தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பிலேயே நூல் எழுதுவதற்கு எண்ணியிருந்த போது, தனக்குமுன் தலைப்பு பறிபோனதாகப் பெருமூச்சுவிடுகிறார்.[19] ஆனால், தமிழ்நாவலின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் கூறுவதாகவே அவரது நூல் அமைகிறது. தமிழ்ச்சூழலில் நாவல் தோன்றிய பின்னணியும் வளர்ந்த பின்னணியும் தெளிவான, விரிவான விளக்கங்களோடு எழுதப்பட்டிருக்கின்றன. அதேநேரம், ஈழத்து நாவல்களையும் ஆரம்பம் முதல் சுட்டிக்காட்டத்தவறவில்லை. இளங்கீரனின் நீதியே. நீகேள், செ. கணேசலிங்கனின் செவ்வானம் என்ற இரண்டு நாவல்களையும் பற்றி எழுதப்பட்ட இயற்பண்புவாதமும் யதார்த்தவாதமும் என்ற கட்டுரை தனிதுவமாக ஈழத்து நாவல் பற்றியதாக அமைகிறது. மேலும், தனது வரலாற்றுப் போக்கை முழுமைப்படுத்துகின்ற விதத்தில் தமிழ்நாவலின் அண்மைக் காலப் போக்குகள் என்ற இறுதிக்காட்டுரையை மூன்றாம் பதிப்பில் (1976) எழுதினார்.

மேற்கூறியவாறு நோக்கும்போது, கைலாசபதியின் நூல் வரலாற்றுத்தன்மை, பண்பு அடிப்படை, ஈழத்து நாவல் பற்றி எழுதப்பட்டமை என்ற மூன்று வகைகளில் முக்கியம் பெறுகிறது. இவை எல்லாவற்றுக்கூடாகவும் சென்று கொண்டிருப்பது மார்க்சியக் கண்ணோட்டம் இந்த மார்க்சியக் கண்ணோட்டத்தில் நாவல் திறனாய்வு செய்த எஸ். தோதாத்திரி கைலாசபதியைப் பின்பற்றினார் என்பதில் ஐயமில்லை. உதாரணம்: தனிமனித வாதத்தின் தோற்றம்.

பெண்ணியம், தலித்தியம், அமைப்பியல், பின்னமைப்பியல், பின்நவீனத்துவம் எனத் திறனாய் வுக் கோட்பாடுகள் தற்காலத்தில் விரிந்து செல்கின்றன. நாவல் இலக்கியமும் இந்தக்கோட்பாடுகளினடியாக எழுதபபடுதனால், அவை தொடர்பான விரிவான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். உதாரணமாக, நாவல் வளர்ச்சி - கிறிஸ்தவ இலக்கியம் என்ற டேவித்

சித்தையா தொகுத்த நூலில் தமிழவனின் 'ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்' என்ற சர்ரியலிஸ நாவலும், இமையத்தின் 'கோவேறு கழுதைகள்' என்ற தலித்திய நாவலும் திற னாய் வுக்குட்படுகின்றன. இவை ஆரம்ப முயற் சிகளே. இந்நூல் பிரதாப முதலியார் சரித்தி ரத்தையே கிறிஸ்தவ நாவலாகக் காண்கிறது.

மதியழகன் 1995 வரை வெளிவந்த நாவல் திறனாய்வு நூல்களையே வகைப்படுத்தினார். ஆனால், எல்லா நூல்களையும் கவனத்தில் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 1995க்குப் பின்பு அதிகமான நாவல் ஆய்வு நூல்கள் வெளிவந்திருப்பதால் அவற்றையும் உள்ளடக்கி சரியான ஒரு அடிப் படையை வைத்துக்கொண்டு அவற்றை வகைப் படுத்தி மதிப்பிடுதல் அவசியமாகும்.

அடிக் குறிப்புகள்

1) தமிழியல் ஆய்வு வரலாறு. 1996. ம. மதிய ழகன். பக். 17
2) தமிழியல் ஆய்வு வரலாறு 1996. ம. மதி யழகன் பக். 16-37.
3). தமிழியல் ஆய்வு வரலாறு. 1996. ம.மதியழகன். பக். 31-33.
4) தமிழ் நாவல் வளர்ச்சியும் ஈழத்து நாவல் வளர்ச்சியும் சமாந்தரமாகச் சென்றுகொண் டிருக்க, தமிழகத்தில் நாவல் திறனாய்வு களைச் செய்தவர்கள் ஈழத்து நாவல்க ளைத் தவிர்த்து வந்திருக்கிறார்கள். ஈழத்து நாவல்களைப் பற்றிப் பெரும்பாலும் ஈழத் துத் திறனாய்வாளர்களே எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில், ஈழத்து நாவல் திறனாய்வு நூல்களுக்கு ஏன் முக்கியமான இடம் கொடுக்கப்படவில்லை? மதியழகன் 'வெளிநாட்டுத் தமிழ்நாவல் பற்றிய திறனாய்வு நூல்கள்' என்ற வகைக் குள் ஈழத்துத் தமிழ் நாவல் திறனாய் வையும் மலேசியத் தமிழ்நாவல் திறனாய் வையும் அடக்குகிறார். 'மலேசியத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம்' என்ற நூல் ஒன்றே மலேசியத் தமிழ்நாவல் பற்றிய திற னாய்வு நூல். அதுவும் மதியழகன் தனது முனைவர் பட்டத்துக்காகச் செய்த ஆய்வு.
5. இங்கு குறிப்பிடப்படும் நூல்கள் எனது பார்வைக்குட்பட்டவை. குறித்த பிரிவுக்குள் மேலும் பல நூல்கள் வரமுடியும் அவை எனது பார்வைக்குட்படாதவை.
6. சாந்தா. முனைவர் 1999. சின்னப் பாரதியின் நாவல்கள்.
காவ்யா வெளியீடு.
7. மோகன் . இரா. டாக்ரர். 1989. நாவல் வளர்ச்சி. மணிவாசகர் பதிப்பகம்.
8. ராசு. த. 1990. தமிழ் நாவல்களில் இலக்கியத்தரம் மணிவாசகர் பதிப்பகம்.
9. ஹரி. விஜயலட்சுமி. 1993 ராஜம்கிருஷ்ணன் புதினங்களில் பெண்மாந்தர்.
10. தமிழ் நாவல்களில் இலக்கியத்தரம் 1990 த.ராசு. பக் 9-40 கட். உலகத்தரம் நோக்கித் தமிழ் நாவல் இலக்கியம் ஒரு முன்னுரை விளக்கம்'
11. சமூக நாவல்கள் 1979. இரா. தண்டாயு தம். பக். 14.
12. தமிழ் நாவல்கள் சில ஆய்வுகள். 1988. எஸ் தோதாத்திரி. பக். 6-7
13. முதல் ஐந்து தமிழ் நாவல்கள். 1967 க. நா. சுப்பிரமணியம் பக்.2
நாவல்கலை. 1985. க. நா. சுப்பிரமணியம். பக். 3-4.
14. ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி. 1967. சில்லையூர் செல்வராசன் பக். 6-8
15. ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி. 1967. சில்லையூர் செல்வராசன். பக். 10-11.
16. தமிழியல் ஆய்வு வரலாறு. 1996. ம. மதியழகன். பக். 23
17. தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச் சியும் 1997. சிட்டி. (பெ. கோ. சுந்தரராஜன), சோ. சிவபாதசுந்தரம். பக். 21-26.
சமூகநாவல்கள். 1979. இரா. தண்டாயுதம். பக். 126 - 129.
18. தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் 1997. பக். 4-6
19. தமிழ் நாவல் இலக்கியம். 1968. கலாநிதி. க. கைலாசபதி முன்னுரை. பக். 5

கோ. குகன்.
*4ம் வருடம், தமிழ் சிறப்பு.*

# வெகுஜனத்தொடர்பாடலும் பண்பாடும்

## ஒரு சமூகவியல் நோக்கு

வெகுஜனத் தொடர்பாடல் என்பதற்கு ஒரு பரந்து பட்ட அளவில், பரந்துபட்ட சனத்திரளுக்கான குறித்த ஒரு வலைப்பின்னலூடாக வழங்கப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட செய்திப் பரிமாற்றல் முறைமை என வரையறை வழங்கலாம். இவற்றிற்கு உதாரணமாக பத்திரிகைகள், தொலைக் காட்சி, சஞ்சிகைகள் திரைப்படம், இணையம் என்று பலவற்றைக் குறிப்பிடலாம் இவற்றினை அச்சு ஊடகங்கள் இலத்திரணியல் ஊடகங்கள் எனவும் வேறு படுத்தி நோக்குகின்றனர்.

பண்பாடு என்பது கற்றுணர்ந்த நடத்தை முறைகளின் தொகுதி (Culture is the Learned Behaviour) எனப் பொதுவாக வரையறுக்கப் படுகிறது. இது எமது சமூகத்தின் யதார்த்தங்களை வரையறை செய்கின்றது. ஆனால் கலாசாரத்தை பேணுவதிலும் கட்டமைப்பதிலும் பங்களிப்புச் செய்பவர்கள் யார்? என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் கலாச்சாரம் என்பது கூடுதலாக தொடர்பாடலினூடாகவே பேணப் பட்டு, கட்டமைக்கப்படுகிறது. கலாசார அதிகாரம் அல்லது மேலாதிக்கம் என்றும் இன்று கூடுதலாக வெகுஜனத் தொடர்பாடலிலேயே தங்கியிருக்கின்றது எனலாம். ஏனெனில் வெகுஜன ஊடகங்களே நவீன உலகில் இப்படிபபட்ட குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்து வருகின்றது.

இதனடிப்படையில் வெகுஜனத் தொடர்பாடலிற்கும், பண்பாட்டிற்கும் இடையிலான இடையூடாட்டங்கள் தொடர்பில் இன்று கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் 1830ல் முதலாவது வெகுஜன பத்திரிகையின் (Mass Circalation News Paper) அறிமுகத்துடன் ஊடகவியல் கோட்பாட்டாளர்களும், சமூக விமர்சகர்களும் வெகுஜனத் தொடர்பாடலினதும். ஊடக நிறுவனங்களினதும் செல்வாக்கையும், முக்கியத் துவத்தையும் பற்றி விவாதிக்கத் தொடங்கினர் இவர்களுள் போல் லஸபெல்ட் (Paul Lazarsfeld) என்பவர் 60 வருடங்களுக்கு முன்பே மக்களுடைய சமூக வாழ்க்கை முறைமை மாற்றப்பட்டு வருவதைக் குறிப்பிட்டார். தொலைக்காட்சியினுடைய செல் வாக்கு அல்லது இணையத்தளம் ஆகியவற்றின் அறிமுகம் ஏற்படுவதற்கு முன்பே அவர் மேனிலை பெற்ற சமூக நிலைமையைச் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

இத்தகைய வெகுஜனத்தொடர்பாடலிற்கும் பண்பாட்டிற்றுமிடையிலான இடைவினைத் தொடர்பில் பல்வேறு விவாதங்கள் இடம்பெற்று வந்துள்ளன. அவற்றுள் மூன்று முக்கியமான வையாகும்.

01. நுண்பாகத்தாக்கம் எதிர் பெரும்பாகத் தாக்கம் (Micro versus Macro Level Effects)

மக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஊடகங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளனர். அந்தவகையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வன்முறைகளைத் தூண்டுகின்றதா? வியர், சாராய விளம்பரங்கள் மதுபான பாவனையை அதிகரித்துள்ளதா? பாலியல் உணர்வைத் தூண்டும் திரைப்படக் காட்சிகள் பாலியல் பலாத் காரத்தை ஏற்படுத்துகின்றனவா? போன்ற சிக்கலான வினாக்கள் இங்கு விவாதத்திக்கப் படுகின்றனவாக உள்ளன.

ஆனால் ஊடகங்களே பல்வேறு நடத்தைகளை மக்களிடம் ஏற்படுத்துகின்றன. என்பதற்கு விஞ்ஞான ரீதியாக நிருபிக்கக்கூடிய சாட்சியங்கள் உண்டு. அதே நேரம் அவைகள் அவ்வாறு செய்யவில்லை என்பதை நிருபிக்கக் கூடிய சாட்சியங்களும் உண்டு.

எவ்வளவுக்கு எவ்வளவு வெகுஜன ஊடகங்கள்

தனியாட்களின் நடத்தையின் மீது தாக்கத் தைச் செலுத்துகின்றது. என்பதை நாடுகள் விவாதிக்கின்றபோது அவற்றின் நேரானதும் எதிரானதுமான செயற்பாட்டை முதலில் நாங் கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

எடுததுக்காட்டாக அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்தில் லிற்றில்டன் நகரிலுள்ள ஒரு உயர்தர பாடசாலையில் 1999ம் ஆண்டு இடம்பெற்ற ஒரு துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை இனங்காட்டி , இதுபோன்ற நடத்தைகளுக்குக் காரணம் ஊடகங்களே என்று குற்றஞ் சாட்டப் பட்டது. ஆனால் ஸ்ரீவ் பிறன்னர் (Steve Brenner) என்பவர் இதற்கு மாறாக ''அமெரிக்கர் கள் ஒவ்வொருவரும் பலநூறு படங்களைப் பார்க்கின்றனர்.பத்திரிகைகளில் நாளாந்தம் வெளிவரும் பலநூறு செய்திகளை வாசிக்கி ன்றனர். பல நூறு காட்டூன் மற்றும் பாலியல் சம்பந்தமான படங்களைப் பார்க்கின்றனர்." அவ்வாறு பார்க்கப் போனால் பல மில்லியன் கணக்கானோர் துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டு இன்று வீதியில் இறக்கியிருக்க வேண்டுமே, ஏன் அவ்வாறு நிகழவில்லை? எனக் கேட்கின்றனர்.

எனவே யார் இந்த விடயத்துடன் விவாதிக்க முடியும். அனேகமான மக்கள் ஊடகமானது ஒப்பீட்டளவில் சிறிய நேரடித் தாக்கத்தைத் தனியாட்கள் மீது ஏற்படுத்தினாலும், அவை பாரதூரமான தாக்கத்தினைச் செலுத்துவ தில்லை. எனவும் சில வேளைகளில் அவை உளவியல் ஆற்றுப்படுத்தலாகவும் செயற்படு கின்றன எனவும் குறிப்பிடுகின்றனர். இது நுண்பாகத் தாக்கம் (Micro Level Effects) எனப்படும்.

மறைமுகமான ஆனால் மிகவும் பாரதூரமான தாக்கத்தினை ஊடகங்கள் எமது கலாசாரத் தின் மீது செலுத்துகின்றது. எனப்பலர் வாதாதிடு கின்றனர். தொலைக்காட்சியில் காட்டப்படும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற வன்முறைக் காட்சிகளைத் தொடர்ச்சியாகப் பார்ப்பதால் அவை சாதாரண விடயங்களாக வும், வழமையான விடயங்களாகவும் மாறி நிஜ உலகிலும் வன்முறையை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு பண்பாட்டுச் சூழலை அது உருவாக்கி விடுகின்றது. இது பெரும் பாகம் தாக்கம் (Macro Level Effects) எனப்படுகிறது. அமெரிக்காவில் பாடசாலைக்குள் அடிக்கடி இடம்பெறும் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குற்றச்செயல்கள் என்பனவற்றை இன்று சாதாரண விடயங்க ளாகவும், வழமையான விடயங்களாகவும், பார்க்கின்ற மனப்பாங்கு தோன்றிவருவதற்கு ஊடாகமயப்பட்ட வன்முறைகளின் தாக்கமே காரணமாகும். ஏனெனில் இது பண்பாட்டுச் சூழல் மீது செல்வாக்கு செலுத்துகின்றது.

**02. நிர்வாக நிலை ஆய்வு எதிர் விமர்சன ஆய்வு**

(Administrative versvs Critical Research)

நிர்வாக நிலைப்பட்ட ஆய்வு என்பது 'உடன டியானதும், அவதானிக்கக் கூடியதுமான வெகு ஜனத் தொடர்பாடலின் செல்வாக்கை ஆய்வு செய்வதற்கும்' அதாவது வர்த்தக ரீதி யான தொலைக்காட்சித் தொடர்கள் எந்தள வுக்கு மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருக்கின்றன. அவற்றின் விற்பனை எந்தளவுக்கு இருக்கி ன்றது? மற்றும் வாழ்க்கைக் குறிப்புக்கள் அடங்கிய பத்திரிகைகளின் வாசகர் வட்டம் பெருகியிருக்கின்றதா?

வன்முறைக் காட்சிகள் நிறைந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்தான் கொலம்வைன் உயர்தரப் பாடசாலை கொலைகளைத் தூண்டியதா? போன்ற வெகுஜனத் தொடர்பாடலின் உடனடி யானதும், நேரடியானதுமான தாக்கத்தை இது ஆய்வு செய்கின்றது.

60 வருடங்களுக்கு முன்பே சமூக விஞ்ஞான ஆய்வுகளின் தந்தை (Father of Social Science Reserch) என அழைக்கப்படும் Paul Lagars Feld என்பவர் ஊடகங்களின் இவ்வா றான தாக்கத்தினை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து எச்சரிக்கை விடுத்திருந்தார்.

**விமர்சன ஆய்வானது** என்ன வகையான

நாட்டை நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக் கின்றோம்? என்ன வகையான மக்களாக நாங் கள் மாற்றிக்கொண்டிருக்கின்றோம்? எவ்வாறு எங்களுடைய கலாசாரத்தைப் பேணிப்பாது காக்கின்றோம்? என்ற கலாசாரம் சார்கட்ட மைப்பு மாற்றம் பற்றிய கேள்விகளைக் கேட் கின்றது. Paul Lagars feld குறிப்பிடுகையில் ''இணையத்தளங்களினூடான தகவல்களின் அடைவும். தொலைக்காட்சியினுடைய செல் வாக்கும் இல்லாத காலத்தில் நாங்கள் நிறைய விடயங்களை எழுத்தில் எழுதினோம் ஆனால் இன்றைய உலகத்தில் ஊடகங்கள் எங்களை வெறும் நுகர்வுச் சமுதாயங்களாக மட்டுமே வைத்திருக்க முனைகிறது." எனக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் குறிப்பிடுகை யில் நாங்கள் இன்று ஒவ்வொரு சில மணி நேரத்துக்குள்ளும் பல்வேறு அதிர்ச்சியளிக்கக் கூடிய செய்திகளைப் பெறக்கூடிய சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனக் குறிப்பிடுகின்றார்.

எனவே விமர்சன ஆய்வானது பரந்துபட்ட கலாசார கேள்விகளுக்கு விடை தேடுவதாக, சமூகவியல் ரீதியில் ஆழ்ந்த கட்டமைப்பு மாற்றங்கள பற்றி இது அவதானிக்கின்றது.

**03. மாறுநிலை புலப்பதிவு-எதிர் சடங்கியல் சார் புலப்பதிவு**

(Transmissional versus Ritual Perspective) இந்த இறுதி விவாதம் பேராசிரியர் கரே(Frof Carey) யினூடாக தொடர்பாடல் என்பதற்கான கலாசாரம் சார் வரையிலக்கணத்துக்கு இட்டுச் செல்கின்றது.

மாறுநிலை அல்லது பரிமாற்ற புலப்பதிவின்படி (Transmissional Perspective ன் படி) மக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தகவல்களை அனுப் புவர்கள் தான் ஊடகம் என்ற கருத்துப் பெறப் படுகின்றது. இது ஒன்றில் எங்களுடைய நடத் தையை பாதிக்கலாம் அல்லது பாதிக்காமல் விடலாம்.

மாறாக சடங்கியல் சார் புலப்பதிவின் படி (Ritunal Perspective) ன் படி ஊடகம் என்பது ''தனித்து செய்திகளை மாத்திரம் பரிமாற்று கின்ற மார்க்கம் அல்ல அதற்கும் அப்பால் கால வோட்டத்தில் சமூக விழுமியங்களையும் பொது வான மனோபாவங்களையும் பேணி வருவதே ஊடகம்" என்ற கருத்து சடங்கியல் சார் புலப்பதிவில் வலியுறுத்தப்படுகின்றது. அதாவது Ritual Perspective ஆனது 'வெகு ஜனத்தைத் தொடர்பாடலின் கலாசார முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்வது அவசியம்' என மொழிகின்றது.

எடுத்துக்காட்டாக ஒரு புதிய சாராய வகை யினை அறிமுகப்படுத்தும் வகையிலான கவர்ச்சி கரமான விளம்பர போஸ்டர்களை அனேக மான இடங்களில் எம்மால் அவதானிக்க முடிகினறது. இதன் மூலம் அதைப் பார்க்கின்ற வர்களுக்கு என்ன செய்தி கடத்தப் படுகின்றது? ஒன்றில் அதை வாங்குவதற்கு விரும்பலாம் அல்லது வாங்காமல் விடலாம் அந்த செய்தி ஒன்றில் மக்களின் மதுபானம் அருந்தும் நடத்தையினை ஊக்குவிக்கலாம். அல்லது கட்டுப்படுத்தலாம் இதுதான் பரிமாற்ற புலப்பதிவு ஆகும்.

ஆனால் இந்தச் செய்தியில் கலாசார ரீதியாக என்ன முக்கியத்துவம் உள்ளது? மதுபானத் தைப்பற்றிய என்ன ஜதார்த்தம் பகிரப்படு கின்றது இல்லாமல் சமூக நிகழ்வொன்றில் (Function) மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாதா? என்ன தன்மை ஒரு ஆணிடம் அல்லது பெண்ணிடம் ஈர்ப்பை ஏற்படுத்துகிறது? போன்ற விளம்பரத்தின் உள்ளடக்கங்கள் பற்றிய கலா சார ரீதியான முக்கியத்துவத்தை ஆய்வு செய்வது தான் சடங்கியல் சார் புலப்பதிவு ( Ritual Perspective) ஆகும்.

எனவே பண்பாட்டைப் பேணுவதிலும், கட்ட மைப்பதிலும் வெகுஜனத் தொடர்பாடலே இன்று மிக முக்கியமான கருவியாகக் செயற் படுகின்றது. அத்தோடு மட்டுமன்றி பண்பாட்டின் மீது அவை நேரானதும், எதிரானதுமான தாக்கத்தையும் செலுத்திக் கொண்டிருக் கின்றன என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும.

த. பிரபாகரன்
சமூகவியல் சிறப்புக் கற்கை
விடுகை வருடம் - 2007

# நவ கவிதைக்கு வித்திட்ட பாரதி

கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி தமிழ் இலக்கியம் நவயுகத்தில் காலடி எடுத்து வைத்த காலப்பகுதியாகும். தமிழ் இலக்கியத்தின மரபுவழி இலக்கியத்திலிருந்து மாறுபட்டு முற்றிலும் புதிய இலக்கிய வகைகள் தமிழிற் புகுந்த காலமாக இது கருதப்படுகிறது. முக்கியமாக நாவல், கவிதை என்பன இவ்வகையிற் குறிப்பிடற்குரியன. தமிழிற் கவிதை அதன் ஆரம்ப காலத்திலிருந்து காணப்பட்டாலும் அக்கவிதை பொது மக்கட் சார்புடையவனவாக மாறியது, 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியேயாகும்.

இதற்கான ஒரு சமூகப் பின்புலம் 19ம் நூற்றாண்டிற் செயறபட்டது எனலாம். ஐரோப்பியர் வருகை என்பது கீழைத்தேச நாடுகளைப் பொறுத்தவரையில் அவர்களின் பொருளாதாரத்தைச் சுரண்டியபோதும், அந்தந்த நாடுகளிலே வாழ்ந்த சமூகங்களை உலுப்பி புதுத் திசைக்கு அவர்களை திருப்பிவிட்டது. என்பதை யாரும் மறுக்க முடியாது.

க. கைலாசபதி ஐரோப்பியர் வருகை இந்தியாவில் ஏற்படுத்திய மாற்றம் பற்றி மார்க்ஸ் கூறியதை எடுத்துக்காட்டுவார்.

மார்க்ஸ் கூறியது பின்வருமாறு (க. கைலாசபதி 2002 : 8) இந்துஸ்தானத்தில் உள்நாட்டுப் போர்களும் படையெடுப்புக்களும் புரட்சிகளும் வென்றடக்கும் ஆக்கிரமிப்புகளும் பஞ்சங்களும் அடுத்தடுத்து நிகழ்ந்தன என்பதும் உண்மையே. ஆனால் அவையெல்லாம் சமுதாயத்தின் மேற்பரப்பையே பாதித்தன. இந்தியாவில் கடந்த காலத்தில் அரசியல் எவவாறு மாறியபோதிலும் சமுதாய நிலை மாறவில்லை. பண்டு ஒழிந்த காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மாறவேயில்லை. அரசுகள சிதைந்து சின்னாபின்னமானதைப் பற்றி இந்தியக் கிராமவாசிகள் கவலைப்பட்டதேயில்லை. கிராமம் முழுசாக இருக்கும் போது அது எந்த அரசுக்கு மாறுகிறது அல்லது எந்த மன்னரது பொறுப்பாயிருக்கிறது என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. கிராமத்தின் பொருளாதார அமைப்பு மாறவேயில்லை. ஒரே அச்சில் வார்த்தன போன்றும் மாறாதனவாயும் இருந்த இச்சிறு சமூகங்கள் பெரும் அளவுக்கு அழிந்து விட்டன. அவை மறைந்து கொண்டிருக்கின்றன. ஆங்கிலேயரது நீராவிச் சக்தியும் வர்த்தக சுதந்திரமும் ஆற்றிய வினையே இவ்வழிவுக்குக் காரணமாகும். அந்தக் குடும்ப சமூகங்கள் வீட்டுத் தொழில் முறையை அடிப்படை யாகக் கொண்டிருந்தன. அந்த இணைப்பே சுயபலத்தில் நிமிர்ந்து நிற்கும் திறணை அவற்றிற்கு அளித்தது. ஆங்கிலேயர் தலையீட்டால் ஓரளவுக்கே நாகரீகம் எய்திய அச்சிறு சமூகங்களின் பொருளாதார அடிப்படை தகர்ந்தது. அச்சமூகங்கள் அழிந்தன. இது ஆசியாவில் நிகழ்நத மிகப் பெரிய சமூகப் புரட்சியாகும். உண்மையை உரைப்பதெனில் ஆசியாவில் நிகழ்ந்த ஒரே சமூகப் புரட்சி இது.

இந்த மாற்றம் இந்தியாவில் பின்வரும் வழிகளில் நிகழ்ந்தது. 1967ஆம் ஆண்டு கிளைவ் பிரவுவால் வங்காளம் கைப்பற்றப் பட்டதைத் தொடர்ந்து இந்தியாவில் இங்கிலாந்தின் ஆட்சிக்கு அடிக்கல் நாட்டப் பெற்றது. இவர்களின் ஆட்சியின் முழுமையாக இந்திய அடிப்படைப் பொருளாதாரம் சிதைக்கப்பட்டது.

பிரித்தானியரின் தொழில் முயற்சியில் இந்தியாவில் முக்கியமாக புகையிரதத் துறை ஆரம்பிக்கப்பட்டதனால் நிலக்கரிச் சுரங்கத் தொழில் மேலும் வளர்ச்சி கண்டது. வங்காள நிலக்கரிக் கம்பனி 1843 இல் ஆரம்பிக்கப் பட்டது. கப்பற் பாதைகள் விரிவுபடுத்தப்பட்டன. உற்பத்தியாக்கப்பட்ட பொருள்களை இறக்கு

மதி செய்வதற்கும் மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும் தொழிலாளர் தேவைப் பட்டனர். தொழிலாளர் பெருக்கம் ஏற்பட இன்னும் பல காரணிகள் துணையாயின. ஏற்றுமதிக்கான நடவடிக்கைகளுக்காக அரிசி ஆலைகள் பொதியாக்குமிடங்கள் மா ஆலை கள் பருத்தியைச் சுத்தமாக்கும் ஆலைகள் போன்றன வளர்ந்தன.

மொத்தத்தில் திடீரெனத் தொழிலாளர் பெருக்கம் ஒன்று ஏற்பட்டது. இதன் காரணமாக பின்வரும் வர்க்கங்கள் தோன்றின.

1. புதிய நிலப் பிரபுக்களான ஜமீன்தார்கள்
2. தலத்திலாப் பண்ணையர்கள்
3. ஜமீன்தாரர்களிடமும் தலத்திலாப் பண்ணை யார்களிடமும் நிலத்தைக்குத்தகைக்குப் பெற்றுககொண்டோர்.
4. சிறுநில உரிமையாளர்
5. விவசாயப் பாட்டாளிகள்
6. புதிய முறை வியாபாரிகள்
7. புதிய முறை வட்டிக் கடைக்காரர்

நகர் சார்ந்தவர்களில் பின்வரும் வர்க்கத்தினர் உருவாயினர்.

1. நவீன முதலாளிகள்
2. நவீன தொழிலாள வர்க்கத்தினர்.
3. முதலாளித்துவ அமைப்புடன் பின்னிப் பிணைந்துள்ள சிறுவர்த்தகர்கள், பொறியிய லாளர், வைத்தியர், நியாயவாதிகள், பத்திரி கையாளர் முதலிய தொழிற்துறையாளர் களும், புத்தி ஜீவிகளும் (கைலாசபதி 1968:25)

இந்த வர்கத்கத் தோற்றங்கள் புதிய கல்வி முறைக்கு இட்டுச் சென்றன. இந்தியாவில் செயற்பட்ட Danish Missionary, Baptist Missionary, German Missionary ஆகியன கல்வியில் முக்கிய கவனம் செலுத்தின. இந்தியாவின் முதல் மூன்று பல்கலைக்கழகங்கள் 1858 இல் ஆரம்பிக்கப்பட்டன. (சென்னை, கல்கத்தா, பம்பாய்)

தொடர்ந்து அச்சு முறைமை கொண்டு வரப்பட்டது.Bengal Gazette/ Calcutta General Advertiser India Gazette, Calcutta Chronicle, Madras Courier, Madras weekly என நிறையப் பத்திரிகைகள் ஆங்கிலத் தில் வெளியாயின. தொடர்ந்து தமிழிற் பல பத்திரிகைகள் வெளி யாயின. தமிழ் அச்சக முயற்சி 1677 ஆம் ஆண்டு கிறிஸ்தவ வேத புத்தக வெளியீட்டுடன் ஆரம்பிக்கிறது.

1831 இல் மாத இதழாக தமிழ்ப் பத்திரிகை என்ற இதழும் 1841 இல் ஜனசினேகன் என்ற இதழும் தொடர்ந்து 1859 இல் வார இதழ் களாக தினவர்த்தமானி, ஜனவினோதன், பால்யநேசன் என்பனவும் வெளிவந்தன. இரா. கோதண்டபாணியின் கணக்கெடுப்பின் படி மத இதழ்களாக கிறிஸ்தவ இதழ்கள் 39 (1965 வரை) உம் இந்து மத இதழ்கள் (1966 வரை) 55 உம், இஸ்லாம் இதழ்கள் 17 உம் வெளியாகியுள்ளன. மகளிர்க்கெனவும் பல இதழ்கள் வெளியாயின (உ-ம் அமிர்தவசனி 1860, மகாராணி 1887, விவேக் போகினி 1867 பெண்மதிபோதினி 1891 மாதர்மனோரஞ்சினி 1899)

இவற்றோடு சேர்த்து இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்துக்கான முளைவிடத் தொடங்கிற்று. பன்னெடுங்காலமாக தேங்கிக்கிடந்த இந்து சமுதாயம் முகலாயப்படையெடுப்பு, பிற ஆக்கிரமிப்பு முதலியவற்றால் அதிகம் பாதிக்கப படாதிருந்த சமுதாயம் ஆங்கிலேயரது ஆட்சி யில் புதியதொரு சமூகம் தோற்றக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஒன்று ஆங்கிலக்கல்வியின் பயனாக, மதிப்பான உத்தியோகம் பெற்று வசதியுடன் வாழ்ந்த இந்திய ருக்கு கிட்டியது. இரண்டாவது ஆங்கிலேயரது பொருளாதாரச்சுரண்டல் முறையைப் பின்பற்றி சில இந்தியர்கள் முற்றிலும் புதிய வகையான உழைப்புக்குத் தம்மைத் தகுதியாக்கியும் தேவையான பொறியில் அறிவைப் பெற்றுக் கைத்தொழில் முறையில் முன்னேறும் வாய்ப் பைக் கண்டனர். இவ்விரண்டு வகைப் போக்கின் தர்க்க ரீதியான வளர்ச்சியே இந்தியப் புத்தி சீவிகளும் இந்தியப் பூர்வவாக்கஞுமாவார் பாரதி அவ்விரண்டையும் வெறுத்தான்.

இந்த ஒரு சூழலிலேயே பாரதியின் கவிதைகள் வெளிவரத் தொடங்கின. பாரதி நவ உலகத் தைப் பிரக்ஞைபூர்வமாகவே அணுகினார்.

சுவை புதிது பொருள் புதிது வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மகாகவிதை என்று நவகவிதைக்குக்
கட்டியம் கூறியதை நாம் காணமுடியும்.

''எளிய பதங்கள் எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவய மொன்று தற்காலத்தில் செய்து தருவோன் தாய்மொழிக்குப் புதிய உயிர்தருவோனா கிறான். ஓரிரண்டு வருசத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்'' என பாஞ்சாலிசபத முன்னுரை யிலே பாரதி (1912) குறிப்பிட்டுள்ள 'பொது சனங்கள்' அவரது கவதையின் இலக்குக் குழுவாக அமைந்தனர். 1902 இற்கும் 1905 இற்கு மிடை யில் நிவேதிதா அம்மையாரினது சந்திப்பினை அடுத்து பாரதி தேசபக்தியால் ஈர்க்கப் படுகிறான்.

**பாரதியின் மொழி:**

பாரதி தனிமை இரக்கங்களை உதறித் தள்ளி விட்டு பழைய பாவகைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறார். மந்திரச் சொல்பொங்கும பாடல்களை இயற்றத்தொடங்கினான் (கை லாசபதி) சுருங்கக் கூறுவதாயின் பாரதியின் சமகாலப் புலவர் தாம் தமிழிலும் ஆங்கிலத் திலும் கற்றுத் தேர்ந்த உயர்தனிச் செந்நெறி இலக்கியங்களின் வழிநின்று தகைசான்ற மாண்புபெற்ற இலக்கியம் படைக்க விரும் பினர். பாரதியோ அவற்றையெல்லாம் மீறி/ தாண்டி புதிய இலக்கியம் படைத்தார்.

வீரசுதந்திரம் வேண்டி நின்றார்
வேறொன்று கொள்வாரோ
வந்தேமாதரமென்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ.

என்று ஆவேசத்துடன் பாடுகிறார். அரசியல் விழிப்பும் சமுதாய விழிப்பும் ஒருங்கே ஏற்பட்ட நிலையில் அவருக்குமுனனே ஏனைய கவிஞர் களால் முக்கியம் கொடுக்கப்படாத பல விடயங்களை முக்கியம் கொடுத்துப்பாடுகிறார்.

நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்
என்பது அவன் தாரக மந்திரமாகிறது.

அவரது ஆக்கங்கள், கவிதைகள், கதைகள், கட்டுரைகள் பத்திரிகைக்குரிய எழுத்துக்கள், பத்திரிகைக்குரிய கருத்துப் படங்கள் என பரந்துபட்டனவாய் எழுந்தன. ஆனால் பாரதி கவிதைகளினாலே அதிகம் அறியப்பட்ட வரானார்.

தேசிய விடுதலை, தமிழ் விடுதலை, தொழிலா ளர் விடுதலை, பெண்கள் விடுதலை என்ற அடிப்படையில் அவரது சமுதாய விடுதலை என்ற எண்ணம் மலர்ந்தது. சமுதாயம் விடுதலை அடையாமல் தேசம் விடுதலை அடைய முடியாது என்பது அவரது எண்ணமாகும். அவரது பாடல்களில் தேசிய இயக்கம் பற்றிய நோக்கு புராதன இந்தியாவில் ஏற்பட்ட விடுத லை வெற்றிகளை வைத்துப் பேசப்படுவதுடன் அக்கால சமூகநிலை பற்றியும் நோக்குவதாக அமைந்தது. அவ்வாறு பாடும்போது மக்களி டையே வழங்கிவந்த சிந்து, கண்ணி முதலான யாப்புகளைப் பயன்படுத்தத் தொடங்குகிறார். உதாரணமாக நந்தனார் சரித்திர கீர்த்தனை யிலே பிரபலமான மாடு தின்னும் புலையா உனக்கு மார்கழித் திருநாளோ என்ற மெட்டில் மக்களைக் கவர்ந்திழுக்கும் பாடல்களைப் பாடுகிறார். ஆங்கிலேயர் கேட்பதாக

'தொண்டு செய்யும் அடிமை
உனக்குச் சுதந்திர நினைவோடா
பண்டு கண்டதுண்டோ அதற்குப்
பாத்திரமா வாயோ
ஜாதிச் சண்டை போச்சோ
உங்கள் சமயச் சண்டை போச்சோ
நீதி சொல்ல வந்தாய்
முன்னே நிற்கொணாது போடா

அதற்கு மறுமொழியாகக் கூறுவதாக

வீர சுதந்திரமும் வேண்டிநின்றார்
பின்னர்
வேறொன்று கொள்வாரோ.
ஆராமுதுண் ணுதற்கு
ஆசை கொண்டார் கள்ளில் அறிவைச்
செலுத்து வரோ என்று பாடுகிறார்.

வேற்று நாட்டு விடுதலையையும் இங்கு பாடுவது முக்கியமானது. முக்கியமாக ரஷ்ய விடுதலை பற்றியது குறிப்பிடத்தக்கது. இறைவனை வேண்டும் போதும் என்று தணியும் இந்த சுதந்திர தாகம் என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம் என்று வேண்டுவதைக் காணலாம்.

தமிழ்மொழி பற்றிப்பாடும்போது தமிழ் இலக்கியங்கள் புதிதாக இயற்ற வேண்டும் என்பதிற் கவனமாக இருந்தார். தமிழின் பழம்பெருமை பேசுவதில் மகிமை இல்லை என்று கூறும் அவர் தமிழ் இலக்கியத்தில் சிறந்த கவிஞர்களை மறக்கவில்லை.

''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்
புவிதன்னில் யாங்கணுமே பிறந்ததில்லை
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்
பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்''
என்று கூறி அத்தமிழ் முழக்கம் பின்வருமாறு அமையவேண்டும் என்கிறார்.

இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
பேசுவதில் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

என்று தமிழ்மொழியில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்கிறார். அதாவது தமிழில் எல்லாம் உண்டு என்ற எண்ணத்துக்கு அடிமையாகாமால் இருப்பதைக் காணலாம்.

பெண்கள் விடுதலைப்பற்றிப் பேசும்போதும் பெண்களின் வாழ்கின்ற இழிவு நிலைமையை எடுத்துக்கூறி பெண்கள் முன்னேற வேண்டியதைப் பற்றிப் பாடுவதைக் காணலாம்.

''ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை
யென்றெண்ணி
யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போ
மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்''
என்று பெண்களுக்கு இழைத்த அநீதிகள் பற்றிப் பேசுகிறார். எமது சமுதாயத்தில் கற்புநிலை பெண்களுக்கே கற்பிக்கப்பட்டது. அந்தநிலை மாற வேண்டும். ஆண்களுக்கும் கற்பு கற்பிக்கப்பட வேண்டும் என்கிறார். கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அதனைப் பொதுவில் வைப்போம் என்று கூறுவது புதிய ஒரு கருத்தாகும்.

சமுதாயத்தின் நாளைய தலைமுறையினரான குழந்தைகளை முதன் முதலாகப் பாடியவர் பாரதி. பெரியோர்களுக்குப் புத்தி சொல்வதை விட குழந்தைகளுக்குப் புத்தி சொல்வதில் கவனம் செலுத்தினார். அக்குழந்தைப் பாடல்களில் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள் தொனிப்பதைக் காணலாம். உதாரணமாக ஓடிவிளையாடு பாப்பா என்ற பாடலில் கூட விளையாடு பாப்பா என்று கூறுவது கூட்டு முயற்சிகளை இளமையிலிருந்து ஆரம்பிக்க வேண்டுமென்பதை எடுத்துக்கூறினார். சாதி விடுதலை அவரது காலத்துக்கு மிகத்தேவையாக இருந்தது.

''விடுதலை விடுதலை விடுதலை
பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு
எல்லோரும் சமமென்பதுறுதியாச்சு''
என்று பாடியதுடன் உயர் வர்க்கத்தினரைப் பற்றிய மரபுவழி சிந்தனையையும் மறுக்கிறான்.

''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே
- வெள்ளைப்
பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே
- நம்மை
ஏய்ப்போருக் கேவல் செய்யும் காலமும்
போச்சே - எல்லோரும் சமமென்பதுறுதியாச்சு''
என்று கூறுவது இதனை வெளிப்படுத்துகிறது.

அடக்கியாண்டவரை எதிர்த்தல் என்பன இங்கு குறிப்பிடற்குரியதாகும். அவரே பிராணமராக இருந்தும்கூட பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே என்று கூறுவது உண்மையில் மக்கள் யாவரும் சமன் என்ற அவரது கொள்கையை உறுதிப்படுத்துகிறது. யாவருக்கும் கல்வி என்பதும் அவரது சிந்தனையில் இருந்தது. இந்தச்சிந்தனையும் நவீனசிந்தனையின் ஒருபோக்காகும்

> ''அன்னசத்திரம் ஆயிரம்வைத்தல்
> ஆலயம் பதினாயிரம் நாட்டல்
> இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
> இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
> பின்னருள்ள கருமங்கள் யாவும்
> பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
> அன்ன யாவினும் புண்ணியம் கோடி
> ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்."

என்று ஏழைக்கு எழுத்தறிவித்தல் பற்றிப் பேசுவதைக் காணலாம். அத்துடன் வீதி தோறும் நகர்கள் தோறும் பள்ளிகளை அமைக்க வேண்டும் என்பதையும் கூறுகிறார். கல்வி இல்லாதவூரைத் தீயினுக்கிரையாக மடுக்கவேண்டும் என்று ஆதங்கப்படுகிறார்.

இனி ஒருவிதி செய்வோம் அதை எந்தநாளும் காப்போம் தனி ஒருவனுக்குணவிலையெனில் சகத்தினை அழித்திடுவோம் - என்று ஏழைகளின் உயர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும் என்றும் எடுத்துக்கூறுகிறார்.

இவ்வாறு பார்க்கும்போது அக்காலத்தின் சமூக மேம்பாட்டுக்கான எல்லாவகையான சீர்திருத்தக் கருத்துக்களையும் பாரதி எளிய தமிழிலே புதிய யாப்பிலே முன்வைத்து நவீன கவிதையின் முன்னோடியாகத் திகழ்கிறார்.

உசாத்துணை நூல்கள்


1. கைலாசபதி க., தமிழ் நாவல் இலக்கியம் குமரன் புத்தக இல்லம், சென்னை 1999
2. கைலாசபதி க., நவீன தமிழ் இலக்கியத்தின் அடிப்படைகள். குமரன் புத்தக இல்லம் சென்னை 2002
3. நு.்.மான் எம். ஏ., திறனாய்வுக்கட்டுரைகள். சிவகங்கை 1985
4. பாரதியார் - மகாகவி பாரதியார் கவிதைகள, திருநெல்வேலி 1964.



*With Best Compliments from :*

# PC HOUSE (PVT) LTD.

**#48/3, 1st Floor, Trinco Road,**
**Batticaloa. Tel/Fax : 065-4920217**
**E-mail:batticaloa@pchouse.lk**

PC House is a leading IT Solutions provider in Sri Lanka Offering the customers the best option in computers and accessories with an innovate product portfolio and an unparalleled after - sales Service. Today we are the Business Patner in Sri lanka for may prestgious international brands such ad Intel, Philips, Gigabyte, Logitech / Labtec range of products, Power Tree Uninterruptible Power Supply Systems & Philips PC Perpherals. We also boast of our own branded PC **"PANORA"**. Further we are also Business Partner for IBM Range of Compuer Solution and Gold System Builder for Microsoft.

www.pchouse.lk

## பழுகாமம் திரௌபதையம்மன் கோயில் – திரௌபதையம்மன் சடங்கு நிகழ்த்து முறை தொடர்பான அவதானங்களின் பதிவுகள்

தமிழர் பாரம்பரியம், வரலாறு, வழிபாடு என்பவை பற்றி சிந்திக்கையில் சடங்கு வழிபாடு முக்கிய கவனிப்புக்குள்ளாகிறது. மட்டக்களப்பு படுவான்கரையில் பழுகாமம் பழம்பெருமை மிக்க தமிழர் வாழ்விடம் என்பதனால் இவ்வூரில் தமிழருக்குரிய வழிபாட்டு முறை நிகழும் சடங்குக் கோயில்கள் உண்டு. அவ்வகையில் திரௌபதியம்மன் கோயில், சிவமுத்து மாரியம்மன் கோயில் என்பன அம்மன் சடங்குப் பாடல்களுடன் தொடர்புபட்ட சடங்கு வழிபாட்டுத் தலங்களாகும். இவ்வூரில் வெள்ளிமலைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இருந்த காளி கோயில் மிகக் கிட்டியகால வரலாற்றைக் கொண்டது. குறிப்பிட்ட சில வருடங்கள் காளியம்மனுக்குரிய சடங்கு வழிபாடு நிகழ்த்தப்பட்டு வந்தது. தற்போது இக்கோயிலில் சடங்கு நிகழ்த்தப்படுவதில்லை.

திரௌபதையம்மன் சடங்கு நிகழ்த்து முறையுடன் இக்கோயில் வரலாறு பற்றிய ஐதீகக் கதைகள் நெருங்கிய தொடர்புடைய தாயிருப்பதால் அவ்விடயங்கள் பற்றியும் நோக்குதல் வேண்டும். அம்மன் சடங்கு வழிபாட்டில் முக்கிய தலமாக விளங்கும் பழுகாமம் திரௌபதியம்மன் கோயில் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடையதாகும். பழுகாமம் திரௌபதையம்மன் கோயில் 18ம் நூற்றாண்டில் தோன்றியதாக கருதப்படுகின்றது. கதிர்காம யாத்திரிகர் ஒருவரால் இவ் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. அத்துடன் கண்டியின் இறுதி மன்னனாகிய விக்கிரம ராஜசிங்கனின் திருப்பணியைப் பெற்றதாக மரபு வழியான செய்திகள் கூறுகின்றன.
(மகேஸ்வரலிங்கம்.க, பக்-48-49, 1996, மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு - ஓர் அறிமுகம் )

### திரௌபதையம்மன் கோயில் வரலாறு

இக்கோயிலின் வரலாற்றைக் கட்டமைப்பதில் ஐதீகக்கதைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பழுகாமம் திரௌபதையம்மன் கோயில் வரலாறு பற்றிய ஐதீகக் கதைகள் தரும் செய்திகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

திரௌபதையம்மன் கோயில் நம்பியார் இ.ஆறுமுகம் பின்வருமாறு கூறினார் -

“மாகோன்ட ஆட்சிக்காலத்தில் மாகோனுக்கு வன்னியனாக இருந்த மதனகுலராஜசிங்கன் பழுகாமம் அமைச்சார் பிட்டி எண்டு முற்காலத்தில சொல்லப்பட்ட அமுச்சாப் புட்டியில குடி கொண்டிருந்து ஆட்சி செஞ்சி வந்தான். அந்த நேரம் இந்தியாவுலருந்து கதிர்காமத்துக்கு வந்த சன்னியாசி அம்மன் சிலை, பண்டாரச் செப்பு, வெள்ளிப்பிரம்பு, பாண்டவர் சிலை இதுகளக் கொண்டு வந்து கொத்துப் பந்தல் கட்டி விருட்சமான மரங்கள் சோலைகள் இருந்த இடத்தில வழிபாடு செஞ்சி வந்தான். அமைச்சர் பிட்டியில இருந்த மதனகுலராஜசிங்கன் இந்தக்கோயிலப் பராபரிக்க கோயில்தீவு எண்டு பழங்காலத்துல சொல்லப் பட்ட மாவேற்குடாவில குடி கொண்டிருந்த பூபாலகோத்திர வேளாளரிட்ட கோயிலப் பராபரிக்கிற அதிகாரத்தக் குடுத்தான். பூபால கோத்திர வேளாளர் இந்தியாவில காரைக் காட்டிலருந்து மாகோனால கொண்டுவரப்பட்ட குடிவழியாக்கள். அந்த நேரம் மதன குலராஜசிங்கனுக்கு உண்டாகின தீராத நோயப் போக்கின வச்சினாகுடி நல்லதம்பி வைத்தியருக்கு கைமாறா அவர்ர சொந்த பந்தங்கள் பழுதாமத்துக்கு அழச்சி இருப்பிடத்துக்கு வளவும், வெள்ளாமச்செய்யக் காணி நூற்றி அறுபத்திநாலு ஏக்கரும் குடுத்து இந்தியாவுலிருந்து வந்த அத்தியா குடியயும் சேத்து நடத்தச் சொன்னான். இந்தரெண்டு குடியாரும் தங்களுக்குள்ள மாப்புள பொம்புள எடுக்கிறதும் குடுக்கிறதுமா வாழ்ந்து கோயிலையும் நடத்தி வந்தாங்க.

இப்பிடி இருக்கக்குள்ள அத்தியா குடி வன்னியன் வேட்டைக்குப் போன போது வேடுவ

குலத்தில ஒரு வடிவான பொம்புளயக் கண்டு மனம் விரும்பி அவளை கடத்திக்கொண்டு வந்து கலியாணம் முடிச்சான். இதயறிஞ்ச வேடுவர்கள் படையோட பழுகாமத்துக்கு வாறதக் கேள்விப்பட்ட வன்னியன் அவயளச் சமாதானப்படுத்துறதுக்காக கேணிக்கரை யெண்ற கேணி வித்தலில விருந்து படச்சி அவயட ஆவேசத்தத் தணிச்சி உங்கட வேட்டு வப் பொம்பிளய திருமணம் செய்திரிக்கன். நமக்குள்ள சண்ட வேணாமெண்டு கேட்டு காணியில எண்பத்திரண்டு ஏக்கரும் கோயில் உரிமயில சமபங்கும் வீட்டு வளவு நிலம் எட்டும் குடுத்து சம பங்காளிகளாக்கி கோயி லை நடாத்தச்சொல்லி மதனகுலசிங்கன் சொல்ல அவயளும் சம்மதப்பட்டாங்க. இவயளுக்குப் புறந்த புள்ளளயள் பண்டாரப் பிள்ளை எண்டும் நான்கு வண்ணக்கு பதவியும் குடுத்து ரெண்டு சாகியமும் கோயில நடத்தி வந்தாங்க.

கோயிலை தாவிக்க காலா நிண்ட வச்சினா குடியாருக்கு கோயில் நம்பியார் உரிமையும் அருச்சுனன், சகாதேவன் உரிமை அத்தியா குடியாருக்கும் பண்டாரப்பிள்ளையாருக்கு வீமன், நகுலன் உரிமைகளும், அருச்சுனன் தவத்திற் குப் போகக்குள்ள விடாம மறிக்கிற பேரண் டச்சி உரிமையும் குடுத்து இந்த முறை யில தொன்று தொட்டு சடங்கு நடத்தி வாறாங்க..."

இதே விடயங்களை உள்ளடக்கியும் சில விடயங்களில் மாறுபட்டும் திரௌபதியம்மன் கோயிலில் நீண்ட காலம் அனுபவம் கொண்ட பழுகாமத்தைச் சேர்ந்த வே.ஆறுமுகம் (80) கட்டு வைத்தியர் திரௌபதையம்மன் கோயில் வரலாறு பற்றி பின் வருமாறு கூறினார்-

"இந்தியாவிலருந்து ஒரு சித்தன் பழுகாமத்தில துரோபதையம்மன வைக்கணுமெண்டு கடல் மார்க்கத்துல கப்பல் கட்டி அம்மன் சிலை பண்டாரச் செப்பு இதுகளை எல்லாம் கொண்டு வரக்குள்ள காத்து மாறியடிச்சி கப்பல் திசை திரும்பி பாண்டிருப்புக்குப் போயிரிக்கி. சித்தன் பாண்டிருப்பிலேயே கோயில் கட்டி சிலை யையும் வச்சுப் போட்டு இந்தியாவுக்குத் திரும் பித்தான். பிறகு சித்தனுக்கு அம்மாள் பணி விடையாகி பழுகாமத்திலையும் அம்மாளுக்கு கோயில் கட்டோணும் எண்டு உத்தரவச் சொல்லி அதுக்குத் தக்கதாக சந்தணக் கட்ட யில செஞ்ச வீமன் அருச்சுனன் நகுலன் சகா தேவன் சிலைகளும் கல்லில செஞ்ச பிள்ளை யார் சிலை ஐம்பொன்னுல செஞ்ச திரௌபதி யம்மன் குந்தம்மாதேவி விஸ்ணு சிலைகளயும் கொண்டு வந்து கொத்துப்பந்த லால கோயில் கட்டி வழிபடச் செஞ்சான்...

அந்த நேரம் மாவேற்குடாவிலருந்த பூபால கோத்திரவன்னிமையும் அதுக்குக்கிட்ட இருந்த வண்ணாரக் காளிர திடலில சீவிச்ச அத்தியா குடி வச்சினாகுடியாரும் கோடையில வந்த தண்ணித் தட்டுப்பாட்டால இங்க சீவிக்க ஏலா தெண்டு பழுகாமத்துக் காட்டுக்கு குடியேறி காடுவெட்டி வளவுகள உண்டுபண்ணி வாழ்ந்து வந்தாங்க. இதெல்லாம் நானூறு ஐநூறு வருசங்களுக்கு முந்தி நடந்த விசியங்கள். அப்ப பழுகாமத்திலருந்த திரபதியம்மன் கோயிலையும் நடத்தி வந்தாங்க. திரபதியம் மன் கோயிலுக்கு பூபால கோத்திர வன்னிம அடிக்கடி வந்து போய்க் கோயில் நடத்தக் குள்ள வன்னிம ஒருநாள் காட்டுக்கு வேட்டைக குப் போன இடத்தில தண்ணிவிடாய் உண்டாகி காட்டுக்கு நடுவுலருந்த கொட்டுக கிணறக் கண்டு அதுபெரும்பாலும் திக்கோடையாத்தான் இரிக்கோணும். அதுல தண்ணிகுடிச்சித்து அங்கருந்த அழகான வேட்டுவிச்சியக் கண்டு வேடரெல்லாம் வேட்டைக்கிப் பொயித்தாங்க தானே பொம்பிளயக் கிளப்பித்து வந்துத் தாரு....

வேடனுகள் புள்ளயக் காணல்ல எண்டுதேடி குதிர வந்து போன தடத்தப்பிடிச்சி பழுகாமத் துக்கு படையோட வந்திரிக்கானுகள். படை யெல்லாம் வாறதக்கேணிக்கரையிலருந்த காவலாளி கண்டுவந்து வன்னிமையிட்டச் சொல்ல தென்னம் பாணியில சுட்ட ஆறு

மாதத்துக்கு இரிக்கக்கூடிய பலகார வகைகளும் பறங்கிப்பழங்களுமாப் போய் நாலுபேர் சேந்து தூக்குற தட்டுல கொண்டு கேணிக் கரையடியில படைச்சாங்க. அவயளும் சந்தோசமாச் சாப்புட்டு சமாதானப்பட்டாங்க. சாப்புட்டாக் குடிக்கிறதுக்கு பக்கத்து வீட்டுல இருந்த கொட்டுக்கிணத்துல தண்ணி அள்ளப் போக இவயளுக்குத் தண்ணிதர ஏலாதெண்டு கிளவியொருத்தி சொன்னதால உடனே வன்னிமையாக்களும் வேடரும் பக்கத்துல மடுவத்தோண்டி தண்ணிகுடுச்சாங்க. அதுதான் இப்பரிக்கிற கேணி.....

பூபால கோத்திர வன்னிம பழுகாமத்து வெளி வயலலுல தென்பக்கமா ஏழும், ஒருவயல் பன்ரெண்டு ஏக்கர் வரும். வடபக்கமா அத்தியாகுடி வச்சினாகுடியாருக்கும் குடுத்து வேடர்க ளுக்கு வீட்டு வளவு ஏழும் குடுத்தான். இண்டைக்கி துரையப்பா, கதிரவேலி, சுளியர் வேலாப்போடி, கறுத்தார்ர கந்தன், நாராயண புள்ள அவய இரிக்கிறதுதான் அவயட பூர்வீக வளவுகள். வன்னிமைக்கும் வேட்டுவப்புள்ளைக்கும் புறந்தபுள்ளயள் பண்டாரப்புள்ள. வேளாளரும் பண்டாரப்புள்ளயுந்தான் கோயிலுக்குச் சமபங்கான சாதியாக்கள்"

இவ்வாறான தகவல்களிலிருந்து திரௌபதையம்மன் கோயிலின் தோற்றம் பற்றியும் மரபுபற்றியும் அறியமுடிகின்றது. இக்கோயிலின் வரலாற்றினை கூர்ந்து நோக்கும்போது அவ்வரலாற்றுடன் தொடர்புபட்டுள்ளதாக சாதிவகுப்பொன்று தோன்றியுள்ளமை தெரிய வருகின்றது. பண்டாரப்பிள்ளை என அழைக்கப்படும் இவர்கள் வேடவேளாளரெனவும் தங்களை அடையாளப்படுத்துகின்றனர். இச்சமூக அமைப்புபற்றி மட்டக்களப்பு வரலாறு எனும் நூலில் வெல்லவூர்க் கோபால் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இம்மக்கள் தங்களை வேடவேளாளரென அடையாளப்படுத்தவே பெரும்பாலும் அவாவுறுகின்றனர்......

..........தங்களது மூதாதையரின் வாழ்விடமாக கரவெட்டி பகுதியை குறிப்பிடும் இவர்கள் கண்டி மன்னன் இராஜசிங்கன் சுற்றுலாவரும் போது அங்கு வாழ்ந்த தங்கள் குல அழகியை விரும்பி அழைத்து வந்து பழுகாமத்தில் ஒரு பண்டார வீட்டில் தங்கவைத்து அவளுடன் சில நாட்கள் இருந்ததாகவும் பின்னர் அடிக்கடி மட்டக்களப்பு வரும்போது அவளுடனே தங்குவதாகவும் இதனால் அவளின் உறவினர்கள் பழுகாமம் வர நேர்ந்ததாகவும் மன்னனால் வழங்கப்பட்ட 84 ஏக்கர் காணியும் இவர்களது 7 வாரிசுப்பிரிவுகளும் செய்கை பண்ணி வந்ததாகவும் தங்கள் குலப்பெண் பண்டாரப்பிரிவில் வாழ்ந்த தன்மையால் தங்களும் பண்டாரப் பிள்ளைகளாக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்..... இவர்கள் வாழும்பகுதி வீரஞ்சேனை என அழைககப்படுவதும் ஒரு அர்த்தப்பாட்டினை கொண்டிருக்கவே செய்கிறது..."
(கோபாலசிங்கம்.சி, பக்-166, 2005, மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம்)

இவ்விதம் பழுகாமம் திரௌபதையம்மன் கோயில் வரலாறுடன் பல சமூகங்கள் பற்றிய வரலாறும் இணைந்துள்ளமை தெரிகின்றது பழைய மரபுகளை அடியொற்றியும் அதை பேணும் வகையிலும் சடங்கு நிகழ்த்தும் முறை அமைந்திருப்பது மற்றொரு சிறப்பம் சமாகும். பழைய மரபுகளை மாற்ற முனையும் போது ஏற்படும் முரண்பாடுகளால் போட்டி மனப்பான்மையும் அதனால் சாதிச்சண்டையும் ஏற்பட்டமை இக்கோயில் கொண்டுள்ள நீண்ட வரலாற்றின் கசப்பான சில பக்கங்களாகும்.

## சடங்கு நிகழ்த்து முறை

பழுகாமம் திரௌபதியம்மன் கோயில் சடங்கு ஆடிமாதம் கதிர்காமத் தீர்த்தத்தை அடுத்து வரும் வெள்ளிக்கிழமை தீமிதிப்பு வைபவம் வரத்தக்கதாக கதவு திறக்கப்பட்டு எட்டு நாட் சடங்கு நடாத்தப்படுகிறது. இங்கு இடம்பெறும் சடங்குகள் மரபு ரீதியாகப் பேணப்பட்டு வருகின்றன.

**வாழைக்காய் மடுவில் போடுதல்**

கதவு திறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு வரும் புதன்கிழமையொன்றில் வீமனும் வண்ணக்கர் மாரும் அம்மனின் வணக்கப் பூசையுடன் கண்ணகியம்மன் கோயில் வரை கத்தியுடன் வந்து கத்தியை வீமனின் கையில் கொடுத்து நம்பியார் வழியனுப்புவார். அவரிடம் விடை பெற்று வடதிசை நோக்கி வாழைக் காய் வெட்டச்செல்வர். வெட்டிவந்ததும் சீப்புக் களாகக் குவித்து புதிர்க்கோட்டை (கோயிலுக் குரிய வயலில் செய்கை பண்ணப்பட்ட நெல்) காவாகத்தூக்கிக் கொண்டுவந்து கோயிலை வளைத்து உள்ளே வைத்தபின் வாழைக்காய் குவியலுக்கு நம்பியார் பூசைசெய்து தெற்கு முகமாக நின்று மூன்றுமுறை மடுவெட்டுவார். பின்னர் அர்ச்சுனர் வாழைக்காய்க்கு பூசை செய்து வாங்கி மடுவினில் வைப்பார். அதற்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் வண்ணான் கூயெண்ணும் என்னும் நிகழ்வு தற்போது இடம் பெறுவதில்லை.

**நம்பியாரை கூட்டி வந்து கதவு திறத்தல்.**

வெள்ளி முன்னிரவு நம்பியாரை அழைத்து வரச்செல்வார்கள். வண்ணக்குமார் எட்டுப் பேரும் தீவட்டி விளக்குடன் பறையொலிக்க நம்பியாரைக் கூட்டி வந்து கதவுதிறக்கும் சடங்கு இடம்பெறும். அம்மனின் வணக்கப் பூசையின்போது தருமர், வீமன், நகுலன், சகாதேவன் உட்பட பாண்டவர்கள் சேர்ந்து அம்மனின் வணக்கப் பாடல்களைப் பாடுவர். இதன் பின் நோருப்பு நெல் குத்துதல் இடம்பெறும். நோருப்பு என்பது பாண்டவர்கள் அனைவருக் குமான உணவு தயாரிக்கும் நெல். இவர்கள் உணவு அருந்துவதை பள்ளயம் போடுதல் என்று கூறுவர். இக்கிராமத்து மக்களால் பள்ளயக்கோயில் என இக்கோயில் அழைக்கப் படுவதும் நோக்குதற்குரியது.

**இரவுச் சடங்குகள்**

இரவுச்சடங்குகளின் போது அம்மனின் வணக்கப் பூசையுடன் தெய்வங்கள் ஆடுதல் கட்டுச்சொல்லுதல் களித்தல் என்பன இடம் பெறும்.

இரண்டாம் நாள் சடங்கினை பண்டைய நாளில் சட்டிகுடி முக்குவர் செய்து வந்தனர் பின்னர் சட்டிகுடியும் பணிக்கணார் குடியும் சேர்ந்து நடாத்தி வருகையில் ஏற்பட்ட வட்டாமடைத் தகராற்றில் இருவகுப்பினரும் அதனை விட்டுவிட பண்டாரப்பிள்ளையினரும் அத்தியாகுடி வைத்தியனார் குடியினரும் அச்சடங்கினை செய்து வருகின்றனர். வட்டா மடை என்பது வெற்றிலை, பழம், பாக்கு, பிரசாதம் என்பன வைத்து நம்பியாரால் வழங் கப் படும் வட்டாவாகும். அதைப் பெறுவது யார் என்பது பற்றிய பிரச்சினையே வட்டா மடைத்தகராறாகும். வட்டாமடை வாங்குவது என்பது தம்மை அடையாளப்படுத்து வதுடனும் பெருமிதத்துடனும் தொடர்புபட்டுள்ளது என மக்கள் நம்புவர். சாதித் தலைவர் களுக்கு பூசை முடிந்தவுடன் வட்டாமடை வழங்கப் படுகிறது. வட்டாமடை பல்வேறு சாதிப்பிணக்கு களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.

மூன்றாம் நாள் சடங்கு பாடசாலைச் சடங்காக நடாத்தப் பட்டு வருகின்றது. நெடுந் தீவார் எனும் சாதியினர் இச்சடங்கைப் பண்டைய நாளில் செய்து வந்தனர். வண்ணக் குத் தகராறில் இதனை விட்டு விலகி தமக் கென்று மாரியம்மன் கோயிலை அமைத்துக் கொண்டனர். நான்காம் நாள் திங்கட்கிழமை இடம்பெறும் சடங்கு மூலவேலன் கத்தறை யினரால் மேற்கொள்ளப்படுகிறது. சில்லிக் கொடிச் சடங்கு எனவும் இது அழைக்கப் படுகின்றது. ஐந்தாம் நாள் சடங்கு நாவிதர் எனப படுவோரால் மேற்கொள்ளப்படுகிறது. நாசிவண்ட முன்மாரிச் சடங்கு எனவும் இது அழைக்கப்படுகிறது. ஆறாம் நாள் சடங்கு வண்ணார் எனப்படுவோரால் மேற்கொள்ளப் படுகிறது. இது வண்ணாண்ட முன்மாரிச் சடங்கு எனவும் அழைக்கப் படுகின்றது.

ஏழாம் நாட்சடங்கு கல்வட்டைச் சாதியினருக் குரியது. எட்டாம் நாட்சடங்கினை வேளா ளரும் பண்டாரப்பிள்ளையினரும் இணைந்து மேற்கொள்ளுகின்றனர். இது பழுகாமத்து வெளிச சடங்கு எனவும் அழைக்கப்டுகின்றது. சடங்கின்

பெயரை வயலின் பெயரால் கூறியழைப்பது இவ் ஆலய குறிப்பேடுகள் தரும் செய்தி யாகும். கோயிலை பராபரிக்க வன்னிமையால் ஒவ்வொரு சாதியினருக்கும் நெல் வயல்கள் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. பழுகாமத்து வெளிபண்டாரப் பிள்ளை யாருக்கும், அத்தியாகுடி வச்சினாகுடியின ருக்கும், வண்ணாருக்கு வண்ணாண்ட முன மாரியும், நாவிதருக்கு நாசிவண்ட முன் மாரியும், மூலவேலன் கத்தறையினருக்கு சில்லிக் கொடி வயலும், கல்வட்டையினருக்கு கல் வட்டை வயலும் வழங்கப்பட்டு கோயில் சடங்கு கள் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன.

இரவுச் சடங்குகளில் தெய்வங்களை உரு வேற்றுதல் முக்கியம் வகிக்கின்றது. பாண்டவர் களில் அர்ச்சுனன், வீமன், நகுலன், சகா தேவன் ஆகியோரையும் குந்தம்மாதேவி, திரௌ பதி மற்றும் ஏனைய பரிபாரத் தெய்வங்களான காவல்காரன், வீரபத்திரன், காளியம்மன், வீரம் மாகாளி, வைரவர், நரசிங்கவைரவர், பேச்சியம் மன், மாரியம்மன் போன்ற தெய்வங்களையும் உருவேற்றும் பாடல்கள் பாடப்படுகின்றன. இவை அகவல்கள் என அழைக்கப்படுகின்றன. குந்தம்மாதேவி, திரௌபதை ஆகியோரை உருவேற்றும் பாடல்கள் தாலாட்டுப் பாடல்க ளாகவும் பாவாடைப் பாடல்களாகவும் அமைந்துள்ள துடன் திரௌபதைக்கென தனியே உச்சாடனப் பாடலும் உண்டு. இரவுச் சடங்குகளில் தெய்வங்களை உருவேற்றுதல் முக்கியம் வகிக்கின்றது. பாண்டவர்களில் அர்ச்சுனன், வீமன், நகுலன், சகாதேவன் ஆகியோரையும் குந்தம்மாதேவி, திரௌபதி மற்றும் ஏனைய பரிபாரத் தெய்வங்களான காவல்காரன், வீரபத திரன், காளியம்மன், வீரம்மாகாளி, வைரவர், நரசிங்கவைரவர், பேச்சியம்மன், மாரியம்மன் போன்ற தெய்வங்களையும் உருவேற்றும் பாடல்கள் பாடப்படுகின்றன. இவை அகவல் கள் என அழைக்கப்படுகின்றன. குந்தம்மா தேவி, திரௌபதை ஆகியோரை உருவேற்றும பாடல்கள் தாலாட்டுப் பாடல்களாகவும் பாவாடைப்பாடல்களாகவும் அமைந்துள்ளதுடன் திரௌபதைக்கென தனியே உச்சாடனப் பாடலும் உண்டு

மாரியம்மன் அகவல், காளியம்மன் அகவல், வைரவர் அகவல், காவல்காரன் அகவல், காளியம்மன் அகவல், வீரம்மாகாளி அகவல், பேச்சியம்மன் அகவல், ஆகாயப்பேச்சியம்மன் அகவல், வீரபத்திரன் அகவல், ஆதிவைரவர் அகவல், நரசிங்கவைரவர் அகவல், காளி அகவல், காத்தவராயன் அகவல், வீரபத்திரன் அகவல், நரசிங்கர் அகவல், பத்திரகாளி அகவல் என்பன அந்தந்த தெய்வங்களுக்கு ஆடுவோரை உருவேற்றச் சொல்லப்படும் மந்திரங்களாகும். ஒருவர் பல தெய்வங் களுக்கும் உருவேறி ஆடுவார். ஒவ்வொரு தெய்வத்தை அழைப்பதற்கும் தனித்தனியே அகவல் பாடி அதற்குரிய ஆயுதங்களை வழங்கி மடைப்பலி, சாட்டை, இளநீர்ப்பலி என்பன வெவ்வேறாக வழங்கப்படும்.

ஒருவர் பலதெய்வங்களுக்கு ஆடும் மரபுக்கு உதாரணமாக கந்தசாமி (46) காளி, வீரபத்திரன், காவல்காரன் எனும் மூன்று தெய்வங்களும் ஏறி ஆடுபவராவார். இவர் பத்திரக்கொத்துடன் ஆடும்போது காளியா கவும், கருங்காலிப் பொல்லுடன் ஆடும் போது வீரபத்திரராகவும், வாளுடன் ஆடும் போது காவல் காரனாகவும் தெய் வமாடு வதனையும் ஒவ்வொரு தெய்வத்துக் கும் வெவ்வேறான உச்சாடன மந்திரங்களும் பெலி என்பனவும் நிகழ்த்தப்படுவதனையும் காணலாம்.

திரௌபதியம்மன் கோயிலில் பாடப்படும் உச்சாடன மந்திரங்களில் வைரவர் அகவல் (சீர்புகழ் வைரவர் செந்தமிழுரைக்க…..) பத்திர காளி அகவல் (அரி அரி காளி அட்சரகாளி….) என்னும் இரண்டு அகவல்கள் மாத்திரமே மகமாரிதேவி திவியகரணியில் பதிப்பிக்கப் பட்டுள்மை குறிப்பிடத்தக்கது.

உச்சாடன மந்திரங்களை பாடுவோராக அசுரசேது கந்தசாமி (70), பரமலிங்கம் பூசாரி (42), தங்கத்துரை (45), கரகவடிவேல் (64), குணசேகரன் (40), விக்கினேஸ்வரன் விதானை (50), தேவதாஸ் பூசாரி (35) ஆகியோரைக் குறிப்பிடப்பிடலாம்.

இரவுச்சடங்குகளின் போது பேய் கட்டுதல், வெட்டுதல், படுகளம் போடல், படுகளம் எழுப்பல், உடுகுடைத்தல், தணித்தல், முட்டுக் கொடுத்தல், திருநீறு போடல், தண்ணி யோதுதல் என்பன இடம் பெறும். இவற்றில் கட்டுதல், படுகளம் போடுதல், உடுகுடைத்தல் என்பன திரௌபதியம்மன் கோயிலில் அண்மைக்காலமாக இடம்பெறுவதில்லை.

தெய்வம் பிடித்து ஆடுகின்றவர்களின் ஆட்டம் உண்மையான தெய்வ ஆட்டமா எனப் பரீட்சித்துப் பார்க்கும் மந்திரவாதிகள் தெய் வங்களை ஆடவிடாமல் அதற்குரிய மந்திரம் சொல்லிக் கட்டுவர். அம்மந்திரம் பேய் கட்டு மந்திரம் எனப்படும். பேய்கட்டும் போது அம் மனின் மடையிலுள்ள பூவையோ பாளை யையோ அல்லது அம்மனுக்குச் சாத்தும் ஏதோ ஒரு பூசைப்பொருரளையோ எடுத்துக் கொண்டு (பார்வையாளராக அமர்ந்திருந்து) இரகசியமான முனறயில் கட்டு மந்திரத்தைக் கூறி பூவை அல்லது பாளையைக் காலால் மிதிக்கும்போது தெய்வமாடிக் கொண்டு நிற்பவர் திடீரென்று விறைத்து விழுவார். அவற்றுள் ஒரு கட்டு மந்திரம் பின் வருமாறு.

"ஓம் அனுமான் எக்கலாதேவி கிரி
நந்தனம் சுர அனுமந்தா கட்டு இருளா
மருளா பறுபதபாணி கிரி நந்தன சூ
அனு மந்தா கட்டு கட்டு"

(நாராயணபிள்ளை அவர்களிடமிருந்த கையெழுத்துப் பிரதியிலிருந்து)

இவ்வாறு கட்டியதும் விழுந்த தேவாதியை உருவேறி ஆடவைப்பதற்காக வெட்டு மந்திரங் களைக் கூறி வெட்டுவர். அவ்வேளை தேங்காய வெட்டுதல், படுகுழி வெட்டி தேவாதியை (பாதாள வெட்டு) நிலத்துள் இறக்கி அவரது தலையில் தேங்காயை வைத்து வெட்டும் போது வெட்டு மந்திரம் சொல்லப்படும். வெட்டியவுடன் கா.... எனச்சத்தமிட்டு மீண்டும் உருவேறி ஆடுவார். பேய்கட்டுதலின் மற் றொரு வகை படுகளம் போடுதல். படுகளக் கட்டை படுகள வெட்டு மூலம் முறியடித்து மீண்டும் உருவேறி ஆடவைப்பர்.

நோய்வாய்ப்பட்டவர்களை தெய்வமாடிகள் இனம் கண்டு (தீராத நோயுடையவர்கள் தீர்த்தச் சட்டியுடன் தெய்வமாடிகள் முன் நிற்பர்) அவர்களை ஆலய வீதிக்கு ஒதுக்குப் புறமாகக் கொண்டு சென்று தலையில் நீர் ஊற்றி வேப்பிலையால் அடித்து பேய் பிசாசிகளை நீக்குவர். இது களிப்பு எனப்படும். இவ்வேளையில் நூல் கட்டுதல், திருநீறு போடுதல் என்பனவும் இடம் பெறும்.

உருத்தணித்தல் என்பது மடப்பலி, இள நீர்ப்பலி, சாட்டை என்பன வழங்கியபின் தேவாதிகளின் உருவைத் தணித்தலாகும். மந்திரம சொல்லி காதினுள் ஊதித் தணிப்பர். அதற்குத் தணியவில்லையெனில் முட்டுக் கொடுப்பர்.


"ஓம் கால வயிரவி காலகண்ட வயிரவி ஆதி
அரனார் தேடிய கால சங்காரி
''ஆ...ஈ...அங்ங....உங்ங.....சிங்க...சிவாயநம
இந்தா "
என்று நெற்றியில் முட்ட உருத்தணியும்.
(நாராயண பிள்ளை அவர்களிடமிருந்த கையெழுத் துப்பிரதியிலிருந்து)

உடுகு உடைத்தல் என்பது சடங்கின் போது அடித்துக் கொண்டிருக்கும் உடுகை உடைப் பதற்காக மந்திரம் சொல்லி உடைத் தலைக் குறிக்கும். பேய் கட்டுதல், படுகளம் போடுதல், உடுகு உடைத்தல் என்பன திரௌபதியம் மன் கோயிலில் தற்போது இடம்பெறுவதில்லை.

**வனவாசம்**

ஆறாம் நாள் புதன்கிழமை காலையில் தருமர் வாளினை மாற்றி வீமனிடம் கொடுத்து வனவாசம் அனுப்பும் போது வாள் மாற்றுதல் பிரதானமாக அமைந்திருக்கும். வாளை எடுத்துவரும் போது பஞ்சபாண்டவர்கள் காவியப் பாடல்களுடன் வாள் மாற்றும் இடத்திற்கு வருவர். தருமர் வீமனிடம் வாளைக் கொடுப்பார். தருமரை வணங்கி

வாளைப் பெற்ற வீமன் ஊர்வலமாக, காவல் தெய்வங்கள், தருமர் தவிர்ந்த ஏனைய பாண்டவர்கள் புடை சூழ தெய்வமாடிகளுடன் பேய்க்கோலம் கொண்டு ஆடியவாறு வளவுக ளுள் புகுந்து வாழைக்குலைகளை வெட்டி வீழ்த்தியவுடன் விறைத்து விழுவார்.



பின்னர் அவர் தலையில் நீர் ஊற்றி வீமனுக் குரிய உச்சாட மந்திரத்தை கூற மீண்டும் உரு ஏறி ஆடுவார். இவ்வாறு வாழைகககுலை கள், கரும்பு, இளநீர்க்குலை என்பன வெட்டப் படும். இவ்வாறு பூசைப் பொருட்கள் சேர்க்கப பட்டு எட்டாம் நாள் சடங்குக்குத் தேவையான திரவியங்கள் பெற்றுக்கொள்ளப்படும். இந் நிகழ்வு கதலிவனம் அழித்தல் எனவும் அழைக்கப் படுகின்றது.

பாண்டவர்கள் வனவாசம் செய்யும் சடங் கானது அஞ்ஞாதவாச காலத்தில் பாண்டவ ருக்கு வீமன் உணவு தேடிக் கொடுத்தமையை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. வனவாசம் முடிந்ததும் இரவில் வழமைபோல் சடங்கும் அம்மனின் வணக்கப்பூசையும் இடம்பெறும்.

நகுலன் கொடி எடுத்தல்

எட்டாம் நாள் வியாழக்கிழமை நகுலன் கொடி எடுத்தல் நிகழ்வு இடம்பெறும். பண்டைய நாளில் கோயிலார் கூட்டச்செல்லல் என இது வழங்கப்பட்டு வந்தது. கொக்கட்டிச் சோலை யில் இருந்து வரும் கோயிலாரை நகுலன் சென்று அழைத்துவருவதாகவும் அந்த மரபு தற்போது இல்லையெனினும் கொடி எடுத்து வருதல் என இச்சடங்கு இடம் பெறுகிறது.


## தவநிலை

அருச்சுனர் பாசுபதம் பெற தவத்திற்கு செல்லு தல் தவநிலை எனப்படும். இந் நிகழ்வின்போது வில்மாற்றும் மேடையில் வைத்து தருமர் வில்லை எடுத்து அருச்சுனரிடம் கொடுப்பார். 'சிவபெருமானை நினைந்து தவம் செய்து பாசுபதாஸ்திரத்தை பெற்று வருவீராக' என அனுப்புவார். இவ்வேளை அருச்சுனரால் தவ நிலைப பாடல்கள் பலவும் பாடப்படும். தவ நிலை செல்லும் வழியில் பேரண்டச்சியால் மறிக்கப்படும் அருச்சுனப் பெருமாள் அதை தாண்டிச் சென்று தவக்கம்பத்தில் ஏறி வாழைப பழம் பலகாரம் போன்ற பிரசாதங்களை அங்கி ருந்தே வீசுவார். அதனைப் பெற்றுக் கொள்ள மக்கள் முண்டியடிப்பர். தவத்திலிருந்து இறங்கி யதும் பள்ளயம் போடுவர். பிள்ளையம்என்பது பாண்டவர்களும் தேவாதிளும் உண்ணும் விருந்தைககுறிக்கும் பதமாகும்.

1940 ம் ஆண்டு தவநிலை ஆரம்பிக்கப்பட்டு வீரக்குட்டிக் குருக்கள் 3 வருடம் தவநிலை ஏறினார். அதன்பின் குமாரவேலியார் 40 வருடங்கள் தவநிலையில் ஏறிவந்தார். அவருக் குப்பின் அருணாசலம் 3வருடம் தவத்தில் ஏறினார். தறபோது நாராயணபிள்ளை தவத்தில் ஏறுகிறார். (வே.ஆறுமுகம் அவர்களுடனான உரையாடல் )

தீக்கட்டை எடுத்தல், மூட்டுதல், மிதித்தல்

எட்டாம் நாளான வெள்ளிக் கிழமை காலை காவல்க்காரனும் காளியும் நம்பியாரும் தீக் கட்டை எடுக்க வண்டில்களை வழியனுப்பி வைப்பர். (தற்போது உழவு இயந்திரங்கள்) பின்னர் சமித்து எடுக்க அருச்சுனரும் வீமனும் தென்திசையை நோக்கிச் செல்வர். அவர்கள் கொண்டு வந்த சமித்துகளுடன் பண்டார மூலி கையை பீடம் செய்து நம்பியார் மூன்று முறை உரலில் இட்டு இடிப்பார். பின்னர் பாண்டவர்கள் இடிப்பர். பின்பு நோருப்பு நெல்லு குத்துபவர் களால் பண்டாரம் இடிக்கப்படும். இதன்பின் தீக்குழி வெட்டச்செல்வர். நம்பியாரும பாண்ட வரும் தீக்குழியை மும்மூன்று முறை வெட்டிய பின்னர் ஏனைய அடியார்களால் தீக்குழி



வெட்டப் படும் பண்டாரம் இடித்து முடிந்ததும் அம்மனின் வணக்க பூசை முடிந்து தீக்கட்டை எடுக்கச் செல்வர். கேணிக்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் வைத்து தீக்கட்டை எடுத்து வரும் நிகழ்வு இடம் பெறும். இது கோயில் வரலாற்றுடன் தொடர்பு பட்ட ஐதீகக் கதை ஒன்றை ஞாபகமூட்டுவதாக அமைந்திருப்பதாக கூறப்படுகின்றது. வேட்டுவப் பெண்ணை மணம் முடித்த அத்தி யாகுடி வன்னியன் வேட்டுவத் தலைவனுடன் சமரசம் செய்து கொண்ட வரலாற்றின் ஒரு பகுதியை அது ஞாபகமூட்டுவதாகக் கூறுவர். தீக்கட்டை எடுக்கப் போகும் போது பரிகலப் படைகளை முன்னே அனுப்பி விட்டு சகாதேவன், வீமன், நகுலன், அருச்சுனன் ஆகியோருக்குப் பின்னால் இறுதியிலே தருமர் (நம்பியார்) பசுப்பால் கலந்த கலசத்துடனும் அறுகம்புல்க் கட்டுடனும் செல்வார். கேணிக்கரைப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று தீக்கட்டையை எடுத்து வந்து நம்பியார் அருச்சுனனிடம் கொடுக்க அருச்சுனன் சுமந்து வருவார். பிள்ளையாரடியில் படையல் மடைவைத்து பலருக்கு கழித்து, கட்டுச் சொல்லி தெய்வமாடிகள் உருக்கொண்டாடிய பின்னர் நம்பியார் முன்னால் வர ஏனையோர் பின்னால் வருவார். பின்னால் தீக்கட்டையை ஏற்றிய வாகனங்களும வரும்.

தீக்கட்டையை எடுத்து வந்தவுடன் தீ மூட்டுதல் இடம் பெறும். பால்க் கலசத்துடன் சென்று ஓமம் வளர்த்த நம்பியார் தீக்குழிக்கு சாந்திப் பூசை செய்து காலைக் கழுவி விட்டு தீக்குழிக்குள் இறங்கி மடை வைத்து ஓமம் செய்த விறகுக் கட்டு மூன்றை வைத்து தீ மூட்டி விட்டு ஆலயத்துள் செல்வார். தீ எரிந்து கொண்டிருக்கையில் பஞ்ச பாண்டவர்களும், தீ மிதிக்கும் அடியவர்களும், தெய்மாடிகளும் ஆற்றங்கரைக்குச் சென்று அரப்பு வைத்து கங்கா தேவியை வணங்கி கடல் குளிப்பர். குளித்து விட்டு திரௌபதை அம்மன் கோயிலுடன் இணைந்ததாக வடக்கு நோக்கி இருக்கும் கண்ணகியம்மனை வணங்கி கோயிலுக்குள் சென்று மடை வைத்து பின்னர் தீக்குழியைக் காவல் செய்வர். வீமன் முதல் அனைத்து தெய்வமாடிகளும் ஆயுதங்களுடன் தீக்குழியைக் காவல் செய்த பின்னர் ஆதித்தன் பூசை இடம் பெறும். அதன் பின் சகாதேவனுக்கு பாவாடை போட்டு தீக் குழிக்கு குறி பார்க்க அனுப்புவர். சகா தேவன் குறிபார்த்து வந்ததும் பாண்டவர் கொலுவும் அனைத்து தெய்வமாடிகளும் ஏனைய தீமிதிக்கும் பக்தர்களும் தீக்குழியை மூன்று முறை வவம் வந்து அம்மனை வேண்டி நம்பியார் முன்னாலும் அதனைத் தொடர்ந்து பாண்டவர்களும் தெய்வமாடிகளும் தீ மிதித்து கோயில் மண்டபத்தை அடைவர்.

தப்பாய்ந்த மறுதினம் ஒன்பதாவது நாளான சனிக்கிழமையன்று காவல்க்காரனுக்கும் காளியம்மனுக்கும் பெலிகருமம் செய்து முழுகிவிட்டு தீக்குழிக்குப் பால்வாப்பர். பின்னர் பாண்டவர்களையும் தெய்வமாடிகளையும் வீட்டுக்கு அனுப்பி விட்டு பள்ளியறையில் இருக்கும் தெய்வங்களை கருவறைக்குள் எழுந்தருளச் செய்வர். அன்றிரவு கால்க்காரன் பூசையுடன் திருக்கதவு பூட்டப்பட்டு அதற்கு அடுத்து வரும் வெள்ளிக் கிழமை எட்டாம் நாட் சடங்கு பஞ்ச பாண்டவர்களுடனும் அனைத்துத தெய்வ மாடிகளின் ஆட்டத்துடனும் விசேடமாக வைரவர் பூசையாக அமைந்திருக்கும்.

இவ்விதம் பழுகாமம் திரௌபதையம்மன் கோயிலில் நிகழ்த்தப்படும் திரௌபதையம்மன் சடங்கு பற்றிய விடயங்களை விளங்கிக் கொள்ள முடியும்.

த.சேரலாதன்
உதவி விரிவுரையாளர் - மொழித் துறை

# வாழ்க்கை தந்த பாடம்

ஆதிக்கம் நிறைஞ்ச இவ்
அதிகாரச் சூழலில்
நானும் மனிதனாகப்
பிறந்து விட்டேன்!
அதுவும்
சிலுவை சுமக்கும்
பெண்ணாக ..... !
கதைத்தால் - வாய்க்காரி.
கதைக்காவிட்டால் - சிடுமுஞ்சு.
சிரித்தால் - ஒரு மாதிரி.
சிரிக்காவிட்டால் - இவளுக்கு லெவல்.
என்ன செய்வது?
முகத்துக்கு ஆணி
அடித்து விட்டு
நேரத்துக்கு நேரம்
முகத்தை மாற்ற
வேண்டியிருக்கின்றது!

சமாதியாகப் பிறந்த
ஒவ்வொருவரும்
சாதிக்கவும் வேண்டுமாம்!
ஆனால்......
பெண்....
என்னவென்று சொல்வதம்மா?
பேர்போன அடிமை என்பதா?
எவ்வாறு ....???
இந்தச் சூழலில்?
"ஆ" என்றால்
அதற்கு ஆயிரம் அர்த்தங்
கூற அணி திரண்டு
விடுவர்!

பேசிப் பேசியே
கழுத்தையறுக்கும் - துரோகிகள்,
கூடவிருந்தே
குழிபறிக்கும் - நயவஞ்சகர்கள்:
பழகியிருந்தும்
பண்பற்றவர்களாக:

சொல்லுக்கொரு
வசனம் பேசும் - வாழ்வின்
பாத்திரங்கள்.
எதிபார்ப்புகளும் தேவைகளும்
நிறைவேறி விட.... !
போலியாகி விடும்
இந்த வாழ்க்கை.

வாழ்க்கை! எனக்கு
ஒரு சுவிங்கம்
மாதியாச்சு!
ஆரம்பத்தில் இனித்து
பின்பு கசப்பதாயிற்று!

எவ்வளவுதான்
பணம் பதவி, பட்டம், புகழ்
இருந்தாலும் ...
என்றோ ஒருநாள்
எல்லாமே
மண்ணினுள் மடியப் போவதுதானே!

கொஞ்சம் ஆறுதல் கூற
சில நண்பர்கள்! ஏது?
எல்லாம் வெளிவேஷம்.

இத்தனைக்கும்
மத்தியில்
வாழ்வா சாவா என
உள்ளுக்குள்
மௌனமாய் புரட்சி செய்யும்
நான்! - பேதை!!!

சி. ப்றெளவ்இ
*நுண்கலைச்சிறப்பு*
*3ம் வருடம் (2007)*

# எங்களுக்கான சினிமாவின் அடையாளமாக கிச்சான் – ஒரு நோக்கு

ஈழத்தமிழர்களின் வாழ்வியல் அடையாளங்களை பேசுபொருளாகக் கொண்டு வெளிவந்திருக்கிறது நெய்தல் ஊடகதரிசன அமைப்பினரின் கிச்சான குறும்படம். திரைக்கதை வசனம் என்பவற்றுடன் இதனை இயக்கி இருக்கிறார் அ. விமல்ராஜ். மட்டுநகர் மண்ணில முதன்முதலில் வெளிவந்த குறும் படம் என்பது குறிப்பிடப்படக் கூடிய ஒன்று. சிங்கள தொழில் நுட்பவியலாளர்களினதும் எமது கலைஞர்களின் கூட்டு உழைப்பினாலும் இப்படம் வெளிவந்திருக்கிறது. இத்தகைய கூட்டு முயற்சிகள் எங்கள் சினிமாவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான திறவு கோலாக அமைந்த போதும் தொழில் நுட்பத்தில் எமது கலைஞர்கள் வளரவில்லை என்பது வேதனைக்குரிய விடயம் . இதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்றுதான் போர். ஆனால் போர் மாத்திரம் காரணம் அல்ல.

ஆரம்பக் கல்வியை இழந்து நிற்கும் சிறுவனின் கதையை மையமாகக் கொண்டு அரைமணி நேரத்திகுள் அப்படம் உருவாகி னாலும் அதில் சொல்லுகின்ற விடயங்களை அலசி ஆராய்வதற்கு பல மணி நேரங்கள் தேவை என்பதை படத்தினைப் பாக்கும் போது விளங்கிக் கொள்ளலாம். படத்தின் கதையைக் கூறுவதை விட அதில் சொல்லப்படுகின்ற விடயங்கள் சிலவற்றை தெளிவுபடுத்தலாம் என நினைக்கின்றேன்.

படத்தில் முதல் காட்சியிலே சிறுவர் உரிமை தின விழாவுடன் சினிமா மொழியில் காட்சி நகர்த்தப்படுகின்றது. கதையினுடைய பிரதான பாத்திரமான கிச்சான் சிறுவர் உரிமை பற்றிப் பேசுகின்ற அதே பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலையில் வேலைசெய்கின்றான் விழா நடக்கும் மண்டபத்திற்கு சிற்றுண்டிச் சாலையிலிருந்து சோடாக் கேசை தூக்கிக் கொண்டு கொடுப்பவனாகவும் சிறுவர் உரிமை பற்றிப் பேசுகின்ற பேச்சுக்களை காதில் உள்வாங்கிக் கொண்டு மீண்:டும் சிற்றுண்டிச் சாலையில் வேலை செய்பவனாகவும் காணப்படுகின்றான். ஆனால் சிறுவர் உரிமை பற்றிப் பேசுகின்ற எந்த அதிகாரியின் கவனமும் அவன் மீது பட வில்லை. இங்குதான் சிந்திக்க வைக்கிறது. நாங்கள் சிறுவர் உரிமை பற்றிப் பேசுகின்றோம், ஆனால் சிறுவர் உரிமை பற்றிப் பேசுகின்ற அதே பல்கலைக்கழகத்தில் கிச்சான் வேலை செய்து கொண்டிருக்கின்றான் என்பதை தெரிந்தும் தெரியாதவர்களாக செயற்பட்டுக கொண்டிருக்கின்றோம். இது சிறுவர் உரிமை பற்றிப் பேசுபவர்களுக்கு மட்டுமன்றி இன்று நாட்டில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அரச அரசசார் பற்ற நிறுவனம் சார்ந்த செயற்பாடுகளுக கும் பொருந்தக் கூடிய விடயம். சிறுவர்கள் தொடர்பாக பல்வேறு பிரச்சனைகள் நிலவி வருகின்றன. வறுமை காரணமாக தொழிலில் ஈடுபடல், கல்வியில் ஆர்வம் இன்மை , பாடசாலை இடைவிலகல், போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாதல் , சிறுவர் துஷ்பிர யோகம். போர்ச் சூழல் காரணமாக பெற்றோரை இழந்து ஆதரவற்று வாழ்வோர் என வேறுபட்ட பிரச்சனைக்கு இலக்காகும் சிறுவர்கள் இலங்கையில் உருவாகின்றனர் ஆனால் கடந்த இரு தசாப்தகாலமாக நடை பெற்ற போரே இச்சிறுவர்களின் கல்விச் சிதை விற்கு முக்கியகாரணம என்பதற்கு சிறந்த முன் உதாரணமாக கிச்சானைக் கூறலாம்.

இச்சிறார்கள் போல பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இரவு பகலாக பல மணிநேரங்கள் வேலை செய்கின்றார்கள் .உரிய உணவு, பராமரிபபோ இல்லாமல் கஸ்ரப் படுகின்றார்கள். வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுவதோடு கடைகள் தொழில் நிறுவனங்கள் போன்றவற்றிலும் வேலை செய்கின்றனர். அவற்றை விட வீதி யோரங்களில் பிச்சை எடுக்கின்றனர். ஒரு வேளை உணவிற்காக கையேந்துகின்றார்கள். இந்தச் சிறுவர்களும் கிச்சானைப் போன்று தமது உரிமைகள்

அனைத்தையும் தொலைத்து நிற்கின்றார்கள். சட்டம் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைக் குற்றமாகப் பார்க்கிறது. ஆனால் யதார்த்தம் சிக்கலானதும் சவால் நிறைந்ததும் ஆகும். இந்த யதார்த்த சிக்கல் நிறைந்த சவால்களை எதிர்கொள்வதற்கான, ஒரு உரையாடலுக்குரியதாக இக் குறும் படத்தின் படக் காட்சிகளை அமைத்திருக்கிறார் இயக்குனர்.

படத்தில் சிறப்பான முறையில் கிழக்குப்பல்கலைக்கழக படுகொலைக்கான பதிவாகவும் சில காட்சிகள் அமைந்திருக்கின்றன. படையினரின் பல்வேறுபட்ட இன்னல்கள், போர் பீதி என்பன கிழக்குப்பல்கலைக் கழகத்தைச் சூழவுள்ள கிராம மக்களை இடம் பெயரச் செய்தது. வந்தாறுமூலை, மாவடிவேம்பு, பலாச் சோலை, கொம்மாதுறை, செங்கலடி என பல கிராம மக்கள் 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து கிழக்குப்பல்கலைக்கழகத்தில் தஞ்சம் அடைந்ததோடு கிழக்குப் பல்கலைக்கழகம் அகதிமுகாமாக இருந்த காலத்தில் நடந்த உண்மைச் சம்பவங்களை படத்தின் ஊடாக பதிவாக்கி உள்ளார் இயக்குனர்.

படக்காட்சியில் அவை நடைபெற்றதற்கான கால வரையறை குறிப்பிடப்படவில்லை யாயினும் செப்டம்பர் 05 ஆம் திகதி நடை பெற்றது .அன்றைய தினம் அதிகாலையில் கொம்மாதுறை மொறக்கட்டாஞ்சேனை மற்றும் அயல் கிராமங்களிலிருந்து வந்த படையினர் கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாமை முற்றுகையிட்டனர் . வயது வேறுபாடுகளின் அடிப்படையில் 174 பேர் அகதிமுகாமில் தலையாட்டி பொம்மைகளால் தலையாட்டப்பட்டு வேறு இடங்களுக்கு கொண்டுசென்று படுகொலை செய்யப்பட்டனர் . இதனை ஒரு பதிவாகவும் தலையாட்டி பொம்மைகள் என்றவுடன் அக் காலப் பகுதிகளில் ஏற்பட்ட பீதி என்பனவும் படத்தினைப் பார்க்கும் போது எம்மை மேல் சிலிர்க்கவைக்கிறது.

இத்தகைய பின்னணியில் தான் கிச்சான் குறும் படம் தமிழ் மக்களின் அடையாளப் பதிவாகவும் கருத்தியல் ரீதியில் காத்திரமான படைப்பாகவும் வெளிவந்துள்ளது. அரைமணி நேரத்திற்குள் பல விடயங்கள் பேசப்படா விட்டாலும் யதார்த்த சிக்கல் நிறைந்த சவால்களை எதிர் கொள்வதற்கான உரையாடலுக்குரிய களமாக இப்படம் அமைந்திருப்பது இப்படத்தின் வெற்றி எனலாம்.

த. குயலவராஜா.
உதவி விரிவுரையாளர்.
நுண்கலைத்துறை

## தாலி பற்றிய கேள்விகள்

*தாலிகட்டுபவன் ஆண்.*
*தாலிகட்டியவள் பெண்.*
*தாலி பற்றிய கேள்விகள்*
*எம்மைச் சிந்திக்க வைக்கிறது.*

*தாலி பெண்ணுக்கு வேலியாகி*
*விட்டதைக் கூறுதல் வேண்டும்*
*தாலி வேலி என்பது*
*வெறும் பொய்*

*தாலி கட்டியவன் தடம் புரண்டாலும்*
*ஏக பத்தினி மரபு*
*பெண்ணுக்கு மட்டும் தானே*

*இதனை உடைத் தெறிந்து*
*ஓர்மையாய் வாழ்பவளே*
*ஊர் போற்றும் பெண்*

*தாலி கட்டியவள்*
*பிள்ளை பெறாவிட்டால்*
*அவளை மலடி என்று*
*தூற்றும் சமூகம்*
*தாலி கட்டியவன்*
*பிள்ளை உருவாக்கும்*
*திராணியற்றிருந்தால் ஏன் அவனை*
*மலடன் என்று*
*உரத்துச் சொல்லவில்லை*

*இன்னும் இன்னும்*
*தாலி பற்றிய கேள்விகள்...........*

த. குயலவன்



முதலாம் வருடம் (2006)



இரண்டாம் வருடம் (2006)



மூன்றாம் வருடம் (2006)



நான்காம் வருடம் (2006)

# விடைபெறும் சிறப்புக் கற்கை நெறி மாணவர்கள் -2006

01.I புவியியல் சிறப்புப்பட்டம் பெற்றுக்கொண்ட மாணவர்கள

1. சுப்பிரமணியம் - சுதாஸ்
   கோபாலபுரம் நிலாவெளி
   திருகோணமலை.

2. இராமலிங்கம் - பிரபாகரன்
   கோளாவில் - 02
   அக்கரைப்பற்று.

3. நாகேஸ்வரன் - தவப்பிரபா
   செக்கடி வீதி,
   களுவாஞ்சிகுடி.

4. தங்கவேல் - பிரதீபன்
   வீட்டு இலக்கம் - 640 சிவபுரம்
   கிளிவெட்டி.

5. வதனா - சற்குணசிங்கம்
   39, பாடசாலை ஒழுங்கை, மத்தியவீதி
   திருகோணமலை.

6. சுரேகா - சிவராஜ்
   உப்பு வெளி
   திருகோணமலை.

7. ராஜினி - சிவகணேஸ்
   733, பொற்கேணி
   தம்பலகாமம்.

8. பிரேமாவதி துரைசிங்கம்
   இல. 580 கண்ணகிபுரம்
   கிளிநொச்சி

9. ரா.வசந்தராஜ்
   புத்தள வீதி,
   சிலாபம்.

10. வேலாயுதபிள்ளை - மனோகரன்
    சேச் வீதி, களுதாவளை - 02
    களுவாஞ்சிகுடி.

11. ரவீந்தினி - ராமநாதன், றோயல் வேக்கரி
    சூசைப்பிள்ளையார்க்குளம்
    வவுனியா

12. ஜெயநந்தினி - தியாகராஜா
    தாளங்குடா - 01
    ஆரையம்பதி.

13. புஸ்பமாலா - கனகசபாபதி
    வோட் இல - 02, புதுக்குடியிருப்பு
    முல்லைத்தீவு.

14. செல்வராஜ் - சதீஸ்வரன்
    ஆனந்தபுரம்,
    புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

15. ஜெயக்கௌரி - வேலாயுதம்
    பிள்ளையார் கோயில் வீதி
    கோறகல்லிமடு, கிரான்.

16. அமலதாசன்மரி - கிளன்சீரிஸ்
    அந்தோனியார் வீதி, வோட் இல. 08
    பேசாலை.

01.II. தமிழ்ச் சிறப்புப்பட்டம் பெற்றுக் கொண்ட மாணவர்கள்.

17. தணிகாசலம் - சேரலாதன்
    பழுகாமம் - 02
    பெரியபோரதீவு.

18. பேரின்பராணி சின்னத்துரை
    15/156 நாவிதன்வெளி
    கல்முனை.

19. குகநேசன் குகநீதி
    இல. 34 ஸ்ரீசங்கவோ வீதி, கௌதானா,
    தெகிவல.

20. லெற்றிஸ் எடீன்பெறோபீரிஸ்
    எடீன்பெறோ இல்லம்,
    பாடசாலை வீதி, தாழ்வுப்பாடு
    மன்னார்.

21. தவராஜ் - லோகிதன்
    இலக்கம் - 02
    மண்டூர்.

01. III ஒப்பீட்டுச் சமயச் சிறப்புப்பட்டம் பெற்றுக் கொண்ட மாணவர்கள்

22. அப்துல் சலாம் முகமட் சஜத்
    நெய்தல் நகர்.
    மூதூர் - 01.

23. முகமட் சலீர் முகமட் நிஜாவ்
    309 அலியார் வீதி
    கல்முனை - 06

01. IV சமூகவியல் சிறப்புப்பட்டம் பெற்றுக் கொண்ட மாணவர்கள்

24. கனகசுந்தரம் - அரவிந்தன்
    பாடசாலை வீதி, மகிழடித்தீவு
    கொக்கட்டிச்சோலை.

25. தியாகராஜா - திலீபன்
    வன்னியார் வீதி, களுதாவளை- 02
    களுவாஞ்சிகுடி.

26. அற்புதலிங்கம் - கவீந்திரன்
    விஸ்னு வித்தியாலய வீதி,
    காரைதீவு - 07

27. ரத்னசிங்கம் தவேந்திரன்
துறைநீலாவணை - 07
மட்டக்களப்பு.

01 V. அரசியல் விஞ்ஞானச் சிறப்புப் பட்டம் பெற்றுக் கொண்ட மாணவர்கள்.

28. சந்திரவாணி சோமசுந்தரம்
நக்கீரர் வீதி, கோயில்போரதீவு,
பெரிய போரதீவு - 30230.

29. தரிணி சதாசிவம்பிள்ளை
இலக்கம் - 67, செக்கடி வீதி,
களுவாஞ்சிக்குடி.

30. பிறேமலதா மாரிமுத்தன்
கோயில் பின் வீதி,
சித்தாண்டி - 03.

31. செல்வராஜா சுந்தரநாயகம்
பாலர் பாடசாலை வீதி, சின்னப்பனங்காடு,
அக்கரைப்பற்று.

32. சண்முகநாதன் - ஜெயசீலன்
ஆலையடி வீதி, விநாயகபுரம் - 03,
திருக்கோயில்.

33. விநாயகமூர்த்தி - வாகீசன்
பிரிவு இல - 01
தம்பிலுவில் - (E.P)

01. VI மெய்யியல் சிறப்புப் பட்டம் பெற்றுக் கொண்ட மாணவன்

34. தங்கராசா - லோகிதாசன்
கோயில் வீதி, 9A வீரமுனை - 04,
சம்மாந்துறை.

01. VII நுண்கலைச் சிறப்புப் பட்டம் பெற்றுக் கொண்ட மாணவர்கள்.

35. உமா குணரெத்தினம்
3ம் குறுக்கு வீதி, அமிர்தகழி,
மட்டக்களப்பு.

36. துசாந்தி - பாலசுந்தரம்
21/15 புதிய டச்பார் வீதி, கல்லடி,
மட்டக்களப்பு.

37. சுகன்ஜா - மகாதேவா
நாவற்குடா,
மட்டக்களப்பு.

38. கலைமகள் கிருஸ்ணமூர்த்தி
342, 2வது ஒழுங்கை, நாவற்குடா,
மட்டக்களப்பு.

39. பரமானந்தம் பிறேமானந்தன்
வாட் வீதி, எருவில்,
களுவாஞ்சிக்குடி.

40. தர்மலிங்கம் - குயலவராஜா
86, கன்னங்குடா,
மட்டக்களப்பு.

41. நகுலேஸ்வரி - தனேந்திரராஜா
42/2, 5வது குறுக்கு வீதி, இருதயபுரம்,
மட்டக்களப்பு.

42. துசாந்தினி - தர்மராஜா
'லக்சுமி பதி' வீரப்பத்திர கோயில் வீதி,
ஏறாவூர் - 05.

43. சுகிறேகா - தவராஜா
513/81 கண்ணகி அம்மன் கோயில் வீதி,
தாண்டவன்வெளி, மட்டக்களப்பு.

**விடைபெறும் பொதுக் கற்கைநெறி மாணவர்கள். -2006**

1. நாகராஜா பிறேம்குமார்
அம்மன் கோயில் வீதி, எருவில்,
களுவாஞ்சிகுடி.

2. சொக்கலிங்கம் கஜராஜா
காளிகோயில் வீதி,
ஏறாவூர் - 04,
செங்கலடி.

3. சுதாசினி டயஸ் நிக்கலஸ்
பேசாலை.

4. நிசாந்தினி - சண்முகராசா
திமிலைத் தீவு,
மட்டக்களப்பு.

5. திருமகள் - நடராசா
இடைக்குறிச்சி, வரணி
யாழ்ப்பாணம்.

6. நிஜாஷா ஹாஜது மொகமட்
சந்தை வீதி,
ஓட்டமாவடி.

7. கோபாலப்பிள்ளை செந்தில் குமார்,
வீரையடி வீதி,
தேற்றாத்தீவு - 02
மட்டக்களப்பு.

8. சிறிவித்தியா - கிருஸ்ணகுமார்,
மகாவித்தியாலய வீதி,
தம்பிலுவில் - 02

9. பாக்கியராசா - ரூபவாசன்
தபால் கந்தோர் வீதி,
தம்பிலுவில் - 02

10. பூபாலப்பிள்ளை - ரஜிகுமார்
கிரான்குளம் - 07
கிரான் குளம்.

11. மயில்வாகனம் - கருணதாசன்
கரவெட்டி, நாவற்குடா
மட்டக்களப்பு.

12. சஜித்தா அப்துல் ஹமீத்
644, பெண்கள் சந்தை வீதி,
ஏறாவூர் -02A

13. பாத்திமா நஸீரீன்
பாடசாலை வீதி
ஓட்டமாவடி - 02

14. கே. பிரியா தருமரெத்தினம்
நாவலர் வீதி,
பெரிய கல்லாறு - 02
கல்லாறு.

15 ராஜேந்திரம் வேல்சிவம்
நாவலர் வீதி
குருக்கள் மடம்,
மட்டக்களப்பு.

16 கிஷ்ணபிள்ளை கணேசகுமார்
புதுக்குடியிருப்பு- 05
மட்டக்களப்பு.

17. நஷ்ரீன் அப்துல் லத்தீப்
இல. 513, புளியடி வீதி,
ஏறாவூர் -06

18. நிதாஜினி வேலன்
காந்தி வீதி,
பெரிய கல்லாறு 02,
கல்லாறு.

19. ராஜேந்திரம் ஜோன் பிரபாகரன்
தாளங்குடா -03
ஆரையம்பதி
மட்டக்களப்பு.

20. சிவனடியன் மகேஸ்வரன்
173/2A, கோயில் வீதி,
வீரமுனை 03
சம்மாந்துறை.

21. முகமது ரஜீமுதின் முகமது நஷ்ரின்
71, சாகுள் மன்சில்
நாஹெடுவா
அனுராதபுரம்.

22. பிரியசுந்தரி சுந்தரலிங்கம்
ஜின்னா வீதி
சந்திவெளி
முறக்கொட்டாஞ்சேனை.

23. பாக்கியநாதன் பிறேம்குமார்
பாரதிபுரம்
தம்பலகாமம்
திருகோணமலை

24. தயாளினி தில்லைநாயகம்
பிரதானவீதி
தம்புலுவில் - 01

25. அருளானந்தம் அருள்காந்தன்
நாவலர் வீதி,
குருக்கள் மடம்
மட்டக்களப்பு.

26. தர்சினி நவரெத்தினம்.
28, ரதோவிற்ற அதிபரா குனுகுபுர
பலாங்கொட.

27. உதயநந்தினி உருத்திரா மூர்த்தி
முனையூர்
தம்பிலுவில்.

28. முத்துக்குமார் கோபாலகிருஸ்ணன்
172, அந்தி முனை
உடப்பு.

29. அந்தோனி வின்சன்ற் சில்வெஸ்டர் ஜெகதாஸ்
சாம்பியோன் பற்று - வடக்கு
சாம்பியோன்பற்று.

30. சிம்பியாபுகாரி
80 ஹரீம் வீதி
அக்கரைப்பற்று - 02

31. கணேசன் - சசிகரன்
ஜே.பி. வீதி,
தம்பிலுவில் - 02

32. சர்மிளா சுந்தரலிங்கம்
துறைநீலாவணை
மட்டக்களப்பு.

33. ஜெயந்தி நேசதுரை
துறைநீலாவணை
மட்டக்களப்பு.

34. வசுமதி தியாகராசா
இல. 74, நிலையவீதி
மட்டக்களப்பு.

35. ஹஜீது முகமத் ஹனீபா
வைத்தியசாலை வீதி,
ஏறாவூர்.

36. சண்முகநாதன் மஹேந்திரநாதன்
திமிலைத்தீவு வீதி,
புதூர்,
மட்டக்களப்பு.

37. சுகன்ஜா தாமோதரம்
பிரதான வீதி, தேற்றாத்தீவு - 02
தேற்றாத்தீவு.

38. தர்சினி மகேந்திரராஜா
தபால் கந்தோர் வீதி
தம்பிலுவில் - 02

39 கணேசன் தமிழ்ச்செல்வன்
8ம் கட்டை, தாழிக்குளம்,
பூவரசன் குளம்,
வவுனியா.

40. சகுந்தலா சபாபதி
செக்கடி வீதி
களுவாஞ்சிகுடி.

41. ஜனனி திருநாவுக்கரசு
விபுலாநந்தா வீதி, குருக்கள் மடம்
மட்டக்களப்பு.

42. பாத்திமா நஷ்ரானா அப்துல் வஹாப்
238/1, பிரதான வீதி
ஏறாவூர் - 06 A

43. பர்வீன் உ.துலெவ்வை
494, ஓடாவியார் வீதி,
ஏறாவூர் - 02

44 தேவராசா குவேந்திரராசா
40ம் கிராமம், திக்கோடை
பெரிய போரதீவு- 03
கல்லாறு.

45. பிரகாஜினி சண்முகசுந்தரம்
காளிகோவில் வீதி
பெரியகல்லாறு - 03
கல்லாறு.

46. தம்பிமுத்து தேவநாதன்
பட்டிப்பளை, கொக்கட்டிச்சோலை
மட்டக்களப்பு.

47. தயாழினி பற்குணம்
இல. 20 சென்ரல்
மத்திய முகாம் -20

48. ராதிகா திலகரெத்னா
முதலாவது குறுக்கு
திராய்மடு
மட்டக்களப்பு.

49. நிறோஜினி கனகசுந்தரம்
2ம் பிரிவு,
மண்டூர்.

50. கோகிலவதனி நாகநாதன்
பிறோம் நாத் கடை
கூமன் குளம்
வவுனியா.

51 பிரியா தவராஜ்
ஆற்றங்கரை வீதி, தண்ணீரூற்று,
முள்ளியாவளை,
முல்லைத் தீவு.

52. சண்முக நாதன் நிஷமாலா
91/17, காரைநகர் வீதி
கொட்டடி
யாழ்ப்பாணம்.

53. சித்தி சிபானா ரசிக்கீன்
பொல்வத்த
பல்லகல

54. சுவேந்தினி சிவபாதம்
புலோலி மேற்கு
புலோலி

55. மொகமட் அபுசாலிபு மொகமட் ரிசிகன்
புத்தளம்

56 அரசரெத்தினம் பிள்ளை நாயகம்
பண்டாரியாவெளி
கொக்கட்டிச்சோலை
மட்டக்களப்பு.

57. வேலுப்பிள்ளை சிங்கராசா
குருமண்வெளி II
களுவாஞ்சிகுடி.

58. புஸ்பாதேவி கணேசமூர்த்தி
பழைய தபால் கந்தோர் வீதி
விநாயகபுரம்
திருக்கோவில்.

59. ரொவின்தினி மகேந்திரன்
பாடசாலை வீதி
விநாயகபுரம் - 03
திருக்கோவில்.

60. நித்தியானந்தம் சிறினிவாசன்
புன்னைக்குடா வீதி
தளவாய்
செங்கலடி.

61. சுப்பையா ஜெயமுரளி
இல.247, பிரதான வீதி,
ஏறாவூர் - 05
செங்கலடி.

62. குமுதினி வைரன்
நாவற்குடா
மட்டக்களப்பு.

63. மாலதி கோவிந்தன்
தரவைச்சேனை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு
தன்னாமுனை.

64. மஞ்சுளா கனேசபிள்ளை
துறைநீலாவணை
மட்டக்களப்பு.

65 சந்திரசேகரம் முகுந்தன்
மண்டூர்
மட்டக்களப்பு.

66 அருந்தவவாணி கிருபராசா
விபுலாநந்தா வீதி,
காரை தீவு.

67. கிருஸ்ணமாலினி மாணிக்கம்
பாலையடி கோவில் வீதி,
காரைதீவு - 09

68. சீபேஸ்வரி சிவநேசன்
மத்திய வீதி,
காரை தீவு - 10

69. கலைச் செல்வி காத்திகேசு
கடலம்மன் வீதி,
பெரியகல்லாறு - 02
கல்லாறு.

70. நல்லதம்பி லோகநாதன்
68/1 பாலமுனை
மண்டூர்.

71. கிருஷ்ணசாந்தி ராமலிங்கம்
சம்பூர்
மூதூர்.

72. மயில்வாகனம் சுரேஸ்
சிறிமுருகன் வீதி,
களுதாவளை - 04
களுவாஞ்சிகுடி.

73. கந்தசாமி ஜீவரூபன்
சிறினிவாசபுரம்,
பள்ளிக்குடியிருப்பு
தோப்பூர்.

74. சிதம்பரநாதன் வரதராஜன்
அரபா நகர்
தம்பலகாமம்.

75. செல்வராஜா மிதிலன்
உதயபுரம் பெரியகல்லாறு - 03
கல்லாறு.

76. அலிமுகத் சஹாவுத்தீன்
அலீம் ஒழுங்கை
ஏறாவூர் - 03

77. பேரின்பராசா ஜெயகாந்த்
சர்வோதய வீதி,
தம்பிலுவில் - 01

78. குமாரசாமி மோகனசிவா
புதுமுறிப்பு,
கிளிநொச்சி.

79. செல்வி சரவணமுத்து
மரப்பாலம்
கரடியனாறு.

80. சிவகுமாரி கந்தையா
25/2 சிவநகர் உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

81. கோபாலப்பிள்ளை- ஸ்ரீதரன்
'ராணிவாசா' பழுகாமம் - 02
பெரிய போரதீவு.

82. கார்த்தியாயினி - நவரெத்தினராஜ்
செட்டி வீதி,
பொயின்ட் பெற்றோ

83. அல்ப்ரெட் அற்புதராஜா
சபாபதிபிள்ளை வீதி,
சுண்ணாகம்.

84. மீறாசைவு நளீம்
100A, மிச் நகர் வீதி,
ஏறாவூர் - 02A

85. சங்கீதா செல்வரெத்தினம்
வண்ணக்கர் வீதி,
சித்தாண்டி - 02,
சித்தாண்டி.

86. சத்தியவாணி கருணாகரன்
துறைநீலாவணை,
மட்டக்களப்பு.

87. சுமங்கலா நம்பியப்பா
சந்தை வீதி,
துறைநீலாவணை.

88. நிரஞ்சனா அற்புதராஜா
மண்டூர்,
மட்டக்களப்பு.

89. குணராஜினி - ஜோன்சன்
11/2, அரசடி பிள்ளையார் கோயில் வீதி,
மட்டக்களப்பு.

90. பத்மினி ராஜதுரை
தபால் கந்தோர் வீதி
குறுமன் வெளி - 12
களுவாஞ்சிகுடி.

91. லிங்கேஸ்வரி செல்வநாயகம்
துறைநீலாவணை - (E.P)
மட்டக்களப்பு.

92. அரசரெத்தினம் - விமலேஸ்வரன்
கானடி வீதி,
தேற்றாத்தீவு - 02,
தேற்றாத்தீவு.

93. பவாணி சிவலிங்கம்
மத்திய வீதி,
குருக்கல் மடம்.

94. பார்த்திமா பாஹானா அப்துல் கபூர்
232B, லெவ்வை வீதி,
ஏறாவூர் - 06A.

95. கிட்ணன் - சொஸ்ஷா
தேவகிராமம்,
அலிகம்பை,
அக்கரைப்பற்று.

96. சாரங்கபாணி - மணிவண்ணன்
60, சின்ன உப்போடை,
மட்டக்களப்பு.

97. சுஜீர்தினி விக்கிரமசிங்கம்
கடற்கரை வீதி,
குருக்கள் மடம்.

98. சர்மிளாதேவி நடராஜா
தேவாலய வீதி,
பெரியகல்லாறு - 01,
கல்லாறு.

99. பாத்திமா வஜீகா ரவீக் ஹஷ்சன்
ஏறாவூர் - 06,
மட்டக்களப்பு .

100. சிதி சம்சாரா அப்துல் சலாம்
108, காட்டுப்பள்ளி வீதி,
ஏறாவூர் - 03A.

101. இர்சனா மீறாமுகைதீன்
21, காட்டுப்பள்ளி வீதி,
ஏறாவூர் - 03.

102. விநாயகமூர்த்தி திவ்வியமூர்த்தி
பிரதான வீதி,
தம்பட்டை - 02,
தம்பிலுவில்.

103. எஸ்தர் லதாஜினி தியாகராஜ்
மகா வித்தியாலய வீதி,
விநாயகபுரம்,
திருக்கோவில்.

104. கேமலதா நவரெத்னம்
கலைமகள் வீதி
தம்பிலுவில் - 02

105. கேமலோஜினி கைலாயபிள்ளை
குறுமன்வெளி - 11
களுவாஞ்சிக்குடி.

106. ரத்னகுமார்
குறுமன்வெளி - 11
களுவாஞ்சிக்குடி.

107. பிரபாஜினி உதயகுமார்
173, புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.

108. லீலாவதனி வனிதராசா
ஆரோக்கியம் வீதி, பெரியநீலாவணை - 01
கல்முனை.

109 விஜயந்தினி வீரக்குட்டி
நாகமணி வீதி, பெரியநீலாவணை - 02
கல்முனை.

110. உமர் லெவ்வை அமீர் குசைன்
940, பெண்கள் சந்தை வீதி,
ஏறாவூர்.

111. இந்துமதி சின்னையா
11/41, மத்திய முகாம்,
அம்பாறை.

112. நமசிவாயம் விக்னேஸ்வரன்
கிரான்குளம் - 07,
கிரான்குளம்.

113. கிருஷ்ணபிள்ளை நவீந்திரன்
கிரான்குளம் - 08,
கிரான்குளம்.

114. ரேவதி கதர்காமநாதன்
19/1, மில் வீதி, பண்டாரிக்குளம்,
வவுனியா.

115. குலசிங்கம் அரவிந்தன்
தர்லிக்குளம்,
வவுனியா.

116. குணவர்த்தன உமாகரன்
இல. 09, பாலன்தோட்டம்,
களுவாஞ்சிக்குடி.

117. கதிர்காமு புகழேந்தி
ஆவாரன்கல் - கிழக்கு, புத்தூர்,
யாழ்ப்பாணம்.

118. எல். முவீன்
ரொத்த வெவா
திருகோணமலை.

119. பார்த்திமா ரலீ முகமட் ரசீக்
தங்கன் வத்த, யாதவத்தை
மாத்தளை.

120. சிவதர்சினி இந்திரன்
மகாதானி, தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.

121. கவிதா அரியதுரை
சோமான் தோட்டம், ஒடுவில் கிழக்கு
சுண்ணாகம்.

122. சந்திரகாந் - விஜயகாந்
அம்மன் வீதி, திஜிலி
யாழ்ப்பாணம்.

123. பீராசகீவ் முனாபீர்
120, ஜீ.பீ.எஸ். வீதி, ஐயங்கேணி
ஏறாவூர்.

124. ஜோசிலா சுப்பிரமணியம்
புத்தடி வீதி
கோட்டைக் கல்லாறு - 01.

125. வித்தியாதரன் பிரதீபன்
சிவன் கோயில் வீதி,
தம்பிலுவில் - 02

126 ஹச்சி முகமட் முகமட் ராபி
இல. 736/A, தைக்கா வீதி,
ஏறாவூர் 01.

127. கதிரன் கருணாகரன்
வீட்டு இல - 167
சம்மாந்துறை

128. வசந்தராசா ரவி
துறைநீலாவணை (E.P)
மட்டக்களப்பு.

129. சிவஞானம் அகிலன்
ஜாட் வீதி
கல்முனை - 01

130. விநாயகமூர்த்தி சந்திரகுமார்
ஆலையடி வீதி,
தம்பிலுவில் - 02

131. எம். சி. பதினாதன் குருஸ்
அரிப்பு
முருங்கன்.

132. உதயகுமாரி செல்வராஜ்
புதூர் கிழக்கு
புதூர்.

133. தர்சினி சிவலிங்கம்
மாசூன் வீதி, எவினை
புனாலைக்கட்டுவன்

134. பாக்கியராசா சசிகரன்
சி. எஸ். ஐ. சேச், கோணாவில்
கிளிநொச்சி

135. மோகனதாஸ் சுஜீவன்
தாமோதரம் வீதி, ஏறாவூர் - 05
செங்கலடி.

136. ராமலிங்கம் சுதாகரன்
ஏ.பீ.சி. வீதி வந்தாறுமூலை,
செங்கலடி.

137. அந்தோனி தேவசகாயம் பேஹின்
பாண்டிருப்பு - 02
கல்முனை.

138. அருளானந்தராசா - மனோகரன்
ஆலையடி வீதி, விநாயகபுரம் - 03
திருக்கோவில்

139. சிவப்பிரகாசம் - வினோதகுமார்
பாலமுனை
மண்டூர்.

140. சிவப்பிரகாசம் - மனோகரன்
விபுலானந்தபுரம், திருப்பழுகாமம் - 01
பெரிய போரதீவு.

141. கனீபா றிஜாஸ்
புன்னக்குடா வீதி
ஜீ. பீ. எஸ். ஒழுங்கை
ஏறாவூர்.

142. சாயினி துரைலிங்கம்
20, ஹஸ்கிஷன் (Huskison) வீதி
திருகோணமலை.

143. விஜிதமலர் வல்லிபுரம்
முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை
மட்டக்களப்பு.

144. தேவநாயகம் கார்த்தீபன்
மாரியம்மன் கோயில் வீதி,
பாண்டிருப்பு - 02
கல்முனை

145. நடராஜ் - தயாளன்
15/1சி. ஆர்-13 அண்ணாமலை - 02,
நாவிதன்வெளி
கல்முனை

146. பாத்திமா சிபாயாயுனைத்
8/J, கேமினு மாவத்தை,
கந்தளாய்.

147. பரமகுரு சுதர்சன்
முரசொலி கதிரிப்பாய் அச்சுவெளி
யாழ்ப்பாணம்.

148. ரவீந்திரன் சுபராஜன்
நாதன் வீதி, பெரிய நீலாவனை - 01
கல்முனை.





St. Joseph's Catholic Press, Batticaloa.